CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR SISTER V. BALAMMAL.

IV.] April 1928. [No. 9

श्री शारदायै नमः ।

E REGISTRAR
7-JUL 1928
MADRAS

श्रीरामचन्द्रपरब्रह्मणे नमः

சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.

(*All Rights reserved by the Authoress*)

सुबोधरामचरिते

॥ अथ सुन्दरकाण्डः ॥

अगाधमेतं जलधिं तरेयुर्वानराः कथम् ।
इति सञ्चिन्तयामास बहुधा मारुतिस्तदा ॥ ४ ॥

तदा அப்பொழுது मारुतिः ஆஞ்சனேயர் अगाधं ஆழங்காணமுடியாத एतं இந்த जलधिं கடலை वानराः வானரர்கள் कथं எவ்வாறு तरेयुः தாண்டுவார்கள் इति என்று बहुधा பல விதமாக संचिन्तयामास ஆலோசித்தார் ॥ ४ ॥

प्रच्छन्ननिजवेषस्सन्नुदिते शशलाञ्छने ।
अन्वेष्टुं मारुतिस्सीतां प्रविवेश स तां पुरीम् ॥ ५ ॥

शशलांछने சந்திரன் उदिते (सति) உதயமானதும் सः அந்த मारुतिः மாருதியானவர் प्रच्छन्ननिजवेषस्सन् சுய ரூபத்தை மறைத்துக்கொண்டவராக सीतां சீதையை अन्वेष्टुं தேடுவதற்காக तां அந்த पुरीं பட்டணத்தை प्रविवेश பிரவேசித்தார் ॥ ५ ॥

मार्गं निरुध्य सहसा तर्जयन्तीं स मारुतिः ।
लङ्काधिदेवतां जित्वा प्रविष्टो विनुतस्तया ॥ ६ ॥

सः அந்த मारुतिः ஹனுமார் सहसा சடுதியாக मार्गं வழியை निरुध्य தகைத்து तर्जयन्तीं அதிர்க்துரைக்கும் लंकाधिदेवतां இலங்கிணியை (இலங்கையைக் காக்கும் பெண் தெய்வம்) जित्वा ஜயித்து तया அவளால் विनुतः புகழப் பெற்றவராக प्रविष्टः நகருட் சென்றார் ॥ ६ ॥

प्रधाव्योत्तुङ्गशिखरान्प्रासादानञ्जनासुतः ।
सीतां गवेषयामास तस्मिन् लङ्कापुरे निशि ॥ ७ ॥

अंजनासुतः ஆஞ்சனேயர் निशि இரவில் तस्मिन् அந்த लंकापुरे இலங்கை उत्तुंगशिखरान् உயர்ந்த உச்சிகளையுடைய प्रासादान् உப்பரிகைகளை प्रधाव्य தாண்டி सीतां சீதை, गवेषयामास தேடினார் ॥ ७ ॥

(*To be continued*)

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர். சகோதரி வி. பாலம்மாள்.

IV.] விபவ—சித்திரை. [இதழ் 9.

பெண்மக்களின் அந்தஸ்து.

(பத்திராதிபர்)

.ரியாதை என்ற சொல் மக்களிடையே
.ற்றுள்ளதென்றாலும் தற்சமயம் இச்
பெருமுழக்கமாக ஜனங்களிடையே
.ருவதைப் பலர் அறிவர். ஏழையாயி
ணமுள்ளவனாயினும் ஒவ்வொரு மனித
ம் தனிப்பட்ட முறையில் சுயமரியாதை
லவசியம். சுயமரியாதை என்றால்
வமதித்து நடத்தலென்பதன்று.
.ன் நடந்துகொள்ளுதல் என்றால்
..யை இழந்துவிடவேண்டுமென்ப
அ.ரியம். கடவுளிடம் பக்தனும்,
ாத்லினியும், யஜமானனிடம் பணி
தினாளியிடம் தொழிலாளியும்,
புத்திமக்களும், ஆசானிடம் சீட
தன்..டம் சிறுவர்களும், தலைவர்க
தன் ..ணிலைக் காட்டுவது இயல்
க இவர்களிடம் சுயமரி
யாதை அற்றுவிட்டதென்று நினைத்தல் பெருந் தவறு. பரஸ்பரம் அன்பை ஆதாரமாக்கி அவ் வன்பின் முதிர்ச்சியாலேற்படும் தாழ்மையை வெளிக்காட்டி நடந்துகொள்ளுதல் நம் மிடையே மரியாதை என்ற பெயரில் வழங்கும் தொன்றுதொட்டு வழக்கமாக இருக்கின்றது. இவைகளில் அன்பை அறவே ஒழித்து, பய மென்பதை யடிப்படையாக்கி, அதற்குச் சுய மரியாதையைப் பலியிட்டு வாழும் வாழ்க் கையை அ...ம வாழ்க்கையெனக் கூறலாம். தற்சமயம் எத்தகைய கிளர்ச்சிகள் நடைபெற் றாலும் அவைகள் எல்லாம் ஆடவர்களைப் பொறுத்ததாகவே இருக்.........றிச் சமூகத்திடையே ...தகளிகிய பெண்மக்... ளைப்பற்றிய பிரஸ்தாபம் ஒரு சிறிதுமில்லை யென்றே சொல்லலாம்.

தாயை 'அம்மா', அத்தையை 'அத்தே', ராயசரணனை 'சன்னா' என்றழைக்கத் தொடங்கிய பொழுது, அந்த அபூர்வமான சங்கதியை அவன் ஒவ்வொருவரிடமும் சொல்லத்தொடங்கினான். அவன் சொன்னான்: "எல்லாவற்றிலும் ஆச்சரியகரமான சங்கதி இதுவாக்கும்! அதாவது இந்தப் போக்கிரி தாயாரை 'அம்மா' என்கிறான். அத்தையைஅத்தே என்கிறான். என்னை மாத்திரம் 'சன்னா' என்கிறான்! உண்மையில் குழந்தையினுடைய மண்டையில் இவ்வளவு புத்தி எங்கிருந்து வந்தது என்பதைச் சொல்லுவது கடினமாயிருக்கிறது."

சில தினங்கள் சென்ற பிறகு ராயசரணனுக்குத் தன்னுடைய சாதுரியத்தை வேறுவிதமாகப் பிகடனம் செய்யும் நேரம் வந்தது. வாயில் கயிற்றைக் கௌவிக்கொண்டு அவனுக்குக் குதிரையாக வேண்டிய நேரம் வந்து நேர்ந்தது. மல்லனாய் சிறுவனுடன் குஸ்தி செய்ய வேண்டியதாயிருந்தது. இது மட்டுமேயல்ல, சிற்சில சமயங்களில் தான் தோல்வியடைந்ததுபோல் பாசாங்கு செய்து கீழே விழவேண்டியதாயிருந்தது. இல்லாவிடில் பெரிய அனர்த்தம் உண்டாகிவிடும்!

இதே சமயத்தில் அனுகூலபாபுவை பத்மா நதி தீரத்திலுள்ள ஓர் ஜில்லாவிற்கு மாற்றப்பட்டது. சிறுவனுக்காகக் கல்கத்தாவிலிருந்து ஓர் தள்ளுவண்டி கொண்டுவரப் பட்டிருந்தது. ஸாடின் என்னும் பட்டுத்துணியினால் தைக்கப்பட்ட உடுப்பு, தலைக்குச் சரிகைக் குல்லா, கையில் தங்கக் காப்பு, காலில் கிலுகிலுவென்று ஓசைப்படும் தண்டை, இத்தகைய ஷோக்குடன் தன் சிறிய யஜமானனை ராயசரணன் தினமும் காற்றுவாங்க (உலாற்ற) அழைத்துச் செல்வான்.

மழைகாலம் வந்தது. கடும்பசியால் தத்தளிக்கும் (வியாகூலமடையும்)போராசையுடைய பத்மா நதியானவள் ஒவ்வொரு கவளத்துடனும் வயல்கள், தோட்டந்துறவுகள், கிராமங்கள் எல்லாவற்றையும் வாயில் போட்டுக் கொள்ளலானாள். கரைபோரத்திலிருக்கும் மாஞ்செடிகளையும் அடித்துக்கொண்டு போகலானாள். மண்ணெல்லாம் இடிந்து விழலாயிற்று. அவளுடைய கர்ஜனை பத்து திக்குகளிலும் நிறைந்து போயிற்று. உருண்டடித்துக் கொண்டு ஓடும் தண்ணீரின் நுரையினால் பிரவாகத்தின் வேகம் எவ்வளவு பயங்கரமானதென்று தெரிந்துகொண்டிருந்தது.

மத்தியானம் ஆகாயத்தில் கரியமேகங்கள் வந்திருந்தன. ஆனால் மழை பெய்யும் குறி காணப்படவில்லை. ராயசரணனுடைய மனம் போன போக்கெல்லாம் போகும். மகாராஜாவுக்கு இத்தகைய சமயங்களில் வீட்டில் உட்கார்ந்திருந்தால் சரிப்படுமா? அவன் வண்டியில் போய் உட்கார்ந்து கொண்டான். பாபம், ராயசரணன் வண்டியைத் தள்ளிக்கொண்டே ஆற்றங்கரையிலிருக்கும் வயல்களினிடம் வந்து சேர்ந்தான். அச்சமயத்தில் ஆற்றில் ஒரு படகுகூடக் காணப்படவில்லை. வயலில் ஒரு குடியானவனும் இருக்கவில்லை. மேற்கில் மணல் வெளியான அக்கரையில் சூரிய நாராயணனுடைய சப்தமில்லாமல் அஸ்தமிக்கும் திவ்வியமான வைபவம் கொஞ்சங் கொஞ்சமாகக் கலையும் மேகங்களின் இடையிலிருந்து காணப்பட்டது.

இவ்வாறாக எங்கு பார்க்கினும் நிச்சப்தமாகவிருக்கும் பொழுது சிறுவன் ஓர் திசையில் காட்டிக் காண்பித்து திடீரென்று சொன்னான்: 'சன்னா, பூ—"

அருகிலேயே முழங்காலளவு ஆழமுள்ள சேற்று நிலத்தில் ஓர் அடப்பமரம் (कदंबवृक्ष) இருந்தது. அதன் மேற்கிளையில் கொஞ்சம் புஷ்பங்கள் பூத்திருந்தன. அவற்றைச் சிறுவன் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான்; காரணம் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு ராயசரணன் இதே பூவால் ஒரு வண்டி செய்து அவனுக்குக் கொடுத்திருந்தான். அதற்குக் கயிற்றைக் கட்டி இழுப்பதில் அக்குழந்தைக் குண்டான ஆனந்தம் சொல்ல முடியாது. அன்று முழுவதும் ராயசரணனுக்கு வாயில் லகானைப் பிடித்துக்கொண்டு குதிரையாக வேண்டியதாயிருந்தது.

சேற்றை மிதித்துக் கொண்டே போய் பூவைப்பார்த்துக் கொண்டுவருவது சன்னாவுக்குக் கஷ்டமாயிருந்தது. ஆதலால் உடனே அவன் வேறொருதிசையில் ஆட்டிக்காட்டிச் சொன்னான்: "பார், பார். அதோ அந்தப் பறவையைப் பார். அடேடே! பறந்து போய் விட்டது. போ—ச்சு, வாடா பட்சி வா வா வா!"

இவ்வாறாக அவன் என்னென்னவோ படபடவென்று பேசிக்கொண்டு சட்டென்று வண்டியைத் தூரத் தள்ளிக்கொண்டு போனான்.

அந்தச் சிறுவன் முன்னுக்கு ஜட்ஜ் ஆகப் போகிறானே, அவனை இவ்வளவு லேசில் ஏமாற்றுவது அசாத்தியமாயிருந்தது. அன்றி அவனுடைய கண்களைக் கவர்ந்து கொள்ளக்கூடிய வஸ்துக்கள் வேறொன்றாவது அக்கம்பக்கத்தில் காணப்படவில்லை. கேவலம் கற்பனையினால் உண்டு பண்ணின பறவைகளைக் கொண்டு அவனை எவ்வளவு நேரம் ஏமாற்ற முடியும்?

அப்பால் வேறு வழியின்றி ராயசரணன் சொன்னான்: "அப்படியானால் நீ வண்டியிலேயே உட்கார்ந்திரு, நல்லதாக நான் ஒரு நொடியில் பூவைப் பறித்துக்கொண்டு வருகிறேன். ஆனால் பார். தண்ணீருக்கருகில் போகாதே" என்று இவ்வளவு சொல்லி அவன் தன் உடையை முழங்காலுக்கு மேல் தூக்கிக் கட்டிக்கொண்டு அடப்ப மரத்தை நாடிச்சென்றான்.

தண்ணீருக்கருகில் போகாதே என்று சொன்னதன் பேரில் சிறுவனுடைய மனம் அடப்பப் பூவின் மேலிருந்து எகிறி உடனே தண்ணீரை நோக்கி ஓடியது. அபார ஜலம் சலசலவென்று சத்தம் பண்ணிக்கொண்டு ஓடுவதானது லட்சக்கணக்கான சிறுவர்களின் கூட்டமானது ஓர் பலசாலியான ராயசரணனுடைய கையிலிருந்து நழுவிக்கொண்டு விஷமக்காரத் தன்மையுடன் சிரித்துக்கொண்டும் குதித்துக் கொண்டும் வேண்டாம் என்கிற இடத்தை நாடி ஓட்டம் பிடிப்பதுபோல் தோன்றியது. இத்தகைய கெட்ட உதாரணத்தைக் கண்டு நம்முடைய இந்த மானிட பாலகனுடைய மனமும் சஞ்சலமடைந்தது. வண்டியிலிருந்து இறங்கி அவன் தண்ணீருக்கருகில் சென்றான். வழியில் ஓர் புல் குச்சியை எடுத்துக்கொண்டு, அதை அவன் மீன் பிடிக்கும் தூண்டியாக பாவித்து விளையாடலானான். இவ்வாறாக அவன் குனிந்து தண்ணீரில் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது மாயாவியாகிய ஜலதேவதையானவள் தன்னுடைய ஸ்பஷ்டமில்லாத மதுரமான பாஷையால் விளையாடும் பொருட்டு அவனைத் தன் கிரீடாபுவனத்திற்குக் கூப்பிட்டாள். திடீரென்று 'தொப்' என்னும் சத்தம் உண்டாயிற்று. ஆனால் மழை காலத்தில் பத்மாவின் கர்ஜனையில் இத்தகைய சத்தம் யாருக்குக் கேட்கும்?

ராயசரணன் கை நிறையப் புஷ்பம் கொய்து அங்கவஸ்திரத்தின் தலைப்பில் (முந்தாணியில்) கட்டிக்கொண்டு மரத்திலிருந்திறங்கி சிரித்துக் கொண்டே வண்டியினருகில் வந்து பார்க்க அங்கு பாலகன் இல்லை. அக்கம் பக்கத்தில் நாற்புறமும் பார்த்தான்; ஒருவரும் காணவில்லை!

ஒரு விநாடியில் (க்ஷணத்தில்) ராயசரணனுடைய தேகத்திலிருக்கும் ரத்தம் அப்படியே

உரைந்து போய்விட்டது. உலகம் முழுவதும் அவனுக்கு இருள் மயமாகவும் பயங்கரமாகவும் தோன்றலாயிற்று. உடைந்துபோன மனதுடன் உடனே பயங்கரமான கூச்சலிட்டு, "குட்டி யஜமான்களே! குட்டி யஜமான்களே!" என்று கூப்பிடலானான்.

ஆனால் என்ன பயன்? 'சன்னு!' என்றொருவரும் பதில் கொடுக்கவில்லை. யாருடைய விஷமச் சிரிப்பும் கேட்கவில்லை. பத்மா மாத்திரம் தனக்கொன்றும் தெரியாதது போலும், உலகத்திலிருக்கும் இத்தகைய அற்ப விஷயங்களைக் கவனிக்க அவளுக்கு ஒழிவுயில்லாததுபோல் முன்போலவே சலசலவென்று சத்தம் பண்ணிக்கொண்டே ஓடிக் கொண்டிருந்தாள்.

சாயங்காலமாயிற்று. அப்பொழுது யஜமானியம்மாளுக்குக் கவலையுண்டாய் அவள் தேடும் பொருட்டு ஆங்காங்கு ஆட்களையனுப்பினாள். அவர்கள் கையில் விளக்கையுங்கொண்டு ஆற்றங்கரைக்கு வந்தபோது ராயசரணன் பங்கமடைந்த (மனதுடன்) ஹிருதயத்துடன் 'குட்டி யஜமான்களே! குட்டி யஜமான்களே!' என்று கூக்குரலிட்டுக் காற்றைப்போல் அங்குமிங்கும் இங்குமங்கும் தன் நினைவில்லாமல் ஓடி அலைந்து கொண்டிருப்பதை அவர்கள் கண்டனர்.

அப்பால் திரும்பி வீட்டிற்கு வந்து ராயசரணன் யஜமானியம்மாளின் காலில் தொப்பென்று விழுந்து புரண்டான். எவ்விதத்தில் கேட்டபோதிலும் அவன் அழுதுகொண்டே "எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று மாத்திரந்தான் பதிலளித்தான்.

இக்காரியம் பத்மாவினுடையதாகத் தானிருக்க வேண்டுமென்று எல்லோருக்கும் உறுதியாகத் தோன்றியிருந்த போதிலுங் கூட, அச்சமயத்தில் ஊருக்கு வெளியில் வந்து தங்கியிருக்கும் குறவர்கள் பேரில் வெகு பெயர்களுக்குச் சங்கையுண்டாகமலிருக்கவில்லை. ராயசரணன்தான் குழந்தையைக் களவாடியிருக்க வேண்டுமென்று யஜமானியம்மாளுக்கு சந்தேகம் தட்டியது. அவனைத் தனிமையாகக் கூப்பிட்டு அவள் வெகு பரிதாபகரமான முகத்துடன் பின் வருமாறு சொன்னாள்: "ராயசரணு! என் செல்வத்தைத் திருப்பிக் கொடடா, உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள், தருகிறேன், என் தங்கத்தை மாத்திரம் திருப்பிக் கொடுத்து விடு."

ராயசரணன் ஒன்றும் பேசவில்லை. தன் விதியை நொந்து தலையில் கையை வைத்துக் கொண்டான். யஜமானியம்மாள் அவனை வேலையிலிருந்து விலக்கிவிட்டாள். அனுகூலபாபு தன் பத்தினிக்கு ராயசரணன் பேரிலிருக்கும் துவேஷணத்தை நீக்க முயன்று பின்வருமாறு சொன்னார்: "இத்தகைய இழிவான காரியத்தைச் செய்வதனால் ராயசரணனுக்கு என்ன பிரயோஜனம்?"

யஜமானியம்மாள் உடனே பதிலளித்தாள்: "ஏன், அவன் மேல் தங்க நகைகள் இருக்கவில்லையோ?"

(2)

ராயசரணன் தன் ஊருக்குத் திரும்பிச் சென்றான். இதுகாறும் அவனுக்கு மக்கட்பேறு கிடையாது. இனி உண்டாகுமென்ற விசேஷ ஆசையும் இருக்கவில்லை. ஆனால் தெய்வச் செயலால் ஒரு வருஷத்திற்குள்ளாகவே அவனுடைய மனைவி இத்தகைய வயது சென்ற காலத்தில் ஓர் புத்திரனைப் பெற்று இகலோகத்திய யாத்திரையை முடித்து விட்டாள்.

ராயசரணனுடைய மனதில் இந்த நூதன பாலகன் பேரில் வெறுப்புண்டாயிற்று. தன் ஹிருதயத்திலிருக்கும் சிறிய யஜமானனுடைய ஸ்தானத்தை கபடமாக அபகரித்துக் கொள்ளும்பொருட்டு இக்குழந்தை வந்திருக்கிறதென்று அவனுக்குத் தோன்றியது. அன்றியும் அவனுக்கு இப்படியும் தோன்றும், அதாவது யஜமானனுடைய ஏகபுத்திரனாகிய அக்குழந்தையைத் தண்ணீரில் மூழ்கடித்து விட்டுத் தான் மாத்திரம் புத்திர சுகத்தை அனுபவிப்பது என்றால் மகா பாபமாகும். ராயசரணனுடைய சகோதரி அக்குழந்தையைக் காப்பாற்றாவிடில், பாபம், அக்குழந்தை இவ்வுலகத்தில் காற்று வாங்க வெகு நாட்கள் இருந்திராது.

ஆச்சரியமான சங்கதி என்னவெனில் இக்குழந்தையும் சிலதினங்களில் வாயிற்படியைத் தாண்டலானான். எவ்வளவு அதட்டிய போதிலும் அவனுடைய விஷமம் என்னவோ நாளுக்கு நாள் வளரலாயிற்று. அவனுடைய குரல், அவனுடைய சிரிப்பு, அழுகை எல்லாம் முற்றிலும் அனுகூலபாபுவின் பாலகனைப் போலவே இருந்தன. சிற்சில சமயங்களில் ராயசரணன் அவனுடைய அழுகையைக் கேட்டு திடுக்கிடுவான். அன்றியும் சிறிய யஜமான் தன்னுடைய 'சன்னு' காணாற் போனானென்று தன்னை கூப்பிடுவது போல் அவனுக்குத் தோன்றும்.

காலாகாலத்தில் பேல்னு (ফেল্না)—ராயசரணனுடைய சகோதரி இந்தப் புதிய பாலகனுக்கு வைத்த பெயர்—அத்தையை 'அத்தே' எனலானான். அந்த பரிச்சயமுள்ள கூப்பாட்டைக் கேட்டு ஒரு நாள் ராயசரணனுக்கு திடீரென்று தோன்றியது. "அப்படியானால் சிறிய யஜமானனுக்கு எங்களுடைய பற்றை அறுக்க முடியவில்லை போலும்! அவர் தான் மறுபடியும் எங்கள் வீட்டில் ஜன்மமெடுத்திருக்கிறார்".

இந்த எண்ணம் திடப்படுவதற்கு பல நிகரற்ற பிரமாணங்கள் ராயசரணனுக்குக் கிடைத்திருந்தன:—

(1) சிறிய யஜமான் போனபிறகு சீக்கிரத்திலேயே இந்தப் பாலகன் பிறந்தான்.

(2) இத்தகைய வயது சென்ற காலத்தில் தன் மனைவிக்கு மக்கட்பேறுண்டானது கேவலம் அவளுடைய புண்ணிய வசத்தினால் மாத்திரமேயன்று.

(3) சிறிய யஜமானனைப் போலவே இந்த பாலகனும் தவழ்கிறான், ஆடி அசக்கிக் கொண்டே நடக்கிறான், அத்தையை 'அத்தே' என்கிறான்.

சாராம்சம் பெரியவனானால் 'ஜட்ஜ்' ஆகும்படியான அநேகமாய் எல்லா லட்சணங்களும் இப்பாலகனிடத்தில் ஸ்பஷ்டமாகக் காணப்படுகின்றன.

யஜமானியம்மாள் அன்றைய தினம் தன் பேரில் சுமற்றிய பயங்கரமான பழி ராயசரணனுக்கு திடீரென்று நினைவாயிற்று. ஆச்சரியத்தினால் மதிமயங்கி அவன் தனக்குள் தானே சொல்லலுற்றான், "தன்னுடைய பாலகனை யார் களவாடினார்களென்பது தாயின் மனதிற்கு (அந்தக்கரணத்திற்கு) சரிவரத் தெரிந்தது!" இவ்வெண்ணம் மனதிலுதித்ததும் இதுவரையில் தன் பாலகனைப்பற்றி ஏனோதானோ வென்றிருந்த அவன் மனதிற்கு மிக்க பச்சாத்தாபம் உண்டாய் இப்பொழுது அவன் தன் பாலகனைக் கணப்பொழுதேனும் விட்டுப் பிரியாமல் அவனைப் பாதுகாக்கலானான்.

அதன் பிறகு ராயசரணன் பேல்னுவை ஓர் பெரிய பிரபுவின் மகனைப்போல் வளர்க்கலானான். ஸாடின் துணியால் தைத்த உடுப்பை அவனுக்காக விலைக்கு வாங்கினான், ஜரிகைக் குல்லா கொண்டு வந்தான். அவனுடைய இறந்துபோன மனைவியின் நகைகளை அழித்து அவனுக்குக் கைக்குக் காப்பும், காலுக்குத் தண்டையும் செய்வித்தான். தெருவிலிருக்கும் ஒருவர் வீட்டுப் பிள்ளைகளுடனும் அவனை விளையாட விடமாட்டான். இரவும் பகலும் அவன் தானே அவனுடைய தோழனானான்.

தெருவிலிருக்கும் பாலர்கள் சமயம் பார்த்து அவனை 'நபாப் வீட்டுப் பையன்' என்று பரிகசிப்பார்கள். ஊர் ஜனங்கள் ராயசரணன் தன் மகனுக்குக் கொடுக்கும் விபரீதமான (மிதமிஞ்சின) செல்வத்தைக் கண்டு அவன் மூடன் என்று கருதி அவனை நிந்திக்கலானார்கள்.

பேல்னாவுக்குக் கல்விகற்கும் காலம் நெருங்கியதும் ராயசரணன் தன் நிலங்காணிகளை விற்று மகனை அழைத்துக்கொண்டு கல்கத்தாவுக்குச் சென்றான். அங்கு அவன் வெகுப் பிரயாசப்பட்டு ஒரு உத்தியோகத்தைத் தேடிக்கொண்டு, பேல்னாவைப் பாடசாலைக்கு அனுப்பலானான். தான் எப்படியோ காலத்தைத் தள்ளிக்கொண்டு மகனுக்கு மாத்திரம் போஜனம், உடையுடுப்பு, படிப்பு இவைகளில் யாதொரு குறைவுமில்லாமல் பார்த்துக் கொண்டான். அவன் பலதடவைகளில் தனக்குத்தானே சொல்லிக்கொள்வான்: "குழந்தாய்! நீ இவ்வளவு அன்பு வைத்து எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிறாய். ஆதலால் எவ்விஷயத்திலும் நான் உனக்குக் குறையுண்டாக்க விடமாட்டேன்."

இவ்வாறாகப் பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தன. பேல்னாவுக்கு நன்றாக எழுதப் படிக்க வந்தது. நல்ல வளர்ச்சியுள்ள சரீரம், நல்ல காந்தியுடைய மாநிரம் இவைகளால் அவன் வெகு அழகாகக் காணப்பட்டான்.

கூந்தலை வாரிமுடித்து அழகு படுத்துவதில் அவனுக்கு விசேஷ லட்சியமிருந்தது. சுபாவமும் சற்று ஷோக்குள்ளதாகத் தானிருந்தது. தந்தைவிஷயத்தில் இருக்கவேண்டிய பயம்பக்தி அவனுடைய உள்ளத்தில் முற்றிலும் இருக்கவில்லை. காரணம், ராயசரணனிடத்தில் தந்தைக்குத் தகுமான அன்பிருந்த போதிலும், அவனுடைய நடவடிக்கை சேவகனைப் போலிருந்தது. அன்றி, பையன் தன்னுடைய மகன் என்பதை அவன் யாரிடத்திலும் காட்டிக் கொடுக்கவில்லை.

பேல்னா எந்த அக்கிரகாரத்தில் வசித்துக்கொண்டிருந்தானோ அவ்விடத்திய மாணாக்கர்களுக்கு ராயசரணனுடைய அநாகரிகமான தன்மையைக்கண்டு விநோதமாயிருந்தது. தகப்பன் இல்லாத சமயத்தில் பேல்னாவும் தன் தோழர்களுடன் குசேஷ்டை (কুচেষ্টা) செய்வதில்லை என்று சொல்லமுடியாது. ராயசரணனுடைய அந்த அசட்டு அன்பைப் பார்த்து உண்மையாகவே சிறுவர்களுக்கு வெகு இஷ்டம். அதைப்போலவே பேல்னாவுக்கும் அவனைக் கண்டால் மிக்க இஷ்டம். ஆனால் அது தகப்பனைப் போலன்று; அவனுடைய அன்பில் அனுக்கிரகத்தின் சாயை (நிழல்) இருந்தது.

ராயசரணன் இப்பொழுது அதிகக் கிழவனாயிருந்தான். அவனுடைய யஜமானன் அவன் செய்யும் எந்தவேலையிலும் சும்மா தப்புக்கண்டு பிடிக்கலானான். வாஸ்தவத்தில் அவனுடைய புலன்களெல்லாம் மழுங்கின. வேலையில் அவனுடைய மனமும் செல்லாமற் போயிற்று. அவன் ஒவ்வொரு விஷயமும் மறக்கலானான்; ஆனால் முழுச் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கும்பொழுது யஜமானன் அவன் சொல்லும் வயதாகிவிட்டதென்கிற காரணத்தை ஏன் ஏற்றுக் கொள்வான்? ராயசரணன் நிலத்தை விற்றுச் சேர்த்த பணமும் செலவழிந்து கொண்டு வந்தது. அப்பால் பேல்னா துணிமணிகள் இல்லை என்று சதா காலமும் அதிருப்தியுடனிருந்தான்.

(3)

ஒரு நாள் ராயசரணன் திடீரென்று உத்தியோகத்திற்கு ராஜிநாமா கொடுத்து விட்டு, பேல்னாவிடம் கொஞ்சம் பணம் கொடுத்துச் சொன்னான்: "அவசரமான வேலை இருக்கிறது, ஆதலால் நான் ஊருக்குப் போய் வருகிறேன்" என்று சொல்லி அனுகூலபாபு எந்த ஊரில் முனிசிப்பாய் இருந்தனரோ அங்கு சென்றான்.

அனுகூலபாபுவுக்குப் பிறகு மக்கட்பேறென்றுமுண்டாகவில்லை. அவருடைய பத்தினி புத்திர சோகத்தினால் தவித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் சாயங்காலம் அனுகூலபாபு கோர்ட்டிலிருந்து வந்து சிரமத்தினால் சாய்வு நாற்காலியில் படுத்திருந்தார். யஜமானியம்மாள் சந்ததியுண்டாக வேண்டுமென்று ஓர் சந்நியாசியினிடமிருந்து ஓர் விலையுயர்ந்த மூலிகையையும் அவருடைய ஆசீர்வாதத்தையும் விலைக்கு வாங்கியிருந்தாள். இதற்குள் நடையிலிருந்து "நமஸ்காரம் சுவாமி" என்ற சத்தம் கேட்டது. பாபு அவர்கள் "யாரது"? என்றெழுந்து வந்து பார்க்க ராயசரணன் வந்து நிற்கிறான். அந்தக் கிழவனைப் பார்த்து அனுகூலபாபுவின் மனம் இளகியது. அவனுடைய தற்கால நிலைமையைப் பற்றி விசாரித்துப் பிறகு மறுபடியும் அவனைத் தன்னிடத்தில் வேலைக்கு இருக்கும்படி சொன்னார். ராயசரணன் குன்றிய முகத்துடன் சிரித்துச் சொன்னான், "அம்மா அவர்களைப் பார்க்க வேண்டும்."

அனுகூலபாபு அவனையழைத்துக் கொண்டு வீட்டிற்குள் போனார். யஜமானியம்மாள் ஒன்றும் அவ்வளவு முகமலர்ச்சியுடன் அவனை விசாரிக்கவில்லை. ராயசரணன் அதைக் கவனிக்காமல் கைகளைக் கூப்பிக்கொண்டு சொன்னான்: "அம்மா! அதமனான நான் தான் உங்களுடைய பாலகனைக் களவாடிச் சென்றது, பத்துமாவுமல்ல, வேறு யாருமல்ல."

அனுகூலபாபு ஆச்சரியமுற்று கேட்டார்: "அப்படியானால் அவன் எங்கேயிருக்கிறான்?"

"துரையவர்களே! அவன் என்னிடத்தில் இருக்கிறான். நான் அவனை நாளையன்றைக்கு அழைத்துக்கொண்டு வந்து விடுவேன்."

(4)

ஞாயிற்றுக்கிழமையாயிருந்தது. கோர்ட்டுக்குப் போகவேண்டிய காரியமிருக்கவில்லை. காலை முதல் பதி பத்தினி இருவரும் ராயசரணனுடைய வரவை எதிர் பார்த்தவண்ணமாயிருந்தனர். பத்தடித்ததும் பேல்னாவை அழைத்துக்கொண்டு ராயசரணன் வந்து சேர்ந்தான்.

அனுகூல பாபுவின் பத்தினி ஒன்றும் யோசியாமலும், எத்தகைய கேள்வியும் கேட்காமலும் பாலகனை மார்போடணைத்துக் கட்டித் தழுவிக்கொண்டு உச்சிமுகர்ந்து, கண்களைத் தலைப்பினால் துடைத்துத் திருப்தியற்ற (கண்களால்) கண்களுடன் அவனுடைய முகத்தை உற்றுப் பார்க்கலானாள். பயத்தினால் மத்தியில் அழுதாள், உடனே சிரித்தாள். வாஸ்தவத்தில் பையன் நல்ல அழகு வாய்ந்தவனாயிருந்தான். அவன் முகத்திலாவது, உடையிலாவது தரித்திரத்தின் குறிகள் எங்குமே காணப்படவில்லை.

பையனுடைய முகத்திலிருக்கும் வினயம் லஜ்ஜை இவைகளுடன்கூடிய மனதைக் கவரும் தன்மையைக் கண்டு அனுகூலபாபுவின் உள்ளமும் வாஸ்தவத்தில் பொங்கி வந்தது. ஆனபோதிலும் அவர் தன் முகத்தில் யாதொரு விதமான குறிகளையும் காட்டிக் கொடுக்காமல் கம்பீரமாய் ராயசரணனைக் கேட்டார்: 'அப்படியானால் இதற்கு ருஜூ என்ன?'

ராயசரணன் சொன்னான்: "இத்தகைய விஷயங்களுக்குப் பிரமாணம் எங்கிருந்து வரும்? நான் உங்கள் பாலகனைக் களவாடினது அந்த பகவான் ஒருவருக்குத் தான் தெரியும். உலகத்தில் வேறொருவருக்கும் தெரியாது."

அனுகூலபாபு சற்றுநேரம் யோசித்து, பிறகு பின் வருமாறு தீர்மானித்தார். அதாவது, எப்பொழுது தாயானவள் புதல்வன் கிடைத்ததும் ஆத்திரத்துடன் அவனைத் தன் மார்புடன் சேர்த்துக் கட்டியணைத்தனளோ, அப்பொழுது சாட்சிகளையும், ருஜூக்களையும் தேடுவதில் அர்த்தமில்லை. எப்படியிருந்தாலென்ன? நம்புவது

தான் நலம்! அன்றி ராயசரணனுக்கு இத்தகைய பாலகன் எப்படிக் கிடைப்பான்? இந்த வயது சென்ற சேவகன் காரணமின்றி தன்னை ஏமாற்றுவானா?

பையனிடம் பேசிக்கொண்டே இருக்கும்போது சிறு பருவம் முதற்கொண்டு ராயசரணனிடமே இருந்து கொண்டிருந்தபடியால் இவன் அவனைத் தந்தை என்று நினைக்கிறான் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் ராயசரணன் மாத்திரம் அவனிடம் சேவகனைப் போலவே நடந்துகொண்டிருக்கிறான்.

அனுகூலபாபு மனதிலிருக்கும் சந்தேகத்தைத் தூரவிலக்கிப் பின்வருமாறு சொன்னார்: "ஆனால் நீ எங்கள் வீட்டு நிழலிலும்கூட நிற்கலாகாது (நிற்கக்கூடாது)."

நெஞ்சடைக்க ராயசரணன் கைகளைக் கூப்பிக்கொண்டு சொன்னான்: "இந்த முதுமைப் பருவத்தில் நான் எங்கே போகட்டும்?"

யஜமானியம்மாள் சொன்னாள்: "கிடக்கட்டும், நம்ம குழந்தையினுடைய ஆயுள் நீடித்திருக்கட்டும். நான் ராயசரணனை மன்னித்து விட்டேன்."

முனிசிப்புத் தொழிலில் கைதேர்ந்த அனுகூலபாபு சொன்னார்: "அவன் செய்த குற்றத்திற்கு அவனை மன்னிக்க முடியாது."

ராயசரணன் பாபு அவர்களுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு சொன்னான்: "நான் குற்றம் செய்யவில்லை, கடவுள் தான் செய்திருக்கிறார்."

தன்னுடைய பாபத்தைக் கடவுள் பேரில் சுமத்துவதைக் கண்டு அனுகூலபாபு மிகவும் கோபமுற்றுச் சொன்னார்: "இத்தகைய நன்றி கெட்டவனை நம்பலாகாது".

ராயசரணன் யஜமானுடைய காலை விட்டெழுந்து சொன்னான்: "அந்த நன்றி கெட்டவன் நானல்ல சுவாமி! நன்றி கெட்டது என் விதி."

இத்தகைய மறுமொழியினால் எந்தக் கல்விமானுக்கு சமாதானமுண்டாகும்?

தான் ராயசரணனுடைய புதல்வனல்ல முனிசிப்பினுடைய புதல்வன், தன்னை ராயசரணன் களவாடிச்சென்று தன்னுடைய மகனென்று சொல்லிக்கொண்டு தன்னை அவமானப்படுத்தினானென்று பேல்னாவுக்குத் தெரிந்த பிறகு அவனுக்கு மனதில் சற்று கோபமுண்டாயிற்று. ஆயினும் ராயசரணனுடைய அந்த பரிதாபகரமான நிலைமையைக்கண்டு உதாரமனதுடன் தன் தந்தையை நோக்கிச் சொன்னான்: "அப்பா, அவனை மன்னியுங்கள், அவனை நம்ம வீட்டில் வைத்துக் கொள்ளாதீர்கள், ஆனால் சாப்பாட்டிற்காக மாதந்தோறும் ஏதாவது கொடுத்து விடுங்கள்."

அதன் பிறகு ஒன்றும் பேசாமல் ராயசரணன் தன் மகனை ஒரு தரம் கண் நிறைய (கண்குளிர)ப் பார்த்துவிட்டு, எல்லோருக்கும் நமஸ்காரம் செய்து நேர வாயிலை நோக்கிச் சென்று, உலகத்திலிருக்கும் அபாரமான ஜன சமூகத்தில் கலந்து மறைந்தான்.

மாதக் கடைசியில் அனுகூலபாபு ராயசரணனுடைய ஊர் விலாசத்திற்குச் சொற்ப பணம் அனுப்பினார். "விலாசதார் கிடைக்கவில்லை" என்று அது திரும்பி வந்து விட்டது.

சிந்தாமணியின் செயல்.

(ஸ்ரீமான் வெ. நாராயணன்.)

தசமியாக இருந்தாலும் அன்று சந்திரன் மேகமற்ற வானிடை மிகுந்த அழகுடனும் பிரகாசத்துடனும் ஒளிர்ந்தான். மாடியின் மேல் திறந்த வெளியில் இரவுகளில் சாப்பிடவும் பொழுது போக்கவும் எனக்கு மிகவும் பிரியம். இருள் இரவுகளிற் கூட சில நாட்களில் வெளி மாடியில் விளக்கு வெளிச்சத்தில் உண்பதுண்டு. இன்று நிலவு மிக அழகாக ஒளிர்ந்ததால் மாடியின் மேல் இரவு போசனத்தை உண்டோமென்பதில் புதுமையொன்றுமில்லை. சாப்பிட்ட பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் குழந்தைகள் இருவரும் தூங்கலாயினர். குழந்தைகளைப் படுக்கையில் விட்டு, வீட்டு வேலைகளையும் முடித்துக்கொண்டு வர காமாக்ஷி (என் மனைவியின் பெயர் காமாக்ஷி) சென்றாள். பங்குனி மாதம் பாதிக்குமேல் சென்று விட்டமையால் குளிர் என்பதே இல்லை. மாலையில் மாடியின் மேல் தண்ணீர் ஊற்றியிருந்ததால் வெப்பம் தணிந்து காற்று ஜில் என்று வீசியது. அந்த சுகத்தையும் அழகிய நிலவு தரும் இன்பத்தையும் விடுத்து உள்ளே சென்று படுத்துக் கொள்ள மனம் வரவில்லை. ஆகவே உள்ளிருந்த இரட்டுக் கட்டிலை (camp cot) வெளி மாடியில் போட்டு அதிலமர்ந்து நிலவின் எழிலை நோக்கிக் கொண்டிருந்தேன். மனம் ஒன்றுக் கொன்று சம்பந்தமற்ற பல நினைவுகளில் அலைந்து கொண்டிருந்தது.

திடீரென்று மூன்று நாட்களுக்கு முன், அதாவது சென்ற வியாழக்கிழமை யன்று, காமாக்ஷி மிக அற்பமான ஒரு சிறு விஷயத்தைப் பெரிதாக்கி வீண் விவாதம் வளர்த்ததும், என் மனம் நோகத்தக்க வார்த்தைகளைக் கூறியதும் நினைவிற்கு வந்தன. இப்படிச் சண்டை இடுவதற்குக் காரணமென்ன? இத்தனை வருஷங்களில் இம்மாதிரியான வார்த்தைகள் ஒரு பொழுதும் சொல்லியது கிடையாதே! கூரிய அறிவுள்ள பெண்ணாகையால் தக்க காரணமின்றி இப்படிக் கூறமாட்டாள்; அவள் மனம் அவ்வளவு நோகச் செய்யக்கூடிய நடத்தை என்னிடம் என்ன இருக்கிறது? என இம் மூன்று நாட்களில் எத்தனையோ தடவைகள் யோசித்தும் பயன்படவில்லை.

அவள் கூறிய வார்த்தைகள் மனதிற் தோன்றின. "புருஷர்கள் எல்லோரும் பெண்கள் விஷயத்தில் ஒன்று போலத்தான். பெண்கள் தங்களறிவு, தேக சௌக்கியம் என்றவற்றைக் கட்டி வைத்துவிட்டுப் புருஷர்கள் காட்டும் வழியே சென்றால் அவர்கள்பால் ஆடவர்க்கு அன்பு தான். குடும்ப ஒற்றுமை, காதல், இன்ப வாழ்க்கை முதலிய எல்லா விமரிசைகளும் உண்டு. ஸ்திரீகள் தங்கள் சுய அறிவின் உதவியால் முடிவு செய்திருக்கும் அபிப்பிராயங்கள் புருஷர்களின் வாழ்க்கைக்கு முரண்படும் பொழுது, புருஷர்களின் உண்மையான குணம் வெளியாகும். மனைவியின் சொற்படி நடக்கும் கணவர்களை எல்லாம் இச்சமயங்களில் அவர்கள் உண்மையில் எத்தகையவர் எனக் காணலாம்."

எங்கள் தர்க்கங்களெல்லாம் நகைப்பிலும் விளையாட்டிலும் முடிந்து விடுவது வழக்கம். இதுவும் அத்தகைய தர்க்கங்களில் ஒன்றெனக் கருதி யான் சிறித்துக் கொண்டே "காமு! ஆண் பிள்ளைகளின் இயற்கையைப் பற்றி வெகு தெளிவாக நிமிஷ நேரத்தில் பிரசங்கம் செய்து விட்டாயே! உண்மையாகவே உனது சாமர்த்தியம் மிக அபூர்வமானது. நம் தேசத்தில் பல விஷயங்களைப் பிரசாரம்செய்ய வருபவர்கள் உன்னிடம் இரண்டு மாதகாலம் மாணவர்

களாயிருந்தால் மகா நிபுணர்களாகி விடுவார்கள் என்பதில் ஐயமில்லை" என்றேன்.

காமாக்ஷி மனதில் ஆத்திரமும் கோபமும் கொண்டிருந்தாள் என்று எனக்குத் தெரியாது. மிகப் படபடப்புடன் "போதும், இப்படி விளையாட்டாகப் பேசிப் பேசித்தானே இத்தனை வருஷங்களாக என்னை ஏமாற்றி வருகிறீர்கள். நான் பைத்தியக்காரி, சிறு பிராயத்திலேயே உங்களிடம் அகப்பட்டதால் என்னை இலகுவாக ஏமாற்றி விட்டீர்கள்" எனக் கூறினாள்.

என்னை திடுக்கெனத் தூக்கிப் போட்டது போலிருந்தது. நான் சாந்தமாகவே—எனக்குப் பிறரிடம் கோபம் வருவதே வெகு அபூர்வம்; அதிலும் பெண்கள்பால் கோபம் காட்டுவது மனிதனது ஆண்மைக்கு இழிவென்னும் அபிப்பிராயம் எனக்குண்டாதலால் என் மனைவியிடம் நான் ஒரு நாள் கூடக் கோபித்துக் கொண்டது கிடையாது—"ஏன், உன் மனதிற்கு விரோதமாக என்ன நடந்தது?" எனக் கேட்டேன்.

காமாக்ஷி இன்னும் கோபத்துடனேயே "எனது விருப்பமென்று ஒன்று எங்கிருக்கிறது? உலகில் வாழவும் இன்பமனுபவிக்கவும் பிறந்தவர்கள் புருஷர்கள். அவர்கள் சுகத்தை வளர்த்து அவர்கள் மனங்கோணாது நடக்கும் வரை பெண்களுக்கு அவர்கள் வாழ்க்கையில் இடமுண்டு. மனிதவர்க்கத்தில் ஒரு பாதி பெண்ணென்றும், அவர்களுக்கும் ஆடவர்களைப்போலவே மனோபாவனைகளும், அறிவும், உணர்ச்சிகளும், ஆகவே சம உரிமைகளும், உண்டென்று எந்த மனிதன் உணர்கிறான்?"

"காமு! அவசரப்பட்டு நீ ஏதேதோ சொல்கிறாய். அமைதியாக யோசித்துப் பார். நீ சொல்லிய வண்ணம் உனக்கு இக்குடும்பத்தில் ஒரு வித உரிமையும் செல்வாக்கும் இல்லாமலா இருக்கிறது? ஒன்றுமில்லாத காரியத்திற்கு ஏன் இவ்வாறு மனதைப் புண்ணாக்கிக் கொள்கிறாய்?"

"நீங்கள் சமத்துவத்தையும் உரிமைகளையும் பற்றிச் செய்யும் உபன்னியாசங்கள் பேச்சளவில் நிற்பவைதானே. உண்மையில் என்ன சுதந்திரம் கொடுத்திருக்கிறீர்கள்?"

"உனக்குச் சுதந்திரம் நான் கொடுப்பதென்ன? எவ்விதத்தில் உனக்கு சுதந்திரமில்லாது போய் விட்டது? சொல் பார்ப்போம்."

"வெகு தூரம் போவானேன்! போன மாதம் எங்கள் அகத்திற்குப் போகவேண்டுமென்றேன். உத்திரவு கொடுத்தீர்களா? உங்களுக்கு மட்டும் நினைத்த பொழுதெல்லாம் ரஜாக் கிடைக்கும். விடுமுறை நாட்களில் தங்களிஷ்டம்போல் க்ஷேத்திரங்களுக்கோ, கடற்கரைக்கோ மற்றெந்த விடத்திற்கோ செல்லலாம். உங்கள் அனுமதியின்றிப் போக எங்களுக்கு உரிமையுண்டோ?"

"எனக்கு ரஜாவானால் உனக்கும் அவ்வாறு தானே. நான் போகுமிடங்களுக்கெல்லாம் நீயும் கூடத்தானே வருகிறாய்?"

"வருகிறேன், உண்மை தான், ஆனால் ரஜாவெங்கிருக்கிறது? போகு மிடங்களிலெல்லாம் என் வேலைக்கு ஏதாவது குறைவுண்டா?"

"காமாக்ஷி, நீ இப்பொழுது படபடப்பும் ஆத்திரமும் கொண்டிருக்கிறாய். ஆழ்ந்து யோசிக்கக்கூடிய நிலைமையிலில்லை. நான் எவ்வளவு சிரமப்பட்டு என்ன சொன்னாலும் உனக்குப் புலப்படாது. ஆகையால் அதிகம் சொல்வதிற் பயனில்லை. ஆனாலும் நான் சொல்லும் இந்தச் சில வார்த்தைகளை மட்டும் அமைதியாக இருக்கும்போது நன்றாக யோசித்துப் பார். நீ இக்குடும்பத்தில் வந்து பத்து வருஷங்களாகின்றன. இவ்வளவு காலத்தில், என்றைக்காவது, எக்காரணத்தை உத்தேசித்தாவது

உன்னைத் தாழ்வாக நடத்தியதுண்டா? தாழ்மையாகவாவது பாவித்ததுண்டா? அல்லது என் வாழ்க்கையில் உனக்குத் தெரியாத இரகசியப் பகுதி ஏதேனுமுண்டா?"

இவ்வார்த்தைகளைக் கூறிவிட்டு நான் வெளியே சென்றேன். நானிருக்கும் வரை அவள் மனதிற்கு அமைதி ஏற்படாதெனத் தெரியும். இவ்வாறு அன்று நிகழ்ந்த வார்த்தைகள் யாவும் நினைவிற்கு வந்தன.

இதில் என்னவிருக்கிறது? தற்கால நாகரிகமும் கலாசாலைப் படிப்பும் பெற்ற பெண்கள் இவ்வார்த்தைகள் சொல்வது சகஜந்தானே! இதை இவ்வளவு பிரமாதமாக்கி எழுதுவானேன் என வாசகர்கள் நினைக்கலாம். உலகில் ஆதர்சமற்ற, லட்சியமற்ற வாழ்க்கை வாழும் சாதாரண மனிதனொருவனுக்கு இதில் பிரமாதமொன்றும் தோன்றாதிருக்கலாம். ஆனால் எப்பிறப்பிலியற்றிய எந்த நல்வினையின் பயனாகவோ இப்பிறப்பில் வாழ்க்கையின் லட்சியத்தையும், இல்வாழ்க்கையின் இயல்பையும், அதனால் எய்துறும் பயனையும் நன்குணரும் பாக்கியம் கிட்டியிருந்தது. எனக்கு மற்ற மனிதர்களின் வாழ்வைப்போல எங்கள் இல்லறம் மனதை மயக்கி, அறிவைக் குருடாக்கும் காதல், காமம், பிரேமை, நேசம் எனப் பல பெயரால் விளங்கும் வியாதியை அடிப்படையாகவும் ஆதாரமாகவும் கொண்டதன்று. ஒப்புயர்வற்ற தெய்வத்தன்மை வாய்ந்த அன்பை ஆதாரமாகவும், பேதத்தை யொழித்து, ஏகத்துவமடைவதையே லட்சியமாகவும் கொண்டு வாழ்ந்து வந்தோம். காமாக்ஷியின் சொற்கள் எங்கள் வாழ்க்கைக்கு அடிப்படையானதும், ஜீவாதாரமானதுமான கொள்கைகளையே மறப்பதாகு மன்றோ. இவைகளை மறப்பதானால் எங்கள் லட்சியங்கள் என்னாகும்? இத்தனை வருஷங்கள் ஒரு மாதிரியாக வாழ்ந்துவிட்டு இன்று திடீரென்று அவள் தனது லட்சியங்களை மறந்து தப்பபிப்பிராயங்களைக் கொண்டதற்கு ஏதோ தகுந்த காரணமிருந்திருக்க வேண்டும் என்பது நிச்சயம். அக்காரணமென்ன வென்பது தான் புலப்படவில்லை. எங்களுள் எந்த ஒருவராது புலன் வழி நுகரும் இன்பவாழ்க்கையில் புகுந்து விட்டால் இதுகாறும் நாங்கள் கொண்டிருந்த லட்சியமும் வாழ்ந்த வாழ்வும், காற்றிலகப்பட்ட கடித வீடு போல் வீழ்ந்து பகற் கனவு போல் மறைந்து விடுமே என்ற கவலை கமாக்ஷியின் சொற்களை நினைக்கும் தோறும் மனத்தில் தோன்றி வருத்திக்கொண்டிருந்தது.

காமாக்ஷியின் நிலைமையோ, என் மனதிற்குத் துன்பம் விளைத்ததற்காக மிகுந்த வருத்தம் ஒருபாலும், எங்கள் ஆதர்சத்தையும் அதை அடைய நாங்கள் கையாளும் முறைகளையும் பற்றிய சந்தேகங்களும், குடும்பத்தில் தன் நிலைமையைப் பற்றிக்கொண்டிருந்த விபரீதமும் மற்றொருபுறமும்இழுத்து வருத்தலாயின. சென்ற மூன்று நாட்களாக எனது விருப்பங்களை எல்லாம் எதிர்பார்த்து நடப்பதும், எனது வார்த்தைகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் எதிர் சொல்லாது உடனே இசைவதும், குடும்பக் காரியங்களைச் செய்யும் மத்தியிலேயே திடீரென ஸ்தம்பித்து நிற்பதும், ஏதேதோ யோசிப்பதும் அவ்வேழைப் பெண்ணின் மனோநிலையை நன்குணர்த்தின. இதுகாறும் எங்கள் உள்ளங்களிரண்டும் ஒத்துப் பெருகியது போக இருவருக்குமிடையே ஒரு திரை விழுந்து மறைத்துக் கொண்டது. இதே நிலைமையில் இன்னும் பல நாட்கள் இருத்தல் கூடாதென நன்றாய்த் தெரியும். ஆனால் அதை நிவர்த்திக்கும் வழிதான் தெரியவில்லை.

உட்சென்ற காமாக்ஷி படுக்கை விரித்து அதில் குழந்தைகளைத் தூங்க வைத்துவிட்டுக்

கீழே சென்று விட்டு வேலைகளை முடித்துக் கதவுகளைப் பூட்டிக் கொண்டுவர அரை மணி நேரமாயிற்று. கட்டிலில் என்னருகே உட்கார்ந்து மெள்ள என் மேல் சாய்ந்து கொண்டாள். சிறிது நேரம் இருவரும் மௌனமாயிருந்தோம். பின்பு காமாக்ஷி "ஒரு கதை சொல்லுங்களேன் கேட்போம்" எனக் கேட்டாள். "காமு, வெகு வினோதமான கதையொன்று சொல்லுகிறேன். அதன் உட்கருத்தையுணர்ந்து சொல் பார்ப்போம்." "என்னவோ, என் புத்தி எவ்வளவு தூரம் செல்கிறதோ பார்க்கிறேன்". நான் மேல் வருமாறு கதை சொல்லலானேன் :—

"ஒரு காலத்தில் கற்றுணர்ந்து மிக வித்துவானாகவிருந்த ஒருவருக்குப் பெரிய கஷ்டம் வந்தது. ஒரு நாள் அம்மனிதனது ஹிருதயம் (Heart) சுவாச ஆசயங்கள், (Lungs), சிறுநீர்க்கோளங்கள் (Kidneys) இவை மூன்றும் முக்கியமான விஷயமொன்றைக் குறித்து யோசிக்கச் சபை கூடின. ஹிருதயம் சொல்லிற்று : 'சகோதரர்களே! மனித உடலிலேயே நம்மைப்போல் இடைவிடாது உழைப்பவர்களும், துன்பமனுபவிக்கிறவர்களும் ஒருவருமே கிடையாது. மற்ற உருப்புக்களைப் பாருங்கள். வயிறு தினம் மூன்று அல்லது நான்கு வேளைகள் தன்னிடம் வரும் ஆகாரத்தை ஜீரணித்து அனுப்பி விட்டு மற்ற நேரங்களில் எல்லாம் சும்மாவிருக்கிறான். அதிலும் வியாதியோ, விரதங்களோ வந்து விட்டால் அவன்பாடு கொண்டாட்டந்தான், வேலையே கிடையாது. அதனால் மற்றவருக்கு என்ன தீங்கு நேரிட்டாலும் அவன் கவனிப்பதில்லை. மற்ற உருப்புக்களும் அப்படியே தான். கண்கள் இஷ்டமானால் பார்க்கலாம், இல்லாவிட்டால் மூடிக்கொள்ளலாம். கை கால்கள் என்றவர்களுக்கு வேலை செய்யும் நேரம்போக மற்ற நேரங்களில் ஓய்வு உண்டு. மூளைக்கும், மனதிற்குங்கூடத் தூங்கும் பொழுது ஓய்வுண்டு. நமது கதி மிகவும் கொடியது' எனக் கூறிற்று.

சுவாசப்பைகள் 'ஆமப்பா, எப்பொழுதும் ஒரே மாதிரியாக வேலை செய்வதாயிருந்தாலும் பரவாயில்லை. உடலில் எந்த அவயவத்திற்கு அதிக வேலை இருந்தாலும் நமக்கும் வேலை அதிகம். அதன் பிறகு அயர்ந்து நித்திரை செய்யும் பொழுதும் நமக்கு ஓய்வும் உறக்கமும் கிடையாது. இதை நினைக்கும் பொழுது தான் என் வயிறு எரிகிறது' என்றது.

நீர்க்கோளங்கள் 'அண்ணன்மார்களே! உங்களைக் காட்டிலும் என் விதிதான் பயங்கரமானது. உங்களுக்காவது இடையிடையே சிறிது ஓய்வு ஏற்படுகிறது. சுவாசப்பைகள் விரிந்து அவையுள் காற்றுப்புகும்பொழுதும், இருதயத்தினுள் இரத்தம் பெருகும்பொழுதும் உங்களுக்கு ஓய்வு தானே. சுருங்கி அவற்றை வெளியே தள்ளும்பொழுது தானே உங்களுக்கு வேலை ஏற்படுகிறது. எங்களைப் பாருங்கள். சிறிதும் ஓய்வின்றி மூத்திரத்தை இரத்தத்திலிருந்து பிரித்து வடிகட்டிக் கொண்டே இருக்கவேண்டியது தான். இந்த அநீதத்திலிருந்து தப்பித்துக்கொள்ள ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும்' எனக் கூறிற்று.

பின் இருதயம் சொல்லிற்று : 'அப்பா! நீர்க்கோளங்களே, நீ சொல்லியபடி எங்களுக்கொன்றும் இடையிடையே ஓய்வில்லை; நாங்கள் விரிவதிலும் எங்களுக்கு வேலை தான். விரிந்து என்னுள் இரத்தமும், சுவாசப்பைகளில் காற்றும் புகாவிட்டால் எங்களுக்கு வேலை ஏது? உன்னைப்போல் இருந்தவிடத்திலேயே வேலை செய்வது கடினமாகாது. எக்காலமும் சுருங்கி விரிந்துகொண்டே இருப்பதில் தான் கடினம் உண்டு, அலுப்பும் அதிகம். மற்றொரு விஷயம்; சுவாசப்பைகளும், நீயும் அதிர்ஷ்ட

வசத்தால் இரட்டையர்களாகப் பிறந்தீர்கள். உங்களில் ஒருவனுக்கு வியாதியோ, மற்றெவ்விதக் கஷ்டமோ ஏற்பட்டால் அவனது வேலையைச் சிறிது காலத்திற்கு மற்றவன் செய்ய இடமுண்டு. எனக்கு அந்தப் பாக்கியம்கூடக் கிடையாது. இவை போகட்டும்; நமது துன்பங்களைத் துலைக்கும் வழியைப் பார்ப்போம். எனக்கு ஒருவழி தோன்றுகிறது; அதை அனுசரித்தால் வெகு சீக்கிரத்திலேயே நமது கோரிக்கைகள் நிறைவேறிவிடும். இக்காலத்தில் வேலை செய்து பிழைக்கும் தொழிலாளர்களெல்லாம் தங்கள் கஷ்டங்களையும், துன்பங்களையும் நீக்கிக் கொள்ள வேலை நிறுத்தத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். அது பயனளித்தும் வருகிறது. நாமும் வேலை நிறுத்தம் செய்வது தான் சரியெனத் தெரிகிறது. உங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லுங்கள். நம்மில் மெஜாரிட்டியார் அபிப்பிராயப்படி நடந்து கொள்வோம்!' எனப் பிரசங்கம் செய்து முடித்தது.

நீர்க்கோளங்கள் 'சபாஷ், பேஷ்! பேஷ்!! யஜமானனை வேலைக்காரன் காலில் விழச்செய்ய இது ஒன்று தான் சரியான வழி. வேலை நிறுத்தத்திற்கு நான் வோட் செய்கிறேன்' எனக் கூத்தாடியது.

சுவாசப்பைகள் 'சகோதரர்களே! நீங்கள் சொல்லும் உபாயம் சுருக்கமான வழி என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அது மிகவும் கடினமான வழி என்பதையும் உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். அவ்வழியே முடிவு வரை செல்ல யாராலும் முடியாது. நமது யஜமானனாகிய பண்டிதர் மிகவும் பிடிவாதக்காரர் என்பது உங்கள் எல்லோருக்கும் நன்றாய்த் தெரியும். வேலை நிறுத்தியதற்காக நம்மிடம் கோபங்கொண்டு நம்மைக் கவனியாதிருந்து விட்டார் என வைத்துக்கொள்வோம். அப்பொழுது வேலை நிறுத்தத்தை எத்தனை நாள்வரை கையாளமுடியும்? உலகில் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர் அக்காலத்தில் ஜீவனத்திற்கு என்ன கஷ்டப்படுகிறார்கள், அத்தகைய கஷ்டம் நமக்கும் வருமன்றோ? ஆகையால் முதலில் நமது குறைகளைக்கண்டு பண்டிதரிடத்தில் மனுச்செய்வோம். அதையவர் சரியாகக் கவனியாதிருந்து விட்டால் நேரிற் சென்று கேட்போம். அதற்கும் காரியம் பலிக்காவிட்டால் நாம் வேலை நிறுத்தம் செய்யப்போவதாகக்கூறி பயமுறுத்துவோம். இவ்வுபாயங்களில் நமக்கு அனுகூலமில்லாது போகாது. முழுவதும் பயனில்லாவிட்டாலும் நமது கோரிக்கைகளில் பாதியாவது நிறைவேறும். ஒன்றுமில்லாததற்கு இது மிகவும் மேலன்றோ. இவைகளில் காரியம் பலிக்காவிட்டால் கடைசி உபாயமாகத் தான் வேலை நிறுத்தத்தை வைத்துக்கொள்ள வேண்டும். அதிகக் கஷ்டமில்லாது காரியத்தை சாதித்துக் கொள்வது தான் புத்திசாலித்தனம்.'

'ஆம், நீ சொல்வது சரிதான், பண்டிதரிடத்தில் முதலில் சொல்லாமல் செய்வது நியாயமல்ல. ஆனால் நீ சொல்வதுபோல் முதலில் விண்ணப்பம் செய்யவும், பின்பு நேரிற் கண்டு கேட்கவும், அதன்பின் பயமுறுத்தவும், செய்ய வேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. ஒரு தடவை நேரிற் கேட்டுப் பார்ப்போம். நமது உரிமைகளைக் கேட்பதற்கு இவ்வளவு தாழ்மை எதற்கு? கெஞ்சுதல் ஏன்? நமது உரிமைகளை அளிக்க மறுத்தாரானால் நாம் வேலை நிறுத்தம் செய்ய வேண்டியது தான்' என்றது ஹிருதயம்.

நீர்க்கோளங்கள் 'சகோதரர்களே! சுவாச ஆசயங்கள் சொல்லுகிறபடி நடப்போமானால் நமது காரியம் ஒரு நாளும் கைகூடப் போவதில்லை. மேலும் பண்டிதரிடம் நேரில் சென்று

கேட்கவேண்டிய அவசியமிருப்பதாக எனக்குத்தோன்றவில்லை. நமது நிலைமை இதற்கு முன் அவருக்குத் தெரியாதென்று நினைக்கிறீர்கள்? நீங்கள் அவரிடம் நேரிற் சென்று கேட்டுப் பாருங்கள். ஏதாவது தத்துவம் உபதேசம் செய்ய வருவாரே அன்றி காரியம் நடக்கப் போவதில்லை. முயற்சித்தும் காரியம் நடக்கா திருக்கத்தக்க உபாயம் இது தான். நான் இவைகளை எல்லாம் ஒப்புக்கொள்ளமாட்டேன். இன்றே வேலையை நிறுத்தி விடப் போகிறேன்!" என்றது.

மற்ற இருவருக்கும் இது ஒவ்வாததால் இத்துடன் கூட்டம் கலைந்தது.

மறுநாட் காலையில் பண்டிதரின் முகத்திலும் பாதங்களிலும் சிறிது வீக்கம் தோன்றிற்று. காரணம் ஒன்றும் தெரியவில்லை. வந்த டாக்டர் பண்டிதரிடம் சில நாட்களுக்கு முன்பு ஜுரம் கண்டதோ வென்றும் அல்லது ஏதாவது விஷமான மருந்துகள் சாப்பிட்டாரா வென்றும் அல்லது காலைப் பனியில் வெளியே சென்றிருந்தாரா வென்றும் இன்னும் பல கேள்விகளையும் கேட்டார். கடைசியாக 'kidneys affected' (நீர்க் கோளங்களில் கோளாறு) எனக் கூறி மருந்தனுப்புவதாகச் செல்லிச் சென்றார்.

மறுநாள் நீர்க்கோளங்கள் வேலை நிறுத்திய காரணத்தால் ஹிருதயத்திற்கும் சுவாச ஆசயங்களுக்கும் கஷ்டமுண்டாகவே வெகு நேரம் யோசித்து அவை இரண்டும் வேலை நிறுத்தத் தீர்மானித்தன. அன்றிரவு பண்டிதருக்கு மூச்சடைத்துக் கொண்டது மல்லாமல் மார்பில் வலியும் வந்து விட்டது. கடைசி வரையில் ஹிருதயம் என்ன முயன்றும் வேலையை முழுதும் நிறுத்த முடியவில்லை. இதன் பலன் சுவாச ஆசயங்கள்பாலும் காணப்பட்டது. மூன்றாம் நாள் காலையில் மயக்கம் காணத் தொடங்கி கொஞ்சங் கொஞ்சமாயதிகரித்துக் கொண்டே வந்தது. தாது குறைந்து கொண்டே வரவும் சுவாசமும் அடங்கிக் கொண்டிருந்தது. உடலெல்லாம் குளிர்ந்து சிறு வியர்வை தோன்றலாயிற்று. வைத்தியர் ஹிருதயம் தத்தளிக்கிற தென்றும், மூன்று நான்கு மணிநேரங்களில் நின்று விடுமென்றும் கூறிப்போனார்.

இந்திரியங்களிலிருந்து இழுக்கப்பட்ட சித்தம் உள் நோக்கவும் பண்டிதரின் நிலைமைக்குக் காரணம் இன்னதென விளங்கிற்று. பண்டிதர் ஹிருதயத்தையும், நீர்க்கோளங்களையும் சுவாச ஆசயங்களையும் கூப்பிட்டார். அவை குற்றுயிராய், நடக்கமுடியாது தள்ளாடிக் கொண்டு வந்தன. பண்டிதர் மகா புத்திமானென்று முன்னே சொல்லி யிருக்கிறேனல்லவா! அவற்றைப் பார்த்து மனம் வருந்தினார். அவருக்குச் சிறிதும் கோபம் பிறக்கவில்லை. அவற்றிற்கு நன்மதி கூறலானார்.

'அடா அற்பப் பயல்களே! உங்கள் புத்தியையும் செயலையும் நோக்க எனக்கு வருத்தமும் சிரிப்பு முண்டாகிறது. இத்தனை வயதாகியும் உங்கள் தொழில் ஜீவாதாரமானவை எனத் தெரிந்து கொள்ளாத மடையர்களே! உங்கள் ஒவ்வொருவனுக்கும் தன் தன்தொழிலே உயிர் என்று ஏனடா தெரியாது போயிற்று? அட சிறு மதிகளே! உங்கள் தொழில்களை நிறுத்துவதால் உடலில் மற்ற உருப்புகளுக்குமட்டும் தான் கெடுதிவிளையுமோ? உங்களுக்கும் கேடல்ல, மாணமே சம்பவிக்கும் எனத் தெரியாது போயிற்றே. அடா, இப்படித் தனக்கே கேடும் அழிவும் விளைத்துக் கொள்ளும் மடையர்களை என்னென்று சொல்லவது! மூட சிகாமணிகளே! உடலினின்றும் நீங்கள் வேறு என்றும் உங்கள் வேலை வேறு என்றும், உங்களுக்குக் கஷ்டமென்றும் தோன்றக்கூடிய விபரீத ஞானம் எங்கு கற்றீர்கள். போனவை போகட்டும், இப்பொழுதாவது புத்திவந்ததல்லவா? அறிவிலிகள்!

இனியாவது ஜாக்கிரதையாக நல்லறிவு கொண்டு பிழையுங்கள். பேதக் கதைகள் வேண்டாம். அவற்றால் நன்மையுண்டாகப் போவதில்லை' எனக் கூறியனுப்பினார்.

இவ்வாறு நல்லறிவுச் சுடர் கொளுத்தப்பட்ட ஹிருதயம் முதலியோர், தமது அறியாமைக்குத் தம்மையே நொந்துகொண்டு, வெட்கத்தால் தலை குனிந்து தத்தமிருப்பிடமெய்தித் தமது தொழிற்களிற் புகுந்தனர். அது முதல் நான்கு மணி நேரத்தில் பண்டிதர் குணமடைந்து எழலானார்" எனக்கூறி முடித்தேன்.

காமாக்ஷியின் முகத்தில் அறிவும், நகையும் ஒருங்கே ஒளிர்ந்தன. "என்னைக் குறித்துச் சொன்ன கதை இது. அன்று நான் குடும்ப வாழ்க்கையில் சுதந்திரமும் ஓய்வும் ரஜாவும் இல்லை எனச் சொல்லி மனஸ்தாபப்பட்டதற்குத் தானே இக்கதை சொன்னீர்கள்?" எனக் கேட்டாள். "ஆம்" என்றேன்.

"அன்று உங்கள் மனதை நான் மிகவும் புண்படுத்தி விட்டேன். பின்பு தான் என் புத்தியின்மை விளங்கிற்று. மனதில் சந்தேகங்கள் தோன்றினால் சாவதானமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமன்றோ! அத்தனை கடுஞ்சொற்கள் கூறியதும் அவ்வளவு படபடப்புக் காட்டியதும் மடத்தனம்" என்றாள்.

"உன் சொற்கள் என் மனதைத் துன்புறுத்தவில்லை. துன்புறுத்தவும் மாட்டா. சந்தேகப்பட்டுமிருந்தால் நீ சாவதானமாய்க் கேட்டிருப்பாய். விபரீதஞானம் உண்டாகி மனதில் துன்பமும் குழப்பமும் ஏற்பட்டிருக்கும் பொழுது படபடப்பும் சினமும் தோன்றுவது இயற்கையே. உனது சொற்கள் உனது மனநிலையை நன்குணர்த்தின. அது தான் என் மனத் துன்பத்திற்குக் காரணமாயிருந்தது. சமத்துவ நிலையில் நின்று விடாது நம்முள்ளத்தில் நீ என்றும் நான் என்றும் தோன்றும் பேதபுத்தியை நீக்கி, ஒன்றாகி விடுவதை லட்சியமாகக் கொண்டு முயன்று வருகிற காலத்தில் நீ நமது ஆதர்சத்தினிடம் சந்தேகங்கொண்டு அதை நழுவவிட்டதுமன்றி நம்மிடை இதுகாறும் நிலைத்திருக்கும் சமத்துவத்தையே சந்தேகிக்கக்கூடிய நிலைமைக்கு வந்து விட்டாய் எனத் தெரியவே நாமிதுமட்டும் கூடிவாழ்ந்து பட்ட கிரமங்கள் வீணே. உனது மனம் இந்நினைவுகளிலே தங்கிவிடுமாயின் இனி நாம் கூடிவாழ்வது அர்த்தமற்றதாயும் பயனற்றதாயும் ஆகிவிடும் என்ற கவலைகள் என் மனத்துள் புகுந்து வருத்தின. உன் மனதில் இந்தக் களங்கமும், கலக்கமும் எப்படி உண்டாயினவென்று தெரியவில்லை. காரணத்தை உன்னிடம் கேட்கவும் அச்சமாயிருந்தது. கேட்கும் பொழுது நீ அன்றுபோலச் சினங்கொண்டு, படபடப்பாக வார்த்தைகள் மொழிவாயாயின் நமது உள்ளங்கள் ஒன்று சேர வழியின்றி, இன்னும் பிரிந்து செல்ல நேரிடுமெனத் தோன்றிற்று."

"இவ்விஷயத்தில் தவறு என்னுடையதே. இச்சந்தேகங்களும் துன்பங்களும் உண்டான காரணத்தைக் கூறுகிறேன். சில மாதங்களுக்கு முன்பு சிந்தாமணின் பத்திராதிபர் 'பெண்மக்களும் சுதந்திரமும்' எனப் பெயரிட்ட வியாசமொன்று எழுதியிருந்தார். அதில் தான் இவ்விஷயங்கள் எல்லாம் கூறப்பட்டிருந்தன. அதை வாசித்தபின் அவை யாவும் உண்மையாகவே தோன்றின. நமது வாழ்க்கையின் பெரும்பாகத்தை மனத்தால் சிந்தித்துப் பார்த்தேன். பார்க்கப் பார்க்க உண்மையில் எனக்கு ஒருவித சுதந்திரமும் செல்வாக்குமில்லை, நீங்கள் இதுகாறும் சமத்துவமென்றும் வாழ்வின் லட்சியமென்றும் கூறியதெல்லாம் என்னை ஏமாற்றி உங்கள் ஆளுகையின் கீழ் வைத்திருக்கவே என்ற எண்ணங்கள் உறுதிப்பட்டன.

மனதில் வெறுப்புண்டாயிற்று. இவ்வெண்ணங்களை வெளியிட்டால் நமது வாழ்விற்குத் தீங்கு நேருமெனக் கருதி வெளியிடாதிருக்க எவ்வளவோ முயன்றேன். உள்ளே அடக்கி வைக்கவைக்க மனத்தில் துன்பமும் வெறுப்பும் படபடப்பும் வளர்ந்து வந்தன. அன்று நான் கோபங்கொண்டு பேசிய பின் நமது உள்ளங்கள் பிரிந்து நிற்பது நன்றாய்த் தெரிந்தது. அதனால் மனவுளைச்சலும் உள்ளக் கொதிப்பும் அதிகமாயினவே அன்றிக் குறையவில்லை. எப்படித் திரும்பச்சமாதானம் செய்து பழைய மனமொத்த வாழ்வு வாழப் போகிறோமென ஏக்கங்கொண்டேன். எப்படி சமாதானம் செய்துகொள்வதெனத் தான் தெரியவில்லை. எனது அபிப்பிராயங்கள் முற்றுந்தவறானவை எனக் கூறி மன்னிப்புக் கேட்கவும் எனது அகங்காரம் இடந்தர மறுக்கிறது. உண்மையில் எனது அபிப்பிராயங்கள் தவறானவை என்று இப்பொழுதும் மனப்பூர்வமாய்த் தோன்றவில்லை. நான் எப்படி மன்னிப்புக் கேட்பேன்?"

"சிந்தாமணியின் செயலாவிது! அவ்வியாசத்தை என்னிடம் காட்டியிருக்கக் கூடாதோ? பத்திராதிபர் ஏதோ ஒரு கருத்தைக்கொண்டு இப்படி எழுதியிருப்பார் என நினைக்கிறேன். சாதாரணமாய்க் குடும்பவாழ்விலிருக்கும் குற்றங்களைக் கூறும்போது இவற்றையும் கூறியிருக்க வேண்டும். பெண்மக்களின் சுதந்திரத்தைப் பற்றிக் கூறுமிடத்து இவற்றை எழுதுவது என்தகாது. ஆடவர் நடை பழகலாலும், அவர் புரியும் தொழில்களைத்தாம் செய்வதாலுமே பெண்களுக்கு சமத்துவம் உண்டாகுமென்ற போலிக் கொள்கையைக் கொண்டிருக்கும் கலாசாலைக் கல்வி கற்ற தற்காலத்துப் பெண்களில் சிலர் எதைத்தான் எழுதமாட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. பெண்கள் பெண்களாகவே இருந்து வருவதைக் காட்டிலும் போலி ஆடவர்களாக ஆவதால் அவர்களுக்கு என்ன மகிமை ஏற்படப்போகிறது? அல்லது அவர்கள் என்ன சுகங்களும் சுதந்திரங்களும் அனுபவிக்கப்போகிறார்கள்? அல்லது ஆண்கள்பால் விளங்குவதைக் காட்டிலும் பெண்கள்பால் தெய்வம் குறைவாக விளங்குகிறதா? பெண்கள் பெண்களாகவே இருந்து அவர்க்குரிய இடத்தையும் பலபல சுதந்திரங்களையும் நன்குணர்ந்து அவற்றைப் பெறமுயற்சித்தல் சரியாகும். அவர்கள் பெண்களாகத் தமது கடமையைச் செலுத்துவதால் தான் பெருமையும் சுதந்திரமும் பெறுவர்களேயொழிய ஆடவர்களாக நடிப்பதால் எக்காலத்திலும் அடையப் போவதில்லை.

"இனி ராஜாவிஷயத்தைப்பற்றிச் சிறிதுயோசித்துப் பார். நான் வருஷத்தில் ஒரு மாதமாவது ராஜா வாங்கிக்கொள்கிறேன் என்பது உண்மைதான். நமது ஊரில் டாக்டர் கிருஷ்ணசாமி வந்து தொழில் தொடங்கி ஆறு வருஷங்களாகின்றன. எத்தனை மாதம் ராஜா வாங்கிக்கொண்டு, அதாவது அவரது தொழிலை நிறுத்தி விட்டுப் போயிருக்கிறார் என்பதைப் பார். பிறரிடம் சம்பளம் பெற்று வேலை செய்யும் எந்த மனிதனைக் காட்டிலும் டாக்டருக்குத் தான் சுதந்திரம் உண்டென்று ஒப்புக்கொள்கிறார்கள். நமது கடைக்காரன் திருஞானசம்பந்தஞ் செட்டியாரை ராஜா வெடுத்துக்கொண்டு ஸ்தலயாத்திரை செய்ய சொன்னால் போவாரா? எங்கு பொறுப்பும் தன்னயமும் உண்டோ அங்கு ராஜாவென்ற நினைவே கிடையாது. உத்தியோகம் செய்கிறவர்களுக்கு அதாவது சர்க்காரிடத்திலோ, மற்றவர்களிடத்திலோ சம்பளத்திற்காக உழைப்பவருக்கு அவர்கள் இஷ்டம்போல் வேலை நடத்தும் சுதந்திரம் கிடையாது. மேலதிகாரிகளின் இஷ்டப்படி செய்யுங் காரியங்களின் லாப நஷ்டங்களுக்கும் பொருப்பு நாங்கள் அல்ல. ஆனால் ஒரு குடும்பத்தில்

தாயாகவும் மனைவி (மனைத் தலைவி) யாகவுமிருந்து வாழும் பெண் அவ்வீட்டில் சம்பளத்திற்கு உழைப்பவளன்று. குடும்பத்தின் பொருப்பு முழுவதும் அவளைச் சேர்ந்ததே. ஒவ்வொரு காரியத்தையும் எப்படிச் செய்தால் நன்மை பயக்கும் எனத் தீர்மானித்து அப்படி நடத்தும் சுதந்திரமுண்டு. குடும்பத்தைப் பொறுத்த ஒவ்வொரு காரியத்திலுமே அவர்களுக்குச் சுதந்திரமுண்டு. இத்தனை பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்ள முடியாதவரும், ஏற்க இஷ்டமில்லாதவரும்தான் இந்தியக் குடும்பங்களில் பெண்மக்களுக்கு சுதந்திரமில்லை, ராஜா இல்லை எனப் பிதற்றுகின்றனர். அவர்களது கூற்று அறியாமையே. குடும்பவாழ்க்கை நடத்திவரும் பெண்ணைக் கவனிக்கும் பொழுது குடும்பத்தினின்றும் வேறுபடுத்திக் கவனிக்கவே இடமில்லை. இன்னும் கூலிக்காகச் செய்யும் வேலைக்கு மட்டும் தான் ஓய்வு கிடைக்கிறது. ராஜாநாட்களிலும் நமது வீட்டு வேலைகளில் எனக்கு உரியதைச் செய்யாமலிருக்கிறேனா? செய்யாமலிருக்கத்தான் முடியுமா? இயற்கைக்கு உட்பட்டு ஒவ்வொரு பிராணியும் எந்நேரத்திலும் தொழில்களிற் புகுத்தப்பட்டிருக்கின்றன. தொழில் செய்யாது எப்பிராணியும் இருப்பதில்லை, ஏன் எனில் இருக்க முடியாது.

இவை எல்லாம் உலகத்தாரான சாதாரண மனிதருக்குக் கூறும் உபதேசமென்ற பேதக் கதைகள். நாமோ உலகிலிருந்து உலகத்தவராக இருப்பதில்லை எனத் தீர்மானித்திருக்கிறோம். சத்திய நாட்டமுடையவர் அதாவது கடவுளை அடைய நாடிச் செல்பவர் உலகத்தவராக இருத்தல் கூடாது. உலகத்தவனாயிருப்பதாவது உலகில் தன்னையும், மற்ற ஜீவர்களையும், வஸ்துக்களையும் வெவ்வேறாகக் காணும் பேதபுத்தி கொண்டிருப்பது.

உலகில் மாந்தர், கடவுள் என ஒருவர் எங்கோ ஆகாயத்தில் உயர ஏழு உலகங்களுக்கப்பால் இருப்பதாக நினைக்கிறார்கள். ஆயினும் ஒவ்வொருவனும் கேட்கும் பொழுதெல்லாம் 'கடவுள் எங்குமுள்ளவர், தூணிலுமிருக்கிறார்; துரும்பிலுமிருக்கிறார்" என வெறும் வாய்ப்பாடம் ஒப்பிக்கத் தவறுவதில்லை. கடவுள் எங்குமிருப்பதை அறிவு பூர்வமாய் உணர்ந்தவர் எத்தனை பெயர்களிருக்கிறார்கள்? அனுபவத்திலறிந்தவரை எத்தனை மனிதரில் ஒருவனைக் காணலாம்? கடவுள் துரும்பிலுள்ளான் என்னும்போது கடவுள் துரும்பிலிருப்பினும் அதனுள் எங்கோ ஓரிடத்திலிருக்கிறானென்றும் துரும்பினின்றும் வேறானவனென்றும் பொருள் கொள்ள இடமிருக்கிறது. ஆகவே அந்த வாக்கியம் அவ்வளவு சரியானதல்ல. உண்மையில் தெய்வம் தூணாகவுமிருக்கிறது, துரும்பாகவுமிருக்கிறது. பிரபஞ்சமே கடவுள்மயம். கடவுளே பிரபஞ்சமாக—அதிலுள்ள ஒவ்வொரு பொருளுமாக—விளங்குகிறான். உலகம் கடவுளினின்றும் வேறானதன்று. உலகில் தோன்றும் ஒவ்வொரு பொருளும் தெய்வமே. வெவ்வேறு உருவங்களோடும் அதற்குரிய பெயரோடும் விளங்கும் கடவுளைத் தனித்தனிப் பொருள்களாகப் பிரித்து உணரும் மனோசக்தியே மாயை எனப்படும். பெயர்களையும் உருவங்களையும் கடந்து சென்று எல்லாப் பொருள்களையும், பிரபஞ்சம் முழுவதையும், கடவுள் மயமாகக் காணும் காட்சியே யோக சாதனம், சமாதி, பிரம்மஞானம்.

ஆனால் உலகத்தில் ஜீவராசிகள் தோன்றிய நிமிஷத்திலேயே அவற்றிற்கு பேதபுத்தி, அதாவது பொருள்களையும், மற்றப் பிராணிகளையும் தன்னிலும் வேறாக உணரும் சக்தி, உண்டாகி இருக்கிறது. ஆகையால் எத்தனை கோடிகோடி ஜன்மங்களிலோ ஏற்பட்ட மாயையின் பழக்கம்; உலகத்தில் பொருள்களைத் தனித் தனியாயும் தன்னிலும் வேறாகவும் காண்பிக்கும் மனோசக்தியை அழிப்பது இலகுவில்லை. ஆனாலும்

பேத புத்தி நீங்கும்வரை உண்மை ஞானம் தோன்றாது. எத்தனை கஷ்டங்கள் பட்டாயினும் மாயையை அழிக்கத் தான் வேண்டும். அழிப்பதாவது என்ன? பேதபுத்தி உள்ளத்தில் தோன்றும் பொழுதெல்லாம் அதற்கு இடங்கொடாமல் உலகில் தோன்றும் பொருள்கள் எல்லாம் தெய்வமே என்னும் நினைவை உள்ளத்தில் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும். நாளடைவில் ஏகப்பார்வை பழகிப்போய் அதுவே எப்பொழும் நிற்க, வேறுபடுத்திக்காட்டும் கற்பனை சக்தி தானாகவே மறைந்து விடும்.

மனைவி மக்களைத் துறந்து, மனித சங்கத்தை விட்டுப் பிரிந்து இம்முயற்சி செய்யும் சன்னியாசிகளுக்கு உலகிலுள்ள சகல ஜீவர்களையுமே சமத்துவமாகவும், பின் நாளடைவில் ஒன்றாகவும், அப்படியெனில் கடவுள் மயமாகவும், காண வேண்டியிருக்கிறது. அது கடினமான காரியம், நமக்கு அவ்வளவு கஷ்டமில்லை. மனைவி, கணவன் என்ற தன்மையில் இயற்கையிலேயே நம் பால் அமைந்த அன்பு இருக்கிறது. அதைக் காமத்தினின்றும் தனியாய்ப் பிரித்து, அற்ப ஆசைகளினின்றும் சுத்தப்படுத்தி, பெருக்கிக் கொண்டே போனால் நம்மில் சமத்துவமுண்டாகிக் காலக்கிரமத்தில் ஏகத்துவமும் எளிதே உண்டாகும். நம்மிருவர்பாலுமுள்ள பேத மொழிந்தவுடன், உலகில் எல்லாப் பொருள்களிலும் கடவுளைத் தரிசித்தல் பிரபஞ்ச முழுவதையுமே கடவுள் மயமாகவும், கடவுளன்றி வேறல்லாததாகவும் காண்பது இயற்கையாக வந்துவிடும். இதை உத்தேசித்துதான் நம்மிருவர் உள்ளும் தோன்றும் பேத உணர்ச்சியை நீக்குவதை லட்சியமாகக்கொண்டு அதை அடைய முயன்றது. மாயைதோன்றும்பொழுது தான், அதாவது நானென்றும், நீ என்றும், உலகமென்றும், பலபல பொருள்களென்றும் வேறுபடுத்திக்காட்டும் உணர்ச்சி தோன்றும் காலத்தில் தான், தனது என்னும் பற்று ஏற்படுகிறது. அதுவே ஜீவர்களின் கஷ்டத்திற்குக் காரணம். நான், எனது என்னும் உணர்ச்சிகள் தோன்றிராவிட்டால் உனக்கு, எனக்கு சுதந்திரங்களும், உரிமைகளும் இல்லை என்றும், நான் கஷ்டமடைகிறேனென்றும் எண்ணங்கள் தோன்றியிரா. அவற்றால் உண்டான மனவேதனைகளும் மற்றத் துன்பங்களும் விளைந்திருக்காது. இப்பொழுது நமது லட்சியத்தின் உண்மையும் உயர்வும் தெரிகிறதா?"

வெகு நேரம்வரை இருவரும் ஒன்றும் பேசவில்லை. என் மனைவி தீவிரமாக யோசனைசெய்து கொண்டிருந்தாள் என்பது தெரிந்தது. இவ்வாறு வெகுநேரமிருந்தோம். கீழே கூடத்திலிருந்த கடிகாரம் மூன்று மணி அடித்த சத்தம் எங்களை திடுக்கென உலக நினைவில் தள்ளிற்று. "காமு, எவ்வளவு நேரமாயிற்று பார்த்தாயா?" என்றேன்.

இருவரும் எழுந்து நின்றோம். காமாக்ஷி சட்டென எனது பாதங்களில் நமஸ்கரித்தாள். "அடி பைத்தியமே, இதென்ன காரியம் செய்கிறாய்?" எனச் சொல்லிக் கொண்டே இருபுஜங்களையும் பற்றித் தூக்கினேன்.

"நான் வெறுமே உபசாரத்திற்குப் பணிந்தேன் என எண்ணாதீர்கள். இன்று முதல் நீங்கள் எனது குரு; எனது கடவுள்; என்னைக் காத்துக் கரையேற்றும் இஷ்ட தெய்வம். இவ்வளவுகாலம் இவ்விதம் உங்களை உணராதுபோன அறியாமையை என்னென்று நொந்துகொள்வேன்? பிரபோ! இப்பிறவியில் மட்டுமல்ல மறுபிறப்பிலும் நான் தங்களையே கணவனாகவோ, வேறு நெருங்கிய பந்துவாகவோ, அல்லது சற்குருவாகவோ அடைந்து சாபல்யமாக வேண்டுமென்பது தான் எனது பிரார்த்தனை."

நான் "போ! போ! பைத்தியமே! நான் ஏதோ ஞானோபதேசம் செய்து விட்டதாக நினைக்கிறாயோ? எனக்கே அனுபவ ஞானம் கிடையாதே, நான் எப்படி உபதேசிக்கப் போகிறேன்? நான் கூறியவற்றை எல்லாம் புத்திபூர்வமாய் அறிந்திருக்கிறேனே தவிர, அனுபவசித்தமாக ஞானமேது? நம்முள் பேத பாவனையிருக்கக் கூடாதென்று இப்பொழுது தானே சொன்னேன். எப்படி நமஸ்கரிக்கிறாய்? நமது லட்சியத்தின்—மனிதர் எல்லோருமே ஆதர்சமாகக்கொண்டு அதை அடைய உழைக்க வேண்டியதின்—ஒப்புயர்வற்ற பெருமையை உனக்கு எடுத்துச் சொல்லவேண்டுவது அவசியமெனத் தோன்றிற்று. ஆனால் இவ்வளவு பெரிய உபன்னியாசம் செய்ய நினைக்கவில்லை. ஏதோ என்னை அறியாமலே பேச்சு வளர்ந்து விட்டது. இனிப் படுத்துக்கொள்வோம்."

நிலவடைந்து கரிய இருள் மூடிக்கொண்டது. உள்மாடத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்கு அவிந்து வெகு நேரமாயிருக்கும். ஆகவே ஒருவரையொருவர் ஆதாரவாகப்பிடித்துக்கொண்டு உள்ளே சென்று, சாவதானமாய் எங்கள் படுக்கைகளைத் தடவிக் கண்டுபிடித்துச் சயனித்துக் கொண்டோம்.

நூர்ஜஹான் அல்லது பரதகண்டத்துச் சௌந்தரியக்கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)

(463-வது பக்கத்தொடர்ச்சி.)

முப்பத்தாறுவது அத்தியாயம்.

மேஹருல் நிஸா முதலில் அலிகுலிபெக்கை மணக்க இஷ்டமில்லாது, தன் தந்தையாகிய அயாஸ் பெக்கினிடம் தன் மனதை வெளியிடவே, அயாஸ்பெக் அவளது வேண்டுகோளுக்கிணங்காது குலவழக்கை அனுசரித்து, மேஹரை அலிகுலிபெக்கிற்கு மணமுடித்ததைப் பற்றி முன்னாலேயே கூறப்பட்டுள்ளது. தருணர்கள் அழகுமிக்க பெண்ணை மனைவியாக அடைய இச்சிக்கும் வண்ணம் தருணிகளும் ரூபவானாகவும் சுசீலனாகவுமுள்ள பதி தமக்குக் கிடைக்க வேண்டுமென அவாக் கொள்வது சகஜமே. தன் எண்ணம் பூர்த்தியடையாததால் மேஹர் மிக்க துக்கத்திற்குள்ளாயினள். ஆயினும் சில நாட்கள் அதிரூபவானான அலிகுலி பெக்குடன் இவள் பழகிவரவே, அவனது குணாதிசயங்களை ஒவ்வொன்றாக அறிந்தனள். அலிகுலிபெக் பெற்றோர் உற்றோரது உதவியின்றி, தன் பராக்கிரமத்தாலும் குணத்தாலும் அக்பர் பாதுஷாவின் கிருபையைச் சம்பாதித்து, கிரமப்படியே நற்பதவியை அடைந்திருந்தனன். இதுவுமன்றி, அரண்மனையிலிருக்கத் தகுந்த அழகுமிக்க ஒரு ஸ்திரீ ரத்தினத்தை மனைவியாக அடைந்தது முதற்கொண்டு அவனது கௌரவமுமதிகரித்தது. நமது கதாநாயகி மேஹரும் இளவரசன் சலீமை—அதாவது ஜஹாங்கீர் பாதுஷாவை—மறந்து, குலவழக்கப்படி மணந்துள்ள கணவனுடன் நிஷ்கபடப் பிரேமையோடு வாழ்ந்து வந்தனள். அச்சமயம் அலிகுலிபெக் 'வர்தமான்' என்னுமிடத்தில் கோட்டை அதிகாரியாக இருந்தனன்.

அலிகுலிபெக்கைப்போல் சூரவீரன் கோட்டை அதிகாரி! மற்றும் இந்திராணியையும் பழிக்க வல்ல அழகுபடைத்த மேஹர் அக்கோட்டை அதிகாரியின் மனைவி! பிறகு அந்த வர்தமான் கோட்டையின் சோபையை என்னென்று வர்

ணிப்பது! கவிஷேக் சாதியாலெழுதப்பட்ட ஓர் கிரந்தத்தைக் கரத்திலேந்தி, அக்கோட்டையின் ஓர் பாகத்தில் மேஹர் வாசித்துட்கார்ந்திருக்க, நமது கோட்டையதிகாரி தன் உத்தியோகத்தையும் மறந்து, பித்தம் பிடித்தவனாய், அவளருகில் வீற்று ஆனந்தமுடன் காலத்தைக் கழித்து வந்தான்.

இங்கு இப்படியிருக்க, ஜஹாங்கீரது ஒற்றர்கள் பாதுஷாவின் தயவைச் சம்பாதிக்கக் கருதி, கோட்டை அதிகாரியைப் பற்றி ஒன்றுக்கு ஒன்பதாகச் சாடி சொல்ல ஆரம்பித்தனர். ஜஹாங்கீர் சிம்மாதன மேறியபின் இராஜாங்க வேலைகளைச் சரிவரப் பார்த்து வந்தான். தன் தந்தையுடன் சண்டையிட்ட வண்ணம் இவனது புத்திரனான குஸ்ருவும் இவனுக்கு விரோதமாக ஒவ்வொரு காரியத்தையுஞ் செய்து வந்தனன். அவனுடன் சில சர்தார்களுஞ் சேர்ந்தனர். ஆயினும் ஜஹாங்கீர் அவனை அடக்கித் தேசமெங்கும் நீதியையும் சாந்தத்தையும் நிலை நிறுத்தினான். ஆனால் மேஹரை நினைத்து நினைத்து நீதியை மறந்தான். அவளை எவ்விதத்திலடைவதென அல்லும் பகலும் சிந்தித்து வந்தான். இராஜாங்க விஷயத்தை அலட்சியஞ் செய்யலானான். காரணமின்றி அலிகுலிபெக்கை வெறுத்தான். இச்சங்கதியை அறிந்த வீரனான அலிகுலிபெக் பாதுஷாவின் மேற் கோபங்கொண்டனன்.

ஓர் நாள் வர்தமான் கோட்டையின் ஓர் மூலையில் அலிகுலிபெக் ஏகாந்தமாயுட்கார்ந்து தனக்குள்ளாகவே பேசிக் கொண்டிருக்க, மேஹர் அவனுக்குத் தெரியாமல் மறைந்திருந்து அவற்றைக் கேட்டு வந்தனள். அலிகுலிபெக் ஆவேசங் கொண்டவனாய் உரக்கப் பின்வருமாறு பகரலுற்றான்: "இவ்வுலகில் சுகம் யாதென அறிவதற்குமுன்னால், மத்தியில் எவ்வளவு விக்கினங்களுண்டாகின்றன? நாங்கள் அநுபவித்துவரும் சுகத்தைக்கண்டு ஈச்வரனுக்கே ஏற்கவில்லை போலும்! பாதுஷாவினிடம் இதுவரை கொண்டிருந்த எண்ணமெல்லாம் இவ்வண்ணம் வியர்த்தமாகுமென நான் கனவிலுங் கருதவில்லையே! ஆனால் மோகமே! விசுவாச காதக மோகமே! இந்த ஜகத்தில் உன் சரணங்களின்கீழ் லட்சக் கணக்கான அனர்த்தங்கள் உற்பவித்து, கோடிக்கணக்கான குடும்பங்கள் இருக்குமிடந் தெரியாமல் மறைகின்றனவே! உன் துஷ்கிருத்தியங்களைக் காவியமாக எழுதக் கவிகளும் அஞ்சுகின்றனரே! சத்புருஷர்களைத் துதித்துப் பதிவிரதைகளின் குணாதிசயங்களைப் பாடி அம்மங்களத் தொனியால் உலகத்தவரை ரஞ்சிக்கச் செய்யும் சரஸ்வதியும் உன்னைக்கண்டு பீதி அடைகின்றனளே! சகலப் பிரஜைகளையும் புத்திரர்களாகப் பாவித்து பரிபாலனஞ் செய்யவேண்டிய பாதுஷாவையும் உன் வலைக்குட் சிக்கவைத்து, அவனது தர்மத்தை மறக்கும்படி செய்கின்றனையே! ஆனால் பாதுஷாவாக இருந்தாலென்ன? எப்பொழுது தன் யோக்கியதையை மறந்து துஷ்கிருத்தியங்களைச் செய்கின்றானோ அவனிடம் ஏன் பீதிகொள்ளல் வேண்டும்? பாதுஷாக்களுக்கெல்லாம் பாதுஷாவாக விளங்கும் அந்த பரமேச்வரன் எனக்களித்துள்ள அதிலாவண்ய ரத்தினத்தைக் கொள்ளைகொள்ளக் கேவலம் இப்பரதகண்டத்துப் பாதுஷாவிற்கு யாது அதிகாரம்? அவன் எவ்வளவு உன்னத பதவியிலிருந்த போதிலும், பரஸ்திரீயினிடம் மனதைச் செலுத்த அவனுக்கு என்ன உரிமை உளது? ஈன்றோர் செய்துள்ள புண்ணியத்தாலன்றோ இவன் இப்பொழுது இராஜ்யத்திற்கு அதிபதியாயிருக்கின்றனன். ஆனால் தன் நீசசுபாவத்தாலும், அநியாய காரியங்களாலும் உலக நிந்தனைக் குள்ளாகுங்கால், ஏனிவனிடம் பீதி கொள்ளல் வேண்டும்? என்ன அநியாயம்? என்ன அக்கிரமம்? கடவுளாற் கொடுக்கப்பட்ட காரிகையைக் கேவலம் காவலனோ கொள்ளை கொள்ளுவன்? இப்புலிக்குட்டி அலிகுலிபெக்கோ அவளை இழந்து பேசாதுட்கார்ந்திருப்பான்! இவ்வுடலில் ஒரு துளி இரத்தம் ஓடிக்கொண்டிருக்கும்வரை இந்த ஜஹாங்கீர் பாதுஷா ஒருவனென்ன, இவ்வுலகமே என்னை எதிர்த்து வந்த போதிலும், எனது பிராணேச்வரியின் நகத்திற்கும் ஹானிவாராது காப்பாற்றுவேனென்பதிற் சந்தேகமில்லை."

இவ்வண்ணம் பகர்ந்துகொண்டே கரத்தில் வாளை ஏந்தி மிக்க ஆவேசத்துடன் நாலா பக்கங்களிலும் உற்று நோக்கி இருக்க, மேஹர் தன் மணவாளனுக்கு முன் போந்து, அவன் இதுவரை பகர்ந்து வந்த வார்த்தைகளைக் கேளாதது போல பாவனை செய்து, மிக்க மெல்லிய குரலில், 'பிராணேச்வரா! இஃதென்ன கோலம்? இன்று நடந்துள்ள சங்கதிதான் என்ன?' என வினவினாள். மேஹரது முகத்தைக் கண்ட மாத்திரத்தில் அலிகுலிபெக் கொண்டிருந்த கோபாவேசங் குறைந்தது. அம்மங்கையின் மஞ்சுளமான குரல் காதில் விழவே சற்று நேரம் தன்னை மறந்து, அத்திவ்விய முகத்தை உற்று நோக்கியிருந்தனன். உடனே தன் வைரி ஜஹாங்கீர் பாதுஷா, தனது பிராணேச்வரியைக் கைப்பற்ற வருவதாகத் தோற்றவே, காயம்பட்ட புலியைப்போற் கோபமூண்டவனாய், மேஹரது இடுப்பில் இடது கரத்தைக் கொடுத்து அவளைத் தன் பக்கமிழுத்துக்கொண்டு, வலது கரத்தால் வாளை உயர வீசி ஆவேசத்துடன், "அடே பாதகா! என் பிராணேச்வரியையோ நீ அபகரித்துச் செல்ல வந்தாய்? இத்தேகத்தில் பிராணனிருக்கும்வரை இவள் உன் கரத்திலகப்படாள்" என்றனன்.

பிறகு மேஹர் அவனைச் சாந்தப்படுத்தி ஓர் ஆசனத்திலிருக்கச்செய்து, தானும் அவனருகில் உட்கார்ந்து, மெல்லிய குரலிற், "பிராணநாதா! இன்று உமக்கு யார் அவமானத்தை உண்டு செய்தனர்? உமது கோபத்திற்குக் காரணம் யாதென அறிய நான் ஆவல் கொண்டிருப்பதால் கிருபை கூர்ந்து யாவற்றையும் பகரும்படி பிரார்த்திக்கின்றேன்" என்றனள்.

அலிகுலிபெக் கொஞ்சநேரம் யோசித்திருந்த பின் "விசேஷமாக ஒன்றுமில்லை. மான அவமானத்தைக் குறித்தே வீரர்கள் இரவும் பகலும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. மானமே எமது ஆஸ்தி! மானமே எமது ஐசுவரியம்! மானத்தைக் காப்பாற்றவேண்டித் திரணமாகக் கருதும் பிராணனையும் அர்ப்பணஞ் செய்யத் தயாராயிருக்கின்றோம். கள்வர்கள் திரவியங்களை அபகரித்துக்கொண்டு, எங்களைத் தரித்திரர்களாக விடுத்தபோதிலும், துக்கமுண்டாவதில்லை. நாங்கள் பணத்தைக் கேவலமாகக் கருதுகின்றோம். பிராணனைத் திரணமாக நினைக்கின்றோம். ஆனால் எங்களுக்கு மானமே தெய்வம்! மானமே ஜீவன்! மானமே பிரத்தியட்சப் பிராணன்! நீரினின்றும் நீக்கி நிலத்தில் விடப்பட்ட மீனைப்போலும், மேற்றிசையைக் கிட்டி மறைந்த சூரியனைக் காணாது வாடுந் தாமரையைப் போலும் நாங்கள் மானத்தை இழக்கத் தவித்துத் தத்தளிக்கின்றோம். அமிர்தபானமும் விஷ சமானமாய்த்தோன்றுகின்றது" என்றனன்.

மேஹர்:—"யார் உமது மானத்தை அபகரிக்க முயலுகின்றனர்?"

அலிகுலிபெக்:—"ஓர் தரித்திரன் தான் பூர்வ ஜன்மத்திற் செய்துள்ள கர்மத்தால் ஓர் அபூர்வ மாணிக்கத்தைப் பெறுங்கால், ஜனங்கள் அவனைக்கண்டு பொறாமை கொள்ளுவது நியாயமாமோ?"

மேஹர்:—"அஃதெப்படி நியாயமாகும்? இவ்வண்ணம் பொறாமை கொள்ளுதல் மனித

ரது சுபாவம். இவ்வாறு ஜனங்கள் பொறுமை கொள்ளுவதால் அம்மாணிக்கத்தின் மதிப்பு அதிகரிக்கின்றது. அம்மாணிக்கத்தை அடைந்துள்ளவனது கௌரவமும் அதிகமாகின்றது.''

அலிகுலிபெக் :—'' நீ உரைப்பது உண்மையே. ஆயினும் இவர்கள் இப்பொறுமையின் காரணமாகத் தமதிஷ்டப்படி நீசகாரியங்களைச் செய்து மனிதரூபத்தோடிருக்கும் சர்ப்பங்களாக இருப்பதால், இவர்களைக் கொல்லாது விடுப்பது நியாயமன்று.''

மேஹர் :—'' சர்ப்பத்தைக் கொல்லுவதற்கு நான் சம்மதியேன். பால் வார்த்து வளர்த்து, அதன் தலையிலிருக்கும் மணியை அடைவதே உத்தமமாகும்.''

இதைக் கேட்ட அலிகுலிபெக் கோபங்கொண்டு மேஹரை நோக்கி '' அந்த மாணிக்கத்தின் ஆசையால், பாலூற்றி அதைப் போஷிக்கவோ இச்சிக்கின்றாய் ?'' என்றனன்.

தன் பதியின் முகத்தைக்கண்ட மேஹர் ''பிராணநாதா! என் வார்த்தைகளில் விபரீதமான அர்த்தத்தைக் கொண்டிருப்பதாகத் தோற்றுகிறது. தாம் நினைக்கும் வண்ணமே நானும் அச்சர்ப்பத்தைப் பாலூட்டி வளர்க்கக் கொஞ்சமேனும் இஷ்டப்படுபவளல்ல. இக்கெட்ட எண்ணம் ஒரு குலஸ்திரீயின் பவித்திர இருதயமென்னும் ஆலயத்தினுள் கொஞ்ச நேரமாயினுங் குடிகொள்ள இடமிராது. நான் பகருவதின் தாத்பரியமென்னவெனில் பரமேச்வரனால் நிர்மாணிக்கப்பட்டுள்ள பிராணியை, அது எவ்வித துஷ்டப் பிராணியாயிருந்த போதிலும், கொல்ல யாருக்கும் அதிகாரமில்லை. இதை விட அப்பிராணிகளை நமது புத்திபலத்தால் வசப்படுத்திக் கொள்ளுவதே மேலாம். தயை எனபதே பெருந்தர்மம். இது நம்முடன் ஜனித்துள்ளது. ஆகவே துஷ்டர்களிடம் தயை காட்டுவது போல் மகத்தான புண்ணியம் இவ்வுலகில் வேறொன்றுமில்லை'' என்றனள்.

அலிகுலிபெக்:—''பிரியே! ஆகா, யாதெனப் பகருவேன் உனது புத்திக் கூர்மையை! உன் அபூர்வ அழகைக் காட்டிலும் உனது புத்தியே மேலாயிருக்கின்றது. அரசனுக்கு எவ்வண்ணம் அமைச்சனோ, அவ்வண்ணமே புருஷர்களுக்குப் பத்தினிகள் என்று உலகத்தவர் சொல்லி வருவதின் உண்மை இன்றே எனக்குத் தெரியவந்தது. ஆனால் ஜஹாங்கீர் உன்னை அபகரித்துச் செல்ல ஏற்பாடு செய்து வருகின்றனன். இதைக் குறித்துச் செய்யவேண்டியதென்ன ?''

மேஹர் :—'' இதைக் குறித்துக் கவலை கொள்ளுவானேன் ? கடவுளை நம்பினோர் கைவிடப்படார். சர்வ விக்கினங்களையும் விலக்க அவனன்றோ சமர்த்தர் ?''

முப்பத்தேழாவது அத்தியாயம்.

ஜஹாங்கீர் மேஹரை எவ்விதத்தில் அடைவதென இரவும் பகலும் சிந்தித்த வண்ணமிருந்தனன். அரண்மனையிற் சோபிக்க வேண்டிய ஸ்திரீரத்தினம், தன் கைக்கீழ் வேலை செய்வோனது குடிசையிலிருந்தும், தான் அவளை அபகரிக்கச் சக்தியற்றிருப்பதைக் குறித்து வெட்கமடைந்தான். அவளையே சதா சிந்தித்தவண்ணமிருந்ததால், நித்திரையின்றி இரவுகளைக் கழித்தான். பலநாட்கள் யோசனைசெய்து, அலிகுலிபெக்கின் மனதை அறிய இச்சை கொண்டு அவனைத் தன்னரண்மனைக்கு வரும்படி ஆக்ஞாபித்தனன்.

அலிகுலிபெக் மறுநாள் மஹாலுக்கு வரவே, ஜஹாங்கீர் அவனை வரவேற்று உபசரித்தனன். க்ஷேமசங்கதிகள் விசாரித்தபின், ஜஹாங்கீர் அலிகுலிபெக்கை நோக்கி, '' உன் மனைவியை நான் அவளது சிறுபிராயத்திற் பார்த்துள்ளேன். அவளது அபூர்வ அழகையும், பேசுந்திறமையையுங் கண்டு ஆச்சரிய மடைந்துள்ளேன்'' என்றான்.

அலிகுலிபெக்:—''ஏதோ ஈச்வரனது அருளாலேயே நான் அத்தகைய பாக்கியத்தை அடைந்தேன். எனது குடிசையில் அவள் நட்சத்திரத்தைப்போற் பிரகாசித்து வருகின்றனள். அவளது சகவாசத்தாலும், இனிய குரலாலும், நான் சுவர்க்க சுகத்தையே அனுபவித்து வருகின்றேன்.''

ஜஹாங்கீர் :—'' நீ பகருவது உண்மையே. ஆயினும் ஆகாயத்திற் சஞ்சரிக்கும் நட்சத்திரங்கள் ஆங்கிருந்தலால்லது, இப்பூமியிற் பிரகாசிப்பது கடினமே.''

அலிகுலிபெக்:—''அரசே! நீர் சொல்லுவதின் தாத்பரியத்தை அறிந்தேன். ஆனால் மன்னிக்கவும். என் உடல், பொருள், ஆவி மூன்றையும் அவளுக்கர்ப்பணஞ் செய்து, எனது இருதயமாகிய கோயிலில் அவளைப் பிரதிஷ்டை செய்திருக்கிறேன்.''

ஜஹாங்கீர் :—(ஆச்சரியத்துடன்) ''என்ன? பிரமாதமாகப் பேசுகின்றாயே! மேஹர் உன்னிடம் பிரேமை கொண்டிருப்பது அசாத்தியமே.''

அலிகுலிபெக் :—'' நாங்கள் இரு உடல்களோடிருந்தாலும், ஒரே ஜீவனோடிருக்கின்றோம்.''

ஜஹாங்கீர் :—(கோபத்துடன்) '' இருக்கலாம், இருக்கலாம். ஆனால் உண்மை யாதென நீ அறியவில்லைபோலும். அவள் சில நாட்களுக்குமுன் என்னைக் காதலித்திருந்தனள்.''

அலிகுலிபெக் :—'' அவை ஒன்றையும் நான் அறியேன். தற்சமயம் அவள் எனது மனைவி. நான் அவளது யஜமானன்.

ஜஹாங்கீர் :—''நாங்களிருவரும் முன்னொரு காலத்தில் ஒருவரையொருவர் இச்சித்து வந்திருப்பதால் நீ அவளைக் குறித்து விடுதலைச் சீட்டுக் கொடுப்பது நியாயமாகத் தோற்றுகிறது.''

அலிகுலிபெக் :—'' சர்க்கார் ! அவள் எனக்குரிமையானவள். இத்தேகத்தில் பிராணனிருக்கும்வரை, ஒருவரும் அவளைத் தீண்ட நான் பார்த்திரேன்.''

ஜஹாங்கீர் :—'' இதைக் குறித்து நன்றாய் யோசித்து விவாகத்தை ரத்துசெய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வாய். அப்படிச் செய்யுங்கால், பாதுஷா உன்னிடம் கிருபை கொள்ளுவார்.

அலிகுலிபெக் :—'' இந்த ஜன்மத்தில் ஆகக் கூடியதல்ல.''

ஜஹாங்கீர் :—'' என்ன ? நானிவ்வளவு பகர்ந்துங்கூடவோ ? யோசித்துச் சொல்.''

அலிகுலிபெக் :—'' யோசிக்கவேண்டியதொன்றுமில்லை. இவ்விஷயத்தில் பிரத்தியட்சயமனையுமெதிர்க்கத் தயாராயிருக்கிறான் இந்த அலிகுலிபெக் ! இத்தேகத்தை மாத்திரமே நான் உமக்கு விற்றுள்ளேன். அரசே ! தாமன்றி வேறெவனாயினும் இவ்வண்ணம் வினவியிருந்தால், அதற்குத் தகுந்த உத்தரம் இவ்வாளே அளித்திருக்கும்.''

அலிகுலிபெக் வாளை யுருவியமாத்திரத்தில், ஜஹாங்கீர் நடுக்கமுற்று, '' சரி ! சரி ! நீ உன் இருப்பிடஞ் செல்'' எனவே, அலிகுலிபெக் கோபத்துடன் சலாஞ்செய்து அதை விடுத்துச் சென்றனன்.

அலிகுலிபெக் சென்றபின், ஜஹாங்கீர் மிக்க கோபங் கொண்டவனாய், '' நானென்ன சொல்லியும் இம்மூர்க்கன் கேட்கவில்லை, சரி இருக்கட்டும்! என் பிராணன் போனபோதிலும்

கவலையில்லை. அவளை எவ்விதத்திலாயினும் மஹாலுக்குக் கொணர்ந்து என் பட்டாணியாக்குவேன். என்னை அவமதித்த இந்தப் பட்டாணுக்கும் தகுந்த தண்டனை கொடுக்கிறேன். இத்தடியனிடம் மேஹர் எவ்விதம் இச்சை கொள்ளுவாள்? மயூராசனத்தில் வீற்றிருக்கவேண்டிய ரமணி—இத்தரித்திரனிடமிருப்பானேன்? பாதுஷாவின் பட்டாணியாக வேண்டியவள் இவனிடமிருப்பது எனக்கவமானமன்றோ? என் தந்தையிடம் விரோதமாயிருந்தது பற்றி, அவளை அச்சமயம் விடுவிக்க வழியில்லாதிருந்தது. அவளின்றி இந்த சிம்மாதன மெனக்கேன்?" என்றனன்.

இவ்விதம் தனக்குள்ளாகவே பேசிக்கொண்டிருந்தபின், வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, தன் அத்தியந்த சிநேகனான நாஜீர் அமத் என்போனை அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தனன். சீக்கிரத்தில் நாஜீர் ஆமத் உள் நுழைந்து தலை நிலத்திற் படும்படி தண்டனிட்டுப் பாதுஷாவின் ஆக்ஞைக்குக் காத்திருந்தான்.

ஜஹாங்கீர்:—"ஒரு மகத்தான காரியத்தைக் குறித்து உன் அபிப்பிராயம் யாதென அறியவேண்டியே உன்னை வரவழைத்தேன்."

நாஜீர் ஆமத்:—"மிக்க பாக்கியத்தைச் செய்தவனானேன். தமது ஆக்ஞை யாதோ?"

ஜஹாங்கீர்:—"எனக்குதவி புரிய இதுவே தக்க சமயம். இக்காரியத்திற் கைகொடுத்தால், அதற்குத் தகுந்த பிரதிபலனை நீ அடையாதிராய்."

நாஜீர் ஆமத்:—"ஆக்ஞைக்குக் காத்திருக்கின்றேன். தமது காரியத்தை ஒருவித விக்கினமுமின்றி முடித்துக் கொடுக்கும் வரை இனி ஒரு க்ஷணமேனு முட்காரேன். ஆகாரத்தையும் ஸ்பரிசஞ் செய்யேன்."

ஜஹாங்கீர்:—"நீயே தகுந்தவனென்று நான் நன்கறிவேன். பகருவதைக் கவனமாய்க் கேள். காரியமோ மிக்க சிரமமானது. இப்புவியிலெங்கும் எழில்மிக்க மேஹருந்நிஸா என் மனதை அபகரித்துள்ள சங்கதியை நீ அறியாதவனல்ல. இந்த எழெட்டு மாதங்களாய் அவளை நினைத்து நான் உருகி வருவதையும் நீ அறிவாய். விடுதலைச் சீட்டுடன் அவளை என் சுவாதீனத்தில் விடும்பொருட்டு அலிகுலிபெக்கை நானெவ்வளவு மன்றாடிக் கேட்டும், அவன் வழிக்கு வரவில்லை."

நாஜீர் ஆமத்:—"அரசே! அவன் உமது வேண்டுகோளுக் கிணங்கவில்லையா?"

ஜஹாங்கீர்:—"முடியாதென மறுத்துரைத்தான்."

நாஜீர் ஆமத்:—"சரிதான், என்னிடம் இக்காரியத்தை ஒப்புவித்திருப்பதால், இனி உமக்குக் கவலை வேண்டாம். பாதுஷாவின் வேண்டுகோளுக்கிணங்காதவனை ஒரு க்ஷணமேனு மிவ்வுலகில் வைப்பது தகாது. அகம்பாவத்துடனிருக்கும் அந்த அலிகுலிபெக்கைச் சீக்கிரம் உமது சரணங்களின்கீழ் சேர்ப்பிக்கின்றேன்."

ஜஹாங்கீர்:—"நீ சொல்லுவது வாஸ்தவமே. ஆயினும் நான் இராஜ்யபாரத்தை ஆரம்பிக்குஞ் சமயம் இரத்தத்தைச் சிந்த எனக்குக் கொஞ்சமேனு மிஷ்டமில்லை. என்னை அவமதித்து, என் விரோதத்தைச் சம்பாதித்துள்ள அலிகுலிபெக்கைக் கொன்றாலொழிய இக்காரியம் சித்தியடையாது. ஆனால் கொலையுண்டு இறந்ததாக ஜனங்கள் சமுசயிக்காவண்ணம் அவனைத் தொலைக்க வழி தேடவேண்டும்."

நாஜீர் ஆமத்:—"பாதுஷாவிற்கு இதைக் குறித்துக் கவலை வேண்டாம். ஜன்மமுள்ள வரை என்னை மறவாவண்ணம் இக்காரியத்தைச் செய்து முடிப்பேன். இதைப் பூர்த்தி செய்யும்வரை உணவுங் கொள்ளேன்."

ஜஹாங்கீர்:—"அவன் அரண்மனையை விடுத்துச் சென்று அதிக நேரமாகவில்லை. பிறர் யாருமறியாவண்ணம் இக்காரியத்தைச் செய்து முடிப்பாய்."

நாஜீர் ஆமத்:—"இங்ஙனைப்படியே! மதயானையை அவன்மேல் விடுத்துக் கொல்லுவதே மேலெனத் தோற்றுகிறது."

ஜஹாங்கீர்:—"பேஷ் பேஷ்! சரியான யோசனையே!"

"பாதுஷா இந்த ஏழையிடந் தயவு வைக்க வேண்டும். பாதுஷாவின் சேவையில் என் ஆயுள் நாட்களைக் கழிக்கவே நிச்சயித்துள்ளேன். உத்திரவு கொடும்" என நாஜீர் ஆமத் பகர்ந்து தண்டனிட்டு அதை விடுத்துக் கிளம்பினன்.

அலிகுலிபெக் மிக்க கோபத்துடன் பல்லக்கிலுட்கார்ந்து, சில நிமிஷங்களுக்கு முன்னதாகவே தன் வீட்டை நோக்கிச் சென்றனன் என்ற சங்கதியை யறியவே, நாஜீர் ஆமத் அதி சீக்கிரத்தில் ஒரு மதயானையைக் கொணர்ந்து, அதை அலிகுலிபெக் சென்ற வழியிலேயே விடுத்தனன். அலிகுலிபெக்கின் பல்லக்கு போகிகள் மிக்க மெதுவாய்ச் சென்றுகொண்டிருந்தார்கள். அலிகுலிபெக்கின் மனம் அச்சமயம் பற்பல விசாரங்களாற் சூழப்பட்டிருந்தது. மீசையை முறுக்கி "பிராணன் போனாலும் மேஹரது நகத்தையும் ஜஹாங்கீர் பாரா வண்ணஞ் செய்யாதிரேன்" எனத் தனக்குத் தானாகவே பகர்ந்து கொண்டிருக்குஞ் சமயம், பின்னால் ஒரு பெருத்த குழப்பமுண்டாவதைக் கேட்டு திடுக்கிட்டான். பல்லக்கைப் பின்பற்றி ஒரு யானை ஓடிவருவதைக் கண்ட பல்லக்கு போகிகள் பல்லக்கை அந்த இடத்திலேயே விடுத்து ஓட்டமெடுத்தார்கள். அலிகுலிபெக் உடனே பல்லக்கை விடுத்து வெளியே வந்த மாத்திரத்தில், யானை பல்லக்கருகில் வந்து, அதை மிதித்து நாசஞ் செய்ய ஆரம்பித்தது. இதைக் கண்ணுற்ற அலிகுலிபெக் அந்த யானை மதங்கொண்டிருக்கவேண்டுமென நிச்சயித்து, தன்னிடுப்பில் தொங்கியிருந்த வாளையெடுத்து, வெள்ளரிக்காய் நறுக்குவதுபோல் அந்த யானையின் துதிக்கையை நொடிப்பொழுதில் துண்டுதுண்டாக வெட்டினான். இரத்தத்தால் பெக்கின் வஸ்திரங்கள் நனைந்தன. அக்கம் பக்கத்தில் கும்பல்கூடிய ஜனங்கள் அலிகுலி பெக்கை வாழ்த்தினர்.

(தொடரும்)

மாதர் உயர்ச்சி.

"முயற்சி உயர்ச்சி தரும்" என்ற ஔவையாரின் மறை மொழிப்படி இந்நிலவுலகின் கண்ணுள்ள ஆண் பெண் ஆகிய இருதிறத்தாரும் முயற்சியுடையவர்களாயிருந்தாற்றான் உயர்ச்சி அடையலாம். நீர் மிகுந்தமட்டும் நீர்ப்பூத்தாள்கள் உயர்வதுபோல முயற்சி மிகுந்த மட்டும் நாம் உயர்ச்சியடைவோம். இதனை லன்றோ தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும்

"வெள்ளத்தனையமலர் நீட்டம் மாந்தர் தம்
முள்ளத்தனைய துயர்வு"

என மொழிந்திருக்கின்றார். மாதர் உயர்ச்சியை அடைவதற்கு நல்ல வழிகளை அறிந்து அதன்படி நடப்பதற்கு முயற்சித்தல் வேண்டும்.

அறிவு முதிர்ச்சிக்குக் கல்வியே பிரதானமாகையால் பெண்கள் கல்வி கற்றல் அவசியம். பெண்களுக்கு எல்லா அழகினும் பார்க்கக் கல்வி அழகே மிகச் சிறந்தது. ஆகையாற் பெண்கள் இரத்தினங்கள் இழைத்த ஆபரணங்களை அணிவதிலுங் கல்வி என்னும் ஆபரணத்தை யுடைத்தாயிருத்தலே நன்று. அவர்களுக்குக் கல்வியறிவினாலே கற்புண்டாகின்றது. கல்வியறிவினாலுண்டாகும் கற்பே மாதர் உயர்ச்சிக்கு முக்கியாதாரமானதாகும்.

எமது பெண்மணிகள் கல்வியறிவின்மையினால் அறியாமை என்னும் இருளினால் மூடப்பட்டிருக்கின்றார்கள். பெண்கள் படித்து உத்தியோகம் பார்க்கப்போகிறார்களாவென்றும், அவர்கள் படித்தால் புருஷருக்கடங்காமல் வித்தியாகர்வத்தினாற் கெட்டுப் போவார்களென்றும் நியாய விரோதமாய்ப் பலர் பேசுகின்றார்கள். தெய்வ பக்தி, கற்பு, விவேகம், சாந்தம், ஈகை முதலிய நற்குணங்கள் கல்வியினாலேயே செழித்தோங்கி வளரும்.

பண்டைக் காலத்துத் தமிழ்ப் பெண்மணிகளாகிய உமா பாத சங்க சாட்சியார், வாசுகியார், பூதப்பாண்டியன் தேவியார், நீலகேசி, சைவ எல்லப்ப நாவலர் தேவியார் முதலாயினோர் புலமையிற் சிறந்தவர்களாயிருந்ததுமன்றி, கற்பு நெறி தவறாது வாழ்ந்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அரசர் திலகமாம் பிள்ளைப் பாண்டியனார் மனைவியாரைப் பற்றிய ஒரு சிறு கதை பின்வருமாறு வரையப் பெற்றிருக்கின்றது. தங்கணவருக்குப் பூர்வ வினையினாலே தொழு நோய் பற்றிய காலத்து, பலவித சிகிச்சைகள் செய்தும் மாறாமையினால், திருக் கருவை யென்னும் ஸ்தலத்துக்குச் சென்று நீண்ட காலமாய்ப் பிரார்த்தனை செய்தும் நோய் தீராமைகண்டு பயமுற்ற அரசியார் தியானஞ்செய்தெழுந்த தங்கணவரிடம் "யோகபலமெவ்வாறிருந்தது?" என்று வினவ அதற்கு விடையாகப் பாண்டியனார் பின்வரும் செய்யுளைக் கூறினார் :—

"அஞ்சவென்ற காதலமுங் கணபணகங் கணமு
மரைக்கிசைந்த புலியுடையும் புலிச் செஞ்சடையுங்
கஞ்சமலர்ச் சேவடியுங் கனை கழலுஞ் சிலம்புங்
கருணை பொழி திருமுகமுங் கண்களொரு மூன்று
நஞ்சையுண்ட மணிமிடறு முந்நூலு மார்பு
நலந்திகழ் வெண்ணீற் றொளியு மறிமானுமழுவும்
பஞ்சடிச் சிற்றிடையுமையாளொப் பனைப்பாகமு [மாய்ப்
பால் வண்ணனுளத்திருக்கப் பயமுண்டோவெமக் [கே."

இச்செய்யுளின் கருத்தை உணர்ந்த அரசியார் பேசாதிருப்பதைக் கண்டு, 'நாயகன்சொற்படி நடத்தல் மங்கையர் கடனென நீ யறிவையே ஆதலின், நின் உள்ளக் கிடக்கையை அஞ்சாது தெரிவி' யென்று அரசன் சொல்ல அரசியார் பின்வருமாறு சொல்லலுற்றார் :—

"ஆக்கை யெனும் புழுக்குரம்பையனைத் தனையாப் [பொருளை
யருளொளியைப் பராபரத்தைக் கப்புறமாமறிவை
நீக்கமறவுயிர் முனைக்குமிட மறவெங்கெங்கு
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவிலெழுஞ் [சுடரைப்
பாக்கியங்கள் செய்தனந்தந்தவக் குறைகள் முடிக்கும்
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்க் கற்பகத்தை
வாக்கு மனவிகற்பத்தாலளவுபடா வொன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியிலடைப்பாம்."

மேற்கூறிய செய்யுளால், அரசியார் புலமையிற் சிறந்திருந்தது மாத்திரமன்றிச் சைவ சமய உண்மைப் பொருளை நன்குணர்ந்திருந்தாரென்றும், கற்பிலக்கணம் தவறாதவரென்றும் தெரியக் கிடக்கின்றது. அரசியார் இத்துணை நலங்கள் வாய்ந்திருந்தமைக்குக் காரணம் அவர் கற்ற கல்வியெனின், பதவியிற் குறைந்த மற்றையப் பெண்களின் உயர்ச்சிக்குக் கல்வி யறிவு இன்றியமையாதது என்பது சொல்லாமலே விளங்கும்.

நெல்லுக்கிறைக்கப்படும் நீரானது புல், பூண்டு முதலியவைகளுக்கு உபயோகப்படுவது போலவும், பழத்துக்காக வைக்கப்படும் மரங்கள் நிழல் கொடுப்பதற்கு உதவுவதுபோலவும், அபிவிருத்திக்காகக் கற்கப்படும் கல்வி உத்தியோகம்பெறுவதற்கும் அனுகூலமாகின்றது. படிப்பது உத்தியோகத்துக்காகவென்று சொல்லுவது தலைப்பாகைக்காகத் தலையே யல்லாது, தலைக்காகத் தலைப்பாகையல்லவென்று சொல்லுவதை ஒக்கும்.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

என்று நாயனார் கூறியிருக்கின்றார். கற்றவர்களே கண்ணுடையவர்களென்றும், கல்லாதவர்கள் முகத்திலிரண்டு புண்ணுடையவர்களென்றும், ஆண் பெண் இரு பாலார்க்கும் பொதுப்பட நாயனார் சொன்னாரேயன்றி, ஆடவர்க்கு மட்டும் கல்வி வேண்டுமென்று அவர் சொல்லவில்லையே.

மாதர் தாம் கற்றறிந்த கல்வியின் பயனைக் கற்பிலட்சணங்களாகிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களின் சிறப்பை ஓர்ந்து, என்றும் ஒளி குன்றாத அவ்வாபரணங்களை அணிவர்.

"தெய்வந் தொழா அள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

இன்னனப் பலவாறாகக் கற்புடைப் பெண்டிரைப்பற்றி வியந்து கூறப்பட்டிருக்கின்றது. கற்புடைப் பெண்கள் தெய்வத்திற்கு இரண்டாவதாகவும், தபோதனரினும் மேம்பட்டவராகவும் பெரியோரால் எண்ணப்படுகின்றனர். இதை நம்மூதாதைகளின் சரித்திரங்களை ஆதாரமாகக்கொண்டு அத்தாட்சிப்படுத்தலாம் :—

"முக்கணர் தண்டலை நாட்டிற் கற்புடை மங்கையர்
பெருமை மொழியப் போமோ?
ஒக்குமெரி குளிரவைத்தாளொருத்தி வில்
வேடனை யெரித்தாளொருத்தி மூவர்
பக்கமுற அமுதளித்தாளொருத்தி பண்டு
கொக்கெனவோ நினைத்தனையோ கொங்கணவா
என்றொருத்தி கூறினளே."

(பழமொழி விளக்கம்)

அரிச்சந்திரனைக் காசிக்கு செல்லாது தடுத்துப் பொய்யனாக்கவேண்டுமென்று நினைத்து விசுவாமித்திரர் நெருப்பாறொன்றை உண்டாக்கத் தன் கற்பின் மகிமையால் அவ்வாற்றைக் குளிரச் செய்து தங்கணவர் வாய்மை நிலைபெறச் செய்தவள் சந்திரமதி.

நடுக்காட்டிலே தன்னந்தனியனாகத் தன்னை விடுத்துச் சென்ற நளன்மீது சற்றுங் கோபமில்லாமல் அவனைத் தேடிச் செல்லுகையில், வேடனொருவன் தன் கற்பிற்குப் பங்கமுண்டாக்க எத்தனித்தபொழுது, அவனைத் தன் விழியினால் சாம்பலாக்கினவள் தமயந்தி.

தன் கற்பு வலிமையினாலே தமது கற்பின் திறமையைப் பரிசோதிக்க வந்த மும்மூர்த்திகளையும் சிறு குழந்தைகளாக்கி அவர்களுக்குப் பாலூட்டியவர் அனசூயை.

மாண்டவ முனிவர் மறுநாள் சூரியோதயமானவுடன் கௌசிகர் மரணமடையவேண்டுமென்று சாபமிடச் சூரியோதயமாகாமலிருக்கும்படி மறு சாபமிட்டுக் கௌசிகர் உயிரைக் காப்பாற்றியது அவர் மனைவியாகிய நாளாயினி.

தன் மேலெச்சமிட்ட கொக்கைத் தன் கட்பார்வையினாற் சாம்பலாக்கிய கொங்கணமுனி தன் தவ வலிமையை இன்னும் பரீட்சித்துப் பார்க்க விருப்புற்றவராய்த் திருவள்ளுவ நாயனார் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே தங்கணவருக்குத் தொண்டு புரிந்து பின் தம்மைக் கவனிக்க வந்த அம்மையாரைக் கோபத்தோடு பார்க்க "கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா" என்று கேட்டுக் கொங்கணமுனியை வெட்கமடையப் பண்ணினவர் வாசுகியார்.

நம் மூதாதைகளில் இன்னும் அநேகர் கற்பாசிகளாக இருந்து தங்கள் நற்புகழை இந்நானிலத்தில் நனி சிறக்கச் செய்தது மன்றி இந்தியா மற்றைய எந்நாட்டிலும் நன் நாடெனக் கீர்த்திபெறவும் விளக்கினார்களென்று எமது இதிகாசங்களும் புராணங்களும் பெருமுழக்கிடுகின்றன. ஆதலின் இத்தகைய கற்பாசிகள் வாழ்ந்த இந்நாட்டில் தோன்றும் ஸ்திரீ ரத்தினங்கள் யாவருங் கல்வி, கற்புடையவராய் ஒழுகிவர இறைவனடியை இடை விடாது தொழுது வருவோமாக.

ஸுப்ரு.

(ஓர் சிறிய நாடகம்.)

காவேரிக்கரையிற் பிறந்தவள்.

நாடக பாத்திரங்கள்.

அரசன்.

அரசி.

ஸுப்ரு—அவர்கள் புத்திரி.

இந்திரவர்மன்—அவள் தம்பி, புத்திஹீனன்.

அரச குரு.

நாரதர்—தேவரிஷி.

வைசம்பாயனர்—ஸுப்ருவின் குரு.

ஸுயக்ஞர்—த்ரிகாலஞானி.

ப்ராக் ச்ருங்கவத் }
சார்ங்கரவர் } ரிஷிகள்.
ஸித்தார்த்தர். }

அநேக பிராமணர்கள், ரிஷிகள், முதலியோர்.

நிகழுமிடம், ஒரு வீதியிலும், அரண்மனையிலும், தபோவனத்திலும்.

முதல் அங்கம்.

இடம்—ஒரு வீதி. காலம்—அதிகாலை.

பாத்திரங்கள். இரண்டு பிராமணர்கள் எதிர்முகமாய் வருகிறார்கள்.

முதல் பிராமணர் :— பிராம்மணோத்தமரே! எங்கு போகிறீர்?

இரண்டாவது பிராமணர் :—அரண்மனைக்குத்தான் போகிறேன். நீங்கள் வரவில்லையோ!

மு. பி. :—அரண்மனையில் என்ன விசேஷம்?

இ. பி. :—நேற்று தண்டோரா போடும் பொழுது உமது காதுகளில் ஈயக்குண்டுகளை அடைத்துக் கொண்டீரோ?

மு. பி. :—நான் இன்று காலைதான் இவ்வூருக்கு வந்தேன்.

இ. பி. :—நமது அரசகுமாரி இன்று தனது ஆபரணங்களையும், பீதாம்பரங்களையும் தானம் செய்கிறாள். அவள் விவாகம் செய்துக் கொள்ளப்போவதில்லை. கானகம் சென்று கடுந்தவம் புரியப்போகிறாள்.

மு. பி. :—விவாகம் செய்துகொண்டு கொஞ்சகாலம் கிருகஸ்தாச்ரமத்தில் இருந்துவிட்டுப் பிறகு வானப்ரஸ்தாச்ரமத்தை அடைவதுதான் உசிதம். நாமெல்லோரும் சேர்ந்து அப்பெண்மணிக்கு இவ்விஷயத்தைச் சொல்ல வேண்டும்.

இ. பி. :—இப்பெண்மணியின் மனதை எவராலும் மாற்ற முடியாது. அவளுக்கு நான்தான் உபநயனம்* செய்வித்து சாஸ்திரப் பயிற்சி செய்வித்தவன். ஆதலால் அவள் மனப்போக்கை நான் நன்றாய் அறிவேன்.

* நமது வேத நாட்களில், ஸ்திரீகளுக்கும் புருஷர்களைப் போலவே உபநயனம் செய்விப்பது வழக்கம்.

அப்பெண்மணிக்கு விவாகத்தில் இச்சையே கிடையாது.

மு. பி. :—(ஆவலுடன்) அப்பெண்மணியின் மனம் பிரும்ம ஞானத்தை அடையக்கூடிய பதத்திலிருக்கிறதா?

இ. பி. :— (அவரைக்கூர்ந்து நோக்கி, தனக்குள்) இவர், யாரோ பெரிய மகான்போல் காண்கின்றதே) (பிரகாசமாய்) "ஸ்வாமி! தாங்கள் யார்?" (கைகளைக் கூப்பி வணங்குகிறார்).

மு. பி. :—நான் ஒரு ஏழைப்பிராமணர்.

இ. பி. :—(நமஸ்கரித்து) "தேவ! வெளி ஊர்களிலிருந்து வரும் பிராமணோத்தமர்களுக்கென்று அரசர் அரண்மனைக்கருகிலேயே ஓர் பெரிய மாளிகை கட்டிவைத்திருக்கிறார். தாங்கள் கிருபை செய்து அவ்விடம் விஜயம் செய்ய வேண்டும்."

மு. பி. :—இல்லை, நான் அங்கு வரமுடியாது. இந்த நாரீமணியின் விரக்தி மேலுலகுக்கு எட்டியது. இவளது மனோநிலையைப் பூர்ணமாய்த் தெரிந்துகொள்ளும்பொருட்டு இவ்விடம் வந்தேன். அவளது குருவாகிய உன்னைச் சந்தித்தேன்.

இ. பி. :—(கால்களில் விழுந்து வணங்கி) தங்களது நாமதேயத்தை அருளவேண்டும்.

மு. பி. :—வைசம்பாயனா! உனக்கு இருக்கும் அபார விவேகம் தற்சமயம் மோகத்தால் சூழப்பட்டிருக்கிறது. நீ உயர்ந்த பட்டாடைகள்மேல் இச்சை கொள்கிறாய். இல்லாவிடில் நீ என்னை நாரதர் என்று அறிந்து கொண்டிருப்பாயே! (மறைகிறார்).

வைசம்பாயனர் :—உண்மையே! (ஆழ்ந்த சிந்தனையுடன் நிற்கிறார்).

(அநேக பிராமணர்கள் ஒருபுறமாய் வருகிறார்கள்.)

ஓர் பிராமணர் :—வைசம்பாயனர் ஸார்வவேத்யராயிருந்தும் அவருக்குப் பட்டாடைகள் மேல் இருக்கும் மோகத்திற்கு ஈடே கிடையாது.

இன்னொருவர் :— அதோ நிற்கிறார் பாருமே! ஆகாசத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டு.

இன்னொருவர் :—கிலி பிடித்தவன்போல் நிற்கிறாரே!

ஓர் விருத்தர் :—மழை காலத்தில் சப்திக்கும் தவளைகளைப்போல் கூச்சலிடுகிறீர்களே! கிலி பிடிக்குமா அவருக்கு? அவர் ஏதோ யோசனையுடன் நிற்கிறார். அவரது நிலையைக் கலைக்கவேண்டாம். வாருங்கள், நாம் போவோம்.

இன்னொருவர் :—வைசம்பாயனரே! ஆகாசத்தில் அப்சர ஸ்திரீகள் தரிசனம் கிடைத்தால் எனக்கும் காண்பியும்.

இன்னொருவர் :—வைசம்பாயனரே! அரண்மனைக்கு வாரும்! ஏன் இப்படி நிற்கிறீர்?

இன்னொருவர் :—பட்டாடைகளைப்பெற நமக்கு முன்பே வந்த இவர் இந்நேரம் ஏன் இங்கு நின்றுகொண்டிருக்கிறார்?

இன்னொருவர் :—ஏதோ விசேஷம் நேரிட்டிருக்கிறது, சந்தேகமில்லை.

விருத்தர் :—விசேஷம் நேரிடாமலா இவர் திடீரென்று சமாதி நிலையை அடைந்திருக்கிறார்? நாம் போகலாம் வாருங்கள்.

இன்னொருவர் :—அவரை அழைத்துப்போக வேண்டாமோ! அரசகுமாரி வருத்தமடைவாளே!

விருத்தர் :—ஸித்தார்த்தரே! நீர் சொல்வது உண்மையே. கானகம் செல்வதற்குமுன்பு இவரது ஆசிர்வாதங்களைப் பெறவேண்டுமென்பதே அரசகுமாரியின் பிரார்த்தனை. ஆனால் தர்மக்ஞராகிய இவருக்கு நாம் உப

தேசம் செய்வது உசிதமோ? இவரது நிலையைக் கலைப்பது பெரிய அபசாரமல்லவோ? நாம் ராஜகுமாரியைக் கண்டு அவளுடன் கடைசிமுறையாக சாஸ்திர ஆராய்ச்சி செய்து அவளது சந்தேகங்களை நீக்குவதே நமது கடமை. போவோம் வாருங்கள்! நேரமாகிறது.

(யாவரும் போகிறார்கள்.)

இரண்டாம் அங்கம்

இடம்--அரண்மனை.

பாத்திரங்கள்—அரசன், அரசி, ஸுப்ரு, மந்திரி, குரு முதலானவர்கள்.

அரசி:—ஸுப்ரு! எல்லாவற்றையும் தானம் செய்துவிட்டு இக்காஷாய வஸ்திரத்தையா உடுத்திக்கொள்ளவேண்டும்?

அரசன்:—ஸுப்ரு! நீ எங்கள் வசனங்கள் முழுவதையும் தள்ளிவிட்டாயே! இன்றைக்கு யோசனை செய்து நாளைக்குப் போகலாம், பொறுத்துச் செய். நீ எனக்குப் பிறகு இச்சிங்காதனத்தில் உட்கார்ந்து இந்த இராஜ்யத்தை ஆள்வாய் என்று எண்ணியிருந்தேனே! இன்று போகவேண்டாம், நான் சொல்வதைக் கேள்.

ஸுப்ரு:—(நமஸ்கரித்து) தயவுசெய்து மன்னிக்கவேண்டுகிறேன். தங்களது ஆசீர்வாதங்களுடன் இன்றே போக அனுமதி தரல்வேண்டும்.

அரசி:—என் இந்தப் பிடிவாதம் உனக்கு! உன் தந்தை சொல்வதைக் கேள். நாளைக்குப் போனால் என்ன?

(இந்திரவர்மன் வருகிறான்.)

இந்திரவர்மன்:—என்ன வரவர ஊர் இப்படிக் கெட்டுப்போய்விட்டது. தமக்கையார் காட்டுக்குப் போகிறாராமே, எதற்கு? புஷ்பங்களைப் பறிப்பதற்கா அல்லது பழங்களைத் தின்பதற்கா? காட்டிற்குப் போவானேன்?

அரசன்:—எனது ஒரே புத்திரனுக்கு ஞானமே இல்லை. எனது ஒரே புத்திரிக்கு ஞானம் அளவுக்கு மீறிப் போய்விட்டது. என்னே! என விதியின் கொடுமை!

அரசி:—ஸுப்ரு! உன்னை நான் பெற்ற தினம் ஊரில் நல்ல மழை பெய்தது. அவ்வருஷம் நிலங்கள் வெகு நன்றாய் வளர்ந்தன. வியாதியஸ்தர்கள் எல்லோரும் குணமாகி நடமாட ஆரம்பித்தார்கள். நீயும் நாளாக ஆக வளர்பிறைச் சந்திரன்போல் அழகிலும் குணத்திலும் நிகரற்றவளாய் விளங்கினாய். கலைகளையும் கசடறக் கற்றாய். நமது பட்டணத்திற்கு வரும் தபஸ்விகளுக்கு அநேக தொண்டுகளைப் புரிந்து அவர்களிடமிருந்து அநேக விதமான வரப்பிரசாதங்களைப்பெற்றாய். சகல கலியாண குணங்களும் பொருந்திய நீ ஒரு அரசனுக்குப் பட்டமகிஷியாக இரு. அது தான் உத்தமம்.

ஸுப்ரு:—(நமஸ்கரித்து) அம்மணி! விவாகத்தின்மீது என் மனம் செல்லவில்லை.

இந்திரவர்மன்:—இதென்ன! வரவர ஊர் கெட்டுப்போய்விட்டது. விவாகம் செய்துகொள் என்றால் விவாகத்தின்மீது மனம் செல்லவில்லையாம். மனம் செல்லவேண்டாமே! மனம் உன்னிடமே யிருக்கட்டுமே. கலியாணம் நடந்தால் நகரில் உள்ளவர்களெல்லோரும் எவ்வளவு குதூகலத்துடன் இருப்பார்கள்! எங்கும் ஒரே பாட்டு! எல்லோருக்கும் ஒரே விருந்து! எங்கும் நடனம், குதிரைப் பந்தயம், மல்யுத்தம்! எல்லோருக்கும் ஆபரணங்கள்! ஹாஹா! (ஆனந்தத்துடன் குதிக்கிறான்) அக்கா! நீர் இப்பொழுது கலியாணம் செய்துகொள்ளும்! பிறகு நாம் இருவரும் காட்டிற்குப் போய்ப் பூப்பறிக்கலாம்.

ஸுப்ரு:—(அவனருகில் போய்) தம்பீ! நான் உடுத்தியிருக்கும் ஆடையைப் பார். கானகத்திற்குச் சென்று கடுந்தவம் புரியப்போகிறேன், புஷ்பங்கள் பறிக்க அல்ல.

இந்திரவர்மன்:—என்ன? தபஸ் பண்ணவா போகிறீர்கள்? (அவளைக் கூர்ந்து நோக்கி) தாடி இல்லையே! நீண்ட தாடி இல்லாவிடில் உங்களைச் சேர்த்துக்கொள்ளமாட்டார்களே. (கவலையுடன் யோசிக்கிறான்) ஓகோ! இருங்கள் வருகிறேன் (வேகமாய் ஓடிப்போகிறான்).

(அரசி கண்ணீர் விடுகிறாள். ஸுப்ரு தாயாரருகிற் சென்று சமாதானப்படுத்துகிறாள்).

ஸுப்ரு:—அம்மணீ! கவலைப்படாதீர்கள். தம்பி இன்னம் கொஞ்ச காலத்தில் நல்ல குணசாலியாவான் என்று நமது குரு சொல்லியிருக்கிறாரே.

குரு:—அம்மணீ! தமது குமாரன் இன்னும் சில காலம் குழவிப்பருவமாகவே இருப்பான். இந்த ராஜ்யத்தை இவன் தான் ஆளப்போகிறான். சற்குணத்திலும் ஞானத்திலும் நமது ஸுப்ருவுக்குச் சமமாக விளங்குவான்.

அரசன்:—ஐயனே! அக்காலம் எப்பொழுது வருமோ! நான் எப்பொழுது என் புத்திரன் ஞானத்துடன் விளங்குவதைப் பார்ப்பேனோ!

(வாசற்காப்போன் வருகிறான்).

வா. கா.:—ராஜாதிராஜ! ஜயமுண்டாகட்டும். ஒரு தபஸ்வி வருகிறார்!

(தபஸ்வி வருகிறார். அரசன் முதலானவர்கள் எழுந்திருக்கிறார்கள்).

தபஸ்வி:—(ராஜனை ஆசீர்வதித்து) மன்னரே! ஜயமுண்டாகட்டும், மங்களமுண்டாகட்டும்!

அரசன்:—(நமஸ்கரித்து) மஹர்ஷே! தங்களுக்கு அதிதி பூஜை சரிவர நடந்ததோ? தங்களது கிருபாநோக்கம் என்மேல் வீழ்ந்து தங்களது திவ்விய தரிசனம் எனக்குக் கிடைத்தது எனது முன்னோர்களது பூஜா பலனே.

தபஸ்வி:—ராஜனே! த்ரிகால ஞானியாகிய ஸுயக்ஞர் தவம் புரிய விரும்பும் உமது புத்திரியைத் தம்மால் நிரூபிக்கப்பட்ட பிரும்மசாரிணிகள் ஆச்ரமத்திற்கு அழைக்கிறார். உமக்குச் சகல பாக்கியங்களும் உண்டாகுக! (போகிறார்).

குரு:—மன்னரே! நம்மால் வேண்டப்படாததற்கு முன்பே ஸுயக்ஞர் நமது ஸுப்ருவைப் பரிந்து அழைத்திருக்கிறாரே! அவள் தவம் பூர்ண சித்தி பெறும் என்பதில் தடையில்லை.

(இரண்டு மந்திரிகள் வருகிறார்கள்).

மந்திரி:—ராஜாதிராஜ! நமது ராஜகுமாரியைப் பார்க்க வெளியில் ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். எல்லோரும் அவ்விடம் வரவேண்டும்.

(எல்லோரும் போகிறார்கள்)

மூன்றாம் அங்கம்.

இடம்—அரண்மனையில் முன்புறம்.

அரசன், அரசி, மந்திரி, குரு, பிராமணர்கள், ஸுப்ரு.

அரசன்:—குழந்தாய்! நீ புறப்படவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. என் மனதை எவ்வளவோ திடப்படுத்திக்கொண்டும் நீ பிரிந்து போகிறாய் என்ற எண்ணத்தினால் உண்டாகும் துக்கம் அதிகரிக்கிறதே தவிரக் குறையவில்லை.

அரசி:—(கண்ணீருடன்) ஸுப்ரு! நீ கானகத்திற்குச் செல்லலாமோ? வெயிலிலும் குளிரிலும் நீ தவிக்க நான் சகல ராஜபோகங்களுடன் அரண்மனையிலோ வசிப்பது? நீ இல்லாமல் நான் எப்படி உயிர் தரிப்பேன்?

ஸுப்ரு:—(கண்ணீருடன்) உங்களுக்கு இவ்வளவு துக்கத்தைக் கொடுக்கவா நான் ஜனித்தேன்! உண்மையில் என் மனோபீஷ்

டத்திற்கு ஏதோ ஒரு பெரிய தடை ஏற்படும்போல் தோன்றுகிறது! இவ்வளவு பரிவுடன் வளர்த்த என் பெற்றோர்களுக்கு என்னால் ஏற்படும் துக்கம் என்னை எப்பொழுதும் பாதித்துக்கொண்டேயிருக்கும்.

அரசனும், அரசியும் :—(ஸுப்ருவை இறுக அணைந்து) குழந்தாய்! நொந்துகொள்ள வேண்டாம்! மகா உயர்குணமுள்ள உன்னை நாங்கள் பெற்றதினாலே நாங்கள் தன்யர்களானோம். புனித மனதையுடைய நீ நாங்கள் முன் ஜன்மங்களில் செய்த தவப்பயனல்லவா?

குரு :—குழந்தாய்! குழவிப்பருவமுதல் உன்னைப்பார்த்து ஆனந்தித்த எனக்குக் கடைசியில் உன்னைவிட்டுப் பிரிய நேர்ந்ததே! என்னே என் தௌர்ப்பாக்கியம்!

ஸுப்ரு :—(நமஸ்கரித்து) குருமகாராஜ்! தங்களைவிட்டுப் பிரியும் நான் அதிர்ஷ்டம் இல்லாதவளாயினும் தங்களது ஆசீர்வாதங்களுக்கு எப்பொழுதும் பிரார்த்தித்துக் கொண்டே இருப்பேன்.

(வைசம்பாயனரும் இன்னம் சில பிராமணர்களும் வருகிறார்கள்).

வைசம். :—மன்னரே! ஜயமுண்டாகட்டும்! குழந்தாய்! முகூர்த்தம் நெருங்கிவிட்டது.

ஸுப்ரு :—பெரியவரே! தாங்கள் இந்நேரம் வாராமலிருந்தது என் மனதைப் பெரிதும் வருத்திற்று.

வைசம். :—மன்னர் மன்ன! உமது குமாரன் இன்று மூன்றும்நாள் பூரண ஞானத்துடன் எழுந்திருப்பான். இன்று இரவு மஞ்சத்தில் படுத்தவன் இன்று மூன்றும் நாள்தான் எழுந்திருப்பான்.

அரசனும் அரசியும் :—விப்ரோத்தம! எல்லாம் தங்கள் அருள்.

வைசம். :—எல்லாம் உங்கள் நற்கருமங்களின் பலனே. குழந்தாய்! விடைபெற்றுக்கொள்.

(ஸுப்ரு தனது பெற்றோர்களையும் குருவையும் வணங்குகிறாள். அவர்கள் கண்ணீருடன் ஆசீர்வதிக்கிறார்கள். வைசம்பாயனர், பிராமணர்கள், ஸுப்ரு முதலானவர்கள் போகிறார்கள்).

நான்காம் அங்கம்.

இடம் - ஒரு தபோவனம்.

(சில முனிவர்கள் பழங்களைச் சேகரித்துக்கொண்டு வருகிறார்கள்).

ஓர் முனிவர் :—சார்ங்க்ரவ! இந்த தபஸ்வினி எவ்வளவு காலமாக இந்தமாதிரி கடுந்தவம் புரிகின்றார்?

சார்ங்க்ரவர் :—இருநூறு வருஷகாலமாகப் புரிகிறார். புறப்படலாமா? நாம் அந்த தபஸ்வினியை தரிசித்துவிட்டு இப்பழங்களையும் கொடுத்துவிட்டு வரலாம். இந்தப் பெரியாரின் திவ்விய தரிசனம் நமக்கு இனி கிடைப்பது துர்லபம்.

இன்னொருவர் :—ஏன்?

சார்ங்ரவர் :—அவர் தபஸ் பூர்ணமாய்விட்டது. திடீரென்று தேஜஸ் ரூபமாய் சென்று விடுவார்.

(ப்ராக்ச்ருங்கவத் முதலியவர்கள் பழங்களுடன் வருகிறார்கள்).

சார்ங்காவர்:—நீங்களும் வந்து சேர்ந்தீர்களே, நல்லகாலம்தான். சீக்கிரம் போவோம், வாருங்கள்.

(யாவரும் போகிறார்கள்)

(விஷ்கம்பகம் முடிகிறது).

(ஓர் தபோவனத்தில் ஸுப்ரு ஸமாதி நிலையில் வீற்றிருக்கிறாள். நாரதர் வருகிறார்).

ஸுப்ரு (தனக்குள்) :—இதென்ன விந்தை! ஒரு நாளும் கலையாத எனது நிலை இன்று கலைந்தது! திடீரென்று ஒரு பிரகாசம்

என்னை வாட்டுறவிச் செல்கின்றதே! (சுற்றிலும் நோக்கி நாரதரைப் பார்க்கிறாள்.) (பிரகாசமாய்) ஆகா! இனி எனக்கு என்ன குறை! இன்றே ஜன்மம் சபலமடைந்தேன்! ஐயனே! தங்கள் கருணையை என்னென்று உரைப்பேன்! (அதிதி பூஜை புரிகின்றாள்.)

நாரதர் :—நாரீமணி! உனது விரதம் சொற்ப காலத்தில் நிறைவேறிவிடும்! ஓர் சோதனை உனக்கு அவசியம் என்று தேவர்களால் கருதப்படுகிறது!

ஸுப்ரு :—ஐயனே! எந்த விதமான சோதனையையும் நான் வகிக்கப் பின் வாங்கேன்!

நாரதர்:—குழந்தாய்! உனது மனோபலம் நான் அறியாததன்று! நீ மணம் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிறது!

ஸுப்ரு:—மகர்ஷே! இதென்ன!

நாரதர்:—நீ விவாகம் செய்துகொண்டு ஒரு நாளாவது இல்லறாகத்தில் இருந்து விட்டுப் பிறகு உன் மனம் விரக்தியுடனேயே இருந்தால், உடனே தேஜஸ் ரூபமாய் மோட்சத்தை அடைவாய்! (மறைகிறார்.)

ஸுப்ரு:—விருத்தாப்பியத்தை அடைந்த என்னை எவன் மணக்க ஒப்புக்கொள்வான்?

(முனிவர்கள் பழங்களுடன் வருகிறார்கள்.)

சார்ங்காவர் :—தேவீ! கருணையுடன் இப்பழங்களை ஏற்றுக்கொண்டு எங்களை அனுக்கிரகிக்கவேண்டும். தங்கள் தரிசனம் கிடைத்த இன்றே நாங்கள் உடம்பினைப் பெற்ற பயனை அடைந்தோம்.

(பழங்களைக் கொடுக்கிறார்).

ஸுப்ரு:—(ஏற்றுக்கொண்டு) முனிவர்களே! நீங்கள் அன்புடன் கொண்டுவந்த இப்பழங்களைக் காணும்பொழுதே, என் மனம் தேவாமிர்தத்தை உண்டதுபோல் களிப்படைகின்றது! நான் ஒரு காரண நிமித்தமாக விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறேன். உங்களில் யாராவது என்னைப் பாணிக்கிரகணம் செய்துகொள்ள முன் வருவீர்களா?

(ரிஷிகள் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நிற்கிறார்கள்).

யௌவனம், ரூபம் இரண்டையும் இழந்த என்னை விவாகம் செய்துகொள்ள ஒருவரும் முன் வாராதது ஒரு ஆச்சரியமன்று. அநேக வருஷங்களாய் அதிகோரமான கஷ்டங்களுடன் நான் இயற்றிய தவத்தில், என்னை மணப்பவருக்குப் பாதியை கொடுக்கத் தயாராயிருக்கிறேன்.

(ப்ராக்ச்ருங்கவத் முன் பக்கம் வந்து நிற்கிறார்).

இல்லற சுகத்தில் ஒரு நாளும் ஈடுபடாத என் மனம் நாளைக் காலையிலும் பரிசுத்தமாயிருந்தால் அப்பொழுதே இவ்வுலகைவிட்டு நீங்குவேன். என்னை மணக்கும் இந்த ரிஷி இதை அறிய வேண்டியது அவசியம்.

ஓர் ரிஷி:—தேவீ! இப்பொழுதே விவாகம் நடைபெற வேண்டுமோ?

ஸுப்ரு:—ஆம்! இப்பொழுதே நடத்திவைக்கக் கோருகிறேன்!

(ரிஷிகள் ஹோமம் வளர்த்து மந்திரம் ஜபிக்க ஆரம்பிக்கிறார்கள். ஸுப்ரு கிழ ரூபம் மாறி யௌவன அப்சரஸ் ரூபம் பெறுகிறாள். யாவரும் ஆச்சரியப்படுகிறார்கள். விவாகம் நடைபெறுகிறது).

ஐந்தாம் அங்கம்.

இடம்—தபோவனம், காலம்—அதிகாலை.

(அநேக ரிஷிகள் கூச்சலுடன் ஓடி வருகிறார்கள்).

ஓர் ரிஷி, (உயரக் காண்பித்து) அதோ பாரும்!

இன்னொருவர்:—தேஜஸ் ரூபம்! தேஜஸ் ரூபம்!

இன்னொருவர்:—நமது குலபதி வருகிறார்.

(சார்ங்கரவரும் வைசம்பாயனரும் வருகிறார்கள்).

ஓர் ரிஷி:—சார்ங்காவ! அதோ பார்!

சார்ங்காவர் :—ஆம்! நாம் நேற்றுப் பார்த்தோமே அந்த முனீச்வரி.

வைசம்பாயனர் :—சிஷ்யர்களே! (யாவரும் வணங்குகிறார்கள்) "ஸாயக்ஞர் இன்று இவ்விடம் வருவார். இன்று அவர் ஓர் பெரிய உபன்யாசம் செய்வார். ஸப்ருவின் ஆச்ரமத்தருகில் தான் இனி நமது விவாதங்களும் உபன்யாசங்களும் நடைபெறும். ப்ராக்ச்ருங்கவத் தென்படவில்லையே!

சாரங்காவர் :—குலபதி! அவர் இன்னம் விவாக மஞ்சத்திலேயே இருக்கிறார் என்று எண்ணுகிறேன்.

(ப்ராக்ச்ருங்கவத் வருகிறார். குலபதியை வணங்குகிறார்).

வைசம்பாயனர்:—ப்ராக்ச்ருங்கவத்! வழக்கம் போல் உனது காரியங்களைச் செய்துகொண்டிரு. ஒருவித மோகமுமில்லாமல் இரு. தனது பரிசோதனையை பூர்ணமாய் நடத்திக்கொள்ளும் பொருட்டு ஸப்ரு எடுத்த மாயாரூபத்தை மறந்து விடு.

பாரக்ச்ருங்கவத் :—(வணங்கி) குலபதி! அந்த ரூபம் என் மனதை எந்நாளும் அதிருப்திக்கும் சஞ்சலத்திற்கும் ஆளாக்கிக்கொண்டேயிருக்கும். அவ்வுருவம் என்னால் மறக்கக் கூடியதல்ல.

வைசம்பாயனர்:—இது ப்ராக்ச்ருங்கவத் கூறும் வார்த்தையா? உன் மனோதிடம் எங்கு போயிற்று? அவள் காரணார்த்த உருவம் உன் மனதில் தோன்றும்பொழுது நீ அவளது கிழ உருவத்தை நினைத்துக்கொள். (உயரக் காண்பித்து) "அதோ மறைகின்ற தேஜஸ் ரூபத்தைப் பார்! அந்த நிர்மலமான ரூபம் உன் மனைவியா? ஒருவித குணங்களுமற்ற பரம்பொருளுடன் கலக்க அந்த ரூபம் காமத் தீயை மூட்டும் ஓர் அழகிய பெண்ணா? உனக்கு அளிக்கப்பட்டிருக்கும் அந்த தவத்தை கிரகித்துக்கொள்ள உன்னிடம் போதுமான தவம் இல்லை. இன்றேல் நீ சாந்தத்துடன் இருப்பாய். ஏகாக்ர சிந்தனையுடன் மனதை அடக்கி அந்தத் தபஸ்வினியால் அளிக்கப்பட்ட தவத்தை கிரகித்துக்கொள்.

ப்ராக்ச்ருங்கவத்:—எல்லாம் தங்கள் அருள்!

வைசம்பாயனர்:—எல்லோரும் ஸ்நானம் முதலியவற்றை முடித்துக்கொண்டு வந்து சேருங்கள். ஸாயக்ஞர் வந்து விடுவார்.

(யாவரும் போகிறார்கள்).

(முடிவு.)

தாய் மொழி.

ஓர் புத்துணர்ச்சிப் பாட்டு.

" கோமதிபாட்பன் " பாடியது.

(தங்கச் சிந்து மெட்டு.)

1. சங்கத் தவிசிருந்து தங்கமே தங்கம்—நனி
தனியரசு செய்தமொழி தங்கமே தங்கம்
துங்கத் தமிழ் மொழியே தங்கமே தங்கம்—எங்கும்
துலங்கிட வேண்டுமடி தங்கமே தங்கம்.

2. பெற்ற மொழி பேணுவது தங்கமே தங்கம்—பெற்ற
பிறப்பிற் பெருங்கடமை தங்கமே தங்கம்
உற்றவிந்த உண்மையினைத் தங்கமே தங்கம்—என்றும்
உணர்ந்தே யொழுகவேண்டும் தங்கமே தங்கம்.

3. நாட்டுமொழி நாட்டுதலே தங்கமே தங்கம்—உயர்
நாகரிக மாகுமடி தங்கமே தங்கம்
காட்டுவினை யாகுமடி தங்கமே தங்கம்—சொந்தக்
காந்திமொழி கைவிடுதல் தங்கமே தங்கம்.

4. பள்ளித் தலங்களெலாம் தங்கமே தங்கம்—இயல்
பாடங்க ளத்தனையும் தங்கமே தங்கம்
தெள்ளித் தமிழ்மொழியில் தங்கமே தங்கம்—வெகு
திறமாய்ப் புகட்டவேண்டும் தங்கமே தங்கம்.

5. பரந்த பெருங்கடலாம் தங்கமே தங்கம்—இந்தப்
பாரின் கலைகளெலாம் தங்கமே தங்கம்
சாந்து சுவைத்தமிழில் தங்கமே தங்கம்—மிகச்
சொகுசாய் அமைத்திடுவோம் தங்கமே தங்கம்.

6. தாயைத் தவிக்கவிட்டுத் தங்கமே தங்கம்—பல
தானம் புரிதலொக்கும் தங்கமே தங்கம்
தூய தமிழொதுக்கித் தங்கமே தங்கம்—பல
தொண்டு தொடுத்திடுதல் தங்கமே தங்கம்.

7. தாய்மொழியைத் தான்விடுத்துத் தங்கமே தங்கம்—பல
தாண்டவங்கள் தான்புரிதல் தங்கமே தங்கம்
பேய்மதியே யாகுமடி தங்கமே தங்கம்—அதில்
பெருமையே இல்லையடி தங்கமே தங்கம்.

8. நற்றாய் மொழிவிலக்கித் தங்கமே தங்கம்—எந்த
நாடுநலம் நண்ணியது தங்கமே தங்கம்
வற்றா வளம்பெருகத் தங்கமே தங்கம்—தமிழ்
வாகையுடன் வாழ்கவடி தங்கமே தங்கம்.

9. பெற்றமொழி பீடுறவே தங்கமே தங்கம்—அதைப்
பேணிப் பெருக்கிவரின் தங்கமே தங்கம்
கொற்றமுறக் கோதொழிந்து தங்கமே தங்கம்—மற்றக்
கோலமெலாம் கூடிவரும் தங்கமே தங்கம்.

10. இடருற்ற காலமது தங்கமே தங்கம்—தமிழ்க்
கினியில்லை இல்லையடி தங்கமே தங்கம்
சுடருற்றுச் சோபிதமாய்த் தங்கமே தங்கம்—தமிழ்
சுகமாய் வளருமடி தங்கமே தங்கம்.

மனோகரி அல்லது மரணத் தீர்ப்பு.

(சகோதரி வி. பாலம்மாள்.)

409-வது பக்கத் தொடர்ச்சி.

9-வது அத்காரம்.

என் மாமி தன மனத்துயரை அடக்கமாட்டாது தத்தளித்தாள். மெத்தப் பிரயாசையுடன் படுக்கை விட்டெழுந்து உட்கார்ந்தாள். என்னைக் கண்டதும் மனோகரி அடுத்த அறைக்குச் சென்றுவிட்டதால் நோயாளிக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து களைப்பை ஆற்றினேன். அச்சமயம் என தாயின் மரணப்படுக்கையின் ஞாபகமெனக்குண்டாயிற்று. என் மாமியைத் திண்டின்மீது சாயவைத்தேன். "மனோகரமே! உன் அண்ணன் வந்திருக்கிறானே. அவன் உன் குழந்தையைப்பார்க்க வேண்டாமா? ஞானானந்தனை இங்கு எடுத்துவா, அம்மா!" என்று என்மாமி தன் மகளை அழைத்தாள்.

தாய் அழைத்த சத்தம் கேட்டு மனோகரி குழந்தையுடன் அவ்வறைக்கு வந்து ஞானத்தைக் கீழிறக்கிவிட்டுக் கதவின் பின்புறமாகச் சற்று மறைந்து நின்றாள். இயற்கை சுபாவத்தாலும் சங்கோசத்தாலும் அவள் தலை குனிந்து நின்றாள். ஆகா, எவ்வித மாறுதல்! எத்தகைய மன மாற்றம்!!

மனக்கவலை என்றால் இன்னதென்றறியாது மனம் போனபடி ஓடி ஆடி விளையாடின காலம் கடந்து விட்டது. சம்பந்தா சம்பந்தமற்று வாய்க்கு வந்தவாறு உபயோகமற்ற விஷயங்களைப் பேசித்திரிந்த நாள் போய்விட்டது. காரணமற்றுச் சண்டையிட்டுச் சிறிது நேரத்திற்கெல்லாம சமாதானமடைந்த நாள் சென்றுவிட்டது. அனாவசியமாகக் கேள்விகளைக் கேட்டுப் பெரியவர்களைத் தொந்தரவு செய்த நாள் ஓடிவிட்டது. உ நாள்! அந்த நன்னாள், அருமையான நாள், களங்கமற்ற நாள், கவலையறியாத நாள், அக்குழந்தைப் பருவம் இனி வேண்டினாலும் கிடைக்கப்போவதில்லை. குழவிப் பருவத்தில் உயர்ந்த கட்டிலின்மீதும் பெட்டிமீதும் ஏறிநின்று "என்னைப்பார்! நானும் உன்னைப்போல் உயரமாய்விட்டேன், இனி நான் குழந்தையல்ல, என்னை இனி பாப்பா என்று கூப்பிடாதே" என்று தாயிடம் பேசிய நாள் வேறு. மனோகரி இப்பொழுது குழந்தையல்ல. சிறுமியல்ல, வாலிபப் பருவத்துள்ள பருவப் பெண், பிறன் மனையாள், ஒரு குழந்தைக்குத் தாயாகவிருக்கிறாள். பரபுருஷன முன்னிலையில் நாணத்துடன் தலை குனிதல் பாரதப் பெண்களின இயற்கை சுபாவமே. இச்சமயம் என்னைக்கண்டு மனோகரி நாணமடைந்து தலைமறைவாக நிற்பது நியாயமே. இதில விசேஷமொன்றுமே இல்லை. ஆனால், ஆனால மனோகரி என்னைக்கண்டு மறைவில் ஒதுங்கி நிற்கும் காலம் ஏற்படுமென்று நான நினைத்தவனல்ல. ஆ! அது வேறு சமயம், இது வேறு காலம்.

குழந்தையை எடுத்து உச்சிமுகர்ந்து மடிமீதிருத்திச் சீராட்டினேன. எல்லா அம்சங்களிலும மனோகரியின் சாயலையே ஒத்திருக்கும் ஞானானந்தனுடன சிறிது நேரம விளையாடினேன. அப்பாலகனின புன்சிரிப்பும் களங்கமற்ற தோற்றமும், மழலைச்சொற்களும் என மனதைத் தெளிவுறச் செய்தன. சில வினாடிகளையாவது சந்தோஷத்துடன் கழிக்கக்கூடிய பாக்கியம் அன்று எனக்குக் கிடைத்தது.

இக்காட்சியைக் கண்டதும் என் மாமிக்கு மனதிலிருந்த வருத்தம வெளிக்கிளம்பலாயிற்று. தன பெண்ணின் துரதிருஷ்டத்தை

விரித்துரைத்து அவனை நிந்தித்தாள். அவள் புருஷனுடைய துர்க்குணத்தையும் துர்ச்செய்கைகளையும் சொல்லி அவனை வாய்க்கு வந்தபடி திட்டினாள். இதைக் கேட்டதும் மனோகரியின் முகம் மாறுதலடைந்தது. அவள் யார்? இந்தியப் பெண் அன்றோ! கணவனே தெய்வமெனப் பணியுங் கற்பரசிகளின் வழி வந்தவளன்றோ! புருஷன் தன்னை எவ்வளவு கொடுமையாய் நடத்தியபோதிலும் அவனைப் பிறர் தூஷிக்க இந்துப் பெண் மனம் பொறுப்பாளோ! அறிவை வளர்க்கும் கல்விப் பயிற்சியற்றே ஒழிந்து உத்தியோகக் கல்வி நம்மிடையே வந்தபின் இந்துக் குடும்பத்திய மனமொற்ற வாழ்க்கையும் சிறிது பங்கப்பட நேரிடல் சகஜமே. அனேகமாக நற்குணம் வாய்ந்த பெண்கள் கஷ்டப்படுவதைக் காண்பதும் சகஜமாய் விட்டது. இதன் காரணம் யாது?

இதை யோசித்தால் நமக்கொன்றும் விளங்குவதுமில்லை. படைக்கும் கடவுளாகும் பிரமன ஒரு பெண்ணுக்கு அழகையும் நற்குணத்தையும் அமைக்க முற்படுங்கால் அதிலேயே ஆழ்ந்து முழு நேரத்தையும் செலவிட்டு முடிவில் அவள் தலையில் விதியை நல்விதியாக எழுதச் சாவகாசமின்றி ஓடிவிடுகிறார் போலும். இல்லையெனில் பெரும்பாலும அழகும் குணமுமுள்ள பெண்கள் துரதிருஷ்டசாலிகளாக இருக்க நியாயமேது? புருஷன் கொடுமை ஒருபுறமும், 'அதிருஷ்டமற்ற உன்னைப் பெண்ணாகப் பெற்றேனே' என்றும் 'இதற்கோ உன்னைச் சீரும் செல்வமுமாக வளர்த்தேன' என்றும பெற்ற தாய்விடுங் கண்ணீர் மறுபுறமும், இதற்கிடையில் அதிருஷ்டமற்ற பெண்படுந்துயரை யாற்றுவார் யார்? மனோகரி கற்றறிந்த பெண். பொறுமையைப் பூஷணமாகக் கொண்டவள். தனது கஷ்ட வாழ்க்கைக்குத் தன் தலைவிதி காரணமென்று பொறுத்திருப்பவள். தன் புருஷனை நிந்தித்தால் அதைக்கேட்டு மனஞ் சகிப்பாளோ? "அம்மா! அதிருஷ்டமென்பதுள்ளளவுமில்லாத பெண்ணைப்பெற்று அயல்வீட்டுப் பிள்ளையை நிந்தித்தால் ஆவதென்ன? இனி எனக்கு அவர்தான் கதி. அவரின்றி வேறு துணை உலகிலெனக்கில்லவே இல்லை. அவர் நல்ல மனிதர் தான். என் துர்ப்பாக்கியத்தால் அவர் இவ்வாறு நடக்கிறார். என்றைக்கேனுமெனக்கொரு நாள் நல்லகாலம் பிறவாமலிராது. என்னைக் கஷ்டப்படுத்துவதன்றி மற்றப்படி அவரிடம் என்ன குறையிருக்கிறது? அவர் என்னை எவ்வளவு துன்புறுத்தியபோதிலும் எனக்கது சகஜமாய் விட்டது. அம்மா! என் கணவனை உங்கள் வாயால் ஆசீர்வதியுங்கள், அவரை வாழ்த்துங்கள்" எனக்கூறி மனோகரி மாலை மாலையாகக் கண்ணீருதிர்த்து நின்றாள். இது கண்டு என் நெஞ்சமுருகிவிட்டது. "தங்காய்! அஞ்சாதே! அழாதே. உன் பொறுமைக்கொரு நாளும் குறைவில்லை, உனக்கு நற்காலமுண்டு. நீ உன் கணவனுடன் மேன்மையாக வாழ்வாய். உமாபதி நல்லவனே, துஷ்ட சகவாசத்தினாலும் குடிப்பழக்கத்தாலும் கெட்டுவிட்டான். இனித் திருந்திவிடுவான், நீ கண்ணீர்விடாதே அம்மா" என்றுநான் அவளைச்சமாதானப்படுத்தினேன். இச்சமயம் என்மாமி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். ஆனால் அவளால் பேசமுடியவில்லை. நாக்குத் தடுமாறிற்று. தொண்டை அடைத்துக் கொண்டது. நெடுநேரம் அவதிப்பட்டு முடிவில் கைச் சாடையால் மனோகரியை அருகிலழைத்தாள். கண்ணீரை ஆறாய்ப்பெருக்கினாள். பெற்ற தாய்க்குத் தன பெண்களிடத்தில், அதிலும் அதிருஷ்ட மற்ற பெண்ணிடத்தில், புருஷன கொடுமைக்காளான பெண்ணிடத்தில் உள்ள அபிமானமும் கவலையும் கொஞ்சமோ. ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு "என் மகனே! இவளைக் காப்பாற்று. உன் தங்கையை உன் உயிருள்ளவரை கைவிடாதே. பெண்ணுக்

குத் தெய்வம் கணவனே ஆனாலும் அவன் அநீதியாகக் கொடுமை செய்வானாயின் பெண்களை ஆதரித்தல் பிறந்த வீட்டாரின் கடமையே ஆகும். உன் வாழ்நாள் உன் சகோதரியை ஆதரிப்பதில் செலவிடப்படட்டும். வாசுதேவன் இவளைக் கவனியான். அவன் மனைவிக்குக் கணவன் வீட்டாரென்றால் கசப்பு. நீ தான் மனோகரியை ஆதரிக்கவேண்டும்'' எனக்கூறி "மனோகரம்! உன்னை உன் அண்ணன் கவனித்துக்கொள்வான். இவனை இன்று முதல் உன் அத்தை மகனென்று எண்ணாதே. எனது மூத்த பிள்ளை, உனக்குத் தமையனெனத் தெரிந்துகொள். நான் சொல்வது விளங்குகிறதா? ஒரு காலத்திலும் பொறுமையை இழந்துவிடாதே. தற்கொலை செய்துகொள்ளத் துணியாதே. பொறுமை பெருமை தரும்'' என்றுரைத்து, மனோகரியின் கையை என் கரத்தின்மீதுவைத்து "இந்தா! இவளைக் காப்பாற்றுவதாகக் கை கொடு. உன் தங்கையைக் காப்பாற்று. கனவிலும் கைவிடாதே. மரணத்தறுவாயில் எனக்கு அபயமளிக்கத்தவறாதே. நான் உன்னைப் பெற்ற பிள்ளையிலும் பதின் மடங்கு அன்பாய் வளர்த்ததற்கு நீ செய்யவேண்டிய பிரதியுபகாரமிதுவே'' எனப்பேசி முடித்தாள்.

ஆதென்ன கனவோ, நினைவோ, மனக்கலக்கமோ, கனவில் நினைவோ! மனோகரியின் காற்று வாடையும் கூடாதென்று தன்னந்தனியனாக, பரதேசியாக, அனாதையாக—யாருமறியாது அலைகடல் தாண்டி நான் ஓடியிருக்க, அம்மனோகரி, அதே மனோகரி, இப்போது என் கையில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறாள். அவளை இனி நான் ஆதரிக்கவேண்டும். விஷவாடை கூடாதென்றோடிய நான் காளகூட சர்ப்பத்தைக் கழுத்திலணிந்திருக்கிறேன். இந்த நிலையில் நான் ஒன்றுந்தோன்றாதவனாக, சித்தப்பிரமை கொண்டவனாக, திகைப்படைந்தவனாக, நெஞ்சுபடபடத்தவனாக, மனம் பதரியவனாக, இருதயம் துடிப்பவனாக, இனி நடக்கவேண்டியதென்னவென்பதை அறியாதவனாக உன்மத்தனைப்போல் உட்கார்ந்திருந்தேன். அவ்வறையில் சிறிது நேரம் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. சில விநாடி கழித்து நான் மனத்தெளிவடைந்தேன். கண்ணை விழித்தேன். சுற்றிலும் உற்றுநோக்கினேன். "ஐயோ! அண்ணா! இனி நான் என்ன செய்வேன்! எங்கு செல்வேன்! என் துக்கத்தை யாரிட முறைப்பேன். அனாதையாய் விட்டேனே! எனக்கினியார் துணை அண்ணா!'' என்றுவாய்விட்டலறி அழுது மனோகரி மூர்ச்சையானாள். ஏன்? என் கையில் மனோகரியை ஒப்புவித்த மறுநிமிஷத்திலேயே என் மாமி பரமபதமடைந்துவிட்டாள். மனோகரி என்ற நாடகத்தில் நான்வேஷமிட்டு நடிக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. யமதருமனாகும் சூத்திரதாரன் என் மாமியின் உயிராகும் திரைச் சீலையைத் தள்ளிக்கொண்டு கதையாரம்பம் கூறிச் சென்று விட்டான். ஆனால் இவ்வளவிற்குமிடையில் உயிரிழந்து கிடக்கும் பாட்டியாரையும் மெய் மறந்துள்ள அன்னையையும் உயிர்ப்பிணமாக விருக்கும் என்னையும் சிறிதும் கவனியாது "அம்மா! அம்மா! பாப்பா! மாமா!'' என்று பேசியும் கைதட்டிச் சிரித்தும் குழந்தை ஞானானந்தன் தன் பெயருக் கேற்கக் கவலையின்றி அவ்வறையில் விளையாடிக் கொண்டிருந்தான்.

(தொடரும்)

பாபம் ஒரு பக்கம், பழி ஒரு பக்கம்.

ஹக்கீம் ம. அ. ஷம்ஷுத்தீன் சாகேப்.

பெண் கல்வியின் அவசியம்.

கடவுள் மனித தேகத்தில் சமமாய் அமைக்கப்பெற்ற இரு கண்களால் பார்க்கிறோம், இரு காதுகளால் கேட்கிறோம், இரு கைகளால் தொழிலுக்கேற்ற வேலைகளைச் செய்கிறோம், இரு கால்களால் நடக்கிறோம். இதில் ஏதாவது ஒன்றுக்கொன்று குறைவுபட்டிருந்தால் அதின் காரியமும் குறைவுபட்டுப் போயிருக்கும். இப்படி ஜதை ஜதையாய் உள்ள அவயவங்களில் ஒன்று ஆணாகவும், ஒன்றுபெண்ணாகவும் இருக்கிறது. எப்படி என்றால், மனித தேகத்தில் வலது பக்கம் ஆண்பாகமென்றும் இடது பக்கம் பெண்பாகமென்றும் சாஸ்திர சம்மதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்படிப்பெண்பாகமும் ஆண்பாகமும் சரிசமமாய் இருந்துதான் ஒரு பூர்த்தியான மனிதனாகின்றான். மேலும் குறித்த காரியங்களில் வெற்றியுமடைகிறான். இப்பூவுலகத்தைப் போலவே இச்சடவுலகத்தையும் படைக்கப்பெற்றிருக்கிறது. இப்பூவுலகின்கண் ஓர் நாடு சமத்துவமாய் முன்னேற்றமடைய வேண்டுமானால் இஜ்ஜடத்தில் ஆண்பாகமும் பெண்பாகமும் சேர்ந்து வெற்றியடைவதுபோல் இந்நாட்டிற்கு ஆண்களும் பெண்களும் ஒற்று உழைக்கவேண்டும். இதில் குறைவுபடின் எல்லாம் குறைவுபட்டுத்தானிருக்கும். ஆனால் இஜ்ஜடத்திற்கும் உலகத்திற்கும் சிற்சில வித்தியாசங்கள் உண்டு. ஜடத்தில் ஆண்பாகத்தையும் பெண்பாகத்தையும் சேர்த்தே படைத்திருக்கின்றான். இப்படைத்தலின் உண்மையை உணர்ந்து இவ்வுலகில் தன் தன் முயற்சியால் ஒற்று சமத்துவம் அடைதலே உலக அபிவிருத்திக்கான பரீட்சையில் தேறியதாகும். இப்பரீட்சையில் தேற இருவர்க்கத்தாருக்கும் சமத்துவமான கல்விவேண்டும். இக்கல்வியிலும் மனிதசமூகம் மனிதவர்க்கத்திலிருந்து தாழ்ந்துவிடாமல் இருக்கும்படியானதாக இருக்கவேண்டும். இவ்விரு சமூகத்தார் சமத்துவம் அடைவதிலும் மேன்மைபெறவும் முடியும்; தாழ்மையடையவும் கூடும். எப்படி என்றால், ஆண்களில்லாமல் பெண்கள் கெடமுடியாது; பெண்களில்லாமல் ஆண்கள் கெடமுடியாது.

இதைப் போலவே ஆண்களில்லாமல் பெண்களும் பெண்களில்லாமல் ஆண்களும் உலக அபிவிர்த்திக்கான ஓர் நற்காரியம் செய்யவும் முடியாது. இது நிற்க, தற்போது ஆடவர்களில்பலறில்பெரும்பாலோர் மனிதவர்க்கத்திலிருந்து தாழ்ந்தே இருக்கிறார்கள். இப்படி இவர்கள் தாழ்ந்திருந்தும் பெண் உருவங்களை இகழ்ந்து கூறப் பின் வாங்குகிறதில்லை. தான் பயின்ற கல்வியின் சாமர்த்தியத்தால் குற்றங்கள் நிறைந்த மூட்டைகளைத் தனியாய்ப் பெண்கள் தான் சுமக்கவேண்டுமென்றும் கதைகளை கட்டிவிடுகிறார்கள். இப்படிப்பெண்களின்மேல் சாற்றப்பட்ட குற்றம் சரியா அல்லது தப்பா என்று ஆராய்ச்சி செய்து விவகாரம் நடத்தப் பெண்கள் சமத்துவமான கல்வியில்லையானால் முடியாது. சகோதரிகளே! இருகைகளும் ஒற்று ஒரு தொழிலைச் செய்கிறதாயிருப்பினும் ஆகாரம் புசிக்க வலதுகைதான் என்றும் மலபாதைக்குப் பின் சுத்திசெய்ய இடது கைதான் என்றும் வரையறுத்து இவ்விடத்தில் ஒற்றுமையை விலக்கிக் கொண்டதுபோல், தகாத கோணலான காரியங்களில் சமத்துவத்தை நீக்கியும் நல்ல காரியங்களில் சமத்துவத்துடனும் உழைக்க முன் வருவீர்களாக. இப்படி நீங்

கள் முன் வருவதற்கும் நற்செய்கையில் உழைப்பதற்கும் பல அடவர் முன்னடையும் சமத்துவத்தால் தன் பதிவிரதா தர்மத்தைத் தைரியமாய் நிலை நாட்டவும் அடவர் உங்கள் மேல் சுமத்திய மூட்டைகளைக் கீழே இறக்கவும் கல்வியின் அறிவால்தான் முடியும்.

சிமாட்டிகளே! ஏணியை வைத்து மேல் மாடிக்கேறிச் செல்வதுபோல் உதாரணத்தைக் கவனித்துக் கருத்தை உணர்ந்து கல்வியைப் பயிலுங்கள்.

இந்திய ஸ்த்ரீரத்னங்கள்.

(ஸ்ரீமான் சி. என். அனந்தசுப்பன்)

சகுந்தலை.

இந்த வியாசத்தில் உத்தம பதிவிரதையான சகுந்தலையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

முற்காலத்தில் அத்திபுரம் என்ற ஓர் நகரம் இருந்தது. அந்நகரத்திற்கு அருகில் 'மாலினி' என்ற ஓர் அழகிய நதியானது ஓடிக்கொண்டிருந்தது. அவ்வாற்றிற்கு அப்பால் ஓர் அழகிய காடு இருந்தது. அக்காட்டின் வழியாக இருவர் போய்க் கொண்டிருந்தார்கள். ஒருவர் வயதில் முதிர்ந்தவர்; மற்றொருவர் இளையவர். அவர் அணிந்திருந்த ஆபரணங்களும், உடுத்தியிருந்த உடையும், கம்பீரமான நடையும், அழகிய தோற்றமும், அவரை ஓர் இராஜகுமாரன் என்று எளிதில் விளக்கிற்று. அந்த அழகிய காடானது அவர்களது மனதைக் கவர்ந்தது. அவ்வழகிய உருவமுடையவர் பெயர் துஷ்யந்தன்; ஓர் பெரிய அரசன்; காட்டிற்கு வேட்டையாடுவதின் பொருட்டு வந்து, வேட்டையாடிக் களைத்துப்போயிருந்தார். இவரது களைப்பை இயற்கை மாதாவானவள் ஆற்றிக் கொண்டிருந்தாள். அவ்வனத்தில் மல்லிகை, முல்லை, ரோஜா முதலிய புஷ்பச் செடிகள் நிரம்பி இருந்ததால் அக்கானகம் முழுவதும் நறுமணமாகவே இருந்தது. இளந்தென்றற் காற்றானது மேற்படிப் புஷ்பங்களின் மணத்தை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அடித்துக் கொண்டு வந்து அங்கு வசிப்பவர்களுடைய மனதிற்குக் களிப்பை அள்ளி அள்ளி ஊட்டிக் கொண்டுவந்தது. தவிரவும் அங்கு காணப்பட்ட சிறு சிறு குளங்களில் தாமரைப் புஷ்பங்களானது மலர்ந்து, பார்க்கச் சென்றவர்களுக்கெல்லாம் நல்வரவு கூறின. மா, பலா, கொய்யா முதலிய மரங்கள் நன்றாக ஓங்கி வளர்ந்து குளிர்ந்த நிழலையும், புசிப்போருக்கு இனிய பழங்களையும் தந்து வந்தன. உயர் குடியிற் பிறந்தோர் எவ்வாறு எந்தப் பிரதிப் பிரயோஜனங்களையும் எதிர்பாராது ஏழைகளுக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்து வருவார்களோ அவ்வாறே அம்மரங்களும் எந்த விதமான கைம்மாறையும் எதிர்பாராமல் அவ்வனத்திற்குச் சென்ற எல்லோருக்கும் இனிய கனிகளைத் தந்தும் நல்ல நிழலைக் கொடுத்தும் வந்தன. சிறு சிறு மான் குட்டிகளின் அழகும், அவைகளின் அழகியவிளையாட்டுகளும் மனதைக் கவர்ந்தன. மனிதனுடைய எண்ணங்கள் எவ்வளவு வேகமாகச் செல்கின்றனவோ அவ்வளவு வேகமாக மேற்படி மான் குட்டிகள் துள்ளித் துள்ளி ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஓடிக்கொண்டிருந்தன. ஆற்றில் தண்ணீரானது தெளிவாகவும் மிகவும் பரிசுத்தமாகவும் இருந்ததானது

உத்தம புருஷர்களுடையவும், தெய்வ பக்தர்களுடையவும் மனமானது எவ்வாறு சூது, வஞ்சனை பொறாமை முதலிய தீக்குணங்களுடன் இல்லாது பரிசுத்தமாகவும் நிஷ்கபடமாகவும் இருக்குமோ அவ்வாறு இருந்தது. இந்த அழகிய ஆற்றில் சாரசம், ரேக்காகம் போன்ற புள்ளினங்கள் விளையாடிக் கொண்டிருந்தன. அவ்வனத்தில் நின்றுகொண்டு மேலே நோக்கினால் பற்பல விதமான பழவகைகளும், கீழே நோக்கினால் பற்பல விதமான புஷ்பங்களும் காணப்பட்டு வந்ததால் மிகவும் ரமணீயமாகத் தோன்றிற்று. இப்பேர்க்கொத்த அழகிய, மனித சஞ்சாரம் அதிகமில்லாத நிர்மலமானவனங்களில், இயற்கை மாதாவால் சிருஷ்டிக்கப்பட்ட வனங்களில் அநேக மகரிஷிகள் தவம் செய்வதற்காக சிறு சிறு பர்ணசாலைகள் கட்டிக்கொண்டு வசித்து வருவார்கள். அப்பேர்க்கொத்த ரிஷிகளது பர்ணசாலைகள் அநேகம் இக்காட்டிலும் தென்பட்டது. இப்பர்ணசாலைகளில் வசிப்பவர்களைப்பற்றி சாமானியமாக நாம் நினைக்கக் கூடாது. அவர்கள் சிறந்த ஞானிகள்; வேத சாஸ்திரங்களை நன்குணர்ந்தவர்கள்; உலக இன்பங்களையெல்லாம் அனுபவித்துக் கடைசியில் அவைகளை வெறுத்து, அவை உண்மையான இன்பமல்ல என்று உதறித்தள்ளி, மனிதன் அடைய முயலவேண்டுவதெல்லாம் 'மோட்சம்' என்ற அப்பேரின்பந்தான் என்பதையும் தீர்க்கமாக ஆலோசனை செய்தபின் அந்த முடிவிற்கு வந்து அம்மோட்சத்தையடைய நாடு, நகரம் முதலிய இடங்கள் ஏற்றவையல்ல என்பதை உணர்ந்து, நிர்மானுஷ்யமான வனங்கள்தான் சிறந்தவை எனத்தெரிந்து வசிக்கும்படியான உத்தம புருஷர்கள். அப்படிப்பட்ட ரிஷிகளில் கண்ணுவர் என்னும்படியான ஓர் முனிவர், நல்ல நீதிமான், தீர்க்கதரிசி, வேத சாஸ்திரமுணர்ந்தவர்; திரிகாலஞ்ஞானி; தர்மசிந்தையுடையவர். இவர் இந்த வனத்தில் ஓர் ஆச்ரமத்தைக் கட்டிக்கொண்டு அங்கு வசித்து வந்தார். மான் குட்டிகளும், மற்ற அழகிய மிருகங்களும் கண்ணுவரது ஆச்ரமத்தில் வளர்ந்து வந்தன. ஆச்ரமத்தைச் சுற்றி [illegible]கிய புஷ்பச் செடிகள் உண்டு. கிளிகளின் கூட்டம் ஓர் பக்கம்; அன்னப்பறவைகளின் கூட்டம் ஓர் பக்கம், அழகிய மயில்களின் கூட்டம் ஓர் பக்கம்; இவைகளெல்லாம் ஆச்ரமத்தை அழகு செய்தன. இங்கு அநேக சிறு பெண்கள் முனிவருடைய பூஜைக்கு உதவி செய்து வந்தார்கள்.

நமது ராஜகுமாரனாகிய துஷ்யந்தன் கடைசியில் கண்ணுவர் வசித்துவந்த அழகிய ஆச்ரமத்திற்கு வந்தான். அங்கு மேனகையின் பெண்ணாகிய 'சகுந்தலா' என்னும் ஓர் அழகிய மங்கை வசித்து வந்தாள். அவளுக்கு வயது 16-க்கு மேல் இராது. பூர்ண சந்திரனுடைய முகத்தைப்போல் அவளது முகம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவளது ஒடுங்கிய இடையும், ஒய்யாரமான நடையும் மனதைக் கவர்ந்தன. அவளது பார்வையானது கொடூரமாக இல்லாது கருணையாகவே இருந்தது. அவள் அணிந்திருந்த கொலுசுகள் கணீர் கணீர் என்று சப்தித்தன.

அவளது வார்த்தைகள், தேனோ! பாகோ! கற்கண்டோ! அமுதமோ! என்றிருக்கும். ஒரு முறை அவளைப் பார்த்துவிட்டால், அவளுடைய சாயையானது மனத்தைவிட்டு அகலாது. இந்த ஆச்ரமத்தை துஷ்யந்தன் அணுகி, "யார் உள்ளே?" என்று வினவினான். உடனே சகுந்தலா அமுதினும் இனிய மொழியால் "தயவு செய்து எழுந்தருளவேண்டும். இதோ இங்கு இருக்கும் பலகையில் வீற்றிருக்க வேண்டுகிறேன். தாங்கள் வந்த காரியத்தைப்பற்றி அடியேனுக்கு அறிவிக்க முடியுமானால் தங்களுக்கு திருப்திகரமான பதில் தரமுடியுமா என்று யோசி

த்துப் பார்க்கிறேன்'' என்று கூற, துஷ்யந்தன் மிகவும் சந்தோஷப்பட்டு, "விசேஷம் ஒன்றுமில்லை. நான் இந்த அழகிய ஆச்ரமத்திற்கு வந்து ஒ?தும ̣ ஆயிற்று. கண்ணுவர் இருக்கிறார் என்ல தெரிந்தால் அவரை தரிசித்துப் போகலாம் என்று வந்தேன், வேறொன்றுமில்லை'' என்றான். அதற்கு சகுந்தலா "அப்படியா! வெகு சந்தோஷம்! கண்ணுவ முனிவர் இங்குதான் இருக்கிறார். ஆனால் தற்சமயம் அவர் இங்கு இல்லை. பூஜை செய்வதற்கு வேண்டிய புஷ்பவகைகளைக் கொய்துகொண்டு வரப் பூந்தோட்டத்திற்குப் போயிருக்கிறார். ஆகையால் தாங்கள் இன்னும் சிறிது நிமிஷங்கள் பொறுத்திருக்க முடியுமானால் முனிவரை அவசியம் காணலாம்'' என்றாள். இவ்வாறு வெகு அழகாகவும் சாமர்த்தியமாகவும் பதில் சொன்ன சகுந்தலாவின் முகத்தை உற்றுநோக்கினான் துஷ்யந்தன். இப்பேர்ப்பட்ட அழகுள்ள பெண் இந்த ஆச்ரமத்தில் வசிக்கக் காரணம் என்ன என்று சந்தேகித்து, அவளை நோக்கி "அம்மா! நீ யார்? பார்ப்பதற்கு ஓர் ராஜ குமாரி போல் தோன்றுகிறாய், உன் பெயர் என்ன? உனக்குத் தாயும் தந்தையும் இருக்கிறார்களா? அவர்களின் பெயர்கள் என்ன? இந்த ஆச்ரமத்தில் எவ்வளவு நாட்களாய் வசித்து வருகிறாய்? நீ ஆச்ரமம் வந்து சேரக் காரணம் என்ன?'' என்று கேட்க, சகுந்தலா விடையளிக்கச் சற்று கூச்சப்பட்டாளாயினும், துஷ்யந்தனைப் பார்த்து "ஐயா! நான் இங்கு வசித்துவரும் கண்ணுவரின் மகள். வேறு ஒருவரும் அல்ல'' என்று சொல்லக் கேட்கவே துஷ்யந்தன் மிகவும் ஆச்சரியப்பட்டு "முனிவரோ இந்திரியங்களை யெல்லாம் நிக்ரகம் செய்தவர், உலகப்பற்றனைத்தையும் ஒழித்தவர், எப்பொழுதும் ஈச்வரனையே பஜிக்கிறவர்; அவ்வாறிருக்க இவருக்கு எப்படி இவள் பெண்ணாயிருக்கக்கூடும்'' என்று யோசித்து, சகுந்தலாவைத் தனது சரித்திரத்தை சொல்லும்படி கேட்க அவளும் பின் வருமாறு சொல்லலானாள் :—

"எனது சரித்திரத்தைத் தாங்கள் அறிய வேண்டுமென்று மிகுந்த ஆவலோடு இருக்கிறீர்கள் போல் தோன்றுகிறது. நான் எனது சரித்திரத்தைச் சொல்லத் தாங்கள் கேட்பீர்களானால் மிகவும் ஆச்சரியப்படுவீர்கள் என்பதிற் சந்தேகமில்லை. இதில் ஒரு விசேஷமென்னவென்றால் எனது சமாசாரத்தைப்பற்றி எனக்கே ஒன்றும் தெரியாது (நன்றாக) என்றால் என்னைப்பற்றி தாங்கள் தெரிந்து கொள்ள என்ன விஷயம் அதிகம் இருக்கப் போகிறது?

துஷ்யந்தன்:—பெண்ணே! நீ அவ்வாறு கூறுதல் கூடாது. உன்னைப்பற்றி உனக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவுமட்டும் சொன்னாற் போதுமானது.

சகுந்தலை:—என்னைப்பற்றித் தாங்கள் கேட்கத்தான் வேண்டுமோ?

துஷ்யந்தன்:—ஆம், கேட்கத்தான் வேண்டும்.

சகுந்தலை:—அவசியமாக?

துஷ்யந்தன்:—ஆம், அவசியமாக.

சகுந்தலை:—எனக்குச் சொந்தமாக ஒன்றும் தெரியாது என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். நான் சொல்லும் விஷயங்கள் என் தகப்பனாராகிய கண்ணுவ முனிவரால் வேறு ஒருவருக்குக் கூறப்பட்டவைகளாகும். அவைகளையே நான் தங்களுக்குச் சொல்வதில் ஆட்சேபமிருந்தால்—

துஷ்யந்தன்:—ஆட்சேபம் என்பது சற்றும் கிடையாது. அவைகளையே தாராளமாகச் சொல்லலாம்.

இவ்வாறு துஷ்யந்தன் கூறவே சகுந்தலை, "ஐயா! தாங்கள் விசுவாமித்திரர் என்ற

ஓர் அரசர் ராஜ்யத்தை வெகு திறமையுடன் ஆண்டு வந்ததாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் சிறிது நாள் ராஜ்யத்தை ஆண்டுவந்து— கடைசியில் அதை வெறுத்து தவம் செய்வதற்காகக் கானகம் சென்றார். அங்கு தன்னையே மறந்து தேவர்கள் வியக்கும்படியாக ஒரே திடபுத்தியுடன் மனதை எங்கும் அகலவிடாது கடுந்தவம் செய்தார். இந்த அகோர தவமானது இந்திரனுக்குக் கோபமூட்டியது. இவருடைய கடுந்தவத்தின்மேல் பொறாமை கொண்டான். தனது இந்திர பதவிக்கு எங்கு ஹானி ஏற்பட்டு—விசுவாமித்திரர் எங்கு ஸ்தானத்திற்கு வந்துவிடுகிறாரோ என்று அஞ்சி, அவரது தவத்தைக்கெடுத்தாலொழிய தனது பதவி தனக்கு நிலைத்திருக்காது என்று தனக்குள் நிர்மாணித்துக் கொண்டான். விசுவாமித்திரரது தவத்தைக் கெடுக்க என்ன வகை செய்யலாம் என்று சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்க அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று. அதாவது தனது இந்திர சபையிலிருக்கும்படியான தேவதாசிகளில் ஒருவளும் ஒப்புயர்வற்ற அழகையும் உடையவளுமான 'மேனகை' என்னும்படியான வடிவழகியை விசுவாமித்திரருக்கு முன் அனுப்பினால் அவர் அவளது மாயவலையில் அகப்பட்டுக்கொள்வார் என்று எண்ணி, அம்மேனகையை அவருக்கு முன் அனுப்பினான். தான் என்றும் பார்த்திராத ஓர் கட்டழகியானவள் தன்முன் நிற்பதைப்பார்த்த விசுவாமித்திரர் அவள் மீது காதல் கொண்டார். அவ்வாறு காதல் கொள்ளவே அவர் நெடுநாள் செய்து வந்த தவமானது வீணாயிற்று. தனது சொந்த அறிவை இழந்து 'காதல்' என்னும்படியான ஓர் போலி இன்பக்கடலில் சிறிது நாள் மூழ்கி யிருந்த காரணமாகத்தான் தன்னுடைய அரிய தவம் நிஷ்பிரயோஜனமாயிற்று என்பதை தனக்கு உண்மையான நினைவு வந்த பிறகு உணர்ந்தார். பிறகு தனது முட்டாள்தனத்திற்காகத் தன்னைத்தானே நொந்து கொண்டு மேனகையை விட்டு வேறிடம் சென்று மறுபடியும்தவம் செய்தார். இம்முறை யாவது தவம் கெடக்கூடாது என்று நினைத்து விசுவாமித்திரர் தவம் செய்த... அதற்குள் மேனகை கருத்தரித்து ஓர் பெண்மகவைப் பெற்றாள். இக் குழந்தையைப் பார்த்தாகிலும், முனிவரது மனமானது சற்று இளகும் என்று நினைத்து அக்குழந்தையை அவருக்கு முன் காட்டினாள். மூடின கண்களை அவர் திறக்கவே இல்லை. தவம் கலையக்கூடாது என்பதே அவரது எண்ணமாகையால், மேனகை தன் தந்திரங்கள் ஒன்றும் பலியாதது கண்டு அக்குழந்தையை அவ்விடத்திலேயே இருக்கும்படி செய்து விட்டுப் போய்விட்டாள். அவ்வாறு கவனிப்பாரற்று, திக்கற்று அழுது கொண்டிருந்த குழந்தையின்மீது கருணைவைத்து, கண்ணுவ முனிவர் அதைத்தனது ஆச்ரமத்திற்கு எடுத்து வந்து மிகவும் அன்போடு தனது சொந்தக் குழந்தைபோல் வளர்த்துவந்தார். அக்குழந்தையைப் பட்சமாகக் கழுகுகள் பாதுகாத்து வந்தன. அக்குழந்தையே நான்'' என்று சொல்லி முடித்தாள்.

இவ்வாறு சகுந்தலை சொல்லி முடிக்கவே துஷ்யந்தனது மனதில் தோன்றாத எண்ணங்கள் தோன்றின. தன்னையே மறந்து, அவளது அழகை இமை கொட்டாமற் பார்த்துப் பார்த்து மனதில் ஆனந்தங்கொண்டான். தனது முன் நிற்கும் உருவமானது உயிருடையதா இல்லையா என்றும் சந்தேகித்தான். உலகத்தை முற்றிலும் துறந்து காட்டில் கந்த மூலாதிகளை உட்கொண்டு தவம் செய்யும் முனிவர்களும் கூட சகுந்தலையின் கட்டழகைக் கண்டால் உடனே ஆலிங்கனம்செய்யச் சற்றும் பின் வாங்கமாட்டார்கள் என்றால் உலக இன்பங்களிலேயே சுழன்று வரும்படியான நமது துஷ்

யந்தன் சகுந்தலையின் மீது தனது காதலைச் செலுத்தியது ஓர் ஆச்சரியமா! கடவுளுடைய திவ்விய நாறுதிசயங்களைப்பற்றி கேட்டால் அவைகள் எவ்வளவு இன்பம் தருமோ அதைவிட ஆயிரமடங்கு அதிக இன்பத்தை சகுந்தலாவின் அழகிய சொற்கள் துஷ்யந்தனுக்கு இன்பத்தைத்தந்தன.

இவ்வாறு தனது மனதில் நிமிஷந்தோறும் ஊற்று ஜலம் போல் வற்றாது பெருகிக்கொண்டேவரும் தனது ஆசையை 'மணம்' என்ற ஓர் பாணத்தைக்கொண்டு வென்றால் தான் முடியுமென்று தீர்மானித்துக் கொண்டவனாகி, சகுந்தலையை நோக்கி, "பெண்ணே! நீ சொல்லிய யாவற்றையும் உணர்ந்தேன். உன்னை நான் ஓர் ராஜகுமாரி என்றே மதிக்கிறேன்; உன்னுடைய ஆசை வலையில் நான் அகப்பட்டுக்கொண்டு விட்டேன். இதினின்றும் மீள ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது நீ என்னை மணம் புரியவேண்டும். என்னுடைய உடல், பொருள் ஆவி இம்மூன்றையும் உன் பொருட்டே தத்தம் செய்யத் தயாராய் இருக்கிறேன். என் ஆசையை நீ கொள்ளை கொண்டுவிட்டாய், ஆகையால் நீ என்னை அவசியம் மணம் புரியவேண்டும். நான் 'அத்திபுரி' என்னும்படியான ராஜ்யத்தை ஆளுபவன். என்னுடைய பெயர் துஷ்யந்தன்" என்று கூற, அம்மாது துஷ்யந்தனைப்பார்த்ததும் அவனையே மணக்க வேண்டும் என்று மனதில் தீர்மானித்துக் கொண்டாளாயினும் "அரசே! நான் சொல்ல என்ன இருக்கிறது? நானோ இந்தக் கண்ணுவ முனிவரது ஆச்ரமத்தில் வளர்ந்து வரும்படியான ஓர் பெண்! என்னுடைய நேரத்தை எல்லாம் பகவானுக்குக் கைங்கரியங்கள் செய்வதிலும், முனிவராகிய என் தந்தைக்கு பூஜை செய்யும்படியான விஷயங்களில் உதவி செய்வதிலும் கழிக்கிறேன். அவருடைய எண்ணங்கள் எவையோ அவையே என் எண்ணங்களாகும். ஆகையால் விவாக விஷயங்களிலும் கூட எனது தந்தையாரையே கேட்கவேண்டும். அவரிடம் தாங்கள் தங்களது விருப்பத்தை வெளியிடுங்கள். அவர் இஷ்டப்பட்டு விட்டால் நானும் இஷ்டப்பட்டாய்விட்டது என்று தாங்கள் நினைத்துக்கொள்ளலாம்." இதைக் கேட்டதும் துஷ்யந்தன் "என் அன்பிற்கு நாயகமானவளே! நான் உனது பதில் சொல்லும் மாதிரியிலிருந்து நீயும் என்னைக் காதலிக்கிறாய் என்பதை உணர்ந்துகொண்டேன். நாம் விவாகம் செய்துகொள்ளக் கண்ணுவர் வரவேண்டும் என்றும் அது வரையில் என்னைக் காத்திருக்க வேண்டும் என்றும் கூறுகிறாய். ஆனால் அது அவசியமில்லை யென்று நான் நினைக்கிறேன். விவாகம் செய்துகொள்ளும் ஆணும் பெண்ணும் தான் முதலில் தங்களது விருப்பத்தை வெளியிட வேண்டும். அவர்களது விருப்பம் முரண்படாது இருந்து விவாகம் நடக்குமாயின் அதுவே உண்மையான விவாகம்; பின்னால் ஒரு விதமான குற்றமும் ஏற்படாது. ஆகையால் நீ சற்றும் தயங்காமலும், தாமதியாமலும், 'சரி' என்று உன்னுடைய அழகிய வாயினின்றும் கூறுவாயானால் இங்கேயே காந்தர்வ விவாகம் செய்து கொண்டுவிடுவோம்" என்று சொல்ல, சகுந்தலையும் அதற்குச் சம்மதிக்க; உடனே இருவருக்கும் விவாகம் நடந்தேறியது. பிறகு துஷ்யந்தன் தன் அருமை நாயகியாகிய சகுந்தலாவிடம் தனது நேரத்தைக் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருப்பதில் கழித்துவிட்டு, பின் ராஜ மரியாதையுடன் நகரத்திற்கு சகுந்தலையை அழைத்துக்கொண்டு போவதாகக் கூறிவிட்டு அவளை அங்கேயே விட்டு விட்டுச் சென்றான். சிறிது நேரம் பொறுத்து வெளியில் சென்றிருந்த முனிவர் ஆச்ரமத்திற்கு வந்தார். சகுந்தலாவின் முகமானது தன் தந்தையின் உத்திரவைக்கேளாது விவாகம் செய்து

கொண்டுவிட்டதால் ஒருவேளை கோபிப்பாரோ என்ற ஓர் அச்சத்தால் ஒருவாறு மாறுபட்டிருந்தது. ஏன் இப்படி இருக்கிறாய் என்று கேட்டால் என்னபதில் கூறுவது என்று ஏங்கியிருந்தாள். ஆனால் முக்காலத்தையும் உணரும்படியான சக்தியைப் பெற்றிருக்கும் கண்ணுவருக்கா இது தெரியாது! தன்னுடைய குழந்தையான சகுந்தலை துஷ்யந்தன் என்னும்படியான அரசனை நேசித்துக் கலியாணமும் செய்து கொண்டுவிட்டாள் என்ற விஷயத்தைத் தமது அகக்கண்ணால் உணர்ந்துகொண்டுவிட்டார். தன் குமாரத்தியின்மீது அவர் சற்றும் கோபித்துக் கொள்ளவில்லை. சகுந்தலையைப் பார்த்து "அம்மா! ஒன்றும் பயப்பட வேண்டாம். நீ செய்த காரியத்தில் ஒன்றும் குற்றம் இல்லை. துஷ்யந்தனோ மிகவும் நல்ல அரசன். இப்பேர்ப்பட்ட ஓர் அரசனை நீ மணாளனாய் அடையவேண்டுமென்பது எனது விருப்பமாகவும் இருந்தது! இனி நீ சௌக்கியமாய் இல்லற தர்மத்தை நடாத்திக்கொண்டு இரு. இதற்குக் கடவுள் துணை இருக்கட்டும்" என்று கூறவே சகுந்தலையின் அச்சம் ஒருவாறு நீங்கிற்று.

இவ்வாறு சகுந்தலையை துஷ்யந்தன் விட்டுப் பிரிந்த சில நாட்களுக்கெல்லாம் சகுந்தலைக்கு 'சர்வதமனன்' என்ற ஓர் ஆண்குழந்தையும் பிறந்தது. ஓர் ராஜகுமாரனுக்கு இருக்க வேண்டிய இலட்சணங்களெல்லாம் அக்குழந்தையினிடம் குடிகொண்டிருந்தது. இந்த சந்தோஷத்தை துஷ்யந்தன் அனுபவிக்கவில்லையே என்ற ஓர் வியாகூலம் சகுந்தலையின் மனதை வாட்டிற்று. நகரத்திற்குச் சென்று உடனே திரும்பி வந்து அழைத்துக்கொண்டு போகிறதாக உறுதி கூறிவிட்டுச் சென்ற தனது மணாளன் இவ்வளவு நாட்களாயும் வரவில்லையே என்று ஏங்கினாள். காரணம் இன்னதென்பதை அறியக்கூடாதவளாய் இருந்தாள். தனது குழந்தைக்கும் இப்படியே பன்னிரண்டு வருஷங்களாயிற்று. இப்பன்னிரண்டு வருஷங்களாகத் தனது அரிய நாயகனை விட்டுப்பிரிந்த துக்கமானது நாளுக்கு நாள் மலைபோலப் பெருகிக்கொண்டே வந்தது. தன்னை ஒருவேளை மறந்துவிட்டார் போல் தோன்றுகிறது என்று ஓர் சமயம் நினைப்பாள். அரண்மனையில் ஆயிரக்கணக்கான இளம் மங்கையர்களுடன் சந்தோஷமாகக் காலம் கழித்துவரும் அவர் கேவலம் காட்டில் ஓர் ஆச்ரமத்தில் வளர்ந்து வந்த தன்னை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்று நினைப்பாள். இவ்வாறு நிமிஷத்திற்கு நிமிஷம் பற்பல மாதிரியாகத் தோன்றும் தனது சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்ளும் பொருட்டு, தனது மணாளனுக்கு ஓர் கடிதம் எழுதி அதை ஓர் ஆள் வசம் கொடுத்தனுப்புவதுதான் சிறந்தது என்று தோன்றிற்று. உடனே அவள் பின் வருமாறு எழுதலானாள்.

என் ஆருயிர்க் காதலருக்கு,

நான் இந்நிருபத்தைத் தங்களுக்கு எழுதத் துணிந்ததைக் குறித்து அடியேனை மன்னிக்கவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். தாங்கள் அன்று என்னைக் காட்டில் பார்த்தது முதல் என் மீது காதல் கொண்டு மணமும் செய்துகொண்டீர்கள் என்பது தங்களுக்குத் தெரியாததல்ல. கூடிய சீக்கிரம் வந்து என்னை அழைத்துக்கொண்டுபோவதாகக் கூறிச் சென்றவர் இன்றுவரை வரவும் இல்லை; ஓர் கடிதமும் கூட வரவில்லை என்பதை நினைக்க நினைக்க எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. தங்கள் வரவைப் பார்த்துப் பார்த்து எனது கண்கள் ஏமாந்து போயின. கவலையும் குறைந்தபாடில்லை. தங்களுடைய 12 வயதுள்ள 'சர்வதமனன்' என்ற அருமைக் குமாரன் 'தந்தையார் எப்பொழுது வருவார்?

நான் அவரை எப்படிப்பார்ப்பது?' என்ற இந்த இரண்டு கேள்விகளையே பிரதிதினமும் கேட்டுக்கொண்டிருக்கிறான். ஆதலால் எங்கள் இருவருடைய அடங்கா ஆசையைத்தீர்க்க இங்கு வரவேண்டுமாய்ப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

அடியாள் தங்களுக்கு இவ்வளவு சிரமத்தைக் கொடுத்ததற்காக மன்னிக்க வேண்டுகிறேன்.''

இப்படிக்கு,
தங்கள் அன்பிற்கு இருப்பிடமான
சகுந்தலா.

இவ்வாறு எழுதி ஆள்வசம் அனுப்ப, அதற்கும் விடை வாராதது கண்டு என்ன செய்வது என்று தெரியாதவளாய்த் திகைத்து நின்றாள். விவாகமாகி 12 வருஷங்களாயும் தனது புருஷன் வீட்டுக்குப் போகாமல் இனித் தந்தையின் வீட்டிலேயே இருப்பது சற்றும் பொருந்தாது என்றுணர்ந்தாள். கண்ணுவரும் அவ்வாறே நினைத்தார். கடைசியில் கண்ணுவர் தீர்க்கமாக ஆலோசனை செய்து சகுந்தலையைத் துஷ்யந்தன் அரண்மனைக்கு அனுப்புவதே முறையாகும் என்று நினைத்து, ஓர் நன்னாளையும் குறிப்பிட்டு இருந்தார். அந்நாளும் வரவே, இனி தமது அரிய குமாரத்தியை விட்டுப் பிரிந்திருக்க வேண்டுமே என்ற விசனங்கொண்டு இருந்தார். கடைசியில் தமது இரண்டு சிஷ்யர்களுடன் சகுந்தலையை அனுப்பினார். ஆச்ரமத்தில் இருந்த பெண்கள் எல்லாரும் சகுந்தலையை விட்டுப் பிரிய நேர்ந்ததே என்று துக்கித்தார்கள். சகுந்தலையும் அவர்களிடமிருந்து செலவு பெற்றுக்கொண்டு புறப்பட்டாள். அப்பொழுது கண்ணுவர் அவளைப் பார்த்து, "என அருமைக்குமாரி! இவ்வளவுநாட்கள் நீ இங்கு இருந்தாய். இனி எங்களைவிட்டுப் பிரிய சமயம் நேர்ந்திருக்கிறது. கலியாணமான பெண் நெடுநாள் தாய் தந்தையர் வீட்டில் இருப்பது அழகல்ல. நீ உன்னுடைய கணவன் வீடு சென்று சௌக்கியமாய் வாழ்ந்துவா. அங்கு உள்ள பெரியோர்களிடம் நீ மிகவும் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும். உன்னுடைய மாமியார், மாமனார் அங்கு இருப்பார்கள். அவர்களை நீ உன்னுடைய சொந்தப் பெற்றோர்களைவிட உயர்ந்தவர்கள் என்று எண்ணவேண்டும். அவர்களுக்கு அடங்கி நடக்கவேண்டும். மாமியார் தெரியாத்தனத்தால் உன்மீது கோபித்துக்கொண்டாலும் நீ அவளை எதிர்த்துப் பேசக்கூடாது. அதுதான் உண்மையான மருமகளுக்கு அழகு. உன் புருஷனைத் தெய்வமாக மதிக்கவேண்டும். அவனது இஷ்டத்திற்கு மாறாகச்சற்றும் நடக்கக்கூடாது. அவனுடைய சுகத்தை உன்னுடையதாகவும் கஷ்டத்தை உன்னுடையதாகவும நினைத்து அவனுக்குப் பணிவிடைகள் செய்துவரவேண்டும். உத்தமப் பதிவிரதைகளுக்கு இதுதான் அழகு. நீயோ மிகவும் புத்திசாலி. அரண்மனையிலுள்ள எல்லாருடைய அன்பையும நீ சம்பாதிப்பாய் என்பது எனக்குத் தெரியும் என்றாலும், உனக்கு நான் இவைகளை ஞாபகமூட்டினேன். ராஜாவுக்கு மனைவிமார்கள் அநேகர் இருக்கலாம். அவர்கள்மீது சற்றும் பொறாமைப்படக் கூடாது. அவர்களுடைய அன்பைத்தான சம்பாதிக்க நீ முயற்சி செய்யவேண்டும். வேலைக்காரர்கள் அநேகர் இருப்பார்கள். அவர்களிடம் நீ கருணை காட்டவேண்டும். கணவன் கோபித்துக்கொண்டால் நீயும் கோபித்துக்கொள்ளுதல் கூடாது. தணல் எரிந்துகொண்டிருந்தால் அதை அவிப்பது எது? நீர் அல்லவா? அதுமாதிரி கோபத்தைத் தணிப்பது எது? அது சாந்தமே ஆகும். ஆகையால் நான் சொன்ன விஷயங்களையெல்லாம ஞாபகப்படுத்திக்கொள். குழந்தையை ஜாக்கிரதையாகப்

பார்த்துக்கொள்" என்று புத்திமதிகள் கூறி வழி அனுப்பினர். பிறகு துஷ்யந்தன் இருப்பிடத்தை அடைந்தார்கள். தன் கணவன் ஏதாவது கேட்டால் பதில் எவ்வாறு கூறுவது என்று யோசிக்கலானாள். முதல்முதல் தான் தன் கணவன்மீது வைத்துவந்த காதலுக்கும் இப்பொழுது இருந்துவரும் காதலுக்கும் அதிக வித்தியாசமிருப்பதற்குக் காரணம் இன்னதென்பதை அவளே அறியக்கூடாதவளாயிருந்தாள். வேடனுடைய கையில் அகப்பட்ட மானானது எவ்வாறு தத்தளிக்குமோ அவ்வாறு அவளுடைய மனமானது தத்தளித்துக்கொண்டிருந்தது.

அத்திபுரத்தின் அழகு வர்ணிக்கற்பாலதல்ல. அந்நகரத்தின் கோபுர அழகும், வீதிகளின் அழகும், ஜனங்களின் உற்சாகமும், ஒற்றுமையும் மனதைக் கவர்ந்தன. கடைசியில் தனது மனதை ஒருவாறு சமாதானப்படுத்திக்கொண்டு துஷ்யந்தன் நிலையை அடைந்தாள். துஷ்யந்தன் அச்சமயம் அழகிய சிங்காதனத்தில் வீற்றிருந்தான். துஷ்யந்தன் சபா மண்டபத்தில் அமைச்சர்கள் பலர் வீற்றிருந்தனர். சீடர்களும், சிறுவனும், சகுந்தலையும் துஷ்யந்தன்முன் வந்து நின்றார்கள். தன்முன் வந்து நின்றவர்களை இன்னாரென்று சில நிமிஷங்கள்வரை அறியக்கூடாமலிருந்தான். பிறகு சிறிதுநேரங்கழித்துச் சீடர்களை இன்னாரென்று துஷ்யந்தன் அறிந்துகொண்டுவிட்டான். சகுந்தலை, தன்னைத் தனது மணாளன் அறிந்துகொண்டு ஏதாவது பேசுவாரோ என்று ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துக் கடைசியில் ஏமாற்றத்தையே அடைந்தாள். சிறிதுநேரத்திற்குப் பிறகு கௌதமி துஷ்யந்தனைப் பார்த்து "மகாராஜாவே! அடியேன் சமூகத்தில் தெரிவித்துக்கொள்ளவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அந்த விஷயம் இப்பொழுது தங்களுக்கு ஞாபகப்படுத்துவதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். சில நாட்களுக்குமுன் தாங்கள் கண்ணுவ முனிவரது ஆச்ரமத்திற்கு வந்து இதோ இங்கு நிற்கும் இந்த சகுந்தலை என்னும் வடிவழகியைக் காதலித்து மணம் செய்துகொண்டீர்கள். விவாகமான மறுதினமே ஆச்ரமத்தைவிட்டுச் சென்றுவிட்டீர்கள். கூடிய சீக்கிரம் சகுந்தலையை அரண்மனைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறிவிட்டு இங்கு வந்துவிட்டீர்கள். மறுபடியும் அதைப்பற்றித் தாங்கள் சிந்திக்கவே இல்லை; ஒருவாரமாயிற்று, இரண்டு வாரங்களாயிற்று. ஒரு மாதமாயிற்று, இரண்டு மாதங்களாயிற்று, ஒரு வருஷம், இரண்டு வருஷங்கள், கடைசியில் பன்னிரண்டு வருஷங்களும் கழிந்தன. தாங்கள் திரும்பிவரவே இல்லை. ஓர் விவாகமான பெண் புருஷன் வீட்டை விட்டு எவ்வளவு வருஷங்கள்தான் தாய்தகப்பன் வீட்டில் இருக்க முடியும்? அவ்வாறு ஒருவள் இருப்பாளானால் அவளைப்பற்றி உலகத்தார் என்ன நினைப்பார்கள்? "உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடமுடியுமா?" என்பது முதுமொழியல்லவா? விவாகம் செய்துகொண்டால் பெண்சாதியை உயிருள்ளவரை காப்பாற்றப் புருஷன் கடமைப்பட்டிருக்கிறான் என்பதைத் தங்களுக்குச் சொல்லவும் வேண்டுமா? சகல விஷயங்களையும் உணர்ந்த தங்களுக்கு நான் என்ன சொல்லப்போகிறேன்? அடியேன் மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்வதென்னவென்றால் எப்படியாவது பெரிய மனது வைத்து இதோ நிற்கும் இந்த சகுந்தலாவாகிய தங்களது மனைவியை ஏற்றுக்கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். பின் என்ன நான்கூறுவது?" என்றாள்.

இதைக் கேட்டு துஷ்யந்தன் மிகவும் ஆச்சரியப்பட்டு, "என்ன! என்ன!! இவளா என்

மனைவி? இவளையா நான் மணந்துகொண்டேன்? நீ சொல்வது மிகவும் ஆச்சரியமாகவிருக்கிறதே! என் மனம் என்னையே நம்பாமலிருக்கிறதே! இவளோ மரவுடை தரித்திருக்கிறாள்? ராஜகுமாரியைப்போலவே தோன்றவில்லை. பெண் சந்நியாசியாய் நிற்கும் இவளை என் மனைவி என்று கூற உனக்கு எப்படித்தான் மனந் துணிந்ததோ தெரியவில்லை!"

இந்த மொழிகளைக் கேட்கவே சகுந்தலையின் கோபமானது கட்டுக் கடங்காமற் போயிற்று. 'இவளா என் மனைவி' என்ற கேள்வியானது காதுக்குள் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றுவதுபோலிருந்தது. என்ன செய்வதென்று திகைத்தாள். அன்று காட்டில் தன்னை மணந்துகொள்ள எவ்வளவு மன்றாடினான் என்பதையும் அவன் கூறிய மொழிகளையும் ஒன்றன்பின் ஒன்றாக ஞாபகப்படுத்திக் கொண்டாள். இப்பொழுதிருக்கும் நிலைமையைப் பார்த்தால் தன்னை ஏற்றுக்கொள்ள எங்கு மறுத்துவிடுகிறானோ துஷ்யந்தன் என்றஞ்சினாள். மறுபடியும் கௌதமி, "மகாராஜாவே! தாங்கள் இவ்வாறு கூறிவிட்டால் நாங்கள் என்ன செய்வது? சகுந்தலையை உண்மையாகவே காதலித்து மணம் செய்து கொண்டீர்கள். இப்பொழுது எல்லாவற்றையும் மறந்துவிட்டீர்கள். அன்று கானகத்தில் நீர் செய்த வாக்குத்தத்தங்கள் என்னென்னவென்பதை சற்றே ஞாபகப்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறேன். 'என்னை விவாகம் செய்துகொண்டால் நீயே அரசியாகிவிடலாம்' என்றீர் சகுந்தலையிடம். இன்றோ அவளை ஏற்றுக்கொள்ளவே சஞ்சலப்படுகிறீர். இவள் காட்டில் வளர்ந்துவந்த பெண்தானே. இவளை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டால் என்ன என்று தாங்கள் நினைப்பீர்களாகில், சொன்ன சொல்லைக் காப்பாற்றத் தவறிய ஓர் குற்றத்திற்கு ஆளாவீர்கள். ஓர் பெரிய அரசரே சொன்ன சொல்லினின்றும் நழுவிவிட்டார் என்ற விஷயத்தைத் தங்களது பாமரக் குடிமக்கள் அறிந்தால் அவர்கள் தங்களைப்பற்றி என்ன நினைப்பார்கள்? இக்குற்றத்தைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டீர் என்றே நாங்கள் நம்புகிறோம்" என்றான். இவ்வாறு கூறவே துஷ்யந்தன் சற்று யோசனைசெய்து "என்ன கௌதமி! நீ இவ்வளவு சொல்லியும் இந்தப் பெண்ணை நான் காதலித்து விவாகம் செய்துகொண்டதாக நினைவே இல்லையே. இவளை நான் எவ்வாறு காதலித்திருக்கக் கூடும்? என் மனமே என்னை வஞ்சிக்குமா என்ன?" என்றான். இந்த விடையைக் கேட்டதும் சகுந்தலா தன்னுடைய கோபத்தை எல்லாம் அடக்கிக்கொண்டு, துஷ்யந்தனைப் பார்த்து, அன்பான மொழிகளில் "என் பிராணநாதா! நாள் என் தங்களைப் 'பிராணநாதா' என்று அழைத்தல் கூடாது? நான் தங்களது நிலைமையை அறியக்கூடாதவளாய் இருக்கிறேன். தாங்கள் இவ்வளவு சீக்கிரத்தில் என்னை ஒரு மிக்க மறந்துவிடுவீர்களென்றும் நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. என்னைத் தங்களுக்குத் தெரியாதா? என் பேசாமல் இருக்கிறீர்கள்? மறுமொழி ஒன்றும் இல்லையா?" துஷ்யந்தன் பதில் கூறாது இருந்ததைக்கண்டு சகுந்தலா மறுபடியும் கண்களில் நீர் வழிய "என் ஆருயிர்த்தலைவரே! என் அன்பைக் கொள்ளை கொண்டவரே! ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்? அன்று தாங்கள் என்னைப் பார்த்துக் கூறிய வார்த்தைகளை நன்றாக சிந்தித்துப்பாரும். கண்ணுவர் ஆச்ரமத்தில் இல்லாத சமயத்தில் தாங்கள் என்னிடம் கூறிய வாக்குறுதிகளை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்!"

நம் இருவருக்கும் விவாகம் நடந்தபிறகு நான் தங்களுடன் ராஜ்யத்திற்கு வருகிறேன்

என்று கேட்டதற்குத் தாங்கள் தந்த விடை என்ன என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டு பாருங்கள். என் அரிய காதலரே! நான் என்ன ஏதாவது தங்களை வஞ்சிக்கிறேனா அல்லது தாங்கள் கனவு காண்கிறீர்களா என்ன? ஏன் ஒன்றும் பதில் கூறாது வாளா இருக்கிறீர்கள்? இப்பன்னிரண்டு வருடங்களாய்ப் பிரதி தினமும் ஒவ்வொரு நிமிஷமும் தங்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டேயிருந்து கடைசியில் ஏமாற்றத்தையே அடைந்தேன். என்னுடைய ஆசை என்னும்படியான செல்வத்தைத் தாங்கள் பெருக்கச் செய்யவில்லை. எப்பொழுது நான் தங்களை மணந்துகொண்டேனோ அப்பொழுதே என்னுடைய உடல், பொருள், ஆவி ஆகிய இம்மூன்றையும் தங்களுக்கே அர்ப்பணம் செய்துவிட்டேன் என்பதைத் தாங்கள் நான் கூறித் தெரிந்துகொள்ளவேண்டுமா? என்னுடைய ஆச்ரமத்தில் அநேக தோழிகள் இருக்கிறார்கள்; தந்தை இருக்கிறார்; தந்தையின் சிஷ்யர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நான் விட்டுத் தங்களை நாடி வந்திருக்கிறேன். அவ்வாறு இருக்க என்னை ஏற்றுக் கொள்ள மறுத்து எனக்கு அவமானத்தை உண்டாக்க வேண்டுமென்பது தங்களது விருப்பமாயின் அது சரியல்ல என்றுதான் நான் கூறவேண்டும்.

துஷ்யந்தன் :—என்ன ஆச்சரியம்! எனக்கு யார் விரோதிகள்? என்னை அவமானம் செய்யவேண்டுமென்று இப்பெண்ணை எவரேனும் ஏவினார்களோ? ஒரு பாபமும் அறியாத என்னை இவள் இச்சபையில் சற்றும் பயமில்லாமல் 'பிராணநாதா' என்றழைப்பதற்கு எவ்வளவு துணிவு இருக்கவேண்டும்?

சகுந்தலை :—என் நாயகரே! அந்தோ! இன்னும் தாங்கள் ஏமாற்றுகிறீர்களோ? நம் விவாகத்தைக் கண்ணுவர் வந்தபிறகு வைத்துக்கொள்ளலாம் என நான் கூறியதற்குத் தாங்கள் "கண்ணுவர் வரவேண்டிய அவசியம் இல்லை. விவாகங்களில் எட்டு வகை உண்டாக்கும், அதில் அரசர்கள் காந்தர்வ விவாக முறையை அனுசரிக்கலாம்" என்று கூறி என்னை மணக்கவில்லையா? இப்பொழுதாவது ஞாபகத்திற்கு வருகிறதா?

துஷ்யந்தன் :—நானா அவ்வாறு கூறினேன்? எப்பொழுது? எங்கே? நீ கூறுவதன் கருத்தை உணர்ந்து பேசுகிறாயா? யோசித்துப் பார்.

சகுந்தலை :—பேஷ்! இதற்குமேல் ஒரு வார்த்தையும் இல்லை. தாங்கள் வேண்டுமென்றே தான் என்னைத் தெரியாது என்று கூறுகிறீர்களேயொழிய உண்மையாகத் தாங்கள் என்னைத் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள் என்ற முடிவிற்குத்தான் வரவேண்டியவளாக இருக்கிறேன். நான் இவ்வளவு அடையாளங்களும் சந்தர்ப்பங்களும் சொல்லியும் அவைகளை நீங்கள் மறுக்கவேண்டுமென்றே மறுக்கிறீர்கள். அந்தோ! ஈச்வரா!

துஷ்யந்தன் :—இல்லவே இல்லை. நான் உன் முகத்தைக்கூட ஏறெடுத்துப் பார்த்ததே கிடையாது. ஆண்களை வஞ்சிக்க இப்பேர்க்கொத்த பெண்கள், அப்பப்பா!

சகுந்தலை :—ஆ! ஆ! என்ன கடுமையான பதில்! கடவுள் என்பவர் இருப்பது மெய்யா அல்லது பொய்யா? நான் கண்ணுவ முனிவருடைய உத்தம ஆச்ரமத்தில் வளர்ந்த பெண். என் தகப்பனார் எனக்கு எவ்வளவோ நீதிகளைப் போதித்து வந்திருக்கிறார்; தெய்வ பக்தியின் விசேஷத்தை எனக்கு எடுத்துரைத்திருக்கிறார்; பரோபகாரத்தின் பெருமையையும், உண்மையின் உயர்வையும், தேசபக்தி, மதபக்தி, பதிபக்தி முதலியவைகளின் மேன்மைகளையும் எடுத்து

வெகு தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அப்பேர்க்கொத்த முனிவருடைய பெண்ணாகிய நானா தங்களைப் பொய் சொல்லி ஏமாற்றி வஞ்சிக்கும்படியானவள்? என்னே தங்களது உள்ளத்தின் இப்போக்கு! தங்களை மனதாலும் வாயாலும் கரங்களாலும் பூஜை செய்துகொண்டிருக்கும்படியான என்னை, தங்களுக்கு எந்தவிதமான கெடுதலையும் மனதில்கூட எண்ணாத என்னை, கணவனே தெய்வம், கணவனைவிட உயர்ந்த தெய்வம் பெண்களுக்குக் கிடையாது என்று நினைத்துவரும் என்னை, சுத்த மனதையும் கற்பையும் உடைய என்னை ஏற்றுக்கொள்ள—நியாயமாக ஏற்றுக்கொள்ள—மறுப்பீர்களாயின் அந்தப் பழியானது தங்களை விடாது என்பதுமட்டும் ஞாபகத்திலிருக்கட்டும். நான் எவ்வளவோ சாந்தமாக நல்ல வார்த்தைகளையாடி ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேன்; தாங்கள் அதை லட்சியம் செய்யவில்லை. என்னுடைய பாபமானது தங்களை விட்டுப் போகாது என்பதை உறுதியாக நினைத்துக்கொள்ளுங்கள் என்னை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில்.

துஷ்யந்தன் இவ்வளவிற்கும் தன்னை அங்கீகரிக்காததைக் கண்டு சகுந்தலைக்குக் கோபமும் துக்கமும் அதிகரித்துவிட்டது. தன்னுடைய உண்மையான நிலைமையை மறந்தாள். துக்கம் தாளமாட்டாதவளாய் "என்னே உங்களது மனம்! கல்லேனும் இவ்வளவு சொன்னதற்கு இளகியிருக்கும்போல் தோன்றுகிறதே. நான் இவ்வளவு சொல்லியும் தங்களது கடின மனது சற்றேனும் இளகவில்லையே! அன்பான வார்த்தைகள் ஆடி என்னை அங்கீகரிக்கும்படி வேண்டி இவ்வளவு நேரம் தங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். என்னுடைய முயற்சி பயனற்றுப்போயிற்று. நான் தங்களை ஓர் பெரிய அரச குலத்திற் பிறந்தவர் என்றும், மனுநீதி தவறாத மன்னன் என்றும், உயர்ந்த குணங்கள் வாய்க்கப்பெற்ற அரசர் என்றும் எண்ணியது பிசகு. பார்ப்பதற்கு உயர்குடியிற் பிறந்தவராகத் தோன்றுகிறீர்; ஆனால் அவ்வாறு பிறந்தவராகத் தங்கள் நடவடிக்கைகள் காட்டவில்லை. உத்தம மன்னனாகவும், நல்லொழுக்கமுடையவராகவும் பார்வைக்குத் தோன்றுகிறீர்கள்; ஆனால் உண்மையில் அவ்வுத்தம குணங்களுக்கும் உமக்கு வெகுதூரம் என்று தோன்றுகிறது. சற்று ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் தாங்கள் இழிகுணங்களுக்கே நாயகமாய் விளங்குகிறீர்கள் என்ற ஓர் தீர்மானமான முடிவிற்குத்தான் நான் வந்து தீரவேண்டும். ஆ! ஆ! என்னை அன்று காட்டில் மணம் புரிந்துகொள்வதற்குமுன் என்னென்ன வார்த்தைகள் ஆடினீர்! எவ்வளவு ஆசை வார்த்தைகளாடி என் மனதை வஞ்சித்தீர்! இப்பொழுது ஒன்றையும் இல்லையென்கிறீர். என்னை மாயக்காரி என்றும், ஏமாற்றுபவள் என்றும் பலவாறாகத் தூற்றுகிறீர். உண்மையாக என்னை விவாகம் செய்துகொண்டு இல்லை என்று ஓர் பெரிய பொய்யை—மனிதன் சற்றும் நினைக்கவும் முடியாத பொய்யை—தாங்களே கூறியிருக்கிறீர். இப்பொழுது அப்பொய்க் குற்றத்தை ஒரு பாபமும் அறியாத, வஞ்சனை குணம் சற்றும் இல்லாத என்மீது சுமத்த உங்களது மனம் சற்றும் பின்வாங்கவில்லை. ஓர் அரசன் அற்ப இன்பத்திற்காக அன்பான வார்த்தைகளாடி ஓர் பெண்ணின் மனதை வஞ்சித்து அவ்வெண்ணம் நிறைவேறியபிறகு அப்பெண்ணை அப்புறப்படுத்தவேண்டும் என்று நினைப்பானாயின் அவனை எதற்குச் சமம் என்று கூறுவது? கட்டிக்கொண்ட பெண்சாதியிடமே இவ்வளவு வஞ்சகமாக நடந்துகொண்டிருந்தால் மற்றப்படி சாமானிய ஜனங்களிடம் எவ்

வாறு நடந்துகொள்ளமாட்டீர்? மேற்படி ஜனங்கள் உங்களை அரசனாயிற்றே என்ற ஓர் காரணத்தால்தான் உங்களது ஹிம்சைகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு வாளாவிருக்கிறார்கள்போலும்! அந்தோ! இவ்வுலக வழக்கத்தைத்தான் என்னென்று கூறுவது! தனவந்தர்கள் உண்மையிலேயே குற்றவாளிகளாய் இருந்தாலும் அவர்களது குற்றங்கள் வெளிவருவதில்லை. அவ்வாறு வெளிவந்தாலும் ஜனங்கள் அவைகளைப் பல காரணங்களால் நம்புவதில்லை. நிரபராதியாய் இருக்கும் ஏழை ஒருவன்மீது ஒருவர் குற்றம் சுமத்தினால் அதை ஜனங்கள் ஆற அமர யோசிக்காது உடனே நம்பிவிடுகிறார்கள். இது மிகவும் வெறுக்கத்தக்கது! ஆ அரசே! நான் என்ன கூறுவது? என்னுடைய தந்தை என்னை வழி அனுப்பிய சமயம் கூறிய புத்திமதிகள்—புருஷனிடம் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்று கூறிய புத்திமதிகள்—என்னை முன்நின்று கடுஞ்சொற்களை உபயோகிக்காது இருக்குமாறு தடைசெய்கின்றனவே. என் செய்வேன்! நானோ அனாதை! ஆதரவளிப்பார் ஒருவரும் இல்லை. இவ்வளவு பரிதபித்துக்கொண்டிருக்கும்படியான என்னை இவ்வாறு பரீட்சிப்பது நியாயமோ? தருமமோ? ஒவ்வொரு மனிதனுக்கும் மனச்சாட்சி என்பதொன்றுண்டு திருடனாயினுங்கூட மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்துகொள்ள விரும்பான். தங்களுக்கும் மனச்சாட்சி என்பது ஒன்று உண்டு என்றே நினைக்கிறேன். தாங்கள் வாயால் எந்தக் காரணத்தைக்கொண்டு வெறுத்திடினும் தங்களது மனச்சாட்சியானது அவ்வாறு வெறுக்க இடங்கொடுக்கிறதா என்பதை சோதித்துப் பாரும். மனதை வஞ்சிப்பவன் மனிதன் ஆகான்; அவன் காடுகளில் திரியும்படியான விலங்குகளைவிடத் தாழ்ந்தவனாகவே கருதப்படுவான். எனக்கும் தங்களுக்கும் மற்றும் இந்தப் பூலோகத்திலுள்ள மக்கள் யாவருக்கும் உயர்ந்தவராயும் உலகத்தையே சிருஷ்டித்தவருமாகிய கடவுள் ஒருவர் உண்டல்லவா? அவர் சர்வவியாபி; அவரன்றி ஓர் அணுவும் அசைவது இல்லையே! தாங்கள் என்னை ஏமாற்றலாம்; மற்றும் தங்களுடைய குடிகளை ஏமாற்றலாம்; ஆனால் அக்கருணாநிதியைத் தாங்கள் ஏமாற்ற முடியுமோ? எந்த அரசராவது அவரை ஏமாற்றியதாக வீரியம் பேசியதுண்டா? இனிமேலாவது பேச முடியுமோ. ஆகையால் நம்முடைய விவாகம் கடவுளுக்கு அவசியம் தெரிந்திருக்குமல்லவா? அக்கடவுளை நீர் ஏமாற்றமுடியுமா? ஆகையால் என்னுடைய மனதைப் பரிசோதிக்காமல் உடனே ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேன்" என்று கூறி பதிலை எதிர்பார்த்த வண்ணமாக இருந்தாள். பதில் ஒன்றும் வராததுகண்டு சகுந்தலை மறுபடியும் "ஆ! ஆ! தங்களுடைய மனதைக் கல்லுக்குச் சமமென்று அப்பொழுதே ஒப்பிட்டேன். இப்பொழுது எதற்கு ஒப்பிடுவது என்று தெரியவில்லையே? நான் பேசுவது தங்களுக்குக் கேட்கவில்லையோ அல்லது கேட்காததுபோல் பாசாங்கு செய்கிறீரோ? நானே வலிய ஆச்ரமத்தினின்று வந்தேனென்று என்னை ஏற்றுக்கொள்ள ஒருவேளை பின்வாங்குகிறீரா என்ன? அல்லது மனைவியைப்பற்றித் தங்களுக்கு ஒன்றும் தெரியாதா? புருஷனுடைய கஷ்டகாலத்திலும் சந்தோஷ காலத்திலும் புருஷனுடைய கஷ்டத்தையும் சந்தோஷத்தையும் அவன் மனைவியும் அனுபவிக்கிறாள் என்பது தங்களுக்குத் தெரியாதா? சம்சாரம் என்னும் கப்பலானது மோட்சம் என்னும் சாம்ராஜ்யத்தையடைய மனைவி என்னும் மாலுமி அவசியம் அல்ல என்பதை எவரேனும் கூற முடியுமா? மாலுமி இல்லாத கப்பலானது கரை சேர முடியுமா? முடியாதல்லவா? அதுபோலத் தங்களுக்கு மோட்சம் கிடைக்கவேண்டும் என்றாலும் அதற்

கும் மனைவிதான் அவசியம் வேண்டும். மனைவியின் துணையில்லாமல் எந்த அரசனாவது அரிய பேரின்ப வீட்டை அடைந்ததாகத் தாங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இகபர சாதனங்களுக்கு உற்ற துணையாயிருப்பவள் மனைவி என்பது தங்களுக்குத் தெரியாதா? அவ்வாறு தெரியாது என்று சொல்வீராகில் உடனே தெரிந்துகொள்ளுங்கள். போகட்டும், இவ்வளவு நேரம் என்னைப்பற்றியே பேசிக்கொண்டேன். அது உமக்கு இஷ்டமில்லையென்றாலும் இதோ மண்ணிலும் புழுதியிலும் விழுந்து தம்மைப் பார்க்கவேண்டுமென்று விம்மி விம்மி அழுதுகொண்டிருக்கும் தங்கள் குமாரனையாவது ஏற்றுக்கொள்ளவேண்டாமா? அவன் படும் அவஸ்தையைக் கண்டும்கூட தங்கள் மனம் இளகவில்லையோ? ஆ! ஆ! புத்திரபாக்கியம் யாவருக்குக் கிடைக்கும்? 'புத்' என்னும் நரகத்தினின்று தந்தையைக் காப்பாற்றுபவன் புத்திரன் என்றல்லவோ நமது வேத சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஆகையால் மகாராஜாவே! அவன் நிமித்தமாவது என்னை ஏற்றுக்கொள்ளுங்கள். நான் பிறந்த வேளையை என்னென்று சொல்வேன! என்னை என் தாயார் பெற்றும் வளர்க்கவில்லை. விசுவாமித்திர முனிவரோ எனது உண்மையான தந்தையாவர். அவரும் என்னை விட்டுவிட்டார். தம்முடைய தபசிற்கு ஹானி ஏற்படும் என்று பயந்து என்னை வளர்த்த கண்ணுவ முனிவரும் 'நீ கணவன் வீட்டில்தான் இருக்கவேண்டும்' என்று சொல்லி இங்கே அனுப்பிவிட்டார். இங்கேயோ, தாங்கள் என்னை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறீர்கள். என்னுடைய தௌர்ப்பாக்கிய நிலைமையை என்னென்று உரைப்பேன்! தாங்கள் எனது வேண்டுகோளை அங்கீகரிக்க மறுப்பின் நான் திரும்பி என் தந்தையாகிய கண்ணுவ முனிவரது ஆச்ரமத்திற்குத்தான் போவேன். அவர் உயிரோடு இருக்குமளவும் என்னை ஆதரிப்பார் என்பது நிச்சயம். நான் இங்கு வருமுன் எண்ணிய எண்ணங்கள் எல்லாம் பகற்கனவு கண்டதற்கு ஒப்பாகும் போலல்லவோ தோன்றுகிறது. ஆ! கடவுளே! கடவுளே!" என்று கூறிக்கொண்டே ஒருபுறமாகச் சாய்ந்தாள்.

இதைப்பார்த்து துஷ்யந்தன் "ஆ என்னே உன்னுடைய நீலித்தனம்! நீ உத்தம குலத்தில் உதித்தவளாய் இருப்பின் நான் உன்னை ஏற்றுக்கொள்ளாமலிருந்திருப்பேனோ? விச்வாமித்திரர் பெரிய ரிஷி. அவர் கேவலம் ஓர் வேசியாகிய மேனகைமீது காதல் வைத்தார். அதன்காரணமாக நீ பிறந்தாய். ஆகையால் உன்னை வேசிப்பெண் என்று நான் ஏன் அழைக்கலாகாது? மற்ற வேசிப்பெண்கள் எவ்வாறு எனது அரண்மனையிலிருக்கிறார்களோ அவ்வாறு நீயும் இரு. நான் வேண்டாம் என்று கூறுவதில்லை. அதைவிட்டு என்னுடைய மனைவி என்று கூறிக்கொள்ளும் உனது துணிவை என்னென்று கூறுவேன்!" என்றான். இதைக் கேட்டதும் சகுந்தலா "ஆ! ஆ! என்ன சொன்னீர்! என்ன சொன்னீர்! நான் யார்? என்னுடைய தாயாரை என்னென்று கூறினீர்? என்னே உம்முடைய அக்கிரமம்! வேசிப்பெண் என்று என்னைக் கூறவும் தாங்கள் துணிந்துவிட்டீர்களா? அந்தோ! கடவுளே! நான் இனி என் செய்வேன்! காதில் கேட்கக்கூடாத வார்த்தைகளையெல்லாம் கேட்கும்படியாக என் விதி ஆய்விட்டதே! ஆ! கருணாநிதியே! ஆ! கமலக்கண்ணா! என்னுடைய மானத்தைக் காப்பாற்றக்கூடாதா? அநாதரட்சகா! என் தாயார் வேசியா? அவள் வேசியல்ல என்பதை நான் எவ்வாறு ரூபிப்பேன்? அரசே! தாங்கள் தங்களது நிலைமையைச் சிறிதேனும் உணர்ந்துகொள்ளாது என் தாயாகிய மேனகையைக் குறைகூற வந்த

உமது புத்தியை என்னென்று கூறுவது? என் தாய் தெய்வப்பெண்; இப்பூலோகத்தில் வாழ்பவள் அல்ல; வானுலகில் வாழ்பவள்; மாதர்கள் எல்லோரைக்காட்டிலும் சிறந்தவள் என்று பேர்பெற்றவள். என் தந்தையோ பிரம்மரிஷிப் பட்டம் பெற்றவர்; கருணைக்கு இருப்பிடமானவர்; தவத்திற்கு இருப்பிடமானவர். ஆகையால் நான் பிறப்பில் உம்மைக் காட்டிலும் உயர்ந்தவளே. பிறருடைய குற்றத்தைக் கண்டுபிடிக்க உங்களுக்குச் சீக்கிரம் தெரிகிறது. உம்முடைய குற்றத்தை நீர் உணரவில்லையே" என்று சொன்னாள்.

சகுந்தலையின் கூடவந்த சீடர்களும் இனி இங்கே இருப்பது தகுதியல்ல என்று நினைத்து அவளை அங்கேயே விட்டுவிட்டு ஆச்ரமத்திற்குச் சென்றுவிட்டார்கள். சகுந்தலை அவர்களது பிரிவாற்றாமையால் மிகவும் துக்கித்தாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு "ஓ! துஷ்யந்தனே! இதோ உன் முன்னால் நிற்கும் சகுந்தலை உன் மனைவிதான்; இவன் உன் மகன்; ஏற்றுக்கொள்" என்ற ஓர் அசரீரி வாக்கானது உண்டாயிற்று. சபையில் இருந்தவர்கள் எல்லாம் இதைக் கேட்டு ஆச்சரியமடைந்தார்கள். பிறகு சபையோரைப் பார்த்து துஷ்யந்தன் "பெரியோர்களே! நான் இவ்வளவு நேரம் சகுந்தலையை ஏற்றுக்கொள்ள மறுத்ததற்குக் காரணம் உண்டு. இவள் என் மனைவி என்றும் சிறுவன் என் மைந்தன் என்றும் எனக்குத் தெரியும். ஆனால் திடீரென்று நான் இவளை ஒப்புக்கொண்டுவிட்டால் நீங்களும் மற்றுமுள்ள ஜனங்களும் நம்பமாட்டீர்கள் என்ற ஓர் காரணத்தால்தான் சற்று பின்வாங்கினேன். அந்த சந்தேகத்தை இந்த அசரீரி வாக்கானது நீக்கிவிட்டபடியால் இனி நான் சற்றும் தாமதமின்றி சகுந்தலையையும் என் மகனையும் ஏற்றுக்கொள்ளுகிறேன்" என்று சொல்லி அழகே வடிவாகக் கொண்டு நிற்கும் தன் காதலியை நோக்கினான்.

இச்சொற்களைக் கேட்கவே சகுந்தலைக்கு எல்லாத் துயரங்களும் பறந்தோடிவிட்டன. குருடன் கண் பெற்றால் எவ்வளவு சந்தோஷத்தை அடைவானோ அவ்வளவு சந்தோஷத்தை அடைந்தாள். தரித்திரனுக்கு ஏராளமான செல்வம் கிடைத்தால் அவன் மனமானது எவ்வாறு குளிர்ந்திருக்குமோ அவ்வாறு சகுந்தலையின் மனமானது குளிர்ந்திருந்தது. உடனே துஷ்யந்தன் சகுந்தலையின் இரண்டு கரங்களையும் பற்றிக்கொண்டு "என் ஆருயிர்த் தலைவி! உன்னுடைய மனோவியாகூலங்கள் எல்லாம் இந்த நிமிஷமே ஒழிந்தன. என் அன்பைக் கொள்ளை கொண்டவளே! நான் உன்னை ஏற்றுக்கொள்ளச் சற்று நிதானித்ததற்கு என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நான் உன்னை அன்று காட்டில் காதலித்து, உண்மையாகக் காதலித்துக் காந்தர்வ விவாகம் செய்துகொண்டேன் என்பது வாஸ்தவமே. அதை நான் மறுக்கவில்லை அந்த விவாகமானது நம்மிருவருக்கும் ஆச்ரமத்திலுள்ளவர்களுக்கும்தான் தெரிந்திருந்ததாலும், இங்கு அரண்மனையில் ஒருவருக்கும் தெரியாதிருந்ததாலும்தான் நான் சற்று யோசித்தேன். உன்னைத் திடீரென்று ஏற்றுக்கொண்டால் அரண்மனையிலுள்ளவர்களும் மற்றும் உள்ள ஜனங்களும் என்மீது ஓர்விதமாகக் கெட்ட அபிப்பிராயம் கொண்டுவிடுவார்களே என்ற ஓர் அச்சத்தினால்தான் நான் ஒன்றும் பேசாது உன்னுடைய மொழிகளைக் கேட்டுக்கொண்டு இருந்தேன். 'உண்மை எப்படிப் புலப்படப்போகிறது, சகுந்தலை துஷ்யந்தன் மனைவி என்று ஜனங்களும் அரண்மனையிலுள்ளவர்களும் எப்படி அறிந்துகொள்ளப் போகிறார்கள், ஈச்வரா!' என்று கடவுளை வேண்டிக்கொண்டிருந்தேன். நல்லவேளையாகக் கடவுள் நம்பட்சம் இருந்ததால் அந்த உண்மை

யைத் தெய்வாதீனமாக இந்த அசரீரியானது வெளிப்படுத்திவிட்டது. என் காதற் களஞ்சியமே! என் பிழைகளைப் பொறுத்தருள்வாயாக. உன்னை வஞ்சிக்கவேண்டுமென்ற எண்ணத்தை நான் சற்றும் நினைத்தவனன்று. இனி உன்னுடைய கஷ்டங்களெல்லாம் ஒழிந்தன. இனி நீ பட்டமகிஷியானாய். ஒன்றும் கவலைப்படாதே" என்று சொல்லிக்கொண்டே முத்தம் கொடுத்தான்.

எதிர்பாராத சந்தோஷமும் சௌக்கியமும் சகுந்தலையைத் தேடிவந்தன. தனது துயரம் இவ்வாறு சந்தோஷமாக முடியும் என்று அவள் சற்றேனும் நினைக்கவில்லை. தான் சிறிதும் யோசனையின்றித் தன் கணவனை அவ்வாறு கடுஞ்சொற்கள் கூறி நிந்தித்தோமே என்று நினைத்து நினைத்து வருந்தினள்.

உடனே சபையில் இருந்தவர்கள் எல்லாரும் சகுந்தலையையும் துஷ்யந்தனையும் வாழ்த்தினார்கள். சகுந்தலை தனது தந்தை சொன்ன நீதிகளைச் சற்றும் மறவாது அதன்படியே அரண்மனையில் நடந்து வந்தாள். தன் அரிய காதலருக்கு என்றும் தெவிட்டாத இன்பத்தையே தந்து எல்லோருக்கும் பரோபகாரியாய், கற்பிற்கு நாயகமாய், ஸ்திரீகளில் உயர்ந்தவளாய், பெரும் புகழ் பெற்றவளாய் வாழ்ந்துவந்தாள்.

தலையணி மந்திரமும் அதன் விமோசனமும்.

(ஸ்ரீமான் சரவணாநந்தன்.)

சகோதர! சகோதரிகளே!

நான் பலவிடங்களிலும் சஞ்சாரஞ் செய்து கொண்டு வருங்காலத்து ஒரு நகரில் சிலகாலம் தங்க வேண்டியவனாயினேன். அந்நகரில் வசித்துவருங்காலத்து பலர் சிநேகிதர்களாயினர். அச்சிநேகிதரிற் சிலர் பெண்மணிகளே. இப்பெண்கள் தங்கள் தங்கள் ஜீவிய இயலின் சீர்திருத்தங்களைக் கூறினார்கள். அவர்கள் கூறியதிலொரு பகுதியாவது:

'சகோதரரே! நாங்கள் இதுகாறுங் கூறிய கிரியைகளினின்றும் எங்களைச் சிந்தாமணியின் போதனை விலக்கிவிட்டதென்று கூற நீர் ஆச்சரியப்படுகின்றீரோ. எங்கள் சகோதரிகளிற் சிலரால் உயிர்பெற்று வாழ்ந்த தலையணி மந்திரமே சகோதரி வி. பாலம்மாள் அவர்களால் இயங்கும் சிந்தாமணியின் போதனை நசித்துவிடுமாயின் இச்சிந்தாமணியின் ஆற்றலின் உயர்வை நீர் ஒப்பாதிருத்தலேன்?'

'சகோதரிகளே! நீங்கள்கூறியதில் தலையணி மந்திரமும் அதன் அழிவுமென்றீர்களே! அச்சத்தமெனக்கு வியப்பைத் தருகின்றது. அதனை எனக்கு விவரித்து உரைக்கும்படி கேட்கின்றேன்.'

'சகோதரரே! தலையணி மந்திரமாவது பெண்கள் சயனித்தபின் தன் கணவனிடத்து அவரின் தந்தை, தாயார் சகோதரர்களால் தானடையும் கஷ்டத்தை முறையிடுதலேயாம்.'

'சகோதரிகளே! அப்படி முறையிடுவதனால் வரும் நஷ்டமென்ன?'

'சகோதரரே! ஜனங்களிடத்து உண்டாகும் இச்சையைத் தவிர்ப்பதனாலேதான் குரோதம் உண்டாகின்றது. அக்குரோதமே பாபத்தையடையச் செய்கின்றதாம். அதனால் புருடரிடத்து எழும் உணர்ச்சிக்கு விரோதமாயும் அவர்களின் உறவினர்மேற் பகை மூட்டியும் தன் மனப்போக்கின்படி அவர்களை வசப்படுத்தவேண்டி அம்மந்திரத்தை உச்சரிக்கின்றார்கள். அம்மந்திரத்தினாலே அவர்களின் வாழ்க்கை நிலைகுலைந்துவிடுகின்றது. அப்படி அம்மந்திரத்தை உச்சரிக்கும் பெண்மணிகளிற் சிலர் சிந்தாமணியை வாசிப்பதனாலும் அதன் சாரத்தைப் பலரோடும் விசாரஞ் செய்வதனாலும் அவ்விசாரத்தின்வழியே தாங்கள் நடப்பதனாலும் தங்களிடத்திலுள்ள அம்மந்திரங்கள் நாளடைவிலே தேய்ந்துபோய்விடுகின்றன. அதுபற்றியே தலையணி மந்திரத்திற்கு விமோசனம் சிந்தாமணியென நாம் கூறத் துணிந்தோம்.'

'சகோதரிகளே! சூரியன் தன் கிரணங்களை யொடுக்குகின்றான். ஆதலால் நான் சென்று வருகின்றேன்' என விடைபெற்றேன்.

சுபம்.

குழந்தைகளின் மித்திரன்.

பாலமித்ர மாத்திரை.

இதைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், வியாதிகளை வேருடன் களைந்து தேக புஷ்டியையும், பலத்தையும், தேக காந்தியையும் கொடுத்து எப்போதும் தேஜஸுடனும், புன் சிரிப்புடனும் இருக்கும்படியாகச் செய்கிறதோடு மனோவியாகூலத்தையும், அழுத முகத்தையும் அகற்றுகிறது.

300-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ. 1—0—0

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

26 பிராட்வே, மதராஸ்.

கேஸரியின்

லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி, கேசரியின் 'லோத்ரா'வை உபயோகித்த பிறகு அத்தியாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

புதிய ஸங்கீத புத்தகம்!

பிரசித்திபெற்ற நூலாசிரியர்,
வித்வான் கெ. வி. ஸ்ரீனிவாச அய்யங்கார் இயற்றியது.

ஸங்கீத சிந்தாமணி

விலை ரூபா 3—0—0.

இது சங்கீத வித்யார்த்திகட்கும், உபாத்தியாயர்கட்கும் இன்றியமையாத ஓர் அரிய புத்தகம். இதுவரையிலும் வெளிவராத தியாகராஜ கீர்த்தனைகள், இன்னும் அநேக பிரசித்திபெற்ற வித்வான்களின் நூதன கீர்த்தனைகள் முதலியவைகளை ஸ்வரதாளங்களுடனும் ராக லக்ஷணங்களுடனும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

குறிப்பு :—நவம்பர் மாதம் 30-ஆம் தேதிக்குள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டு ஆர்டர் செய்பவர்கட்கு தபாற் செலவு இனம்.

முழு விவரத்திற்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

எம். எஸ். ராமுலு கம்பெனி,
புத்தக வியாபாரிகள், ராயபுரம், மதராஸ்.

ஸ்ரீமான் டாக்டர் கே. முத்துகுமாரு அவர்கள் (J. P.) பினங்கிலிருந்து 10—3—'27ல் எழுதுகிறார் :—

பிரியமுள்ள சகோதரி பாலம்மாளுக்கு,

சென்ற மூன்று வருடங்களாகத் தாங்கள் நடாத்திவரும் "சிந்தாமணி" என்னும் மாதச் சஞ்சிகையை வாசித்து சந்தோஷமடைந்தேன். தமிழ்ப் பெண்களின் தாழ்ந்த நிலையையும், கல்வியின்மையையும், தேசாபிமானக் குறைவையும் நன்கறிந்த தாங்கள் இத்தகைய பத்திரிகையை நடத்த முன்வந்தது தமிழ் நாட்டின் நற்காலமேயாகும்.

சென்ற பலவருடங்களாகத் தாங்கள்செய்து வருகின்ற தேசத்தொண்டிற்கும் சமூக ஊழியத்திற்கும் இப்படிக்கான ஓர் அரிய சாதனம் இன்றியமையாததென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

சிந்தாமணியின் பக்கங்களிலுள்ள ஒவ்வோர் விஷயமும், பிரதானமாகத் தமிழ்ப் பெண்கட்கும், பொதுவாகத் தமிழ் மக்கட்கும் நல்லறிவையும், நன்மையையும், சுயமதிப்பையும், தேசியப்பற்றையும் உண்டாக்கக் கூடியதென்பது எனது துணிபு.

மேலும் சமையல் சாஸ்திரம், குடும்ப சாஸ்திரம், சிசுபரிபாலனம் முதலிய அங்கங்களை "சிந்தாமணி" ஏற்றுவந்தால் முன்னிலும் அதிக பலனைத் தமிழ் மக்கட்கு அளிக்குமென்பதிற் சந்தேகமில்லை.

இவ்வரிய தொண்டைச் செய்துவரும் தாங்கள் இம்மலேயா நாட்டிற்கு வந்து எங்களையும், எங்கள் பெண்மணிகளையும் கௌரவம் செய்வது நாங்கள் செய்துகொண்ட பாக்கியந்தான்.

அன்புள்ள சகோதரியே! உம்மையும் உமது அருமைச் "சிந்தாமணி"யையும் மலாய் நாட்டுத் தமிழ் மக்களாகிய நாங்கள் அபிமானித்து ஒவ்வொருவரும் சந்தாதாரராகச் சேர்ந்து உங்கள் உயரிய நோக்கத்தையும், தேசத்தொண்டையும் அபிவிருத்தி செய்ய முன்னணியில் நின்று வேலைசெய்யக் கடமைப்பட்டுள்ளோம். சர்வ வல்லமையுள்ள கடவுள் தங்களுக்கு நீடிய ஆயுளையும் நோயற்ற வாழ்வையும் கொடுத்துத் தாங்கள் செய்துவரும் தொண்டை மேன்மேலும் விருத்தி செய்து ஆசீர்வதிப்பாராக.

ஸ்ரீராமஜயம்.

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர். சகோதரி வி. பாலம்மாள்.

மலர் IV.] விபவ—வைகாசி. [இதழ் 10.

1928 வருஷம் ஏப்ரல் மாதம் 17 தேதி மாலை நகரத்தாரின் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவிலில் கூடிய கூட்டத்தில் சைகோன் வாசிகளாகிய இந்தியப் பெண்மக்கள் சிந்தாமணி ஆசிரியருக்களித்த

நல்வரவு பத்திரம்.

சென்னை சிந்தாமணி பத்திராதிபதியும் இச்சபா நாயகியுமாய் விளங்கும் ஸ்ரீமதி பண்டிதை பாலம்மாள் அவர்கட்கு சைகோன் வாசிகளாகிய இந்தியப் பெண்மக்களின் பெயரால் நல்வரவு கூறி உபசரிக்கும் பாக்கியம் பெற்றேன்.

ஸ்திரீரத்னமாகிய தங்களின் வருகையானது பல்லாயிரம் மைல்களுக்கப்பால் ஜலப்பிரதேசமாகிய இந்நகரின்கண்ணுள்ள இந்தியப் பெண்மக்களின் உள்ளத்தில் ஓர் நூதன எழுச்சியை உண்டாக்கியதென்பதுண்மை.

தேச மாற்றத்தால் இதுகாறும் எம்முள் புதைந்து மறைந்து கிடந்த தேசாபிமானம் உயிர்த்துத் துளிர்க்க எம் தாய் நாட்டின்கண் அஞ்ஞான அந்தகாரத்தில் மூழ்கி ஐதிகமென்னும் அறியாமைப் பேய் பிடித்தாட்டும் கோடிக்கணக்கான பேதைப் பெண்களின் மத்தியில் கல்வி, அறிவு, வீரம் வாய்ந்து பரோபகார சிந்தை மேற்கொண்டு நமது பெண்மக்களின் முன்னேற்றத்தைக் கோரி, தங்களின் அரிய உபந்நியாசங்களால் சீர்திருத்த முன்வந்துள்ள வீரச் சகோதரி

யாலிய தங்களை வாயார வாழ்த்தி, வந்தனோபசாரம் செய்யவேண்டுமென்னுமவா எம்முன் தூண்டியது.

மாதுமணியே! ஜனசமூக சீர்திருத்தத்திற்குப் பெண்மக்களே காரணராகையால் இச் சைகோன் நகர்* இந்திய சகோதரிகளின் மத்தியில் அகந்தை அறியாமையால் ஏற்பட்டுள்ள அநேக மூடக் கொள்கைகளையும் அநாகரிகப் பழக்க வழக்கங்களையும் உமதரிய உபந்நியாசத் திறமையால் எடுத்துக் காட்டி விளக்கி, உமது வருகையால் இந்நகர் வாசிகளுக்கு நன்மை பயக்குவிரென நம்புகிறோம்.

சைகோன்,
17—4—1928.

இங்ஙனம்: சைகோன் இந்தியப் பெண்மணிகளுக்காக
மாதாம் ரிஷிலியா,
(Mm. A. RICHELIEU,) Saigon.

நூர்ஜஹான் அல்லது பரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)

(547-வது பக்கத் தொடர்ச்சி.)

முப்பத்தெட்டாவது அத்தியாயம்.

தன் பர்த்தா பாதுஷாவின் அரண்மனைக்குச் சென்றிருப்பதால் இன்னுமென்ன புதிய சங்கடங்கள் சம்பவிக்கின்றனவோ என்ற சிந்தையுடன் மேஹர் கன்னத்திற் கரத்தை வைத்துப் பர்த்தாவின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தனள். அவளது மனதில் தர்க்கவிதர்க்கங்கள் ஒன்றின்பின்னொன்றாக உற்பவித்துக்கொண்டேயிருந்தன. அச்சமயம் இரத்தத்தால் நனைந்த வஸ்திரங்களுடன் தன்னெதிரில் ஓர் புருஷனைக் காணவே, மின்னலைப்போல் திடீரென எழுந்திருந்து, பீதியால் நாலாபக்கங்களிலும் உற்று நோக்கினள். வஸ்திரங்கள் இரத்தத்தால் நனைந்திருப்பதால் தன்னை யாரென அறிந்துகொள்ளவில்லையெனக் கண்ட அலிகுலிபெக் 'மேஹர்'! என்ற மாத்திரத்தில் அவளது பயம் விட்டொழிந்தது. ஆச்சரிய மிகுதியால் மேஹர் "இஃதென்ன? பிராணேச்வரா! உமது வஸ்திரங்கள் இரத்தத்தால் நனைந்திருக்குங் காரணம் யாது? சங்கதியைச் சீக்கிரம் சொல்லும்" என்றனள்.

அலிகுலிபெக் :—கண்மணி! விசேஷம் ஒன்றுமில்லை. மதங்கொண்ட ஓர் யானை என்னைப் பின்தொடர்ந்து வரக்கண்டு, அதன் துதிக்கையை என் வாளால் துண்டிக்கவே அந்த இரத்தத்தால் என் வஸ்திரங்கள் நனைந்தன.

மேஹர் :—ஈச்வரன் இன்று அபாரமான கிருபையை நம்மேற் காட்டியுள்ளார். கடவுள் உமக்கு ஜீவதானஞ் செய்துள்ளதால் இன்று ஆயிரம் பக்கீர்களுக்கு அன்னதானஞ் செய்யப்போகின்றேன்.

அலிகுலிபெக்:—எதற்காக? நான் இறப்பதால் உனக்கென்ன வருத்தம்? என்னைவிடச் சிலாக்கியமான வேறொரு புருஷனிருக்கும்பொழுது துக்கமேன்?

மேஹர் :—என்ன அசட்டு வார்த்தை! இன்று இவ்விதமாய்ப் புகாக் காரணந்தானென்ன?

சங்கதியைச் சவிஸ்தாரமாகச் சாற்றினாலன்றோ நீர் கொண்டுள்ள சங்கையை என்னால் விலக்க இயலும்!

அலிகுலிபெக் பெருமூச்செறிந்தவண்ணம் "இவ்விதம் எண்ணக் காரணமென்னவென்றல்லவோ கேட்கின்றாய்? என்ன சொல்லுவேன்? எப்படி என் மனதிலுள்ளதை வெளியிட்டுப் பகருவேன்? ஜஹாங்கீர் உன்னைக் குறித்து விடுதலைச் சீட்டுக் கொடுக்கும்படி இன்று என்னை வற்புறுத்தினான். இன்னும் அவன் உன்னை மறக்கவில்லை. நீ அவனிடஞ் செல்ல இச்சைப்படுகின்றாயா? மனதிலொன்றையும் மறைத்து வையாது பதிலுரைப்பாய்" என்றனன்.

மேஹர் முகஞ் சிவக்க, "உமது மனதையறிந்தேன். இராஜ புத்திரன்மேல் ஒரு காலத்தில் என் மனம் நாடியிருந்ததென்பது வாஸ்தவமே. நான் பல நாட்கள் அவனது வரவை நோக்கிக் காத்திருந்தேன். ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு யுகமாகக் கருதி வந்தேன். ஆனால் அவன் தன் வாக்கை நிறைவேற்றாது, நான் இருந்தேனோ அல்லது இறந்தேனோ என்று விசாரிக்காததால், நானவனை அடியோடு மறந்தேன். அச்சமயம் தாம் என்மேற் தயைகூர்ந்து விதிப்படி என்னை மணந்ததால், நானிறக்கும்வரை தமது சரணங்களின் கீழிருக்குந் தாசியெனத் திண்ணமாக எண்ணும்" என்றனள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டுவந்த அலிகுலிபெக்கின் மனம் சாந்தமடைந்தது. கொஞ்சம் முன்சென்று பிரேமையுடன், மேஹரை ஆலிங்கனஞ்செய்து, "மேஹர்! நீயே என் ஜீவன்! நீயே என் பிராணன்! இன்று நீ எனக்குப் புனர் ஜன்மத்தைக் கொடுத்தாய். கடவுள் உனக்குத் தீர்க்காயுளைக் கொடுப்பார். இனிமேல் நானெதையுங் கவனியேன். ஒருவேளை குடிவெறியில் அவன் ஏதாவது உளறியிருப்பானோ? ஏனெனில் அவன் பாதுஷாவானது முதற்கொண்டு முன்னிருந்த நீச சுபாவம் மிகவுங் குறைந்திருப்பதாகவும், பிரஜைகளிடத்து அன்போடும் ஆதரவோடுமிருப்பதாகவும் எங்கும் வதந்தியாயிருக்கிறது" என்றனன்.

மேஹர் :—"அது எப்படியிருந்தாலுமிருக்கட்டும். பீதியடையக் காரணமில்லையானாலும் அவனிடம் கொஞ்சம் ஜாக்கிரதையாகவேயிருந்து வரவேண்டும். கெட்ட எண்ணத்திற்கு அவனது மனம் ஈடுபட்டிருப்பதால், எப்படியாயினும் அவ்வெண்ணத்தை நிறைவேற்ற வழி தேடுவான்."

அலிகுலிபெக் :—"உனது வார்த்தைகளால் எனக்குத் தைரியமுண்டாயிற்று. உனது பிரேமை என்னை சம்ரட்சணைசெய்து எனக்கு ஒருவித ஹானியும் வாராது பாதுகாக்கும். என்மேல் நூறு ஜனங்கள் வீழ்ந்து சண்டையிட்டபோதிலும், உன் பிரேமையின் பிரதாபம் அவர்களை இருந்த இடந்தெரியாமற் பறக்கடிக்கும்."

மேஹர் :—"உங்களை எதிர்க்க யாருக்குத்தான் தைரியமிருக்கிறது?"

அலிகுலிபெக் :—"பிரியே! அது வாஸ்தவமே. பீதியடையக் காரணமில்லை."

இங்கே இவ்வண்ணம் சம்பாஷணை நடந்துகொண்டிருக்க, அரண்மனையிற் பாதுஷா ஜஹாங்கீர், நாஜீர் ஆமத்தின் வரவை எதிர்நோக்கி, நிராசையுடன் அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தான். மிக்க நேரமாகியும் அவன் வாராததால் கைகளைக் கசக்கினான். கால்களைத் தரையிலுதைத்தான். வேலையாட்களை அழைத்து நாஜீர் ஆமத்தைக் கூட்டிவரும்படி ஆக்ஞாபித்தான். சீக்கிரத்தில் நாஜீரும் வந்து சேரவே, ஜஹாங்கீர், "இவ்வளவு தாமதமேன்? உன்

"முகமெல்லாம் மழுங்கி யிருக்கக் காரணமென்ன?" என வினவவே, நாஜீர் கீழே நோக்கிய வண்ணம், "நான் கைக்கொண்டிருக்கும் காரியத்தைப் பூர்த்திசெய்யும்வரை இங்கே கால் வைப்பதில்லையென முன்னாலேயே சொல்லியிருக்கின்றேன்" என்றனன்.

ஜஹாங்கிர்:—"இக்காரியத்தைப் பூர்த்தி செய்யத் தாமதமேன்?"

நாஜீர் ஆமத்:—"அரசே! ஒரு மதயானையை அவன்மேல் விடுத்தேன். ஆனால் அவனென்ன சாமானிய மனிதனா! வீரனன்றோ! அம்மத யானையை சிம்மத்தைப் போலெதிர்த்து, அதன் துதிக்கையைத் துண்டு துண்டாக வெட்டி வீழ்த்தினான். அதைப் பார்த்திருந்த ஜனங்கள் அவனை வாழ்த்திக்கொண்டாடினார்கள். நானோ பேசாது வீடு சேர்ந்தேன்."

ஜஹாங்கிர்:—இவ்வண்ணம் நிராசைகொள்ளக் காரணமில்லை, நாஜீர்! ஒரு யுக்தியில் அபஜயமடைந்தால், மற்றொன்றில் ஜயங்கொள்வோம். இதைக் குறித்து உனக்குச் சொல்ல வேண்டியதில்லை."

நாஜீர் ஆமத்:—"அரசே! எல்லாம் தமது பாக்கியத்தின் பிரதாபம். பெரிய பெரிய இராஜ காரியங்களிற் ஜயமடையும்பொழுது இஃது என்ன பிரமாதம்?"

ஜஹாங்கிர்:—"மகா வீரனான அலிகுலிபெக்கிற்குத் தீங்கிழைக்க என் மனம் இடங்கொடுக்கவில்லை. ஆயினும் மேஹரில்லாது என் மனம் ஓர் நிலையில் நில்லாதிருக்கின்றது. அவளை யடையாது நானொருபோதுஞ் சாந்தமடையேன். அவளில்லாது இந்த மயூராசனம் முட்களால் நிறைந்திருப்பதாகத் தோற்றுகிறது."

நாஜீர் ஆமத்:—"அரசே! தைரியத்தைக் கைவிடவேண்டாம். கூடிய சீக்கிரத்தில் உமது மனம் சந்துஷ்டி யடையும். இது ஒருநாள், இரண்டு நாட்களில் ஆகக் கூடிய காரியமன்று."

முப்பத்தொன்பதாவது அத்தியாயம்.

நாஜீர் ஆமத் பாதுஷாவினிடம் விடைபெற்று அரண்மனையை விடுத்து, ஆனந்தமுடன் மீசையை முறுக்கிக்கொண்டு, எவ்விதத்தில் அலிகுலிபெக்கை வதஞ்செய்வதென யோசித்த வண்ணம் சென்றுகொண்டிருந்தான். மிக்க தூரஞ்சென்று ஊருக்கு வெளியிலிருந்த ஓர் பாழடைந்த வீட்டைக் கிட்டி, மும்முறை அவ்வீட்டின் கதவை மெதுவாகத் தட்டினான். கொஞ்ச நேரத்தில் ஓர் கிழவி கதவை மெதுவாகத் திறந்து, வந்திருப்பவனை யாரென அறிந்த பின்னர், அவனை வீட்டினுள் விடுத்தனள். அவ்வீடு அதிக விசித்திரமாயிருந்தது. சூரியன் அவ்வீட்டினுள் நுழைய வழியில்லாதிருந்ததால், எங்கும் இருள் மூடியிருந்தது. ஆனால் நாஜீர் ஆமத் வழக்கமாய் வந்துகொண்டிருப்பவனாதலால், சரேலென உள் நுழைந்தான். ஆங்கு ஓரிடத்தில் கட்குடத்தைச் சுற்றிப் பத்துப் பதினைந்து ஆசாமிகள் வீற்றிருந்தனர். மற்றும் பலர் குறட்டை விட்டுத் தூங்கியிருந்தனர். நாஜீர் ஆமத்தைக் கண்டவுடன் அவர்களெல்லோரும் எழுந்து அவனை வரவேற்றனர். பிறகு நாஜீர் ஆமத் எல்லோரையும் உட்காரச் சொல்ல, அக்குடியர்கள் யாவரும் பழையபடி தரையிலுட்கார்ந்து, நாஜீர் ஆமத் என்ன ஆனந்தகரமான சங்கதி சொல்லப்போகிறானென உற்சாகத்துடனிருந்தனர். பிறகு நாஜீர் ஆமத் அவர்களை நோக்கி, "சகோதரர்களே! ஆனந்தகரமான சங்கதி ஒன்றைச் சொல்லவிருக்கின்றேன். பாதுஷாவிற்கு ஒரு வேலையைச் செய்து முடித்தால் நமக்குக் கிடைக்கும் வெகுமதி சாதாரணமாயிராது. ஆனாற் காரியமோ சாமானியமன்று. அலிகுலிபெக்கின்

அழகுமிக்க மனைவிமேல் நமது பாதுஷாவின் மனம் பலநாட்களாய் நாடியிருக்கின்றது. ஆனால் பாதுஷா என்ன சொல்லியும் அம்மூர்க்கன் கேட்பவனாயில்லை. அவனை எப்படியாவது ஒழிக்கவேண்டுமெனப் பாதுஷா என்னை ஆக்ஞாபித்துள்ளார். இவ்விஷயத்தில் உங்களது உதவி வேண்டியிருக்கிறது. நீங்களிதைப் பூர்த்தி செய்து கொடுக்கும்பட்சத்தில் பாதுஷாவிடமிருந்து ஏராளமான திரவியம் வாங்கிக் கொடுப்பேன்" என்றனன்.

நாஜீர் ஆமத் பேசி முடித்தபின், காளகூட இராத்திரியை நிகர்த்த கருத்த ஓர் தடியன் முன்போந்து, "மித்திரர்காள்! இந்த வேட்டை மிகவும் பெரியதே. பாதுஷாவிற்கு நமது பராக்கிரமத்தைக் காட்ட இதுவே தக்க சமயம்" எனப் பகர்ந்துகொண்டே ஆங்கிருந்த பேலாக்களை மதுவால் நிரப்பினான்.

பிறகு நாஜீர் எல்லோரையும் நோக்கி "சகோதரர்காள்! ஆரம்பத்திலேயே தகுந்த ஏற்பாடுகளைச் செய்து முடிக்கவேண்டும். தலையிட்டுக் கொண்டபின் பலனின்றித் திரும்பிவரக் கூடாது" எனவே, ஆங்கிருந்த ஓர் சண்டாளன், "நாஜீர் சாகேப்! அது என கடமை. இன்று மாலை அவன் வீட்டினுட் புகுந்து எங்காவது ஒளிந்துட்கார்ந்திருப்பேன். நீங்கள் யாவரும் இரவு குறிக்கப்பட்ட சமயத்தில் ஒருமித்து வரும்பட்சத்தில் கதவுகள் யாவற்றையும் திறந்துவைத்து உங்களையும் வீட்டினுள் அழைத்துப் போகின்றேன். உமக்கேன் அந்தக் கவலை?" என்றனன்.

"பேஷ், பேஷ்! சரியான யுக்தியே! இன்று நடுநிசியில் நான் இவர்களுடன் அங்கு வந்து சேர்வேன். இக்காரியத்திற்கு இருட்டாயிருப்பதே நலம். அப்பொழுது நட்சத்திரங்களது வெளிச்சமுமிராது. ஆனால் இதைக் குறித்து யாவரும் மூச்சுவிடக்கூடாது. மிகவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். நான் போய் நடுநிசியில் வந்து சேருகின்றேன்" எனப் பகர்ந்து நாஜீர் அதை விடுத்துச் சென்றனன்.

நடுநிசி நெருங்கியது. எங்கும் நிச்சப்தம் நிறைந்தது. யாவரும் நித்திராதேவியின் பாசத்திற்குக் கட்டுப்பட்டிருந்தனர். ஆனால் நாஜீர் ஆமத்தும் அவனது ஆட்களும் ஒளிந்து ஒளிந்து அலிகுலிபெக்கின் வீட்டைச் சுற்றி வந்துகொண்டிருந்தனர். எல்லோரும் குறிக்கப்பட்ட இடத்திற்குப் போய்ச் சேர்ந்தவுடன் ஒருவன் நாஜீர் ஆமத்தினிடம் வந்து, "வீட்டிற்குள் நுழைவதற்கு யாவும் தயாராயிருக்கின்றன" என்றனன். பத்துப் பதினைந்து பேர்கள் அலிகுலிபெக்கின் வீட்டினுள் பின்புறக் கதவுவழியாக நுழைந்தார்கள். மற்றும் பல தடியர்கள் வெளியிற் காவலிருந்தனர். உள்ளே நுழைந்த கிராதகர்கள் அலிகுலிபெக்கின் வேலைக்காரர்களிருந்த அறைகளை வெளியேயிருந்தவண்ணந் தாளிட்டபின் அலிகுலிபெக்கின் அறைக்குள் ஒவ்வொருவராக நுழைந்தனர். ஆங்கு அலிகுலிபெக் தன் பிராணேச்வரியுடன் நித்திரை புரிந்துகொண்டிருந்தனன். விளக்கு அதிக மந்தமாய் எரிந்துகொண்டிருந்தது. மகாசூரனான அலிகுலிபெக் யாதொரு சிந்தையுமின்றி நித்திரா சுகத்தை அனுபவித்துக்கொண்டிருந்தனன். அவனது முகத்தில் பீதியின் சின்னங்கள் லவலேசமுந் தென்படவில்லை. அவனருகில் மற்றோர் மஞ்சத்தில் தேவகன்னிகையையொத்த மேஹர் தென்பட்டனள்.

அவ்விருவரையும் மிக்கநேரம் உற்று நோக்கியிருந்த அச்சண்டாளர்களுக்கு அவர்களருகிற் செல்ல தைரியமுண்டாகவில்லை. ஆனால் நாஜீர் ஆமத் கொள்ளையடிக்கவும் கொலை செய்யவும் கங்கணங் கட்டியிருந்தனன். தன்னுடனிருந்தவர்கள் பீதியடையக் காணவே, கோபமூண்

டவனாய் சமிக்ஞை செய்து எல்லோரையும் அருகிற் செல்லும்படி ஆக்ஞாபித்தான். சிலர் கரங்களில் வாட்களைத் தாங்கி, பெக்கின் மஞ்சத்தைச் சுற்றி நின்றனர். மற்றும் பலர், மேஹரது மஞ்சத்தைத் தூக்கி அடுத்த அறைக்குள் வைத்து, பெக் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். நாஜீர் ஆமத் தன்னிடுப்பிலிருந்த கட்கத்தை யுருவி, பெக்கின் மார்பின் மேற் குத்தத் தயாராயிருந்தனன். அச்சமயம் அலிகுலிபெக் கண்விழித்து, மிக்க உரத்த குரலில் "நீ யார்? இவ்வேளையி லிங்குவரக் காரணம் யாது?" என்றனன்.

நாஜீர் ஆமத் தன் குரலை மாற்றி "நாங்கள் உன்னைப்போலுள்ள மனிதர்களே! ஒரு மகத்தான காரியத்தைக்குறித்து இங்கு வந்துள்ளோம்" எனவே, பெக் எழுந்திருக்க முயன்றனன். இதைக்கண்ட நாஜீர் வாளை நீட்டிய வண்ணம் "எழுந்திரு சீக்கிரம்! பத்தாயிரம் மோகராக்களையும் உன் மனைவியையுங் கொடுத்தாலன்றி நீ பிழைக்கமாட்டாய். இந்த இடத்திலேயே ஓரே நித்திரை செய்யவேண்டியது தான்" எனறனன்.

பெக், "என்னை ஆக்ஞாபிக்க நீ யார்?" என வினவிக்கொண்டே மிக்க ஆவேசமுடன் நாஜீர் ஆமத்தின் கரத்திலிருந்த கட்கத்தைப் பிடுங்கி அவ்வறையின் ஓர் மூலையில் வீசியெறிந்தான்.

நாஜீர் "அடே மூர்க்கா! அடிக்கடி பகருவதிற் பலனில்லை. மிருத்யு உனது மஞ்சத்தைச் சுற்றி வந்துகொண்டிருக்கின்றான். பேசாமல் உனது பொக்கிஷத்தின் திறவுகோலை என்னிடங் கொடு, இல்லையேல் பிராணனை இழக்கத் தயாராயிரு."

அலிகுலிபெக் கோபமூண்ட சிம்மத்தைப் போல் மஞ்சத்தை விட்டிழிந்து ஓர் புறத்தில் நின்று "என்னுடன் மரியாதையின்றிப் பேசும் நீ யார்? உன்னுடனிருக்கும் இவர்கள் யார்?" என வினவினான்.

நாஜீர் "இவர்கள் யாரா? யாரென இப்பொழுது காட்டுகின்றேன். இவனைப் பின் கட்டாய்க் கட்டி நீங்கள் யாரெனக் காட்டுங்கள்" எனப் பகர்ந்துகொண்டே தன் வாளை உருவி அலிகுலிபெக்கை நோக்கி வந்தான். இதற்குள் அலிகுலிபெக், அங்கு சுவற்றின் ஓர் மூலையில் தொங்கிக்கொண்டிருந்த வாளை எடுத்து அவனை எதிர்க்கத் தயாராயினன். கொஞ்சநேரத்திற் பல பாபிகளை யமபுரிக்கனுப்பினான். ஆனால் தன் தேகத்திற் பலவிடங்களிற் காயங்களுண்டாயின. தன் ஆட்களிற் பலர் இறக்கக்கண்ட நாஜீர் ஆமத் மிக்க கோபமூண்டவனாய் "இறப்பேன் அல்லது இவனை அறுப்பேன்" என்ற நிச்சயங்கொண்டு மீதியிருந்தவர்களுடன் பெக்கைத் தாக்கினான். உடனே அவ்வறையின் கதவு திடீரெனத் திறவுபட பெக்கின் ஆட்கள் உள் நுழைந்தனர். வேறொரு உபாயமுமின்றி நாஜீர் ஆமத்தும் அவனுடனிருந்தவர்களும் ஓட்டமெடுத்தனர். ஓடும்பொழுது கதவை வெளியிலிருந்து தாளிட்டுச் சென்றதால் ஒருவர் கையிலுமகப்படாமல் உயிருடன் தப்பிப் பிழைத்தனர்.

இச்சண்டாளர்கள் ஓடியபின் அலிகுலிபெக் தன் பிராணேச்வரி உயிருடனிருக்கின்றனளோவென சமுசயித்தான். தன் சரீரத்திலுண்டான காயங்களிலிருந்து இரத்தம் பெருகி வந்ததால் அவனது வஸ்திரங்கள் நனைந்திருந்தன. அவ்வஸ்திரங்களோடு மேஹரைத் தேடிச் செல்லுஞ் சமயம் பீதிகொண்ட பெண்மானைப் போன்ற மேஹர் அவசரமாய் வந்து "நாதா! ஈச்வரன் நம்மேல் மிக்க கிருபை கொண்டுள்ளார். இனி இந்த ஆக்ரா நகரில் நாம் வசிப்பது தகாது. உமது அறையில் வாட்களின் சத்தத்தைக் கேட்டு நான் விழித்துக்கொள்ள,

கள்வர்களைக் கண்டு வேலைக்காரர்களையழைத்து வரச் சென்றேன். அங்கே அவர்களறைகள் யாவும் வெளிப்பக்கத்திலிருந்து தாளிடப்பட்டிருந்தன. சந்தடி செய்யாது அவர்களை எழுப்பி உமக்குதவியாக அனுப்பினேன்" என்றனள்.

அலிகுலிபெக் ஆச்சரியங்கொண்டு, அவளை ஆலிங்கனஞ் செய்து, "ஆனால் இன்று நீயே என்னைக் காப்பாற்றினாய். சரியான சமயத்தில் நீயே உதவி செய்தாய். பேஷ்! பேஷ்! நீ இருந்த இடத்தில் வேறொரு ஸ்திரீ இருந்திருக்கும்பட்சத்தில்—ஸ்திரீ என், புருஷனே இருந்திருந்தபோதிலும்—பீதியால் மூர்ச்சை அடைந்திருப்பாள். இனி அச்சண்டாளர்கள் மறுபடியும் இங்கே காலெடுத்து வைக்கமாட்டார்கள்" என்றனன்.

மேஹர்:—இவர்கள் நம்மைக் கொள்ளையடிக்க வந்தவர்களென நான் நினைக்கவில்லை. உமது வைரியாகிய அச்சண்டாளனே இவர்களை இங்கு அனுப்பியிருக்கவேண்டும்.

அலிகுலிபெக்:—மேஹர்! நீயே என் ஜீவன்! நீயே என் பிராணன்! வைரிக்குப் பீதியடைபவன் நானல்ல. ஈச்வரனுக்கன்றோ அக்கவலை? விதியின் செயலைத் தடுக்க யார்தான் வல்லர்?

அலிகுலிபெக் இவ்வித அவஸ்தைக்குள்ளாயிருக்குஞ் சமயம், ஜஹாங்கீர் தனது மஹாலில் நாஜீர் ஆமத்தின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தான். தாசிகளது சங்கீதத்திலும், நாட்டியத்திலும், மற்றும் மதுபானத்திலும் அவ்விரவைக் கழித்து வந்தானாயினும், நாஜீர் ஆமத் வந்தபாடில்லை. கோழிகள் கூவத்தொடங்கின. கிழக்குத்திசை வெளுக்கலாயிற்று. அச்சமயம் நாஜீர் ஆமத் மிகச் சோர்ந்தவனாய், ஒளிந்து ஒளிந்து அரண்மனைக்குள் நுழைந்தான். பாதுஷாவைக்கண்டு நடந்த சங்கதிகள் யாவற்றையுஞ் சவிஸ்தாரமாகச் சாற்றினான். செவிசாய்த்துக் கேட்டுவந்த பாதுஷா மிக்க நிராசையடைந்தனன். எவ்விதம் அலிகுலிபெக்கைத் தொலைப்பதென்ற விசாரத்திலாழ்ந்தான். அச்சமயம் ஓர் வேலைக்காரன் சுவர்ணப் பேலாவில் மதுவை நிரப்பிப் பாதுஷாவிற்குக் கொணர்ந்தனன். நாஜீர் ஆமத் அப்பேலாவை வாங்கி ஒரு நிமிஷத்தில் அதைக் காலி செய்து, மறுபடியும் பாதுஷாவிடஞ் சென்று "மகாராஜ்! தாங்களிவ்வண்ணம் நிராசையடையக் காரணமில்லை. ஒரு யுக்தியில்லாவிடில் மற்றொரு யுக்தியிற் காரியங் கைகூடுவது நிச்சயம். உமது மனமும் சந்துஷ்டியடையும்" என்றனன்.

ஜஹாங்கிர்:—"சபாஷ்! நாஜீர் ஆமத்! சபாஷ்! நான் இச்சமயம்வரை கைகளைக் கசக்கிக் கொண்டுட்கார்ந்திருந்தேன். ஆனால் உனது வார்த்தைகளாற் கொஞ்சம் ஆறுதலடைந்தேன். நேற்றிரவு இறந்தவர்களது மனைவி மக்களை ஜன்மமுள்ளவரை சம்ரட்சிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்கின்றேன். இக்காரியம் பூர்த்தியானவுடன் மீதியெல்லோரும் ஜன்ம பரியந்தம் சந்தோஷிக்கும்படி தகுந்த வெகுமதிகளைப் பெறுவார்கள். ஆனால் எனது வழியிலிருக்கும் அந்த முள்ளை மாத்திரம் விலக்கி அரண்மனையிற் சேர்பிக்கவேண்டிய நட்சத்திரத்தை நானடையச் செய்வாய்."

"அரசே! எனது பாக்கிரமத்தைச் சீக்கிரம் நீங்களறிவீர். பாதுஷா அதைரியமடையக் கூடாதெனவே இத்தாசனது வினந்தி" எனப் பகர்ந்து பாதுஷாவிடமிருந்து வேண்டியமட்டும் மோகராக்களைப் பெற்றுச் சென்றனன் நாஜீர் ஆமத்.

நாற்பதாவது அத்தியாயம்.

இது நடந்த சிலநாட்களுக்குப் பிறகு யமுனா நதிக்கரையில் ஓர் மைதானத்தில் ஒரு பெரிய கூடாரந் தென்பட்டது. ஜனங்கள் கும்பல்

கும்பலாக அம்மைதானத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். அலிகுலிபெக் புலியுடன் சண்டையிடப்போகுஞ் சங்கதி இருதினங்களுக்கு முன்னாலேயே நாலாபக்கங்களிலும் பரவவே, ஜனங்கள் அவ்வேடிக்கையைப் பார்க்க வந்துகொண்டிருந்தனர். நாஜீர் ஆமத் நெஞ்சினிடை வஞ்சனையைக் கருதி அலிகுலிபெக்கை வம்புக்கிழுத்து அவனைப் புலியுடன் சண்டையிடும்படி பகர, அலிகுலிபெக்கும் அதற்கொப்புக்கொண்டனன்.

குறிக்கப்பட்ட நேரத்தில் வீரனான அலிகுலிபெக் ஆங்கு வந்து சேர்ந்தான். ஜனங்கள் கூடியிருந்த இடத்திற்குக் கொஞ்ச தூரத்திற்கப்பால் ஒரு பிரம்மாண்டமான கூண்டு அமைக்கப்பட்டிருந்தது. அக்கூண்டினுள் இருதினங்களாய் உபவாசமிருந்த ஓர் புலியும் விடப்பட்டிருந்தது. பாதுஷா, மற்றும் ஆங்கிருந்த யாவருக்கும் அலிகுலிபெக் வணக்கமுடன் தண்டனிட்டுக் கரத்தில் ஓர் கூரிய வாளையேந்தி அக்கூண்டின் கதவைத் திறந்து உள்நுழைந்தான். ஜஹாங்கீர் இனித் தன் சத்துரு உயிருடன் திரும்பிவாரான் என நிச்சயித்தான். சில நிமிஷங்களுக்குள் ஆங்கிருந்த சிலர் "பேஷ், பேஷ்!" எனக் கூவி அலிகுலிபெக்கை உற்சாகப்படுத்தினர். மற்றும் பலர், "இவனென்ன மனிதனா, அல்லது ராட்சஸன்தானோ? பார், பார்! புலியை நாயென்றல்லவோ நினைத்துச் சண்டையிடுகின்றனன்!" என்றனர். பசிநோயாற் பீடிக்கப்பட்ட அப்புலி பன்முறை அவன்மேற் பாய்ந்து அவனைக் கீழே தள்ளியது. உடனே ஆங்கெங்கும் கூக்குரலே முழங்கியது. "பெக் இறந்தான்! இறந்தான்!" என்ற தொனி மேலிட்டது. ஆனால் அலிகுலிபெக் கோபம் பொங்கத் திடீரென எழுந்து, புலி அவன்மேற் பாய்வதற்குள் அதன் தலையை ஒரே வீச்சிற் கொய்து, அதன் உடலின்மேற் காலை வைத்து வாளைச் சுழற்றி நின்றான். ஜனங்கள் ஆச்சரிய மிகுதியால் அவனது நாமத்தைக் கூறி ஜயகோஷஞ் செய்தனர். உடனே அலிகுலிபெக் அப்புலியின் தலையைப் பாதுஷாவை நோக்கி வீசியெறிந்து, கூண்டை விடுத்து வெளிவந்தான். புலியின் தலையைப் பார்த்துப் பாதுஷாவின் முகம் மழுங்கியதாயினும், வேறு வழியின்றி அவனைத் தட்டிக்கொடுத்து, மும்முறை 'சபாஷ்' எனப் பகர்ந்து, விலையுயர்ந்த வெகுமதிகளையும் 'ஷேர் ஆப்கன்' என்னும் பட்டத்தையுங் கொடுத்தனன். இவனது வீரச் செயல்களைப் பகர்ந்துகொண்டே ஜனங்கள் தங்களிருப்பிடந் திரும்பிச் சென்றனர். ஷேர் ஆப்கன் வெகுமதிகளைப் பெற்றுத் தன் வீட்டை நோக்கி நடந்தான். ஆனால் ஜஹாங்கீர் பாதுஷா கடவுளை நிந்தித்து, துக்கமேலிடத் தன் அரண்மனைக்குச் சென்றான்.

தில்லிக்கதிபதி ஜஹாங்கீர் தனது மஹாலின் ஓர் மூலையில், தலையிற் கையை வைத்து, மிக்க விசாரத்திலாழ்ந்தவனாய் உட்கார்ந்திருந்தனன். அச்சமயம் ஏதாயினும் இராஜகாரியத்தைக் குறித்து யோசித்திருப்பதாக அவனைப் பார்ப்பவர் நினைப்பது சகஜமே. ஆனால் அவனது இராஜகாரியம் மேஹரை அடைவதைத் தவிர வேறொன்றுமில்லை. அவனது தியானம், மனம், சொப்பனம் எங்கும் அந்த சர்வாங்க சுந்தரியாகிய மேஹரைத் தவிர்த்து வேறு யாரும் பிரவேசிக்க முடியாதிருந்தது. இவ்வண்ணம் விசாரத்திலாழ்ந்திருக்குஞ் சமயம், அவனுக்கெதிரில் தடித்துயர்ந்த ஓர் புருஷன் வந்து நின்றனன். அவனது காலடிச் சத்தத்தைக் கேட்டுப் பாதுஷா திரும்பி நோக்கினான். ஆனால் அவனது சரீரம் ஆங்கிருந்ததாயினும், அவனது மனம் மேஹரை நாடியிருந்தது. பாதுஷாவின் ஸ்திதியைக் கண்ணுற்ற அப்புரு-

ஷன் உரக்க, "அரசே! நமஸ்கரிக்கின்றேன். இன்று இவ்வண்ணஞ் சிந்தாக்கிராந்தராயிருக்கக் காரணம் யாதோ? இப்பாரதகண்டத்துப் பாதுஷாவாயிருக்கும் தமக்குற்ற கவலை யாது?" என்றனன்.

இவ்வார்த்தைகளைக் கேட்டுப் பாதுஷா தன் ஞாபகத்திற்கு வர, அங்கு வந்தவனை யாரென அறிந்துகொண்டு, "அடே, யார், குத்புதீனா? நீ எப்பொழுது வங்காளத்தினின்றும் இங்கு வந்தாய்? அடே! இனியுன்னைக் காணப் போகிறேனோவெனக் கவலைகொண்டிருந்தேன். சரியான சமயத்தில் நீயும் வந்து சேர்ந்தாய். உன்னையொத்த பிராண மித்திரனில்லாது இதுகாறும் மிக்கத் துன்புற்றேன். நான் இச்சில நாட்களாய் அனுபவித்துவருங் கஷ்டத்தினின்றும் என்னை மீட்க வாஸ்தவமான சிநேகன் சமீபமொருவனுமில்லை" என்றனன்.

பிறகு இருவரும் ஒருவரையொருவர் கட்டித் தழுவி, க்ஷேம சமாசாரங்கள் பேசலாயினர். ஜஹாங்கீர் தன் விருத்தாந்தங்கள் யாவற்றையும் விஸ்தரித்துப் பகரலானான்.

ஜஹாங்கீரைக் குழந்தைப் பருவத்தில் வளர்த்துவந்த ஓர் தாதியின் குமாரன் இந்தக் குத்புதீன் என்போன். இவ்விருவரும் இளமைப்பருவமுதல் ஒரே இடத்தில் விளையாடியும் வளர்ந்தும் வந்தவர்கள். ஜஹாங்கீர் பாதுஷாவாயினனென்ற சங்கதியைக் கேட்ட அத்தாதி தன் புத்திரனுக்கு நற்காலம் பிறந்ததென வீணாசை கொண்டு அவனை ஜஹாங்கீரிடமனுப்பினாள். இவனைக் காணவே, ஜஹாங்கீர் அலிகுலிபெக்கைத் தொலைப்பதற்கு இவனே தகுந்தவனெனக் கண்டனன். ஆனால் இக்கடுங்காரியத்தைச் செய்யக் குத்புதீன் முதலில் மறுத்தனன். சில நாட்களுக்குப் பிறகு குத்புதீன் இதற்குச் சம்மதிக்கவே, ஜஹாங்கீர் ஆனந்தமடைந்தான்.

ஒரு நாள் குத்புதீன் அலிகுலிபெக்கின் வீட்டிற்குச் செல்ல, அலிகுலிபெக் அவனைக் கண்டு ஆனந்தமும் ஆச்சரியமுமடைந்து "வங்காளத்தினின்றும் எப்பொழுது வந்தாய்?" என வினவியவண்ணம் அவனை ஆலிங்கனஞ்செய்ய முன் சென்றனன். ஆனால் குத்புதீன் பின் நகர்ந்து அவனை யுற்று நோக்கியிருக்க, அலிகுலிபெக் "பலநாட்களாய்ப் பார்க்காததாற் கோபமோ?" என்றனன். குத்புதீன் கம்பீர முகத்துடன் "நாமிருவரும் முன்னால் சிநேகர்களாயிருந்தோம் என்பது வாஸ்தவமே. ஆனால் அந்த சிநேகமெல்லாம் பறந்து பல நாட்களாயின" எனப் பதிலளித்தான்.

அலிகுலிபெக்:—என்ன? பகரவேண்டியதைப் பகிரங்கமாய்ச் சொல்.

குத்புதீன்:—நானுன்னை இன்னும் மித்திரனெனக் கருதுகின்றேன். நான் சொல்லுவதைச் செவி சாய்த்துக் கேள். நீ தற்சமயம் மிக்க சங்கடத்திற்குள்ளாயிருக்கின்றாய். உன் மமதையையும், அகம்பாவத்தையும் ஒழிக்காவிடில், நீ இவ்வுலகில் பலநாட்களிருப்பாயென எனக்குத் தோன்றவில்லை.

அலிகுலிபெக்:—என் வீட்டிலிருந்துகொண்டே நீ இவ்வாறு பகரக் காரணம் யாது? நீ யாது சங்கடத்தைக் கொணர்ந்துள்ளாய்?

குத்புதீன்:—என்ன சங்கடமா? அடே! பாதுஷாவின் கோபமும் என்னுடைய வாளும்! வேறு யாது சங்கடம் வேண்டும்?

அலிகுலிபெக்:—ஆமாம், மிக்க சங்கடமெனவே சொல்லவேண்டும். சரிதான், காரணத்தை அறிந்தேன். பாதுஷாவினாலனுப்பப்பட்டு வந்தவனா? என் மனைவியைப் பாதுஷாவின் சுவாதீனஞ் செய்யவேண்டுமென்பதன்றோ நீ சொல்லுவதின் தாத்பரியம்?

குத்புதீன்:—மறுபடியு மொருமுறை பகருகின்றேன். நான் சொல்வதைக் காது கொடுத்துக் கேள். நானுன்மேல் இரக்கங்கொண்டு இவ்வாறு வேண்டிக்கொள்ளுகின்றேன். பாதுஷா இக்காரியத்தைச் சாதித்தாலன்றி சும்மாவிரான். அவனது இச்சைப்படி நடக்தாலன்றி உனக்கும் வேறு வழியில்லை.

அலிகுலிபெக்:—குத்புதீன்! உன் வாயினின்றும் இவ்வார்த்தைகள் வருமென நான் கனவிலுங் கருதவில்லையடா! என்னுயிருக்கு எவ்வித ஹானி வந்தபோதிலும், பாதுஷாவின் இச்சைக்கு நானொருபோதும் இணங்கேன்.

குத்புதீன்:—இந்துஸ்தானத்துப் பாதுஷாவின் ஆக்ஞையை மீறி நடப்பது மூர்க்கத்தனமே! இதனால் நீ கெடுவது நிச்சயம்.

அலிகுலிபெக்:—அடே! மனிதன் இன்றோ அல்லது நாளையோ இறப்பவன். மானமழிந்தபின் இருப்பதைவிட உயிர் துறப்பதே மேலாம். நானின்றுமுதல் என் வேலையை ராஜீநாமா கொடுத்துவிட்டதாகப் பாதுஷாவினிடங் கிருபை செய்து கூற வேண்டும். நான் என் ஊர் சென்று குசாலாய் வாசஞ் செய்து வருகின்றேன்.

குத்புதீன்:—ஊருக்குப் போவதை மறந்துவிடு. இன்னும் மூன்று நாட்கள் உனக்கு அவகாசங் கொடுத்திருக்கின்றேன். நாலாவது நாள் உன்னை வந்து பார்க்கின்றேன்.

அலிகுலிபெக்:—குசாலாய் வா. இதுவும் உன் வீடே. ஆனால் இன்று கிடைத்த உத்தரமே அன்றும் கிடைக்கும். இந்த நிச்சயம் மாறாது.

குத்புதீன்:—ஈச்வரன் உன் நிச்சயத்தை மாற்றுவார்.

அலிகுலிபெக்:—கடவுள் பாதுஷாவிற்கு நற்புத்தியைப் புகட்டுவார்.

மூன்று நாட்கள் கழிந்தும் அலிகுலிபெக்கினிடமிருந்து யாதொரு பதிலும் வாராததால் குத்புதீன் சில சண்டாளர்களுடன் அலிகுலிபெக்கின் வீட்டிற்குப் புறப்பட்டனன். தன் சிநேகனிடம் இவ்வண்ணஞ் சண்டையிடச் சமயமுமேற்பட்டதேயென மிக்க மனவருத்தமடைந்தான். ஆயினும் பாதுஷாவிற்கு வாக்களித்திருந்ததால், தன் காரியத்தைப் பூர்த்தி செய்ய நிச்சயித்தான். "நீயேன் இப்பாப காரியத்தைச் செய்கின்றாய்? ஆனந்தமுடன் காலத்தைக் கழித்துவரும் அவ்விருவரையும் பிரித்து, நரகத்தையடைய எனிச்சை கொள்ளுகின்றாய்?" என்று இவனது மனம் பன்முறை பகர்ந்ததாயினும் இவன் அதைக் கொஞ்சமேனும் லட்சியஞ் செய்யாது, பெக்கின் வீட்டை நாடி விரைவாக நடந்தனன். அலிகுலிபெக்கும் தன் மித்திரனது வரவை நோக்கிக் காத்திருந்தனன். குத்புதீனைக் காணவே அலிகுலிபெக் அவனை வரவேற்றுபசரித்தான். ஆனால் குத்புதீனோ அவையொன்றையும் கொஞ்சமேனுங் கவனியாது அவமரியாதையாய் "உன் மனதிலுள்ளதைச் சீக்கிரம் பகர்வாய். இன்னும் பிடிவாதமுடனிருப்பாயாயின், உன் சம்மதத்தைக் கோராமல் உனது மனைவியைத் தூக்கிப்போவேன்" என்றனன்.

அலிகுலிபெக்:—நாக்கை அடக்கிப் பேசு. இல்லையேல் உன் தலையை வேறுபடுத்தி, நாய் நரிகளுக்கு உணவாக எறிவேன்.

குத்புதீன், "புருஷனைப்போற் சண்டைக்குத் தயாராயிரு. வீணிலேன் பிதற்றுகின்றாய்? வா வெளியே பார்க்கலாம் உனது சாமர்த்தியத்தை" எனப் பகர்ந்து, குத்புதீன் வீட்டிற்கு வெளியே சென்று தன் வாளை உறையினின்றுங் கழற்றினான். பிறகு கேட்பானேன்,

இருவரது வாட்களும் பளபளவென ஜ்வலித்து ஒன்றோடொன்று சந்தித்தன. ஒரு கொடிப்பொழுதில் அலிகுலிபெக் தன் வாளைக் குத்புதீனது ஸ்தூல சரீரத்திற்குள் நுழைத்தான். உடனே "சுடுங்கள்! சுடுங்கள்!" என உரக்கக் கத்திக்கொண்டே குத்புதீன் கீழே விழ, அருகிலிருந்த சிப்பாய்கள் அலிகுலிபெக்கின்மீது ஒருமித்துத் தமது துப்பாக்கிகளைப் பிரயோகித்தார்கள். அலிகுலிபெக் கொஞ்சமேனும் பீதியடையாது முன் சென்று, அச்சிப்பாய்களில் ஒருவனை ஒரே வீச்சில் யமபுரிக்கு அனுப்பினான். அலிகுலிபெக்கின் உடலை எண்ணிறந்த குண்டுகள் துளைத்தன. பல துப்பாக்கிகளுக்குமுன் ஒரு வாள் யாது செய்ய இயலும்? இவனது அங்கத்தில் பலமிருக்கும்வரை அவர்களை எதிர்த்து விரட்டினான். 'ஒவ்வொருவனாக என்னெதிரில் வாருங்கள்' எனக் கூவினான், ஆனால் ஒருவனுக்கேனும் அவன் முன் வரத் தைரியமுண்டாகவில்லை. அவர்களது துப்பாக்கிகளினின்றும் ஓர் குண்டு அலிகுலிபெக்கின் மார்பைத் துளைக்க, குத்புதீனுக்கருகில் கீழே விழுந்தான். இதைக்கண்ட குத்புதீன், "மித்ரா! நான்—என்—காரியத்தை—செய்தேன், என்னை க்ஷமிப்பாய்" எனப் பகர, அவனது பிராணனும் பிரிந்தது.

அலிகுலிபெக் "பாதகமில்லை—நமது—சிநேகம்—நிலைத்திருக்கிறது" எனச் சொல்லிக்கொண்டே உயிர் நீத்தான்.

இத்துக்க சமாசாரத்தைப் பாதுஷாவிற்குத் தெரிவிக்க அச்சிப்பாய்களிலொருவன் விரைவாக ஓடினான். சிலர் அம்மூன்று பிரேதங்களையும் சுற்றி, பாதுஷாவின் ஆக்ஞையை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். தன் கணவனது மரணத்தை அறிந்த மேஹர் அலறினாள், கதறினாள், பிரலாபித்தாள். அவளது முகஞ் சிவந்தது. அழுது அழுது கண்கள் குழிவுபட்டன. அக்கம்பக்கத்திலுள்ள ஸ்திரீகள் அவளைச் சுற்றித் தேற்றி நின்றார்கள்.

(தொடரும்.)

நகர வாழ்க்கை.

(ஸ்ரீமதி சிவப்பிரியை)

முன்காலத்தில் இருந்த நமது முன்னோர்கள் கிராமாந்தரங்களில் கிருஷித் தொழிலைக் கைக்கொண்டு 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்றபடி உறவினர்களெல்லாரும் ஒரே குடும்பமாகவும், ஒருவர்க்கொருவர் உதவியாகவும், ஆடவரும் பெண்டிரும் மனமொத்துச் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் வசித்துவந்தார்கள். அவர்களுடைய முக்கியமான கொள்கை என்னவென்றால் 'அறஞ்செய விரும்பு' என்று ஔவையார் அருளியபடி பசி என்று வந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் அன்னமிடுவதும், பிறருக்கு உபகாரம் செய்வதும், நித்திய கர்மானுஷ்டானங்களைத் தவறாமல் செய்வதும், விவசாயத் தொழிலை விருத்திக்குக் கொண்டுவருவதும், 'இல்லறமல்லது நல்லறமன்று' என்ற கொள்கையைத் தழுவி இல்லறத்திலிருந்துகொண்டு இம்மை மறுமைப் பயன்களுக்கு வேண்டியதைச் செய்துகொள்வதுமாகச் சௌக்கியமாகக் காலங் கழித்தார்கள். முன்காலத்தில் எவ்வளவு ஏழ்மை ஸ்திதியிலுள்ளவர்களுக்கும் இருக்க வீடும் அரைவயிற்றுச் சாப்பாட்டுக்காவது வேண்டிய பூமியும் இல்லாமலிருப்பது மிகவும் அபூர்வமாக இருந்தது. தற்காலத்திலிருக்கும் நவீன நாகரிகர்கள் கிராமங்களிற் போயிருந்து விவசாயத் தொழிலைப் பார்ப்பது மிகவும் அகௌரவமென்

றும், உத்தியோகம் செய்து பிழைப்பதுதான் கௌரவமென்றும் நினைத்துச் சொல்ப நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்களும் அதை ஒன்றுக்குப் பாதியாக விற்றுப் ப்டித்துவிட்டு வேலை கிடைக்காமல் ஜீவனத்துக்குத் திண்டாடுகிறார்கள். முன்னோர்கள் தேடி வைத்திருக்கும் சொத்துக்களை வைத்துக்கொண்டு நகரவாசங்களில் வாசஞ் செய்யும் பிரபுக்களுக்கு அறுவடை காலங்களில் கிராமங்களுக்குப் போய் வசூல் செய்வதுகூடக் கஷ்டமாயிருப்பதனால் மேன்பார்வை பார்க்க ஏஜெண்டுகளை நியமித்துவிடுகிறார்கள். ஆகையினால் இவர்களுக்கு விவசாயம் என்பது என்னவென்றுகூடத் தெரியாமல் அவர்கள் கொடுத்த வரும்படியை வாங்கிக்கொண்டு நகரங்களில் வரவு ஒரு பங்கும் செலவு நாலு பங்குமாகச் செலவு செய்து சீக்கிரத்தில் முன்னோர்கள் எவ்வளவோ பாடுபட்டுத் தேடித் தமது அருமை மக்களுக்கு வைத்திருந்த சொத்துக்களைப் பறக்கவிட்டுப் பரிதபிக்கிறார்கள். என்னே நகர வாசத்தின் நாகரிகம்! மேனாட்டைப் பார்த்து நமது நகரங்களிலும் அனாவசியமான செலவுகளை உண்டாக்கக்கூடிய ஆடல் பாடல்களையும் விளையாட்டு வினோதங்களையும் உண்டாக்கி விடுகிறார்கள். கிண்டி குதிரைப் பந்தயத்தினால் ஏழைமுதல் தனவந்தர் வரை கெட்ட குடும்பங்கள் எத்தனையோ! அதைச் சிலவருஷங்களாகச் சில கல்விமான்கள் தடுக்கப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்க, அயலூர்களில் நடக்கும் பந்தயத்திற்குப் பந்தயம் சென்னையிலிருந்தே கட்டுவதற்குச் சில நாகரிகர்கள் கிளப்புகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். என்னே இவர்களுடைய பேராசை! நெற்றி வேர்வை நிலத்தில் விழ வேலை செய்து கூலி கேட்டால் கொடுக்க மனம் வராத பிரபுக்கள் அரைமணி நேரத்தில் ஆயிரமாயிரமாகச் சம்பாதிக்க வழி தேடுகிறார்கள். நமது முன்னோர்கள் ஆடவர், பெண்டீர், பாலர் முதலிய எல்லோருடைய தேகப் பயிற்சிக்கும் ஒருவருடன் ஒருவர் கூடி சம்பாஷிப்பதற்கும் எல்லாவற்றிற்கும் காரணகர்த்தாவாய் விளங்கும் கடவுளை ஒற்றுமையுடன் தொழுவதற்கும், கோவிலென்றும் குளமென்றும் பொதுவில் ஏற்படுத்திக்கொண்டது எவ்வளவு போற்றத்தக்கது. அதற்குப் பதிலாக தற்காலத்தில் வசிக்கும் நாகரிகர்கள் கிளப், சங்கம், சபை என்று ஏற்படுத்திக்கொண்டு பணம் வைத்துச் சீட்டாடுவதும், வேலை செய்யும் நேரம், விளையாட்டு நேரம் என்ற பேதமில்லாமல் சாப்பாட்டுக்கு, இருக்க வசதிக்கு எல்லாம் ஏற்பாடு செய்துகொண்டு அங்கேயே வசிக்க ஆரம்பித்துவிடுகிறார்கள். இன்னும் அனாவசியமான செலவுகளுக்குக் காரணமாக நகரங்களில் அனேகவிதமான சீமைச் சாராயங்களை வருவித்து விற்கும் அநேக ஹோட்டல்களும், சினிமா, தியேட்டர், பார்ஸி டிராமா முதலிய நாடகங்களும், அடிக்கொரு வெற்றிலை பாக்கு சுருட்டுக்கடைகளும், கணக்கிலடங்காமல் இருக்கின்றன. பஞ்ச மகா பாதகங்களில் மூவகையாகிய கட்குடி, காமம், சூது என்ற மூவகைகளும் தற்கால நாகரிகத்தில் விருத்தியாகி இருக்கின்றன. இதனால் நகரங்களிலிருக்கும் நாகரிகர்கள் குடும்பம் என்பதை மறந்து, மனைவியின் அன்பு, மக்களுக்குச் செய்யவேண்டிய கடமை, பெற்றோர்களைப் பேணுதல், பெரியோர்களுக்குக் கீழ்ப்படிதல் ஒன்றுமில்லாமல் 'மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்ற நீதிமொழியை மறந்து தானே அநுபவித்தால் போதுமென்று நினைத்து மனம்போனபடி போகிறார்கள். இவர்களை விவாகம் செய்துகொண்டு பதியே தெய்வமென்றெண்ணியிருக்கும் நமது இந்தியப் பெண்மணிகள் எவ்வளவு சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருப்பார்கள் என்பதை இதைப் படிக்கும் சகோதர சகோதரிகள் அறிந்துகொள்வார்களாக! இதனால் நகரங்களி

லிருக்கும் ஸ்திரீகள், குழந்தைகள் அநேக வியாதிகளுக் கிருப்பிடமாய் தோலும் எலும்புமாகவும், சுறுசுறுப்பு, முயற்சி ஒன்றுமில்லாமலும் நடைப்பிணங்களாக நடந்துகொண்டு, கேட்பாரின்றி, காப்பாற்றுவாரற்று சில வேளைகளில் அகால மரணங்களுக்கும் ஆளாகிறார்கள். தேச முன்னேற்றம், சீர்திருத்தம், ஸ்திரீகளின் முன்னேற்றம் எல்லாவற்றிற்கும் உழைக்கும் சகோதர சகோதரிகள் நகரவாசங்களில் நடக்கும் அனாவசியமான செலவுகளையும் கெட்ட பழக்க வழக்கங்களையும் தடுக்கிறதற்கும், ஆடம்பரமற்ற வாழ்க்கையைப் போதிப்பதற்கும் ஏற்பாடு செய்தால் நமது இந்தியா பூர்வீக இந்தியாவாக மாறிவிடும். பெற்றோர்களாக இருக்கப்பட்டவர்கள் ஏழைகளானாலும் தனவந்தர்களானாலும் தமது மக்களுக்கு 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற பழமொழிப்படி குழந்தைகளிலிருந்தே குடும்பத்தைப் பாதுகாக்கவும், பிறர் கஷ்டமறிந்து உதவிசெய்யவும் தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ளவும், ஆடம்பரமற்ற வாழ்க்கையையும் கற்பிக்கவேண்டியது பெற்றோர்களின் கடமை. நமது புராதன நாகரிகத்தைவிட்டு ஒன்றுக்கும் உதவாத மேனாட்டு நாகரிகத்தைக் கைக்கொண்டு நிற்கும் நமது மாந்தர்களுக்கு நல்ல புத்தியைப் புகட்டும்படி எல்லாம் வல்ல கடவுளைத் துதிப்போமாக!

பன்றியின்முன் வைக்கப்பட்ட நல்முத்து.

(காவேரிக்கரையில் பிறந்தவள்.)

1.

"சரிதாண்டி! வாயை மூடிக்கொள். வயது பத்தாகிறது. தடியாபிள்ளையைப்போல் திரிவதும் வம்பளப்பதும்தான் உனக்கு வேலை. பத்தைத் தேயடீ! போடீ" என்றாள் பாகீரதி.

கமலம் பத்தைத் தேய்த்துக்கொண்டே "அம்மா! நீ என்னமோ நம்பமாட்டேன் என்கிறாய். நேற்றுக்கூட காவேரிக்கரையில் அலமேலு மாமியார் அலமேலுவைப்பற்றி ரொம்ப வைதுகொண்டிருந்தாள். அவளுக்கு நாட்டுப் பெண்பேரில் இருக்கும் துவேஷம் சொல்லவே முடியாது."

"பாபம்! அவள் தகப்பனார் கலியாணத்திற்குச் செய்த சீர் கணக்கேயில்லை. ஏழை என்று தன் பெண்ணை ஏளனம் செய்வார்கள் என்று பயந்து அவர் வெள்ளிச் செம்பு, வெள்ளிக் குத்துவிளக்கு..." என்று பாகீரதி சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே கமலம் நடுவில் தடுத்து, "வெள்ளிதானே! பட்டணத்தில் இப்பொழுது எல்லாம் தங்கக்கூடை, தங்கவிளக்கு, எல்லாம் தங்கம்தான்" என்றாள்.

பாகீரதி, "சரிதாண்டி, உனக்கு வயதானதற்கு வாய்தான் இருக்கிறது. பெரியவாள் பேசுகிறார்களே என்பது கிடையாது. நடுவில்தடுத்து ஏதோ சொல்லுகிறாய். பத்தைச் சரியாய்த் தேய்" என்று சொல்லிக்கொண்டு குடத்தை எடுத்துக்கொண்டாள். கமலத்திற்குத் தானும் காவேரிக்குப் போகவேண்டும் என்று ஆவலுண்டாயிற்று. "அம்மா! நான் காவேரியில் வந்து பாத்திரம் தேய்க்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு பாத்திரங்களை எடுத்துக்கொண்டு தாயாருடன் புறப்பட்டாள்.

"காவேரிக்குக் கமலத்தை அழைத்துப் போகாதே" என்று கமலத்தின் பாட்டி கூடத்திலிருந்து சொன்னாள்.

"இல்லை, பாட்டி! பத்துத் தேய்க்கப் போகிறேன்" என்றாள் கமலம்.

"உங்கம்மா தேய்த்துக்கொண்டு வருவாள். வேம்புவின் அகமுடையாள் காவேரிக்குப் போகிறாள். நீ அங்கே போய் வம்பளந்து கொண்டு நிற்பாய். அவள் உன்னை வாயாடி என்று தன் பிள்ளைக்குக் கலியாணம் பண்ணிக் கொள்ளமாட்டாள்" என்று காரணங்கள் கூறி முடித்தாள் பாட்டி.

"நான் அவனைக் கலியாணம் பண்ணிக் கொள்ளமாட்டேன். அவன் விகாரமாயிருக்கிறான்" என்று கமலம் அடங்காத் துக்கத்துடன் மூலையில் உட்கார்ந்து அழத் தொடங்கினாள்.

விளையாடுங் கமலம் அழுவதைக் கண்டு பாகீரதி "இந்தக் கலியாணம் கமலத்திற்குப் பிடிக்கவில்லை. அவள் தகப்பனுருக்குத் தெரிவிக்க வேண்டும்" என்று எண்ணிக்கொண்டே காவேரிக்குச் சென்றாள். கமலமோ பின் தொடரவில்லை. அந்த விகார மனிதனுக்கே தன்னை விவாகம் செய்து கொடுத்தார்களானால் என்ன செய்வது என்று துக்கத்துடன் அவள் அழுதவண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

2.

சாம்பசிவய்யர் தனது அருமை மகளாகிய அலமேலுவுக்குக் கலியாணம் செய்த நாள் முதல் தன் மகளைப்பற்றிக் கவலைப்படலானார். தனது மருமகன் தாயார் சொல்வதைக் கேட்டு மனைவியை ஒவ்வொரு தினமும் அடிக்கிறான் என்ற விஷயம் அவர் காதில் விழுந்து கொண்டேயிருந்தது. தன் மனைவி இறந்தது அவள் அதிர்ஷ்டமே என்றெண்ணினார். பெண் கஷ்டப்படுவதைப் பார்ப்பதைவிடத் தாயாருக்கு வேறு நரகவேதனை என்ன இருக்கிறது?

இவர் ஒரு நாள் இரவு சாப்பாடானதும் வாசல் திண்ணையில் வந்துட்கார்ந்தார். அவர் பிள்ளைகள் இருவரும் வெற்றிலைப்பெட்டியுடன் தந்தையருகில் வந்துட்கார்ந்தார்கள். அவரது மூத்த மகனாகிய ராமமூர்த்தி நில வருமானத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தான்.

சாம்பசிவய்யர்:—ராமமூர்த்தி! நாகஸ்வாமி ஒரு நாளாவது அலமேலுவை அடிக்காமல் இருக்கிறானோ? எனக்கு வேறொரு விஷயத்திலும் புத்தி செல்லவில்லை.

ராமமூர்த்தி:—என்ன செய்யலாம் அப்பா! அவள் தலைவிதி; குழந்தை பிறந்தால் ஒரு வேளை அவள் கஷ்டங்கள் விடியும்.

"என்னமோ, உங்களுக்கு எல்லாம் நான் சொன்னால் தெரிவதில்லை. அவளை இங்கு அழைத்து வந்துவிட்டால் என்ன?" என்றான் அவரது சிறிய மகனாகிய விசுவநாதன்.

"விசு! உனக்கு என்ன தெரியும்? ஸ்திரீகளுக்குப் பிறந்தகத்தில் இருப்பது எளனமான நிலைமையன்றோ? எவ்வளவு உபத்திரவங்கள் இருந்தாலும் புருஷன் வீட்டில்தான் இருக்க வேண்டும்" என்றார் சாம்பசிவய்யர்.

விசு.:—ஆமாம், நீங்கள் என்னமோ அதையே திருப்பித் திருப்பிச் சொல்லுகிறீர்கள். அவளுக்குக் கொஞ்சம் சொத்து எழுதி வையுங்கள்.

ராம.:—விசு! அவள் கலியாணத்திற்கு வேண்டாத சீர்கள் எல்லாம் செய்து சொத்தை நாசம் பண்ணியது போதாதா?

சாம்ப.:—என்னமோ, ராமமூர்த்தி எப்பொழுதும் என்மீது குற்றங் கூறுகிறான். அலமேலுவின் மாமியாரைத் திருப்தி பண்ணுவதற்காக நான் சீர் அதிகம் செய்தேன். அவள் எனக்குச் சரியான புத்தி கற்பித்தாள். துர்க்குணமுள்ள ஸ்திரீயை திருப்தி பண்ணுவது முடியாத காரியம்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, நாலைந்துபேர்கள் இவர்கள் வீட்டை நோக்கி ஓடிவந்தார்கள். "சாம்பு, ராமமூர்த்தி! ஓடிவாருங்கள்! கதவைத் தாளிட்டுக்கொண்டு முற்றத்தில் அலமேலுவை நாகஸ்வாமி அடிக்கிறான். சீக்கிரம் ஓடிவாருங்கள், கொல்லுகிறான்" என்று எல்லோரும் ஏக சத்தத்துடன் சொன்னார்கள்.

இதைக் கேட்டதும் தகப்பனும் சகோதரர்களும் காற்றைப்போல் வேகமாய் ஓடி அடுத்த தெருவிலுள்ள அலமேலுவின் வீட்டிற்குச் சென்றார்கள்.

3.

"சமாசாரத்தைக் கேட்டயோ?" என்று சொல்லிக்கொண்டே கமலத்தின் தகப்பனார் நாணு சமையலறைக்குள் நுழைந்தார். "என்ன விசேஷம்?" என்றாள் பாகீரதி.

"நேற்றிரவு நாகஸ்வாமி தன் மனைவியைக் குற்றுயிராக அடித்தானும். சாம்புவும் அவர் பிள்ளைகளும் சுவரேறி முற்றத்தில் குதித்து, அலமேலுவை வீட்டிற்கழைத்துப் போனார்களாம்! பாபம்!" என்றார் நாணு. இதற்குள் அவர் தாயார் உள்ளே நுழைந்து, "ஐயோ! பாபம்! அலமேலுவின் விதி இப்படியா இருக்க வேண்டும். ஜானகி இருக்கிறாளே (அலமேலு மாமியார்) மகாபாபி. அவள் எந்த நரகத்திற்குப் போவாளோ?" என்று அங்கலாய்த்தாள்.

"நாணு, நாணு!" என்று வாசலிலிருந்து சாம்பசிவய்யர் குரல் கேட்டது. "இதோ வந்தேன்" என்று நாணு வேட்டியை இடுக்கிக் கொண்டு வாசலில் ஓட்டமாக ஓடிவந்தார். அவர் தாயாரும் வாசல் திண்ணையில் ஓர் ஓரமாய் வந்துட்கார்ந்தாள். அவர் மனைவி ரேழிக் கதவிடுக்கில் வந்து ஆவலாய் நின்றாள்.

நாணு:—சாம்பு! உட்கார். என்ன செய்வது! நம்மாலாவதொன்றுமில்லை.

சாம்பு:—நாணு! நான் என்ன செய்யப்போகிறேன்! இனி என் பெண் கதியென்ன? (என்று கண்ணீர் விட்டார்).

நாணு:—நீ மாப்பிள்ளையைச் சமாதானம் பண்ணிப் பெண்ணைக் கொண்டுபோய்விடு. தாயாருமற்ற அவள் எங்கிருப்பாள்? பாபம்!

சாம்பு:—உனக்கு விஷயம் தெரியாது. அவன் தன் மனைவி வியபசாரி என்கிறானே.

நாணு:—என்ன! எனக்குப் புரியவில்லையே.

சாம்பு:—மாமியார் ஸ்னானம் செய்துகொண்டிருந்தாளாம். நாகஸ்வாமி வெளியே போயிருந்தானும். வாசற் கதவு தட்டுகிற சத்தம் கேட்டு அலமேலு கதவைத் திறக்க, மூன்றும் வீட்டு ராமு 'நாகஸ்வாமி இருக்கிறானோ?' என்று கேட்டானும். 'இல்லை, வெளியே போயிருக்கிறார்' என்று பதில் சொல்லிவிட்டு உள்ளே வந்தாளாம். இது காதில் விழுந்த மாமியார் பிள்ளை வந்ததும் 'ராமு வந்ததும் நாலு நாழிகை அவனோடு ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்' என்று அவனிடம் ஒன்றுக்கு மூன்றாய்ச் சொல்லிக் கொடுக்கவே, அவன் தாயார் வாக்கைப் பிரமாணமாக எண்ணி அவளை அடித்தான். நாங்கள் இன்னும் கொஞ்சநேரங் கழித்துப்போயிருந்தால் அலமேலு இறந்தேபோயிருப்பாள்.

நாணுவின் தாய்:—ஜானகிக்கு (அலமேலுவின் மாமியார்) இம்மாதிரிச் சண்டை மூட்டுவதில் வெகுப் பிரியம் உண்டு.

சாம்பு:—நீங்கள் ஒருவரிடமும் சொல்லவேண்டாம். அலமேலு என்னிடம் சொல்லவே ரொம்ப பயப்பட்டாள். நீங்கள்தான் கொஞ்சம் தயவுசெய்து ஒருவரிடமும் சொல்லாமல் இருக்கவேண்டும். அவர்கள் அப்புறம் அவளை நிச்சயம் சேர்த்துக்கொள்ளார்கள்.

திண்ணை மூலையில் பேசாமல் ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். அவன் சாம்பு கடைசியாகச் சொன்ன வார்த்தையைக் கேட்டதும் தாங்க முடியாத கோபங்கொண்டான். "வெகு அழகாயிருக்கிறது! அநியாயமாய் ஒரு பெண்ணை அடித்தாலும். அவனிடம் மறுபடியும் அந்தப் பெண்ணைக் கொண்டுவிடவேண்டுமாம். அப்பெண்ணை அவனிடம் கொண்டுவிடுவதைவிட அக்கிராதகனை அடித்துக் கொலை செய்து சாக்கில் மூட்டையாகக் கட்டிக் காவிரியில் தள்ளிவிட்டால் என்ன?" என்று ஆவேசங்கொண்டவன்போல் கர்ஜித்தான்.

எல்லோரும் 'சிவசிவ' என்று காதைப் பொத்திக்கொண்டார்கள்.

நாணு:—ராமநாதா! சிறுபிள்ளைத்தனமாகப் பேசாதே. உனக்கு என்ன தெரியும்? (என்று கண்டித்துவிட்டு சாம்புவைப் பார்த்து) இவன்தான் திருச்சியிலிருக்கும் என் தமையன் மகன் (என்று அறிமுகமாக்கினார்.)

சாம்பு:—ராமநாதா! மாப்பிள்ளையைக் கொலை பண்ணிவிட்டால் மகள் கைம்பெண்ணாய் விடுவாளே. அவள் தமையன் வீட்டிலிருப்பது எவ்வளவு சண்டைகளை உண்டாக்கும் தெரியுமா? புருஷன் வீட்டில் அவள் வேலைக்காரியாகவாவது இருப்பதே உத்தமம்.

ராமநாத:—ஆனால் அவனிடம் சென்று காரணத்தை வெளியிடவேண்டும்.

சாம்பு:—அவன் தாயார்மேல் குற்றமாய் அவனிடம் எப்படிச் சொல்வது? எப்படியும் அலமேலு மாமியாரின்மேல் தூஷணைகளைப் போட்டால் அவன் அலமேலுவை ஏற்றுக் கொள்வானோ? அவள் தயவைச் சம்பாதித்துக்கொண்டால்தான் அந்த வீட்டில் குடித்தனம் செய்யலாம். நாகஸ்வாமி தாயார் சொல்வதைத் தவிர வேறு யார் என்ன சொன்னபோதிலும் கேட்கமாட்டான். அலமேலுவின் தன்மையை அவன் அறியான். அவளுடன் என்றைக்காவது பிரியமுடன் பழகினானோ? எப்பொழுதும் தாயார் வார்த்தையைக் காதில் வாங்கிக்கொண்டு மனைவியை அடிப்பான்.

நாணு:—ராமநாதா! நீ பேசாமல் இரு. காவேரிக்குப்போய்ச் சந்திபண்ணிவிட்டுவா.

அவனும் அரைச்சம்மதமாய் எழுந்திருந்தான். போகும்பொழுது "சிற்றப்பா! வேம்பய்யர் மகனுக்குக் கமலத்தைக் கொடுத்து விவாகம் செய்தால் இப்படித்தான் நடக்கும். அவன் தெருவில் போகும் பன்றிகள், நாய்கள், கோழிகள் முதலியவைகள்மேல் கற்களை விட்டெறிந்து அவைகள் வேதனையைக் கண்டு சந்தோஷிக்கிறான். வீதியில் பதுங்கிப் பதுங்கிச் செல்லும் பறையர்களின் சட்டிகளைக் கற்களால் உடைப்பதும், அவர்கள் மனைவிகளை ஆபாசமாகப் பரிகசிப்பதும்தான் இருபத்தைந்து வயதுக் காளையாகிய அவனுக்கு வேலை. வேலையேயில்லாத ஒரு மூட மனிதன் வேறு என்னதான் செய்வான்?"

நாணு, "சரிதான், சந்தி பண்ணிவிட்டுவா" என்று அவனை அவ்விடமிருந்து அப்புறப்படுத்தினார்.

நாணு (ராமநாதன் கண்ணுக்குத் தெரியும் வரையில் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு) "பையன் நல்ல குணசாலி. ஏதோ இந்தக் காலத்திற்கேற்றாற்போல அசட்டுத் துணிச்சலுடன் பேசுகிறான்" என்றார்.

சாம்புவோ கண்களை மூடிக்கொண்டு தனது மகள் ஈனஸ்வரத்துடன் மேலெல்லாம் ரத்தம் வழிந்து அடியுண்ட காட்சியைத் தன் கண்ணெதிரே நிற்பதுபோல் எண்ணினார். மெய் சோர்ந்து மயக்கங்கொண்டார். நாணு, தனது நண்பர் சந்தோஷமாயிருக்கக்கூடாதே!...

என்று பரிதாபங்கொண்டாராயினும் கஷ்டத்தையே அறியாதவர் ஆதலால் இப்பொழுது சாம்பு இருந்த நிலை அவருக்கு வெறுப்பை உண்டுபண்ணிற்று. கண்களை மூடிக்கொள்வானேன் என்று ஒருவிதக் கோபமும் கொண்டார். அநுபோகம் நிறைந்த அவர் தாயாரோ சட்டென்று உள்ளே போய் ஒரு பாத்திரத்தில் மோர்த் தீர்த்தம் கொண்டுவந்து நாணுவிடம் கொடுத்து "ஐயோ பாபம்! பெற்ற தந்தையல்லவா, அவர் வயிறு எப்படி எரிகிறதோ, இதைக் கொடு" என்றாள். நாணு சாம்புவை உபசரித்து மோர்த் தீர்த்தத்தைக் கொடுத்தார். அவர் மோரை ஆவலுடன் அருந்திவிட்டு "போய்வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டு வீட்டிற்குப் போய்விட்டார்.

நாணு, ராமநாதன் வேம்பய்யர் மகனைப்பற்றிச் சொல்லியதையும், தனது மனைவி கமலம் அழுகிறாள் என்று சொன்னதையும் நெடுநேரம் யோசித்துப் பிறகு தனது மகளுக்கு வேறு வரன்தேட நிச்சயித்துக்கொண்டார்.

3.

"எண்டா! நீ கெட்ட கேட்டிற்கு" என்று ராமமூர்த்தியின் தர்ம பத்தினியாகிய சீதா தனது ஆறு வயதுள்ள தனது சீமந்த புத்திரனின் முதுகில் அடிமேல் அடிவைத்துக்கொண்டிருந்தான். "நீ இருக்கிற இருப்பிற்கு" (மறுபடியும் இரண்டடி), "உனக்கிருக்கும் ஆஸ்திக்கு" (மறுபடியும் இரண்டடி), "உங்கப்பன் இருக்கிற சவரணைக்கு" (வாசற்பக்கம் பார்த்துக்கொண்டே நான்கடி சேர்ந்தாற்போல் வைக்கிறாள்.) "நீ ஏன் என் வீட்டில் வந்து என் குடியைக் கெடுக்கிறாய்? நீ இருக்கவேண்டிய இடத்தில் இருப்பதற்குக் கேடென்ன?" (சமையலறையில் இருக்கும் அலமேலுவைப் பார்த்துக்கொண்டு அடி சாமாரியாகப் போடுகிறாள்). "என் வீட்டில் வந்து என் குடியைக் கெடுக்கப் பார்க்கிறாயே. என் குழந்தைகள் வாயில் மண்ணைப் போடப் பார்க்கிறாயே! உன்னை அடித்தால் என்ன?" (அடி ஓயாமல் விழுகிறது.) "உடனே அப்பனுடன் இங்கே வரவேண்டுமோ? என் குடியை அதம் செய்ய வேண்டுமோ? நீ நாசமாய்ப் போக" (அடி ஓயாமல் விழுகிறது) "புருஷன் வீட்டிலிருப்பதற்கென்ன கேடு?" (சீதாவுக்கு எப்பொழுதுமே குரலில் நாலைந்து ஸ்வரங்கள் உண்டு. இப்பொழுது பத்து ஸ்வரங்கள் உண்டாய்விட்டன.) "நீ இன்னம் எத்தனை நாள் என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளப்போகிறாய்? பிள்ளையில்லா வீட்டுச் சொத்தா இது?" (அடி சாமாரியாய் விழுகிறது.) "என்னையும் என் குழந்தைகளையும் சந்தியில் நிறுத்தினால்தான் உன் மனம் சந்தோஷமடையுமோ? நானும் என் குழந்தைகளும் செத்தபிறகுதான் உனக்குத் திருப்தி உண்டாகுமோ?" (அடி நிறுத்தாமல் போடுகிறாள். ராமமூர்த்தி உள்ளே வருகிறான்.) "சரிகை மேல் வேஷ்டி போட்டுக் கொண்டிருக்க உமக்கு வெட்கமில்லையா! குழந்தைகள் வாயில் மண் விழுவதைப் பார்த்தும் உமக்குத் தடுக்கத் தைரியமில்லையே" என்று புருஷன்மேல் சீறினாள். குழந்தை தப்பித்துக்கொண்டு ஓடிப்போய்விட்டது. அது போகும்பொழுது தன் விரல்களால் ஏற்பட்ட தழும்புகளைக் கண்டதும் சீதா முகத்தில் முந்தானையைப் போட்டுக்கொண்டு அழ ஆரம்பித்தாள். "ஐயோ குழந்தை சாகத் தெரிந்தானே! என் அருமைக் குழந்தையைக் கொலைபண்ணினால்கூட அவளுக்குத் திருப்தி ஏற்படாதோ?" (புருஷனை நெருங்கி) "உமக்குத் திருப்தியா?" என்று கர்ஜித்தாள்.

ராமமூர்த்தி தனது இல்லற சுகத்திற்கு இடையூறாக இருக்கும் தங்கையை நொந்து கொண்டான். மனைவி குழந்தைகளை அடித்துக் கொண்டிருக்கும்பொழுது இவன் சாதாரண

மாய் உள்ளே நுழையவேமாட்டான். ஆனால் இன்று குழந்தையின் முதுகிலுள்ள தோல் உரிந்துவிடும் என்ற அச்சத்தால்தான் இவன் தைரியமாய் உள்ளே நுழைந்தான். "அலமேலுவைப் புருஷன் வீட்டிற்குக் கொண்டுவிட ஏற்பாடு செய்கிறேன். வீணாய் வருத்தப்படாதே" என்று சாந்தமாய்ச் சொன்னான்.

"ஏற்பாடு வேறா? ஏற்பாடு என்ன வேண்டியிருக்கிறது? புருஷன் வீட்டிற்கு அழகாகச் சீருடன் செல்லப்போகிறாளோ? இருட்டிய பிறகு ஒருவர் கண்ணிலும் படாமல் அவர்கள் வீட்டுக் கொல்லையில் தள்ளிவிட்டு வந்தால் போயிற்று. ஏற்பாடாம்! ஏற்பாடு!" (முகத்தில் முந்தானியைப் போட்டுக்கொண்டு மறுபடியும் அழுதுகொண்டு) "ஐயோ! என்னைத் தாயாரும் தகப்பனாரும் வெகு செல்வமாக வளர்த்துக் கடைசியில் குழியில் தள்ளினது போல் இங்கே தள்ளினார்களே! எனது அருமையை அறிபவர் இங்கொருவருமில்லையே. யாருமற்ற அனாதையாகிய என்னைக் கண்டு இரங்குபவர் இங்கொருவருமில்லையே. பெண் என்றால் பேயுமிரங்கும் என்பார்களே. ஐயோ! இத்துக்கம் என்னால் தாங்கமுடியவில்லையே. நான் கூடிய சீக்கிரத்தில் இறந்து போய்விடுவேன், பிறகு என் குழந்தைகள் கஷ்டப்படுமே" (பலத்த விசிப்பும் கண்ணீரும்). "நான் என்ன பாபம் போன ஜனமத்தில் செய்தேனோ தெரியவில்லையே" என்று பிரலாபித்தாள். தன் எதிரே நிற்கும் புருஷன் வாயைத் திறவாமல் இருப்பதைக் கண்டு வீராவேசங்கொண்டு, "உமக்கு இரக்கம் என்பது கொஞ்சங்கூட இல்லையே. நான் இறந்து குழந்தைகள் கஷ்டப்பட்டால் உமக்கு சந்தோஷந்தானே?" என்று கதறினாள்.

ராமமூர்த்தியோ தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டான். பதில் சொன்னால் அவளுக்குக் கோபம் தணியுமோ? சொல்லாது போனால் கோபம் தணியுமோ? இரண்டும் புரியவில்லை. பிறகு "இருந்திருந்தி முகம் திருத்தி ஈரோடு பேன் வாங்கி" என்ற பாடலை ஞாபகப்படுத்திக்கொண்டானோ என்னமோ, தைரியமாய் மனைவியருகிற் சென்று அவளை முதுகில் அன்புடன் தட்டி "என்ன, சீதா!! நீ இறந்தால் நான் சந்தோஷப்படுவேனோ? கூடிய சீக்கிரத்தில் அலமேலுவைப் புருஷனிடம் கொண்டுவிடுகிறேன்" என்று ஆசையுடன் சொன்னான். அவளுக்கு கோபம், நெய்விடப்பட்ட நெருப்பைபோல் கொழுந்துவிட்டுக்கொண்டு எரிந்தது. "அதுவும் அப்படியா? உங்களுக்குக் கொஞ்சல் வேறா? கொஞ்சலைப்பாரடி அம்மா, வெகு அழகு, நான் இதனால் ஏமாந்து விடுவேன் என்று எண்ணினீர். அவளைக் கொண்டுபோய்த் தொலைத்தாலொழிய என்னால் இங்கு இருந்து குடித்தனம் பண்ணமுடியாது. சதா காலமும் முகத்தைச் சுளித்துக்கொண்டு மூக்கைச் சிந்திக்கொண்டு அவள் இங்கு இருப்பது என் வீட்டிற்கு அசுபமாயிருக்கிறது" என்றாள்.

ராமமூர்த்தியின் பாடு திண்டாட்டமாய் விட்டது. அவளை எவ்விதத்தில் சமாதானப்படுத்துவது? அச்சமயத்தில், கடவுளே இரங்கினதுபோல், ராமமூர்த்தியின் இஷ்ட தேவதையைப்போல், "சாம்பு இருக்கிறாரோ?" என்று கேட்டுக்கொண்டே கமலத்தின் பாட்டி இவர்கள் நின்றிருந்த இடத்திற்கு வந்தாள். உடனே கியாதி பெற்ற நாடகர்களும் பொருமை கொள்ளுமாறு, சீதாவின் முகம் மாறிற்று. அன்பும் புன்சிரிப்பும் முகத்தில் தவழ ஓர் மணைப்பலகையைக் கொணர்ந்து பாட்டியினருகிற் போட்டுவிட்டு, நாணம் மிகுந்து சமையலறைக்குள் நுழைந்து, கதவிடுக்கில் நின்றாள்.

மந்த புத்தியுள்ள ராமமூர்த்திக்குத் தனது அருமை மனைவியைப்போல் இஷ்டமான ரூபம்

கலை தரித்துக்கொள்ள முடியாது. பாட்டியின் புத்திக் கூர்மையையும் குறும்புத்தனத்தையும் நன்கறிந்தவனாதலால் தான் நின்றிருந்த நிலையிலிருந்து பாட்டி நடந்த விஷயங்களை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அறிந்து கொள்வாள் என்று வெகுவாய்க் கூச்சங்கொண்டான். ஒருவாறு சமாளித்துக்கொண்டு பாட்டியைப் பார்த்து "பாட்டி! அப்பா இப்பொழுது தான் வெளியில் போனார்" என்றான்.

பாட்டி, "சரி, உன்னிடமே அவ்விஷயத்தைச் சொல்லிப் போகிறேன். அலமேலு மாமியார் ஊருக்குப் போயிருந்தாளே தெரியுமல்லவா உனக்கு?"

ராம. "ஆம், தெரியும்."

பாட்டி, அப்பொழுது ஒரு பெண்ணைக் கலியாணம் பண்ணி "அங்கேயே விட்டுவிட்டு வந்தாளாம். அந்தப் பெண்ணின் பெற்றோர்கள் நேற்றுதான் அவளை இங்கே கொணர்ந்து விட்டார்கள். அலமேலுவுக்கு ஈச்வரன்தான வழி விடவேண்டும்.

"அலமேலு! நான் என்ன சொல்லப்போகிறேன்? உன் விதி அம்மா, உன் விதி!" என்று கண் கலங்கச் சொல்லிக்கொண்டே வீட்டிற்குப் போய்விட்டாள். சீதா அவள் சென்றதும், "ஆடினாள் பாடினாள், பழ முறத்தாற் சாடினாள், ஓட்டினாள் தெருத் தெருவாய்".

கமலத்திற்கும் டில்லியில் உள்ள ஒரு வாலிபனுக்கும் விவாகமாகி ஏறக்குறையப் பன்னிரண்டு ஆண்டுகள் ஆயின. உடம்பு அசௌக்கியமாயிருக்கும் தனது தகப்பனாரைக் காண தற்சமயம் கமலம் தனது ஊருக்கு வந்திருந்தாள். அவள் ஊருக்கு வந்த சின்னாட்களுக்கெல்லாம் அவள் தகப்பனாரின் தேகத்தில் சற்று குணம் கண்டது. வைத்தியரும், இனி அபாயமில்லை என்று சொன்னார். குழந்தைப் பருவ முதல் தான் நீராடி வந்த காவேரிக்கு ஒரு சிறிய குடத்தை எடுத்துக்கொண்டு கமலம் காவேரிக்குச் சென்றாள். கரையில் நின்றுகொண்டே பிரவாகத்துடனிருக்கும் காவேரியை அன்புடன் நோக்கினாள். தன்னுடன் நெருங்கிப் பழகிய இவ்வளவு அழகிய தோழியாகிய காவேரி இல்லாத டில்லி பாழடைந்த நகரம்போல் அவளுக்குத் தோன்றியது. சாயங்கால வேளையாதலால் ஜன சந்தடி அதிகம் இல்லை.

அதே சமயத்தில் இன்னொரு ஸ்திரீ கையில் ஒரு சிறிய குடமும் இடுப்பில் ஒரு பெரிய குடமும் கொண்டுவந்தாள். வந்தவள் கவலையற்ற கமலத்தைப்போல கரையில் நிற்கவில்லை. ஒரு நிமிஷத்தில் இரண்டு குடங்களிலும் நீரை மொண்டு கரையில் ஏறினாள். ஏறியவள் தற்செயலாய் கமலத்தைப் பார்த்தாள். எதையோ ஞாபகப்படுத்திக்கொள்பவள் போல் கமலத்தை உற்று நோக்கினாள்.

வந்தவள்—"கமலம்! நீதானா? தெருவில் பாண்டி ஆடிக்கொண்டிருந்தபொழுது நான் பார்த்திருக்கிறேன். உன் முகம் அதிகம் மாறவில்லை" என்றாள்.

கமலத்திற்கு பேசியவள் யாரென்று புரியவில்லை. "என் பெயர் கமலம்தான். நீங்கள் யார்?" என்றாள்.

வந்தவள்:—"நீ இப்பொழுது எந்த ஊரில் இருக்கின்றாய்? குழந்தைகள் இருக்கின்றார்களோ?"

கமலம்:—"எனக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றார்கள், நான் டில்லியில் இருக்கின்றேன். தகப்பனாருக்கு உடம்பு சரியாயில்லை, அவரைக் காணத்தான் இங்கு வந்தேன். உங்கள் பெயர் தெரியவில்லையே."

சாந்தமே உருக்கொண்டதுபோல் நின்ற அந்த ஸ்திரீ தன்னைப்பற்றிப் பேசப் பிரியப்பட

வில்லைபோல் தோன்றியது. அவள் கமலத்தை உற்றுப்பார்த்த வண்ணமே, "கமலம்! உனது முகத்தை பார்த்தால் எனக்கு சந்தோஷமுண்டாகிறது. நீ சந்தோஷமாய் ஒரு குறைவுமின்றி இருக்கிறாய் என்பதை அது நன்கு குறிக்கிறது" என்று சொல்லிக்கொண்டே இரண்டடி எடுத்து வைத்தாள். கமலமோ அவளைப் பின் தொடர்ந்து "உங்கள் பெயரைத் தெரிவிக்கக் கூடாதா?" என்று கெஞ்சினாள்.

கஷ்டத்திற்கே பிறந்த அந்த மாது புன்சிரிப்புடன் "அலமேலுவை நீ அறியாயோ?" என்றாள். கமலம் "அழகு வாய்ந்த அலமேலு எப்படி உரு மாறி விட்டாள்" என்று கண்ணீர் விட்டாள்.

அலமேலு:—"கண்ணீர் விடாதே. நான் எவ்வளவு சந்தோஷத்துடன் இருக்கிறேன் என்று நீ அறியாய்".

கமலம்:—"நீங்கள் இப்பொழுது தமையனுடன் தானே இருக்கிறீர்கள்?"

அலமேலு:—"இல்லை, என் மாமியார் இறந்து போனார். அவருக்குச் செய்யவேண்டிய கிரியைகளெல்லாம் பத்தினி சமேதராகத் தான் செய்யவேண்டும். மூத்த பத்தினியாகிய நான் தான் அதற்குரியவள் என்று வைதிகர்கள் சொன்னார்கள். ஆதலால் புருஷன் வீட்டிற்கு வரவேண்டுமென்று என்னை அழைத்தார்கள். என்னை அவர்கள் கிரியைகள் நடந்த பிறகு வீட்டைவிட்டுத் துரத்தாமல் வீட்டிலேயே வைத்துக்கொள்வதாயிருந்தால்தான் அனுப்புவேன் என்று என் தகப்பனார் சொன்னார். அவர்களும் வேறு வழியில்லாமல் அந்த நிபந்தனைக் குட்பட்டு என்னை அழைத்து வந்தார்கள். பதினைன்று வருஷ காலமாக புருஷருடைய சோற்றைத்தான் சாப்பிடுகின்றேன்."

கமலம்:—"ஐயோ! அலமேலு நீங்கள் எப்படி மனதைச் சமாதானம் செய்துகொண்டு சக்களத்தியுடன் வாழ்கிறீர்கள்?"

அலமேலு:—(நகைத்து) "கமலம்! நீ எனது பழைய கதையை முற்றிலும் அறிந்தால் இப்படிக் கேட்கமாட்டாய். முதலில் அறிபால்யப் பருவத்தில் என்னை வெறுக்கும் மாமியினிடமும் புருஷரிடமும் தள்ளினார்கள். அவர்களோ, தங்களால் ஆனவரையில் என்னை ஹிம்சித்துக் கடைசியில் என்னை வெறுக்கும் தமையன் மனைவியிடம் தள்ளினார்கள். தமையன் மனைவிக்கு என்மேல் ப்ரீதி எப்படி உண்டாகும்? என்னால் அவர்களுக்கு வீண் செலவுதானே! எனது வாழ் நாள் கெட்டதுமன்றித் தமையன் வாழ் நாட்களையும் கெடுக்காது, புருஷர் வீடு போகலாம் என்று தகப்பனாரிடம் சொன்னேன். அவரும் அதற்கிணங்கினார். மறுபடியும் புருஷன் வீட்டிற்குத் தள்ளப்பட்டேன். அவருக்கு வாழ்க்கைப்பட்ட மனைவிக்கு என்னைக் கண்டதும் பெரிய பீதி உண்டாய்விட்டது.

"முதல் மனைவியை ஒதுக்கியாய்விட்டது, அவள் இறந்தவள் போலவே" என்று நிச்சயங்கொண்ட அவளுக்கு என்னைக் கண்டதும், தனது அதிர்ஷ்டத்தை விழுங்கும் ஒரு பெரிய சர்ப்பம் என்று என்னைக் கருதினாள். நானும் அவளைத் திருப்தி பண்ணும்பொருட்டு அவளுடைய தாசிக்கும் தாசியானேன். அவள் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்தேன். அவளை எனது யஜமானியாகவும் என் புருஷரை, என் யஜமானியின் புருஷராகவும் கருத முயன்றேன். முதலில் எனக்கு ஆத்திரம், கோபம் முதலிய துர்க்குணங்கள் தோன்றியதுண்மையே. ஆனால் சில காலத்

திற்குப் பிறகு நான் கூட சந்தோஷமாய் இருக்க ஆரம்பித்தேன்."

கமலம்:—"உங்கள் புருஷர் அந்த மனைவியின் மேல் பிரியமாக இருக்கிறாரோ?"

அலமேலு:—"இருக்கிறார், அவளுக்கு இப்பொழுது கண்கள் சரியாகத் தெரிகிறதில்லை. அவர் பிரியமும் இல்லாவிட்டால் அவள் என்ன செய்வாள் பாபம்! இப்பொழுது அவள் கூட என்னைப் பட்சமாக நடத்துகிறாள்."

கமலம்:—"உங்கள் புருஷர்?"

அலமேலு:—"அவருக்கு எப்பொழுதுமே என்மேல் வெறுப்புத்தான். ஒரு வேலைக்காரியைப்போல் தான் எண்ணுகிறார்."

கமலம்:—"அலமேலு! உங்கள் துக்கத்தை ஈச்வரன்தான் ஆற்றவேண்டும்."

அலமேலு:—"கமலம்! ஈச்வரன் இரங்கி, எனது புருஷருக்கு இரண்டு குழந்தைகளைக் கொடுத்திருக்கிறார். அக்குழந்தைகள் நான் வேறு அவர்கள் தாய்வேறு என்று எண்ணுகிறதேயில்லை. அக்குழந்தைகளின் தாயும் என்னுடன் அவர்கள் பிரியமுடன் இருப்பதைத் தடுப்பதில்லை. தவிர கமலம்! எப்பொழுதும் நாம் பழைய துக்கங்களை நினைப்பதும், நாம் இப்படி இருக்க நேரிட்டதே, நாம் அப்படியல்லவோ இருக்க வேண்டும் என்று எண்ணுவதும்தான் நம்மை துக்கத்தில் ஆழ்த்துகிறது. பழைய ஞாபகங்களை அறவே அழிக்க முயல வேண்டும். என் முயற்சி முற்றும் சித்திபெற்றும் ஒவ்வொரு சமயம் மனம் தத்தளிப்பதும் தயங்குவதும் உண்டு. ஆயினும் என்னால் இயன்றவரை சரீரத்தால் உழைத்து, மனதைக் கட்டுப்படுத்துவதே எனது விரதம், போய்வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே வீட்டிற்குப்போய் விட்டாள்.

கமலமோ நெடு நேரம் சிந்தனையுடன் கரையிலேயே நின்றாள். அருகிலிருந்த கோவிலிலிருந்து மணிச் சத்தம் கமலத்தின் காதுகளில் விழுந்தது. "ஸ்வாமீ! இவ்வளவு உத்தமமான ஜீவன் நசுக்கப்படுகிறதே. பன்றியின் முன் வைக்கப்பட்ட நல் முத்தைப்போல் அலமேலு நாகஸ்வாமியை மணக்கவேண்டுமென்று ஏன் விதித்தீர்?" என்று தனக்குள் சொல்லிக்கொண்டே குடத்தில் நீரை மொண்டு வீட்டை நோக்கி நடந்தாள்.

ஒரு ஸ்திரீ துர் அதிர்ஷ்டத்தால், தன்னை விரும்பாத ஒரு மூடனை மணந்தால், அவன் என்ன செய்தும் பொறுத்துக்கொண்டு காலந் தள்ளுவதைத் தவிர, வேறு ஒன்றும் செய்வது கூடாது, அம்மனிதனும் தண்டனைக்குட்படமாட்டான், என்று மனிதனது சுய நலத்தால் ஏற்படுத்தப்பட்ட விதியையல்லவோ நொந்து கொள்ளவேண்டும்! மனைவியின் மீது சர்வாதிகாரமும் பெற்ற புருஷன் அவளை அன்புடன் நடத்தினால், அது அப்பெண்ணின் அதிர்ஷ்டமே அல்லாமல் அவளை வெறுத்து ஹிம்சித்தால் அது அவளுடைய விதியின் கொடுமையே. இதைத் தவிர நமது ஹிந்து சமூகம் வேறெதையும் சொல்லாது.

பாங்கி கானம்.

(காலஞ்சென்ற ஸ்ரீமதி R. பாப்பம்மாள்.)

(458-ம் பக்கத் தொடர்ச்சி.)

கற்பே யணிகலனும் பாங்கி மாரே கற்ற
கல்வி முறை இதுவே பாங்கிமாரே. (க)

காப்பது விரதமடி பாங்கிமாரே கணவன்
கைத்தொண்டு கைலாசம் பாங்கிமாரே. (கா)

கிட்டாத செல்வமதைப் பாங்கிமாரே நித்தம்
கொட்டாவி கொள்ளாதீர் பாங்கிமாரே. (கி)

கீழ்மை தவிரடியோ பாங்கிமாரே என்றும்
கேள்வனடி பணிவீர் பாங்கிமாரே. (கீ)

குலப்பெருமை கொண்டிடுவோம் பாங்கிமாரே குணம்
கொண்டாடும் நம்மிடத்தே பாங்கிமாரே. (கு)

கூறு மறு சாத்திரமும் பாங்கிமாரே இந்தக்
குவலயமும் நாமறிவோம் பாங்கிமாரே. (கூ)

கெடுதல் நமக்கில்லையே பாங்கிமாரே கேள்வன்
கேட்டபடி நின்றிடுவோம் பாங்கிமாரே. (கெ)

கேளாச் செவிவேண்டும் பாங்கிமாரே கேள்வன்
கெட்ட நடை பெப்போதும் பாங்கிமாரே. (கே)

கையிலுனும் பொங்கினைப் பாங்கிமாரே கணவன்
காணு தொழுக்காதிர் பாங்கிமாரே. (கை)

கொடுத்தே யுலகதனிற் பாங்கிமாரே கோபம்
கொள்ளா திருந்திடுவீர் பாங்கிமாரே. (கொ)

கோவிந்தன் கீர்த்தனத்தைப் பாங்கிமாரே கூவி
கூடி நடிப்பமடி பாங்கிமரே. (கோ)

கௌவையகற்றிடுவோம் பாங்கிமாரே காலங்
கண்டு விழித்தமடி மாங்கிமாரே. (கௌ)

இக்கம்ப மினியதமிழ் பாங்கிமாரே இது
என்று மிருக்குமடி பாங்கிமாரே. (க்)

சாஸ்வதியார் பெண்ணடியோ பாங்கிமாரே அந்தச்
சர்வகலை நம்மதடி பாங்கிமாரே. (ச)

சாவித்ரி பெண்மணியாம் பாங்கிமாரே அவள்
சாவை அகற்றினளே பாங்கிமாரே. (சா)

சித்தங் கலங்காதீர் பாங்கிமாரே சிவன்
நித்தம் அறிந்திடுவர் பாங்கிமாரே. (சி)

சீதையைக் காண்பிரேல் பாங்கிமாரே சித்தம்
தெளிந்திடவே வேணுமடி பாங்கிமாரே. (சீ)

சுற்ற மெலாந் தன் கணவன் பாங்கிமாரே யவன்
சுகபோகந் தன்னதடி பாங்கிமாரே. (சு)

சூழாவினை யதனைப் பாங்கிமாரே நிதம்
தூளாயகற்றிடுவோம் பாங்கிமாரே. (சூ)

செய்பணிக னெப்பொழுதும் பாங்கிமாரே சிக்கை
யுய்யும் வழி கண்டிடுவீர் பாங்கிமாரே. (செ)

சேவை கணவனடி பாங்கிமாரே யந்தத்
தெய்வம் பெரியதடி பாங்கிமாரே. (சே)

சையென் நிகழாமற் மாங்கிமாரே சதா
தன்னறிவு வேணுமடி பாங்கிமாரே. (சை)

சொல்லின் கட்சோர்வதனைப் பாங்கிமாரே தூரத்
தூரத்திவிட வேண்டுமடி பாங்கிமாரே. (சொ)

சோம்பற் குடியிருப்பைப் பாங்கிமாரே நித்தம்
தூரவிலக்கடியோ பாங்கிமாரே. (சோ)

சௌகரிய மெப்போதும் பாங்கிமாரே சாந்தம்
சதா நித்யமாகுமடி பாங்கிமாரே. (சௌ)

இச்செய்கை நம்மதடி பாங்கிமாரே இறைவன்
இட்ட யெழுத்தடியோ பாங்கிமாரே. (ச்)

190385

ஒரு சத் காலட்சேபம்.

(ஸ்ரீமதி குகப்ரியை)

(காபிரைட்).

ஒரு நாள் பகல் ஒரு மணிக்கு நான் சாப்பிட்டு விட்டு உட்கார்ந்திருந்தேன். பள்ளிக்கூடத்திலிருந்து குழந்தைகள் வருவதற்குள் மித்திரனையாவது வாசிப்போம் என்று எண்ணி, சுதேசமித்திரனையும் மூக்குக் கண்ணாடியையும் எடுத்துக்கொண்டு நான் வழக்கமாய் உட்கார்ந்து கொள்ளும் ஒரு தூணுக் கருகில் வந்து உட்கார்ந்தேன்.

எனது வாசகசாலையாகிய அவ்விடத்தில் சிறு துண்டுக் கடிதம் முதல் திருக்குறள் முதலிய பெரிய புஸ்தகங்கள் வரையில் எல்லாம் வந்து குவிந்திருக்கும். ஒவ்வொரு நாளும் எல்லாப் புத்தகங்களையும் படித்து விடுவதாகத் தான் எண்ணம். தவிற, ஒருதடவைஉட்கார்ந்து விட்டால் மறுபடி எழுந்து எடுத்துக் கொள்ள வேண்டுமே என்கிற சோம்பலினால் இதுவும் வேண்டியது தான், அதுவும் வேண்டியது தான் என்று ஒவ்வொன்றாய்க் கொண்டு வந்து அங்கே சேர்த்துவைப்பேன். கடைசியில் எழுந்திருக்கும்பொழுது எதாவதொன்றையேனும் படித்திருப்பேனோ இல்லை. நடுவிலே கிடைத்த நாடகக் காகிதம், பாட்டுக் கச்சேரி விளம்பரம், சுதேசமித்திரனின் தலையங்கம், எதாவதொன்றுடனே அந்தப் பொழுது சரியாய் விடும்.

இடையில் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்குச் சாதம் போடுதல், யாராவது சிநேகிதர்கள் வந்து விட்டால் வரவேற்பு, வம்பு, காப்பி, சிற்றுண்டி முதலியவைகளுடனே பொழுது ...ந்து விடும். ஆனால் என் மனதிற்குள் தினம் ...ம் எல்லாவற்றையும் படித்து விடுவதாகத் ...ணம்.

அன்று 'சுதேசமித்திரனில்' உள்ளூர் வர்த்தமானங்களில் நாளை மயிலை சங்கீத சபையின் ஆதரவில் மிஸ் இரத்ன பூஷணிபாய் அவர்களால் சத் கதா காலட்சேபம் நடைபெறும். புதுக்கோட்டை தம்பையா நாயுடு மிருதங்கம், தஞ்சாவூர் வெங்காசாமி ராவ் பிடில், ஆதிச்சபுரம் அனந்தராமய்யர் மோர்சிங்கு என்றெழுதியிருந்ததைக் கண்டேன்.

அப்பொழுது என் சிநேகிதி இரங்கம் கையில் இரண்டு மூன்று பத்திரிகைகளையும் ஒரு விளம்பரக் காகிதத்தையும் (நோட்டீஸ்) எடுத்துக்கொண்டு வந்தாள். அவளை நான் செல்லமாய் 'பாட்டுப்பைத்தியம்' என்று கூப்பிடுவது வழக்கம். இதைப் பார் என்று விளம்பரக் கடிதத்தை என்கையில் கொடுத்தாள். அது பின் வருமாறு.

வாருங்கள்! வந்து பாருங்கள்!!
கேளுங்கள்! களி கூறுங்கள்!!

சென்னைக்கு முதல் முறை விஜயம்
இச்சமயம் தவறினால் எச்சமயம் வாய்க்குமோ
குயிலினுமினிய குரல் வாய்ந்த
மிஸ் இரத்ன பூஷணிபாய் காலட்சேபம்.
20-1-28ந் தேதி மாலை 3-30 மணிக்கு
மயிலை சாரதா சபையின் பொதுக்கூடத்தில்
நடைபெறும்.

புதுக்கோட்டை, தம்பையா நாயுடு-மிருதங்கம்,
தஞ்சாவூர், வெங்காசாமி ராவ்-பிடில்.
ஆதிச்சபுரம், அனந்தராமய்யர்-மோர்சிங்கு.

டிக்கெட் ரூ 1, 2, 3, 4, அணா 10, 12.

இதைப் படித்தவுடனே நானும் எழுந்து விட்டேன். புத்தகங்களெல்லாம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தவுடனே இரங்கம் என்னையும் வரும்படி வற்புறுத்தினாள். நானும் உத்தரவு பெற்றுக்கொண்டேன். இருவரும் வெகு வேகமாய் வேலைகளைச் செய்துவிட்டு புறப்படத் தயாரானோம். மணிமூன்றடித்தது. நான் தயாராவதற்குள் இரங்கம் வேறு புடவை உடுத்தி வருவதற்காக வீடு சென்றாள். அவள் நவீன நாகரிக தர்பார் மனுஷி. சிங்காரம் செய்து கொள்வதற்கு ஒரு நாள் வேண்டும் என்று சொல்லிக் கொண்டே நான் தலையை வாரிக் கொண்டேன். இதற்குள் இரங்கம் வந்து விட்டாள்.

உள்ளே ஒரு சிறு நிஜார், அதன்மீது மெல்லிய மஸ்லின் சேலை, முகத்தில் நிறைய "டாய்லட் பௌடர்" கைகுட்டை நிறைய ஆட்டோடில்பஹார், உயர்ந்த பாரிஸ்பட்டினால் செய்து விளிம்புகளில் முத்துக்களும் கண்ணாடி மணிகளும் கட்டப் பெற்ற அழகிய கச்சு. மார்பின் பெரும் பாகத்திற்குத் துணியே கிடையாது. தாவணியை ஒரே யஞ்ஞோபவீதமாக்கி இடது தோள் புறத்தில் அழகிய "ப்ரூச்" என்னும் ஆபரணத்தினால் குத்தியிருந்தாள். கழுத்தில் முழுவதும் வைரங்களினால் இழைக்கப்பட்ட "நெக்லேஸ்" என்னும் புதுமோஸ்தரான மாலை, காதில் பெரிய பெரிய தொங்கட்டங்கள், தலை தளதள வென்று பின்னலிடப்பட்டு நுனியில் நான்கு விரற்கடையகலமுள்ளபட்டு நாடாவால் முடியப்பட்டிருந்தது. அவளுடைய சிங்காரம் தினந்தோறும் பார்க்கும் எனக்கே புதிய காட்சியாயிருந்தது.

அடக்கமுடியாமல் உரக்க இடி இடி என்று சிரித்து விட்டேன். "என்ன இப்படிச் சிரிக்கிறாய்?" என்றாள் இரங்கம். "அதைப்பற்றிப் பிறகு பேசுவோம், சீக்கிரம் சிங்காரமாய் விட்டதன்றோ, புறப்படு" என்றேன். இருவரும் செல்லலானோம்.

* * *

சபையின் வாயிலிற் பெருங் கூட்டம். ஸ்திரீகளுக்கென்று தனியான வழி உண்டு. ஆகையால் நாங்கள் உள்ளே சென்றோம். ஹார்மோனியம், ஜாலர், தம்பூர், சப்ளாக்கட்டை முதலியவைகளின் சத்தம் தொடங்கியாயிற்றென்பதை எங்களுக்கு அறிவித்தன.

பாகவதை வெகு கம்பீரமாக நிமிர்ந்து புன்சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டு கையிலுள்ள வாசனை தெளித்த கைக்குட்டையினால் கன்னங்களை ஒத்திக்கொண்டாள். அவள் உயரம் சுமார் எழடி இருக்கலாம். அழகிய பனாரீஸ் பூவேலை செய்த சரிகைச் சேலையும் வெல்வெட் இரவிக்கையும் அணிந்திருந்தாள். ரங்கம், 'லம்போதரிபாய்போலவே இருக்கிறாள், அவள் தங்கையோ' என்றாள். எனக்கும் அப்படியே தான் தோன்றிற்று. அதே அச்சு, அதே சாயல், அவள் சுற்றளவு அதிகம், இவள் உயரம் அதிகம், அவ்வளவு தான் வித்தியாசம்.

கால்களிற் பாதசரங்கள் வைரங்களிழைக்கப்பெற்று முத்துக்களால் சதங்கைகள் கட்டப்பெற்றிருந்தன. இடையில் வைர ஒட்டியாணம். மோதிரங்களிலிருந்து சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு ஓர் பதக்கம் புறங்கைகளில் விளங்கின. அவைகளிலிருந்து சங்கிலிகள் கைவளையல்களுடன் இணைக்கப்பட்டிருந்தன. முன் கையிலிருந்து முழங்கைவரையில் வரிசைவரிசையாக வளையல்கள் நவரத்தினங்களாலும் செய்யப்பட்டவைகளாய்க் காணப்பட்டன. கழுத்தில் நிறைய என்னென்னமோ மாலைகள் குருவிக்காரிகள் அணிந்திருப்பது போல் விளங்கிற்று.

தவிற ஒரு தோளிலிருந்து மற்றொருதோள் வரையில் வரிசை வரிசையாய்த் தொங்கும் மெடல் மாலை யார், யார் கொடுத்ததோ. ம[illegible],

கம்மல், லோலக்கு, புல்லாக்கு, நெற்றியில் ஓர் புறமாய்த் தொங்கும் சுட்டி முதலியவைகள் அம்மை வடுக்களால் நிறைந்த அவள் அழகிய முகத்தைச் சோபிக்கச் செய்தன. தடித்திருந்த மேல் உதடு புல்லாக்கு முத்தையும் தன் முதுகில் சுமந்திருக்கும் பாக்கியத்தைப் பெற்றிருந்தது. வெற்றிலைக் காவியேறிச் சிவந்திருந்த அவள் பற்கள் வைரங்களின் காந்தி தம்மேல் அடிக்கப்பெற்று சற்று வெண்மையாய்த் தோன்றின. இவ்வளவு வைபவங்களுடன் அவள் நின்றிருந்த அற்புதக் காட்சி நீலகிரி தொட்டபட்டா சிகரத்தையும் அதனருகிலுள்ள குன்றுகளையும் எனக்கு ஞாபகமூட்டியது. பாகவதை சொல்லுகிறாள் —

"ஆதௌ கீர்த்தனாரம்பத்தில் ஸாது என்ன தெரிவிக்கிறாரென்றால், உலகில் மனிதராய்ப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் கடவுளிடத்து அன்பு பூண்டொழுக வேண்டுமென்றும், அவருடைய சிருஷ்டிப் பொருள்களாகிய ஒவ்வொரு வஸ்துவையும் நன்றாய் ஆராய்ச்சி செய்து, நாம் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கிறோம், மற்றவைகள் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிந்து நடக்க வேண்டுமென்றும் அப்படித் தெரிந்து நடப்பவரே மேலோர், தெரியாதவர் கீழோர் என்றும் எண்ணப்படுகிறார்கள்.

"ஆதலால் ஈசுவர சிருஷ்டியிலுள்ள ஒவ்வொரு பொருள்களையும் நாம் எவ்வழியில் உபயோகித்து சுகத்தை அடையலாம் என்பதைப் பற்றியே இன்று நான் சொல்லப் போகிறேன்.

"சென்ற முறை என் சகோதரி லம்போதரீபாய் சொல்லியபடி நாம் ஒவ்வொருவரும் மிகவும் பெருமையும் அருமையும் வாய்ந்ததும் மகாமை பொருந்தியதுமாகிய வயிற்றைச் செம்மையாய்ப் போஷிக்க வேண்டும். அப்படிப் போஷித்துக் கொழுத்திருக்கும் சரீரத்தை எவ்விதமாய் அலங்கரித்துத் திருப்தி அடைய வேண்டும் என்பது ஒவ்வொருவருக்கும் அவசியம் தெரிந்திருக்கவேண்டிய விஷயம். இதனாலேயே,—

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று

என்றார் வள்ளுவர். நாம் ஒவ்வொருவரும் புகழ்ச்சிக் குரியவராய் இருத்தல் வேண்டும். அப்படிப்பட்ட புகழை நாம் சுலபமாய் அடையும் வழி எதுவென்றால் நிறைய நகைகள் அணியவேண்டும், அணிந்தால்தான் பிறர் சுலபத்தில் நம்மைப் புகழ்வார்கள்.

"எவ்வளவோ பெயர்கள் 'அடாடா! என்ன நகை, என்ன அழகு, என்னமாய்த்தானிருக்கிறாள், வைரமும் சிவப்புமாய் ஜொலிக்கிறாள் பார், பிறந்தாலும் இப்படியல்லவோ பிறக்கவேண்டும். குந்துமணி பொன்பூட்டிக்கொள்ளக் கோடி தவம் செய்யவேண்டுமாம். அதாவது ஜன்மாந்தரத்தில் கோடி தவம் செய்தவருக்குக் குந்துமணி எடை பொன் போட்டுக்கொள்ளும் பாக்கியம் கிடைக்குமாம். நிறைய வைரமும் சிவப்புமாய் ஜொலிக்குமிவள் எப்பேர்ப்பட்ட பாக்கியவதி' என்று பிறரால் புகழப்படுவதே சிறந்தது. இப்பேர்ப்பட்ட சிறந்த விஷயத்தைப் பலரும் அறிந்து நடக்கவேண்டுமென்றே இங்கு கூறத் தொடங்கினேன். புல்லறிவும் பேதை மதியும் கொண்ட என் சொல்லில் பிழைகள் இருக்குமென்பது திண்ணம். இங்கு கூடி இருக்கும் பெரியோர்கள் குணத்தை நீக்கி குற்றத்தைக் கொள்ளவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்—

"வெகு காலத்திற்குமுன் அகஸ்திய மகரிஷியானவர் பொதியமலைச்சாரலில் வீற்றிருந்தார். அப்பொழுது அவருடைய சிஷ்யர்கள் 'மகரிஷியே! தேவர்களும், அசுரர்களும், கந்தருவர்களும், வித்தியாதரர்களும் ஆகிய இவர்கள்

எந்த விதமான ஆபரணங்களை அணிந்திருந்தார்கள்? ஏன் அவைகளை அணியவேண்டும்? எங்களுக்குத் தெரியச் சொல்லவேண்டும்' என்று கேட்டார்கள்.

அகஸ்தியர் சொல்லுகிறார், 'வாரீர் முனிகணங்களே! முன்பு சிருஷ்டிகாலத்தில் பூமியின் ஒவ்வோரிடங்களிலும் இரத்தினங்கள் மறைந்திருந்தன. அதனால் இந்த பூமிக்கு இரத்தினகர்பை என்று பெயர்.

"கிருதயுகத்தில் கலிங்க நாட்டிலும், திரேதாயுகத்தில் இமயமலையிலும் துவாபரயுகத்தில் பௌண்டரீபுரத்திலும் நவரத்தினங்கள் உண்டாயின.

"கலியுகத்தில் மிகவும் சுலபத்தில் கிடைக்கக் கூடியதாய் ஈசுவரன் நமக்கு அருளியிருக்கிறார். நவரத்தினங்களில் முதலாவதான வைரத்தைப்பற்றிக் கடைசியில் சொல்லுகிறேன். மற்றவைகளை முதலிற் கூறுவாம்.

"மாகதம் மிகவும் உயர்ந்தது. கருடனுடைய இறகிலிருந்துண்டாகும் பச்சைக் கற்களுக்கு கருட பச்சை என்று பெயர். இப்படிப்பட்ட பச்சைகளை அணிபவர்களுக்கு நினைத்த காரியங்கள் கைகூடும். அக்கினி பயமும் விஷ பயமும் உண்டாகாது. சுகமும் ஆரோக்கியமும் செல்வமும் சுகமும் உண்டாகும்" என்றார்.

முனிவர்கள், "மகரிஷியே! மாகதத்தின் இலட்சணங்களைத் தெரிந்து கொண்டோம். மற்றவைகளையும் தேவரீர் அருளிச்செய்யல் வேண்டும்" என்று வேண்ட, குறு முனியாம் கும்பத்திலுதித்தோர் கூறுவாராயினர்:—"மாணிக்கமும் பதுமராகமும் பாரத வருஷத்திலும் ஐராவதி நதியிலும் சிங்கள, சீன, யவன நாடுகளிலும் உற்பத்தியாகின்றன. அவற்றின் பெருமை சொல்ல முடியாதது. அப்பேர்ப்பட்ட மாணிக்கத்துக்கு அதிதேவதை சூரியன்.

"புஷ்பராகத்திற்கு அதிதேவதை குரு. இமயமலையிலும் விந்திய மலையிலும் சிங்களத்திலும் புஷ்பராகங்கள் உற்பத்தியாகின்றன. புஷ்பராகக் கற்களை மருந்துகள் செய்யவும் உபயோகிக்கிறார்கள். இது 80 விதமான வாதரோகங்களையும் கண்டிக்கும்.

"வைடூரியத்திற்கு அதிதேவதை கேது. முன்பு பிரளய காலத்தில் சப்த சமுத்திரங்களும் அலைகளால் சீறி பூமியை அழித்தபோது, ஆகாயத்திலிருந்த மேகங்கள் கட கடவென்று குமுறின.

"அம்மேகங்களிலிருந்து வைடூரியங்கள் உற்பத்தியாயின.

"கோமேதகத்திற்கு அதிதேவதை இராகு. கோமேதகத்தை ஆபரணங்களாய் அணிந்து கொண்டால், சுகமும் ஆனந்தமும் உண்டாகும்.

"இந்திரநீலம் என்று சொல்லும் நீலக் கற்கள் கலியுகத்திற் கிடைப்பது அருமை. நல்ல நீலக் கற்களை அணிபவர் கண்ணன் அருளுக்குப் பாத்திரமாவார். நீலத்துக்கு அதிதேவதை சனி."

(முத்துக்களைப் பற்றி விரிவாய்க் கூற இப்பொழுது காலம் போதாதாகையால் இன்னொரு சமயம் கூறுகிறேன்.)

"முத்துக்கு அதிதேவதை சந்திரன். நன் முத்தை அணிந்துகொள்பவர் சந்திரசேகராகிய எம்பெருமானது அருள்பெறுவாரென்பது திண்ணம்.

"பவழங்கள் இராமேசுவரத்துக்கு சமீபமான சேதுவிலும் இன்னும் கடலின் மற்ற பாகங்களிலும் கிடைக்கும். ஒருவித தோஷமுமில்லாத பவழங்கள் அணிபவர்களுக்கு வி[illegible]தைக் கொடுக்கும். பவழத்துக்கு அதிதே[illegible] குசன்.

"ஏ முனிபுங்கவர்களே! நவரத்தினங்களைப் பற்றி நான் உங்களுக்குச் சொன்னேன். இன்னும் உங்களுக்குச் சொல்ல வேண்டுவது என்னவென்றால் இப்பேர்ப்பட்ட நவரத்தினங்களை மனிதர்கள் தங்கள் முயற்சியாலடைந்து நன்மை பெறுவார்கள். அது கலியுகத்தில் ஐயாயிர வருடங்களுக்குமேல் மிகவும் செழித்து விளங்கும் என்றும், மேல் நாடுகளிலிருந்து கோடிக் கணக்காய் பாரத வருஷத்துக்கு வைரங்கள் இறக்குமதியாகுமென்றும், பாரத வருஷத்து ஏழை மனிதர்கள் எப்படியாவது வாங்கி அணிந்து கொள்வார்களென்றும், உமாமகேசுவர சம்வாதத்தில், மகேசுவரர் உமைக்குச் சொன்னார். நான் உங்களுக்குச் சொன்னேன்" என்றார்.

* * *

'வைரத்தைப்பற்றிக் கடைசியில் சொல்லுவதாய்ச் சொன்னது எதன் பொருட்டென்றால் முதலிலேயே சொல்லிவிடில் கலவரமாகிவிடும், ஆதலால் அதைக் கடைசியில் சொல்லுவதே சரி.

"நவரத்தினங்களில் முதன்மை பெற்றதான வைரத்துக்கு அதிதேவதை சுக்கிரன். அதனாற்றான் அதிகப் பணம் வருவாயுள்ளவர்களைக்கூட 'என்ன சுக்கிரதிசை அடிக்கிறது' என்று சொல்வது வழக்கம். வைரத்தின் பெருமையைக் குறித்துப் பெரியோர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால்—

"மாமணி மாபுக்கெல்லாம் வைரமே முதன்மைச்சாதி
யாமென உரைப்பர் நூலோர் திகம் யாதெனில் ஏனைய
காமருமணி கட்கெல்லாம் தமரிடு கருவியாம்
அத்தமணி தனக்குத்தானே துளையிடுங்கருவியாகும்.

"ஆதலால் இப்பேர்ப்பட்ட மகிமைகளையுடையதாகிய வைரத்தை நாம் ஒவ்வொருவரும் அவசியம் அணியவேண்டியது. ஆனால் தற்காலத்தில் காந்தி என்னும் ஒரு வைத்தியக்காரர் வைரத்தை அணிதல் கூடாதென்று கூறுகிறாராம். அதைக் கேட்டுச் சில அரைப் வைத்தியங்கள் கூத்தாடுகின்றன. அவரென்ன, அகஸ்தியரைவிடப் பெரியவரா?

"நாம் அவைகளை எல்லாம் ஒரு பொருட்டாய் நினைக்கலாகாது. யார் ஏழையாயிருந்தால் நமக்கென்ன. யார் கஷ்டப்பட்டால் நமக்கென்ன, பந்துக்கள் யாரார் எப்படிப் போனால் நமக்கென்ன, எது எக்கேடு கெட்டாலும் நாம் நம்முடைய காரியத்திலே கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும் என்பதற்காகவே "ஆரியக்கூத்தாடினாலும் காரியத்திற் கண்" என்றும், 'மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார் கருமமே கண்ணாயினார்' என்றும் சொல்லியிருக்கிறார்கள் பெரியோர்கள். ஆதலால் மனிதர்களாகிய நாமெல்லாரும் செய்ய வேண்டுவது என்னவென்றால் ஒவ்வொருவரும் நம்மாலியன்றவரை வைரங்களை அணியவேண்டுமென்பது பரமனார் கருத்து என்று அகஸ்தியருடைய மொழிகளால் நாம் அறிந்து கொண்டோமன்றோ.

"நம்மைப் படைத்த கடவுள் நமக்கு அணிகலன்களாக உதவுமாறு நவரத்தினங்களையும், தங்கம் வெள்ளி முதலிய உலோகங்களையும், அவைகளைச் செய்துகொடுக்கத் தட்டார்களையும் சிருஷ்டித்திருக்கிறார். அதை அறிந்து நாம் ஒவ்வொருவரும் ஆண்டவனிச்சைப்படி நடத்தலே முறைமையாகும்.

"ஆனால் சிலர் பணமில்லையே என்று யோசிப்பார்கள். அப்படி யோசிப்பது தகாது. நாம் ஒவ்வொருவரும் நல்ல வழியிலேயோ கெட்ட வழியிலேயோ பொருளீட்டல் அவசியம். நல்லது, கெட்டது என்று யோசித்துக் கொண்டிருந்தால் வாழ்நாளின் பெரும்பான்மையும்

கழிந்துபோக மீதி ஒன்றுமேயிராது. இதனால்தான் "நாய்விற்ற காசு குலைக்குமா" என்கிறார்கள்.

"ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நிறையப் பணத்தைச் சம்பாதித்து, வயிற்றுக்கு வஞ்சனை செய்யாமல் நிறப்பி, மிகுதி இருப்பதை நவரத்தினங்களாக்கி அணிந்து சரீரத்தை அழகுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பதே பெரியோர் கருத்து.

"அருமையான அணிகலன்கள் செய்தணிந்துகொண்டு இறைவன் நமக்கு அருளியிருக்கும் பொருளைச் சரியானபடி உணர்ந்துதான் நாம் பொன் காய்த்த மரம்போலிருக்கிறோமென்று பிறருக்கும் புத்தி புகட்ட வேண்டும். இல்லாவிடில் ஏழை என்றும், தருமம் என்றும் தேச நன்மை என்றும், பலவிதமாய்ப் பணம் செலவழிந்து விடும். அம்மாதிரி நடப்பவர்களுக்குப் பக்குவமாய்ச் சொல்லித் திருத்த முயலுவோமாக. நமது நோக்கங்களினிது நிறைவேற சர்வாபா பூஷிதையாய் விளங்கும் கற்பகவல்லி அருள் செய்வாளாக."

சுபம்! சுபம்!! சுபம்!!!

தமிழ்மகளிரும் ஆங்கிலப் பித்தும்.

(ஸ்ரீமதி சிதம்பரமனோன்மணியம்மாள்.)

ஔவைப் பிராட்டியார் அருந்தமிழ்ப் புலமை நிறுவிமெய்ந் நீதி புகட்டியுற்ற நந்தமிழ் நாட்டிற் தற்காலத்தில் பெண்களோவென்றால் ஆங்கிலங் கற்பதில் மிகவும் விருப்புடையவர்களாகவும், தமிழ்ப் பாஷையில் விருப்ப மினமுள்ளவர்களாகவு மிருக்கின்றதைக் காண்பது மிகவும் துக்கமே. தங்கள் தாய்ப் பாஷையாகிய இனிய தமிழை விட்டுவிட்டுப் பிறபாஷையாகிய ஆங்கிலங் கற்பவர்களுடைய நிலையைப் பார்த்தால் தன் தாயை வெறுத்துத் தள்ளிவிட்டு இன்னொரு தாயைத் தனக்குத் தாயாகக் கொண்டோர் தன்மைபோலிருக்கின்றது. ஐயையோ! இச்செய்கையை நினைக்கும் பொழுதெல்லாம் எவ்வளவு துக்கமும் வெட்கமுமாக இருக்கின்றது.

ஆடவர்களோ வென்றால் ஜீவனோபாயத்தின் பொருட்டாக ஆங்கிலத்தைக் கற்கின்றார்கள். பெண்களுக்கவ்வகைப் பிரயோசனத்தைக் கொடுக்கமாட்டாதாகையால் அவர்களுக்கு அவ்வாங்கிலக் கல்வியானது அவசியமில்லை. மகளிர்களின் கல்வி, நற்குண நற்செய்கைகள் சாத்திர ஞானம் முதலியனவற்றைப் பெருக்குவதாக இருக்கவேண்டும்.

நற்குண நற்செய்கைகள் நீதி நூல்களிலுணர்த்திய வருணாச்சிரம தர்மத்தை யொட்டியுள்ள தெனல் மிகையாகாது. எந்தக் குணம் எந்த ஆச்சிரமத்தைக் காப்பாற்றுகின்றதோ அதுவே அவ்வவ்வருணாச்சிரமத்தாருக்கு நற்குண நற்செய்கையாம். அவை சிவத்துவத்தைப் பாலிப்பதாகிய சத்துவ குணத்தில் ஜனிப்பன. சத்துவ குணமே ஆன்மாவுக்குச் சுகத்தையுஞ் சாந்தியையுங் கொடுப்பது. இக்குணத்திற்கு விரோதமாகிய தமோ குணம் பாலை நிலமும், நண் பகலும், சூரியனது உக்கிரமான பிரகாசமும் ஒன்றுபட்டாற்போல் ஐம்பொறிகளைக் கலக்கி மனதைப் புழுக்கி ஆன்மாவைத் துக்க சாகரத்தில் ஆழச் செய்யும். சத்துவ குணம் குளிர்ந்த பூஞ்சோலையும், இளவேனிற் காலமும், தடாகக் கரையும் இளந்தென்றலொருங்குபட்டிருப்பது போல் பொறிக

கும் மனதிற்கும் ஆன்மாவிற்குஞ் சாந்தியைப் பெருக்கி ஆனந்தத்தைக் கொடுக்கும். வெய்யிலின் வெப்பமானது எப்படி மேற் கூறிய சோலையின் கண்ணே தலைகாட்டுவதில்லையோ அப்படியே தமோகுண காரியங்களாகிய துர்க்குண துர்ச்செய்கைகள் சத்துவ குணத்தின் முன்னர்த் தலைகாட்டமாட்டா. கிருகஸ்தாச்சிரமத்தில் ஆடவர்கள் உலக விவகாரங்களிற் சம்பந்தப்பட்டுக் கோபம், கடுமொழி, பொய் முதலிய வருங்காலவற்றைத் தீர்த்தல் இன்றியமையாததாகும். அவை ஒரோவழி வேண்டப்படுவதால் அவர்கள் சத்துவ குணத்தை முற்றத் தம்பாற் பாதுகாத்துக் கொள்ளல் துர்லபமேயாம்.

தேசமுஞ் சபையும் பிறவுந் தம் வீடேயாகக் கொண்ட மகளிர்க்குரிய விவகாரங்களெல்லாம் அவர் தம் வீட்டினளவாக மாத்திரம் இருத்தலாலும் தம் புத்திரர் முதலியவர்களோடு நடந்து கொள்வதற்குத் தமோ குணம் சிறிதும் வேண்டியதில்லையாதலாலும் அவர்கள் முற்றுஞ் சத்துவ குணத்தைக் கைக்கொள்ளுதல் இன்றியமையாததும் இயல்புமாகும்.

மேலே கூறிய நற்குண நற்செய்கைகள் நால்வகை யாச்சிரமங்களுக்கும் சாதனமாகையால் அவற்றை தர்ம சாஸ்திரங்களின்படியே அனுசரிக்கவேண்டி யிருப்பதால் நமக்கு வேண்டிய தர்ம சாஸ்திரம் இந்து தர்ம சாஸ்திரமேயாம். அந்த ஞானத்தைப் பெறற்குத் தமிழைக் கல்லாது ஆங்கிலங் கற்றல் வட்டிலேறுது வேரையகழ்ந்து செல்லல் போலும். ஆங்கிலக் கல்வி மேனாட்டு மகளிருடைய கோலத்தையுஞ் சீலத்தையும் விருத்தியாக்கும்.

ஆங்கில மகளிர்க்கு ஆடவரை ஒப்ப உலக விவகாரங்களெவற்றிலும் முயற்சி செய்து சித்திபெறுதலே பெருமை யென்பது ஆங்கில நூல்களின் நிலைக் கொள்கை. ஆகையால் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் அநாகரிகமென்று ஆங்கில மகளிராற் பரிகசிக்கப்படும். அவராற் பரிகசிக்குமிந் நாற் குணமே கீழைத்தேச மகளிரின் நால்வகைப் படை யென்றும் இந்நாற் குணமுமில்லையேல் அவரது கௌரவங் கொள்ளை கொள்ளப் பட்டதாகவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

நமது இந்து மதத்திற்கேற்ப ஒழுகிக் கீழைத் தேசத்து மகளிராகிய சீதை, சாவித்திரி, அருந்ததி, அனசூயை முதலிய பெண்மணிகள் பூமியின் கண் பெருமை பெற்றார்கள். அக்கீர்த்தி அவர்கள் உலக விவகாரப் பொருட்களில் மேனாட்டு மகளிரைப்போல் ஒவ்வோர் துறையிலுமெதிர்த்து நின்று ஜயம் பெற்றதால் வந்ததன்று. ஆனால் இந்நற்குணங்கள் பொங்கித் ததும்பினமையால் வந்ததேயாகும். தமிழ்நாட்டு மகளிர்களும் அவர்களைப் போல் வரவேண்டியவர்களாதலின் அவர்களின் சரித்திரமெழுதப் பெற்றிருக்குந் தமிழ்க் கல்வியே மிகவும் உபயோகமானதாகும். அன்றியும் தமிழ் தாய் மொழியானபடியால் அன்னிய மொழியாகிய ஆங்கிலத்தைக் கற்று கல்வியறிவைப் பெருக்குவதினுந் தமிழ் மூலமாகக் கல்வியறிவைப் பெருக்குவது இலகுவான காரியம். திருஷ்டாந்தமாக ஓர் காலசாலையில் ஆங்கில உயர்வகுப்பிற் கற்கும் மாணுக்கர்க்குள்ள ஆங்கில ஞானத்திலுந் தமிழ் உயர்வகுப்பிற் கற்கும் மாணுக்கர்க்குள்ள தமிழ் ஞானம் பன்மடங்கு பெரிதாதலைப் பார்க்கலாம். ஓர் ஆங்கில உயர்தர மாணவர் எழுதும் வியாசத்தின் இங்கிலீஷ் நடையிலும் உயர்தரத் தமிழ் மாணவர் எழுதும் வியாசத்தின் தமிழ் நடை உன்னதமாகவும் அலங்காரமாகவும் கம்பீரமாகவும் மாதுரியமாகவும் இருக்கும்.

தமிழராயுள்ள ஓர் இங்கிலீஷ் மாணவர்க்கு ஆங்கிலக் கல்வி நயமமைவதிலும் தமிழ் நயம

வெகு சுலபமாக அமையும். ஆங்கில நூல்களைச் சுயமாக விளங்கிக் கொள்வதிலும் தமிழிலுள்ள சிறந்த சாஸ்திரங்களைச் சுயமாக விளங்கிக் கொள்ளுதல் நூறு மடங்கெளிதாக விருக்கும். ஏனெனில் ஒரு பொருளிலுள்ள நயத்தை எவ்வளவு தூரங்கிரகிக்கின்றோமோ அவ்வளவு தூரஞ் சுவையுண்டாகும். அப்படியே இந்துப் பெண்களாகிய நமக்கும் நமது தேச இயற்கைச் சிறப்புகளையும் நமது தேச வழக்குகளையும் நமது சமய விஷயங்களையும் நமது பழைய சரித்திரங்களையுங் கொண்டெழுதப்பட்ட காவியங்களே எளிதாகச் சுவை பயக்குமேயன்றி நாமொருபோதும் பயின்றறியாத அன்னிய விஷயங்களைக் கொண்டெழுதிய ஆங்கில நூல்கள் நமக்குச் சுவைபயத்தல் மிகக் கஷ்டமாம். எப்படி எளிதில் தமது குழந்தைகள் அம்மா! ஐயா! என்றழைக்கும்போது பெற்றோர்க்கு அவ்வார்த்தைகள் கொடுக்குஞ் சுகத்தை மம்மா! பப்பா! என்னும் பிறபாஷைச் சொற்கள் கொடுத்தல் எவ்வளவு கஷ்டம். அதன்றியும் ஒரு தாய் தன் சொந்தக் குழந்தையையுங் கொண்டு அடையுஞ் சுகத்தை அவர்கள் அன்னியாயுள்ள பிறக் குழந்தை தாய் மூலம் அடைவது மிகக் கஷ்டமல்லவா.

நாம் தமிழ்க் கற்றலினாலடையுஞ் சுகத்தை ஆங்கிலங் கற்றலினாலடையமாட்டோமாதலால் யாம் தமிழ் நாட்டுமகளிராகிய நாமெல்லோரும் தமிழையே கற்றல் வேண்டும்.

இதனால் ஆங்கிலத்தைக் கற்றலும் அதிலுள்ள பேரறிவைப் பெறுதலும் வேண்டற் பாலன்றென மறுக்கவந்தேமல்லேம். ஆயின் தமிழைச் சிறிதும் கல்லாது அதிலுள்ள அமிழ்தினுமாற்ற வினிதாய மொழிச்சுவை பொருட்சுவைகளைத் துய்த்துச் சுவையாது, ஆங்கிலத்திலேயே யாழ்ந்து மயங்கிக் கற்றுக்கிடந்து அத்தகைக் கல்வியால் ஆங்கில நாகரிகங்களைப் பின்பற்றி நம்மிற் சந்ததிகளையும் கெடுத்துவிடக்கூடிய நிலையில் இருக்கும் தற்காலக் கொள்கையையே வெறுத்து விலக்கவேண்டுமெனக் கூறியதாகக் கொள்ளவேண்டியது.

வருஷ துரையின் கதை.

(ஸ்ரீமதி S. R. ஜயம்மாள்.)

சங்கரி எட்டு வயதுள்ள ஒரு பெண். அவள் மிகவும் அழகு வாய்ந்தவள். கல்வியிலும், சங்கீதத்திலும் பயின்று வந்தனள். அவள் பெற்றோர்களும் ஐசுவரியவந்தரே. அவள் ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் விளையாடப் போகாமல் படிக்க உட்கார்ந்தாள்.

அவள் தாயார் ருக்மணியம்மாள் அவளிடம் வந்து, "சங்கரி, தினம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன், அம்மா! திண்டி யென்று நேராக என்னிடம் வருவாயே? இன்று ஏன் வந்ததும் வாராதுமாய்ப் படிக்க உட்கார்ந்துவிட்டாய்? ஆகையால் நீ வீட்டுக்கு வரவில்லை என்றிருந்தேன் நானும்" என்றாள்.

சங்கரி "அம்மா, நாளை என் உபாத்தியாயர் மாதங்கள் பெயர்களைப்பற்றியும், ஒவ்வொரு மாதத்திய விசேஷங்களைப்பற்றியும் கேழ்விகள் கேட்பார். எனக்கு ஒன்றும் புலப்படவில்லை" என்றாள்.

ருக்மணியம்மாள், "நீ கவலைப்படாதே, இச் சிற்றுண்டிகளை உண்டு, விளையாடப்போ. அப்புறம் கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு சுவாமிக்கு விளக்கேற்றி விட்டு, அம்பியுடன்

என்னிடம் வா. நான் சொல்லுகிற கதையைக் கேட்டால் உனக்கு எல்லாம் புலப்படும்" என்றாள்.

சங்கரியும் சரி யென்று தன் தாயின் வார்த்தைப் பிரகாரம் எல்லாம் செய்து விட்டு, அம்பியுடன் தன் தாயினருகே வந்துட்கார்ந்தாள். ருக்மணியம்மாள் கதையை சொல்லத் தொடங்கினாள்:—

சிவராத்திரியான பின் வருஷதுரை தன் பட்டாபிஷேகத்திற்கு எல்லாம் குதூகலமாயும் உல்லாசமாயும் இருக்கவேண்டுமென்று, வாயுவை அழைத்து, "ஓ வாயுவே! பிரயோஜன மற்ற காய்களையும் இலைகளையும் மரங்களிலிருந்து விழச் செய்து, நல்ல புஷ்பங்களையும் பழங்களையும் ஏற்றுக்கொண்டு விருட்சங்கள் உன்னை வரவேற்கட்டும். சங்கீதமும், அலங்கார ஏற்பாடுகளும் நன்றாக நடக்கட்டும். நீயும் ஜனங்களுக்கு சந்தோஷமுண்டாகும்படி மெதுவாக வீசிக் கொண்டிரு. என் பட்டாபிஷேகத்தின் தினம் எல்லோரும் சிறப்பாகப்பண்டிகை கொண்டாட வேண்டும்" என்று ஆக்ஞாபித்தான். வாயு "ஸ்வாமியின் சித்தப்படியே" என்று அவ்விடம் விட்டுச் சென்றான்.

வேறு மந்திரிகளுடன் ஆலோசனை செய்ய வேண்டுமென்று, வருஷ ராஜன் இறக்கப்பன், மழையப்பன், குளிரப்பன் முதலியவர்களை வரவழைத்தான். "நீங்கள் என் பட்டாபிஷேக தினத்திற்காக என்னென்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறீர்கள்?" என்று வினவினான். அவர்கள் "மகா ராஜனே! நீங்கள் ஒன்றும் யோசனை செய்யவேண்டாம். ஏற்பாடுகள் எல்லாம் நாங்கள் செய்திருக்கிறோம். உங்களுக்குக் கிஞ்சிற்றேனும் தொந்தரவு வேண்டியதில்லை" என்றனர். அரசன் 'சரிதான், புத்திசாலிகளான உங்களுக்கு நான் சொல்லவேண்டியது ஒன்றும் காணோம். ஒருவர் பின் மற்றொருவராக வேலையைப் பாருங்கள். ஒருவன் வேலை செய்து கொண்டிருக்கும்பொழுது மற்றிருவரும் இளைப்பாறலாம். இறக்கப்பா! என் மூத்த மந்திரியான நீ நான்கு மாதங்கள் உன் தொழிலைப்புரி. மழையப்பா! நீ உன் காலத்தில் மழை பொழிந்து குளம் குட்டைகளை யெல்லாம் நிறைத்துச் செடி கொடிகளைப் பச்சையாக விளையச் செய். குளிரப்பா! என் மந்திரிகளில் கடைக்குட்டையான நீ மிகவும் ஜாக்கிரதையாக இரு. என் பிரஜைகளை வியாதிகளால் வருத்தி என் கீர்த்தியைக் கெடுக்காதே. பயிர்களை நன்றாக அறுக்கச் செய்" என்று புத்திமதி கூறினான். அவர்களும் "உத்திரவுப்படியே" என்று பணிவாகச் சொன்னார்கள்.

பிறகு அரசன் தன் பன்னிரண்டு முக்கியாதிகாரிகளையும் அழைக்கச் சொன்னான். அப்படியே அவர்களும் வந்து நமஸ்கரித்து வரிசையாக நின்றார்கள். ராஜன், "உங்கள் பெயர்களென்ன?" என்று வினவவே, அவர்கள் "சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி" என்று ஒவ்வொருவரும் சொன்னார்கள். அரசன் "உங்களுடைய வேலைகள் என்னென்ன? சரியாய்த் தெரியுமா?" என்று அவர்களை வினவ, அவர்கள் தெரியுமென்றனர். "எங்கே, ஒவ்வொருவராய்த் தங்கள் தங்கள் தொழில்களென்ன வென்பதைச் சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றான் அரசன்.

1. சித்திரை:—"ஸ்வாமி, நான் தங்கள் பட்டாபிஷேகத்தின் தினமே வேலைக்கு வருகிறேன். என் காலத்தில் ஸ்ரீராம நவமி நிறைவேறும். எங்கெங்கும் தண்ணீர்ப் பந்தல்களில் பானகம் நீர்மோர் முதலியவைகளைக் கொடுப்பிக்கிறேன்" என்றான்.

2. வைகாசி:—“நான் நரசிம்ஹ ஜயந்தியும் சங்கர ஜயந்தியும் செய்விக்கிறேன். கொஞ்சம் மழையும் பெய்விக்கிறேன்.”

3. ஆனி:—நான் வைகாசியைப் போல் மழை பொழியச் செய்து, காற்று அதிகமாக அடிக்கச் செய்வேன்.

4. ஆடி:—நான் ஆனியின் வேலையைச் செய்வதோடுகூட மகா ஏகாதசியைச் செய்விக்கிறேன்.

5. ஆவணி:—பயிர்களை விளைவிக்கச் செய்து, வரலட்சுமி விரதம், கோகுலாஷ்டமி என்னும் பண்டிகைகளை நடத்துகிறேன்.

6. புரட்டாசி:—குளம் குட்டைகளை மழை நீரால் நிரப்புவதுடன்கூட கணேச சதுர்த்தி நடத்துகிறேன்.

7. ஐப்பசி:—புரட்டாசியின் தொழிலைச் செய்வதுடன், நவராத்திரி செய்விக்கிறேன்.

8. கார்த்திகை:—சில இடங்களில் பயிரறுப்பு செய்விக்கிறேன். தீபாவளி, பலிபாட்யமை என்னும் பண்டிகைகளை நிறைவேற்றுகிறேன்.

9. மார்கழி:—என் காலம் அறுப்புக்காலம்.

10. தை:—என் சமயத்தில் அறுப்பெல்லாமாயிருக்கும், மிகவும் குளிரும்.

11. மாசி:—கலியாண மஹோத்ஸவங்கள் நடத்துவேன். சிவராத்திரியும் நடக்கும்.

12. பங்குனி:—கலியாணம், உபனயனம் முதலிய சுப காரியங்களைச் செய்விக்கிறேன்.”

இப்படி எல்லோரும் கூறிப் பின்நகர்ந்தார்கள். அரசனும், “சரி, அப்படியே செய்யுங்கள்,” என்று சொல்லி, அவர்களை அனுப்பி விட்டான்” என்று ருக்மணியம்மாள் சொல்லி முடித்தாள்.

அம்பி, “வாயு போய் என்ன செய்தானம்மா?” என்று கேட்டான்.

அதற்கு ருக்மணியம்மாள் சொன்னதாவது, “சரி, அதையும் சொல்லி விடுகிறேன் கேளுங்கள்.

“வாயு தன் வேலைகளைச் செய்து விட்டுக் கொஞ்ச நேரம் இளைப்பாறிக் கொண்டிருக்கும் பொழுது, மேகங்களை சந்தித்தான். அப்பொழுது அவன் “மேகங்களே! கொஞ்சம் பூமியைக் குறித்து உலாவப் போகலாம், வருகிறீர்களா?” என்று அவர்களைக் கேட்டான்.

அதற்கு ஒரு மேகம், “எங்களுக்கென்ன! பெரியவர்கள், பூமியை அநேக தடவை மேலிருந்தே பார்த்திருக்கிறோம். எங்கள் குழந்தைகளான மழைத்துளிகள் பூமியைப் பார்க்க வேண்டுமென்று நிரம்ப ஆசைப்படுகின்றன. அவர்களை அழைத்துக் கொண்டு போவாயா?

வாயு “ஆகட்டும், வாருங்கள், வேகமாய்ச் செல்லலாம்” என்று அவசரப்படுத்தவே, மேகங்கள், “அப்பா, எங்கள் தேகமும் பாரம், இந்தக் குழந்தைகளை எடுத்துக் கொண்டு நடப்பதும் கஷ்டம், நீ கொஞ்சம் எங்களைப் பின்னிருந்து தள்ளிக் கொடுத்துக் கொண்டு வருகிறாயா?” என்றன.

அப்படியே வாயு அவர்களைத் தள்ளிக் கொண்டு வரும்பொழுது அம்மேகங்கள் நடந்து நடந்து கால் வலித்ததினால் கத்தின. அக்கூக்குரல் தான் நமக்கு இடியாகக் கேட்கிறது. பூமிக்குப் பக்கம் வந்தவுடன் வாயு, “மழைத்துளிகளா! நீங்கள் பார்க்க வேண்டும், பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்ட பூமியின் சமீபத்தில் வந்திருக்கிறீர்கள். இறங்குங்கள்” என்றான்.

சீக்கிரம் பூமியை பார்க்க வேண்டுமென்ற ஆத்திரத்தால், மழைத் துளிகள் “நான் முன்” “நான் முன்” என்று ஒன்றின்மேலொன்று விழுந்து கொண்டு அதிக வேகத்துடன் பூமியை அடைந்தன. மரம், செடி, கொடிகளெல்லாம் சந்தோஷத்துடன் “அம்மா! மழைத்துளிகளா, நினைத்தவாறு சூரியன் எங்கள் தேகத்தைச் சுட்டுக் கொண்டிருந்தான். உடம்பெல்லாம் எரிச்சலாயிருந்தது. மிகவும் தாகமாயிருந்தது. உங்கள் தயவினால் பிராணன் நின்றது” என்று தங்கள் சிரங்களை ஆட்டிக் கொண்டு மொழிந்தன. சில துளிகள் வீட்டுக் கூரைகளின் மேலும் சில மலைச்சரிவுகளின் மேலும் சில பூமியின் மேலும் வீழ்ந்தன. சில பூமியின் உள்ளே என்ன இருக்கிறது பார்க்கலாமென்று பூமியில் இறங்கிப் போய்விட்டன.

இவ்வளவெல்லாம் மேகத்தை விட்டு இறங்கின பிறகு வெகு சீக்கிரமே ஆகி விட்டன. மேகங்கள் தங்கள் குழந்தைகள் செய்யும் குறும்பத்தைப் பார்த்து அப்பொழுதப்பொழுது (இடியைப்போல்) சிரித்தன. இத்துஷ்டத்தனமெல்லாம் செய்து விட்டு மழைத்துளிகள் “இன்னும் வாருங்கள், போகலாம், இங்கு எல்லாம் பார்த்தாகி விட்டது” என்று ஒன்றை ஒன்று அழைத்துக் கொண்டு புறப்பட்டன. போகப்போக சேர்ந்துகொண்டு, ஓடைகளாகவும், ஆறுகளாகவும், நதிகளாகவும் ஏரிகளையும் சமுத்திரத்தையும் அடைந்தன.

“இவ்வளவுதான் கதை,” என்று சொல்லி முடித்தாள் ருக்மணியம்மாள்.

சங்கரி:—‘சரி, ஒரு கல்லினால் இரண்டு காக்கைகளை ஓட்டிய மாதிரியாயிற்று. ஓரே கதையால், மாதங்களைப் பற்றியும் மழையின் உற்பத்தியைப் பற்றியும் எல்லாம் தெரிந்து கொண்டேன்” என்றாள்.

இதற்குள், சமையற்கார கிருஷ்ணன் “யஜமானர் சந்தியா வந்தனம் செய்து முடித்து விட்டு, போஜனத்திற்கு நீங்களும் வரவேண்டுமென்று காத்துக் கொண்டிருக்கிறார்” என்றான். எல்லோரும் சாப்பிடப் போனார்கள்.

மறுநாள் சங்கரியும் உபாத்தியாயர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தவறாமல் உரை அளித்தாள்.

கல்வியில் கீழ்ப்படிதலின் மகத்துவம்.

(ஸ்ரீமதி பி. மங்களாபாய்.)

இந்திய சேனையை ஆங்கில சிப்பாய்கள் பற்பல யுத்தத்தில் கேவலம் கீழ்ப்படிதலின் பலத்தினாலேயே ஜயித்தனர் என்பதற்கு ப்ளாஸீ யுத்தமானது மேன்மையான உதாஹரணத்தைத் தருகிறது. இந்தக் கீழ்ப்படிதலின் குறைவானது இதிகாச காலம் முதற்கொண்டு இதுவரையில் அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. அது இன்னும் அப்படியே இருக்கின்றது! கீழ்ப்படிதலைப் பற்றி மிகவும் கண்டிப்பாயிருக்கும் ஆங்கிலேயர்களுடன் நாம் பழக வாரம்பித்து இன்று ஓர் நூற்றாண்டிற்கு மேல் ஆயிற்று. இன்னமும் இந்த குணத்தின் ஒரு அம்சமாவது நம்மிடத்தில் ஏற்படவில்லை. இவ்வளவா நாம் மந்த புத்தியுள்ளவர்கள்! உபந்யாசம் செய்யும் பொழுதும், வியாசங்கள் எழுதும் பொழுதும் ‘கீழ்ப்படிதலின்மையால் தேசம் மூழ்கியது!’ என்று நாம் அழுத்தந்திருத்தமாகச் சொல்லுகிறோமே யொழிய, பிரத்தியட்சமாய்ப் பார்க்கப்போனால் அதன் பரிணாமம் சுத்த சூனியந்தான்! ‘தெரிகிறதேயொழிய வணங்குவதில்லை’ என்கிறபடி படித்த மூர்க்கர்களைப்போல் நமது நிலைமையிருக்கிறது! இன்றுகூட நமது சமாஜத்தின் வெவ்வேறு விதமான நடத்தையைக் கவனித்துப்பார்த்தால், ஓர் கீழ்ப்படிவதின் குறைவினால் நமது முயற்சிகளெல்லாம் எப்படிப் பயன்படா

மற் போகின்றன! இச்சித்த பலன் என்பது கிடைப்பதேயில்லை! ஸ்டேஷனுக்குப் போங்கள், பாடசாலைகளுக்குப் போங்கள், தியேட்டர்களுக்குப் போங்கள், சபை சபாங்கங்களுக்குப் போங்கள், எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள், நாம் கோழி குப்பையைக் கிளறிப் போட்டது போல் ஒழுங்கினமாகத்தான் இருப்போம்! அதில் ஒழுங்கென்னும் பெயரே காணப்படாது! இந்த ஸ்திதியை விலக்குவதற்கு ஆதி முதல் பழுது பார்க்க வேண்டும். இந்த மாறுபாட்டை உபாத்தியாயர்களுடைய உதவியைக் கொண்டு செய்ய வேண்டும். அன்றி இந்த வியாசத்தில் கல்வியில் கீழ்ப்படிதலுக்கு எத்தகைய மகத்துவம் பொருந்திய ஸ்தான மிருக்கிறது என்பதைப் பற்றி ஆராய்வது கடமையாயிருக்கிறது.

கல்வி என்றால் புத்தியின் விகாசம் என்கிற அர்த்தத்தைத்தான் வெகு பெயர் எடுத்துக் கொள்கின்றனர். Education is preparation for life என்று இவ்வளவு வியாபகமான அர்த்தத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் கல்வி விஷயமாய்த் தக்க கற்பனை இல்லாத நூற்றுக்கணக்கான உபாத்தியாயர்கள் உபாத்தியாயர் வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறவரையில் பூரணமான பக்குவமடைவது சாத்தியமில்லை. அமெரிக்கா அல்லது இதர முன்னேற்றமடைந்த ஐரோப்பிய நாடுகளை எடுத்துக்கொண்டு, அவற்றிலுள்ள கல்வி முறைமையைக் கவனிப்போமானால், அத்தேசங்களில் கற்பிக்கும் கலையில் தேர்ச்சியுள்ள ஆசிரியர்களுடைய தொகை அதிகமாகவிருப்பது தெரியவரும். நமது நாட்டில் பாடசாலையை விட்டு இரண்டிரண்டு வருஷம் இருந்துவந்த ஆசிரியர்களிருக்கின்றனர். அவர்களுடைய கல்வி அறிவு மேற்படி தேசத்திய எலிமென்டரி டிரெயினிங் எடுத்தவர்களுடைய அறிவைவிட மிகவும் குறைவாயிருக்கிறது. பால மானஸ சாஸ்திரம் (Child Psychology), புத்தியின் விகாசம் (Mental Development) முதலிய சாஸ்திர விஷயத்தில் அவர்களுடைய ஞானம் அப்படியப்படித்தா னிருக்கிறது. மேல் நாடுகளில் ஸ்திரீகளுக்கு இந்த சாஸ்திரங்களின் பூரண அறிவு ஏற்கெனவே இருக்கின்றபடியால் சிறுவர்களின் பாடசாலைகளில் ஸ்திரீகளை உபாத்தியாயினிகளாக நியமிக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அந்த திசையில் பிரயத்தனங்கூட இவ்விடத்தில் ஆரம்பிக்கப்படவில்லை. இக்காரணத்தினால் ஆரம்பக் கல்விசாலைகளில் கீழ்ப்படிதலைப்பற்றி எடுத்துக்கொள்ளவேண்டிய கவலை எடுக்கப்படவில்லை.

கீழ்ப்படிதல் என்னும் உறை மருந்தைச் சிறு பருவத்திலேயே புகட்டவேண்டும். அன்றி அந்தக் கீழ்ப்படிதலுக்குப் பங்கம் ஏற்படாமல் காக்கும் விஷயத்தில் எப்பொழுதும் கவனம் செலுத்தவேண்டும். இங்கிலாந்திலுள்ள பாடசாலைகளுக்குத் தம் மக்களை அனுப்பும்பொழுது பெற்றோர் தம் மக்களுக்கு விசேஷ ஞானம் ஒன்றும் உண்டாகாவிடினும் தேவையில்லை, அவர்கள் கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும், கீழ்ப்படிதலை விரும்புகிறவர்களாகவும் வேண்டும் என்று விரும்புகிறார்கள். அன்றி எந்தப் பாடசாலையில் கீழ்ப்படிதலைப்பற்றிக் கண்டிப்பாயிருக்கப்படுகிறதோ அந்தப் பாடசாலைக்குத்தான் பெற்றோர்கள் தம் மக்களை அனுப்புகிறார்கள். நம் நாட்டில் எந்தவிடத்தில் உபாத்தியாயர்களுக்குக் கீழ்ப்படிதலைப்பற்றி லட்சியமே இல்லையோ அவ்விடத்தில் பெற்றோர்களுக்கு அதனுடைய மதிப்பு எப்படித் தெரியும்? சிறு பருவம் முதற்கொண்டு இல்லாத பந்தங்களையெல்லாம் ஏற்படுத்திப் பாலர்களுடைய இயற்கை விகாசத்தைத் தடுப்பானேன் என்று ஆட்சேபிக்கப்பட்டவர்களும்

சிலருளர். ஆனால் கீழ்ப்படிதலென்ப திருந்தாற்றான் அவ்விகாசம் தக்கவாறாகும் என்று சொல்லும் அறிஞர்களும் பலருளர். ஓர் மரத்தைக் கண்டபடி வளரவிட்டால் நன்றாயிருக்குமோ? அல்லது அம்மரத்தின் கிளைகளைத் தக்கபடி வெட்டிவிட்டு அதன் பக்கத்தில் இனியொரு மரத்தை வளரவிட்டால் நன்றாயிருக்குமோ? சுபாவ வளர்ச்சிக்கு எல்லா விடங்களிலுமே கண்டபடி வளரவிட்டால் உபயோகப்படமாட்டாது. ஆனால் ஜாக்கிரதை வகிக்க வேண்டியது இவ்வளவுதான். அதாவது வளர்ச்சியடையச் செய்வது இயற்கைக்கு விரோதமில்லாமலிருக்கவேண்டும். இவ்விதமாகக் கீழ்ப்படிதலைச் சிறு பருவம் முதற்கொண்டு, என்றால், பாலர் ஆரம்பக் கல்விசாலைக்குப் போனது முதற்கொண்டு, ஆரம்பித்து அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். அப்பொழுதுதான் அது மேன்மையானதென்று தெரியவரும்.

பூனாவில் டெக்கான் எஜுகேஷன் சொஸைடியாரால் நடத்தப்படும் புதிய மராட்டி பாடசாலையில் இவ்வாறாகத்தான் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்பட்டு வருகிறது. சில வருஷங்களில் அதனால் உண்டாகும் பரிணாமம் நன்றாகத் தெரியவரும். பிள்ளைகள் நல்ல உடைகள் உடுத்து வரவேண்டுமென்று பல உபாத்தியாயர்கள் சொல்லுகிறார்களேயொழிய அந்த நிமிஷமே அந்தப் பிள்ளைகளுக்குத் தம்முடைய உடைகளைத் தாமே சீர்ப்படுத்திக்கொள்ளும்படிச் செய்வதில்லை. இது யோக்கியமல்ல; உதாரணத்திற்காக, பொத்தான் அறுந்திருக்கும் சமயத்தில் அந்தப் பிள்ளையின் கையில் ஊசி நூலைக் கொடுத்து பொத்தான் வைத்துத் தைக்கச் செய்து தகுதியான பாடத்தைக் கற்பிக்கவேண்டும். அதைப்போலவே கையில் மசி (இங்கி) பட்டால் உடனே சோப்பினால் கையைக் கழுவச் செய்தல், வாய் நாற்றமாகவிருந்தால் அதைக் கொப்பளிக்கச் செய்தல், பாடசாலையில் செத்தை குப்பை போட்டு அசிங்கப்படுத்தினால் உடனே அதை சுத்தப்படுத்தச் செய்தல் முதலிய சுத்தத்தையும் சுகாதாரத்தையும் உபாத்தியாயர்கள் அமுலுக்குக் கொண்டு வருவார்களாகில் வாஸ்தவத்தில் நமது மக்கள் சோம்பித் திரியார். அவ்வாறே இவ்வகுப்பிலிருந்து அவ்வகுப்பிற்குப் போகும்பொழுது பிள்ளைகள் ஒரு வரிசையாக, சத்தம் பண்ணாமல், அமைதியாய்ப் போகிறார்களோ இல்லையோ என்பதைக் கவனிக்கவேண்டும். தமிழ்ப் பள்ளிக்கூடத்தின் பேரிலிருந்து (மராட்டிப் பள்ளிக்கூடத்தின் பேரிலிருந்து) யாராவது போனால், அவர்களுக்கு அது என்ன பாடசாலையா அல்லது கசாப்புக் கடையாவென்று தோன்றுகிறது! அங்கு இவ்வளவு அமைதி குடிகொண்டிருக்கிறது! ஆங்கிலப் பள்ளிக்கூடங்களிலும் இதே அழுகைதான் (அழகுதான்)! உபாத்தியாயர் சற்று அப்புறம் திரும்புவதுதான் தாமதம். உடனே வகுப்பு கூற்றடிக்கத் தொடங்கிவிடும்! இப்படி யாவானேன் என்பதைப்பற்றி அறிஞர்களாகிய ஆசிரியர்கள் யோசிக்கவேண்டும். ஆனால் வெகுவாய் இதுவரையில் நடந்துவந்ததுபோலவே முன்னுக்கு நடத்திக்கொண்டு போகப்பட்ட உபாத்தியாயர்களுடைய தொகைதான் அதிகமாகக் காணப்படுகிறது. அதனால் சுதந்திரமாகவும் மானஸ சாஸ்திரத்தின்படியும் யோசிக்கப்பட்டவர்கள் வெகு சிலரே காணப்படுவார்கள். இதற்காகத்தான் அத்தியயன சம்பந்தமான நூல்களைப் படித்து அதன்படி நடந்துகொள்ளவேண்டும். பிள்ளைகள் நிற்கும்பொழுதும் கீழே உட்காரும்பொழுதும் நன்றாக நிமிர்ந்து இருக்கின்றனரோ இல்லையோவென்பதை நுட்பமாய்க் கவனிககவேண்டும். இல்லாவிடில் ஒருவன் வேறொருபுறம் திரும்பி நிற்

பான். உபாத்தியாயர் கேட்கும் கேள்விகளை அவன் முற்றிலும் கவனிக்கமாட்டான். இவைகளெல்லாம் அற்பமாகத் தோன்றிய போதிலும் அவை மிகவும் மகத்துவம் பொருந்தியவைகளாகும். நல்ல உடுப்பு தரித்திருக்கிறவன், நன்றாக நிமிர்ந்து நிற்கிறவன இத்தகைய ஒரு பையனைப் பார்த்தால் பார்ப்பவர்களுக்கு அவனைப்பற்றி உடனே நல்ல எண்ணம் ஏற்படும். அதுவே அப்பையன சட்டையின் பொத்தான்களைப் போடாமல், தொப்பியைக் கோணலாகப் போட்டுக்கொண்டு நின்றானானால் அவனைப்பற்றி ஒருபோதும் நல்ல அபிப்பிராயம் உண்டாகமாட்டாது.

ஆரம்பக் கல்விப் பாடசாலையிலிருக்கும் பொழுதே கீழ்ப்படிதல் என்னும் விதையை விதைத்துவிட்டாலதான் பயனபடும். பெரியவர்களானபிறகு விதைத்தால் பயன்படமாட்டாது. பூர்வ காலத்தில் (முன்பு) எட்டாவது வயதில் வித்தியாப்பியாசத்திற்காகப் பிள்ளைகளை குரு கிருகத்திற்கு அனுப்பும் வழக்கமிருந்தது. அதன் நோக்கம் இதுதான். ஸ்ரீ கிருஷ்ண பகவான்கூட குரு கிருகத்திலிருந்து இட்ட வேலையைச் செய்து இவ்வாறாகக் கீழ்ப்படிதலை அங்கீகரித்தார். அதே முறையை நடத்த வேண்டும். மனம்போன போக்கில் போக விட்டுவிட்டால் அது நாளுக்குநாள் விருத்தியடைந்துக்கொண்டே போகும். கீழ்ப்படிதலுடன் நடந்துகொள்ளும் மனிதனுடைய சுபாவமுங்கூட நல்லதாகத்தானிருக்கிறது. அவன் மனம்போன போக்கில் போகிறவனாகவும், பிடிவாதமுள்ளவனாகவும், பிறருக்கு உதவி செய்யாதவனாகவுமாவதில்லை. அதற்கு மாறாக அடக்கமுள்ளவனாகவும், பிறருக்கு உதவி செய்பவனாகவும், ஒழுங்குள்ளவனாகவுமாகிறான். நமமுடைய சில பிள்ளைகளிடத்தில இக் கீழ்ப்படிதலின்மையால் வாலுட்கள் வீணாட்களாகி இருக்கின்றனர். கேவலம் கீழ்ப்படிதலின்மையால் கையிலெடுத்த காரியத்தில் ஜயம் கிடைப்பதில்லை. ஆரம்பத்தில் கீழ்ப்படிதலென்றால் பெருந் துன்பமாகத் தோன்றுகிறது. அதுவே வழக்கத்திற்கு வந்துவிட்டால், அதன்படி நடந்துகொள்ளும் விதம் கடைசியில் ஹிதகரமானதென்று தோன்றுகிறது. கீழ்ப்படிதலின் அமுல் கேவலம் பாடசாலையில் மாத்திரந்தானிருக்கவேண்டும், வீட்டிலிருக்கக் கூடாது என்று சொல்பவர் சிலருளர். ஆனால் இது பிசகு. ஒருதடவை கீழ்ப்படிதலென்பது ஏற்பட்டுவிட்டால் அது சகல காரியத்திற்கும் உபயோகப்படும். இன்ன சமயத்தில் அதை உபயோகப்படுத்துவது, இன்ன காரியத்தில் அதை உபயோகப்படுத்துவதில்லை என்கிற பாவனை இருக்கமாட்டாது. அவ்வாறே, பாடசாலையில் மாத்திரம் கீழ்ப்படிதலைக் கற்பிப்பதென்றால், அதனால் ஆகவேண்டிய நன்மை உண்டாகமாட்டாது. ஆகலால் வீட்டிலுங்கூட அதைப்பற்றிக் கவலை எடுத்துக்கொள்வது பெற்றோர்களின் கடமையாயிருக்கிறது. தக்கபடி கீழ்ப்படிதலை வழக்கத்திற்குக் கொண்டு வரும்பொருட்டு உபாத்தியாயர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றிச் சற்று யோசிப்போம்.

அநுகரணம் (ஒருவர் செய்வதுபோல் செய்வது) பிள்ளைகளுடைய மிகவும் மகத்துவம் பொருந்திய குணமாயிருக்கிறது. எத்தகைய உதாரணம் அவர்கள் முன்னிலையில் வைக்கப்படுகிறதோ அப்பிரகாரம் அவர்களாவார்கள். இந்த உதாரணத்தைக் கொடுக்கப்பட்டவர்கள் வீட்டில் பெற்றோரும், பாடசாலையில உபாத்தியாயர்களுமாவார்கள். அப்பொழுது அவர்களபேரில் நடவடிக்கையைப் பற்றி எவ்வளவு பொறுப்பு இருக்கிறதென்பது நன்கு விளங்கும். விசேஷமாய் உபாத்தியா

யர்கள் பள்ளிக்கூடத்தில் விநயத்துடனும், சாந்தமாகவும், முகமலர்ச்சியுடனும் நடந்துகொள்ளவேண்டும். சும்மா கடுகடுவென்றிருக்கலாகாது. இழிவான வார்த்தைகளைப் பேசலாகாது. அவ்வாறு செய்வதனால் மாணாக்கர்களுக்கு ஆசிரியர்களைப்பற்றித் துரெண்ணம் ஏற்படும். சௌஜன்னியமாய் நடந்துகொண்டு பிள்ளைகள்பேரில் பட்சமாயிருக்கவேண்டும். சில உபாத்தியாயர்கள் பிள்ளைகளைக் கோபத்துடன் பார்க்கின்றனர். இது நல்லதன்று. பிள்ளைகள் விஷயத்தில் எவருடைய உள்ளத்தில அன்பென்னும் ஈரம் (கசிவு) இருக்கிறதோ அவர்கள்தான நல்ல உபாத்தியாயர்களாவார்கள். கீழ்ப்படிதலைக் காக்கும்பொழுதுங்கூட அதை அன்புடன் பிள்ளைகளுடைய மனதில் பதியவைக்க முயலவேண்டும். Always gain discipline by love rather than by force. இந்த தத்துவத்தை உபாத்தியாயர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆனாலும் எப்பொழுமே இவ்வாறு நடந்துகொள்வதனால் பிரயோஜனப்படுமென்று சொல்ல முடியாது. சிற்சில சமயங்களில் பிரம்பை உபயோகப்படுத்தினாலன்றி வேறு வழி இல்லாமலிருக்கிறது. சிற்சில குற்றங்களுக்காகக் கடுமையாகத் தண்டிப்பது அவசியமாயிருக்கிறது. ஆங்கிலத்தில் 'Spare the rod and spoil the child' என்னும் பழமொழி வழங்கிவருகிறது. சில விஷயத்தில இது உண்மையாகத்தானிருக்கிறது. அன்றி வடமொழியில் 'लालने बहवो दोषास्ताडने बहवो गुणाः' இவ்வரியும் அதே தத்துவத்தைச் சொல்லுகிறது. பிரம்பைக் கையிலெடுப்பதுங்கூடப் பாபம் என்று அதைக் கையாலுமகூடத் தொடக்கூடாது என்கிற விரதம் தகுதியாகமாட்டாது. சில உபாத்தியாயர்கள் இவ்விஷயத்தில தப்பெண்ணம் (தப்பபிப்பிராயம்) கொண்டிருப்பதாகக் காணப்படுகிறது. ஆனால் (கொஞ்சம) சில நூலகளைப் படித்து, நல்ல அனுபவம் இருந்தால் இவ்வெண்ணம் முற்றிலும் மாறிவிடும். உபாத்தியாயர்கள் இவ்விஷயத்தில் சற்று கவனத்தைச் செலுத்தி அப்பியாசம் செய்து கீழ்ப்படிதலை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். கேவலம் 'எனக்கு இப்படித் தோன்றுகிறது' என்று வெறும் பேச்சுகளைப் பேசிப் பூர்வத்திய அனுபவத்தின்கண் பராமுகமாயிருப்பது சரியாகமாட்டாது. உபாத்தியாயர்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு கீழ்ப்படிதலைப்பற்றி அக்கறை இருக்குமோ, அதன்படி பாடசாலை சகல விதத்திலும் (பல துறைகளிலும்) மேன்மையடையும். மக்களுக்குச் சுதந்திரம் கொடுப்பதென்றால், அவர்களை பொறுப்புடன் நடந்துகொள்ள விடுவதென்பது சிலருடைய கொள்கையாயிருக்கிறது. தகுதியல்லாத காலத்தில் இப்பொறுப்பை அவர்கள் தலையில் சுமத்தி அதன் கசப்பான பலனைப் பெறும்படி செய்யலாகாது. பாடசாலையில் கீழ்ப்படிதல் காக்கும்படியான பொறுப்பு தலைமை உபாத்தியாயர் பேரில்தான் அதிகமாயிருக்கிறது. அவர் சோம்பேறியாகவும், மந்தமாயும், பயங்காளியாயுமிருந்து, மனவுறுதியற்றவரா யிருந்தாரானால் பையன்கள் பாடசாலையையே தலையில் தூக்கிக் கொண்டு விடுவார்களென்று நினைக்கவேண்டும். இவ்வாறாக உபாத்தியாயர்கள்பேரில் கீழ்ப்படிதலைப்பற்றி எத்தகைய பொறுப்பு இருக்கிறது என்பது நன்கு விளங்குகிறது. உண்மையில் பார்த்தால், மனிதன உபாத்தியாயனாக வேண்டுமென்றால அதிகக் கீழ்ப்படிதலுள்ளவனா யிருக்கவேண்டும். ஏனெனில், பாடசாலையில் கற்ற அறிவு (ஞானம்) முன்னும் பின்னும விருத்தியடைந்து, அதனுடன புதிய விஷயங்களும பல தெரிகின்றன. கீழ்படிதலின் காலம் ஒருதரம் மிஞ்சிவிட்டால பிறகு அது வருவது சாத்தியமல்ல. இப்படி எப்பொழுது ஆகும்? கற்பிக்கும் சாஸ்திரங்களை

அத்தியயனம் செய்வதற்குத் தக்க சௌகரியம் ஏற்படும்பொழுதுதான்.

இப்பொழுது இவ்விஷயத்தைப்பற்றிப் பெற்றோர்களுடைய பொறுப்பு என்னவென்பதைச் சற்று கவனிப்போம். பூர்வத்தில் ஒரே குடும்பமாய் இருக்கும் முறையில் பெரியோர்களுடைய அனுபவம் நிறைந்த யோசனையால் வீட்டில் சகல விவகாரங்களும் நடந்துகொண்டிருந்தன. இப்பால் அநேக காரணங்களால் குடும்பங்களில் கீழ்ப்படிதலின் குறைவு காணப்படுகிறது. அதனால் சிறுவர்களுக்கு வீட்டில் செல்வம் மிதமிஞ்சிப்போய், பிறகு அச்சிறுவர்கள் தலையில் ஏறி உட்காருகின்றனர்! மக்கள் பெரியவர்களாய் அவர்கள் சீர்குலைந்தபிறகு பெற்றோர்கள் விழித்துக்கொள்கின்றனர்! இதனால் பெற்றோர்களுக்குங்கூடக் கீழ்ப்படிதலை எப்படி நிலைநிறுத்தவேண்டும் என்பது நன்றாகத் தெரிந்திருப்பது மிக்க அவசியமாயிருக்கிறது. காலாகாலத்தில் நியமித்த காரியத்தைச் செய்வது, நியமித்த தேகப்பயிற்சி செய்வது, தினசரி தர்மவிதிகளைச் சரிவரப் பரிபாலிப்பது, தன்னுடைய பொருள்களை (வஸ்துக்களை) நன்றாகப் பாதுகாத்துக்கொள்வது முதலிய விஷயங்கள், பெற்றோர்கள் கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும், ஒழுங்குடையவர்களாகவு மிருந்தாலன்றி மக்களுடைய மனதில் படியமாட்டா. ஒரு சமயம் உபாத்தியாயர்கள் பேரிலிருக்கும் பொறுப்பு குறைவாயிருந்தாலு மிருக்குமே யொழிய, பெற்றோர்கள் பேரில்தான் அதிகமாயிருக்கும். ஆனால் (எல்லாக் குற்றத்தையும்) சகல தோஷத்தையும், பாபம்! அந்த ஏழை உபாத்தியாயர்கள்பேரில் சுமற்றி மக்களின் கெட்ட குணத்தை (துர்க்குணத்தை) மறைக்கப்பட்ட தேனமொழிகளையுடைய பெற்றோர்களும சிலர் காணப்படுகின்றனர். இதற்கென்ன செய்வது! மக்களுக்கு நல்ல பழக்கவழக்கங்கள் உண்டாகும்படி செய்யும் பொறுப்பு உபாத்தியாயர்கள்பேரில் எவ்வளவு இருக்கிறதோ அதைவிட அதிகம் பெற்றோர்கள் பேரிலிருக்கிறது. நமது சமாஜத்திற்கு இதன் பூரண அறிவு உண்டாகவில்லை. பூர்வத்திய முறையில் இவ்விஷயத்தைப்பற்றிய அறிவு அதிகமாகக் காணப்படும். மகன் சீர்குலைந்தானானால் பாபம்! ஆசிரியனுக்கு அதன் பிராயச்சித்தம் கொடுக்க வேண்டுமென்று சொல்பவர் மிகுதியாயிருக்கின்றனர். ஒரு தினத்தின் 24 மணி நேரத்தில் 5 மணி நேரம் எவர் பார்வையில் பிள்ளைகள் இருக்கின்றனரோ, அவரை எல்லாவற்றிற்கும் ஜவாப்தாரி என்று சொல்லுவது யோக்கியமென்று (தகுதி என்று) சொல்லப்படுமா? நிற்க.

எல்லாவற்றிற்கும் முக்கியமாய்ச் சொல்லுவது இவ்வளவுதான். அதாவது பெற்றோர்களும் கீழ்ப்படிதலைச் சரிவர பரிபாலிக்கவேண்டும். அப்பொழுதுதான் அதன் நல்ல பலன் காணப்படும். எவரெவர் பெரும் பதவியை அடைந்திருக்கின்றனரோ, அவர்களுள் வெகு பெயர்கள் வீடுகளில் கீழ்ப்படிதல் மெச்சத்தகுந்ததாயிருந்தது. இதனால் கீழ்ப்படிதல் எவ்வளவு மகத்துவம் பொருந்தியதாயிருக்கிறதென்று தெரியவரும்.

கீழ்ப்படிதலின் மகத்துவத்தை உள்ளபடி மனதிற் கொண்டு கல்வி முறையில் அதற்கு யோக்கியமான ஸ்தானத்தைக் கொடுத்தால், தேசத்திலிருக்கும் வாலிபர்கள் சாமர்த்திய சாலிகளாகவும், உத்தியோகத்தற் பிரியமுள்ளவர்களாகவுமாய் ஊக்கத்துடன் வேலை செய்யப்பட்டவர்களாவார்கள். ஆனபோதிலும், பெற்றோர்களும் ஆசிரியர்களும இவ்விஷயத்தில் தக்க ஜாக்கிரதையும கவலையும் வகிப்பார்களென்கிற பூரண நம்பிக்கையுடனும் ஆசையுடனும் இந்நிருபத்தை முடிக்கிறேன்.

மங்கள மணி.

(ஸ்ரீமான் பம்பாய் நா. கு. கோபாலய்யங்கார்.)

I.

ஆலத்தூர் ஐயாசாமி ஐயரின் கிருகத்தில் அன்று வேலைக்காரர்கள் இரவு நெடுநேரமாகியும் பரபரப்புடன் வேலை செய்துகொண்டிருந்தனர். பெண்டுகள் தத்தமது காரியங்களை யோசனை செய்து தயாரித்துக்கொண்டிருக்க, அவ்வீட்டுக் குழந்தைகள் பாலுக்காகவும் பட்சணத்திற்காகவும் மூட்டைக்காகவும் மாறி மாறி அழுதுகொண்டேயிருந்தன. மிராசுதாரரின் மைத்துனரான சூரலிங்கய்யர் லட்சமுடி லக்ஷ்மண சாஸ்திரிகளிடம் வெகுநேரம் பேசித் தமது கருமம் கைகூடியதைக் கண்டு உள்ளம் பூரித்தவரென டபில் குறட்டை விட்டுவந்தார். வெளியே தூங்குமூஞ்சி டபேதார் துய்யப்பன் அவ்வீதி முழுவதும் நிறுத்தியிருந்த குதிரை வண்டிகளை தூங்காமல் பாதுகாத்துவந்தான். அக்கம்பக்கத்து மாபா மாமிகளும் நித்திரா பங்கப்படுத்தும் சப்தத்தை அடக்க இயலாதவர்களாகி முணுமுணுத்துக்கொண்டிருந்தனர்.

முதல் மாடியில் ஏழுபத்தைந்து வருடங்களை யெண்ணி அவ்வருடமே முடித்த அலமேலுப் பாட்டியும் குமாரி சுந்தரம்மையும் அவள் பெண் மங்களாம்பாளும் ஏதோ ஒரு பெருத்த இடி விழுந்ததுபோல எண்ணி ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தனர். அலமேலுப் பாட்டியோ தனது குமாரத்தி விதவையாய்ப் போனதினிமித்தம் மறுநாள் காலை நடக்கும் வதுவை சந்தோஷத்தை யளிக்காது போகுமேயென்றும், தங்கம்மை தான் கொடுங்கால விதியால் தனது அருமைப் பர்த்தாவையிழக்க நேரிட்டதுமன்றி தனது மனதுக்கிசைந்த ஓர் பிள்ளையைத் தனது மகளுக்குக் கலியாணம் செய்து வைக்கத் தன்னால் முடியாது போனதைக் குறித்துப் பணமிருந்தும் பாக்கியமில்லாதவள் போல நிற்கும் தன் ஸ்திதியைக் குறித்தும் வருத்தப்பட்டனர்.

ஆனால் சிறுமி மங்களம் குழந்தைப்பருவ முதல் நன்னடக்கைகளின் உருவாய் வளர்ந்தவள். மின்னற்கொடிபோல அழகிற் சிறந்தவள். பெரியதொரு இனாம்தாரரின் ஒரே மகள் என்ற கர்வமும் படபடப்புமற்றவள். ஏழைகளுக்கிரங்கும் தயாளு. தனது தாய்-மாமன் தனது தந்தையாரின் சொத்துக்களைத் தானே இஷ்டப்படி ஆண்டுவருவது அவளுக்குத் தெரியும். சுயநலங் கருதியே அவர் தனது அன்னையையும் தன்னையும் தனது வயது வருமளவும் பாதுகாத்துக்கொள்ள ஒப்புக்கொண்டாரென்றும் ஊரார் சொல்வதை அவள் அடிக்கடி கேட்டிருக்கிறாள். அவள் தாய்-மாமன் தனது தந்தையாரின் சொத்தைத் தாறுமாறாய்ச் செலவழித்துத் தனக்கு விரோதமாகவே செய்துவந்ததைக்கண்டுமட்டும் பொங்கி எழுந்தாள். உண்ணட்டும், உடுக்கட்டும், உண்ட வீட்டுக்கிரண்டகம் நினைத்தாரைமட்டும் மன்னிக்கச் சகியாதவள் ஆனாள். 'தனது பெண்சாதி—மனைவியும் பெண் கோமளமும் அங்கங்குலுங்க நகையணிவதைத் தவிர வேறு எவரும் அணியக்கூடாது' என்னும் தீர்மானத்துடன் நடக்கும் தாய்-மாமனை வெறுத்துவந்த மங்களம் தன் மனதிற்கு விரோதமாய்த் தாயின் மனோவேதனையைக் கிளப்பி வருத்தும் எண்ணத்துடன் பட்சபாதமான கலியாண ஏற்பாடுகள் செய்திட்ட நெஞ்சைப் பிளந்து தள்ள எண்ணினாள். அவள் அன்னையோ குனிந்த தலை நிமிராது கண்ணும் கண்ணீருமாகக் கலங்கிநிற்கும்

வேளையில் இவளை ஆறுதல் சொல்லித் தேற்றுபவர் யார்? கரங்களும் மார்பும் படபடவெனத் துடிக்கச் சரேலென அவர்களை விடுத்து மாடியில் வெட்டவெளியில் துள்ளிக் குதித்தாள்.

II.

கோடியாத்துக் கடிகாரம் மணி பன்னிரண்டடித்து ஓய்ந்தது. வானத்தே விண்மீன்கள் குழாத்தைப் பளிங்கெனப் பெற்றிருந்தும் மதி மன்னவன் மங்களத்தின் பரிதாபகரமான நிலையை உலகத்தார்க் கறிவுறுத்துவான்போல மறைந்து மழுங்கி நின்றனன். பார்த்த வெளியில் தன்னந்தனியே பைத்தியம் பிடித்தவள்போல மூளை கலங்கி நின்றிருக்கும் சிறுமி மங்களத்திற்குத் தன் நினைவு வர ஒருமணிநேரமாயிற்று.

"இருப்பதா, இனி இறப்பதா?" என்ற மொழிகள் ஈனத்வனியுடன் வெளியிட்ட அவள் மனதில் சூரலிங்கய்யர் வறுமைவாய்ப்பட்டு வருந்துங்கால் தனது தந்தையிறக்கவே அவருடைய விருப்பின்படி தங்களைக் காப்பாற்றுவார்போல நடித்து உள்ள ஸ்திதியை நாசமாக்கியதுமன்றித் தனது மகளுக்குத் தான் விரும்புகின்ற ஜயபாலனை ஏமாற்றி ஏற்படுத்திக்கொண்டு தனக்குப் பணப்பேயான சுரேந்திரனை வாலிபனுக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்த தந்திரங்களையும், தனதன்னையை நாளுக்கு நாலு பிராமணார்த்தம் திட்டங்கொள்ளும் லக்ஷ்மணய்யர் வந்து ஏமாற்றியதையும் நினைத்துக்கொண்டாள். அவளுடைய இளகிய நெஞ்சம் வெடித்துப்போகும்போலிருந்தது. தான் ஒரு பெண்ணாயிருந்ததாலல்லவோ வெளியிற் சென்று இன்னார் புரட்டல்களை உடைத்துத் தள்ளிவிட முடியவில்லை. என்னே யிது!

"ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு,
உயர் செல்வமெல்லாம்
அன்றென்றிரு, பசித்தோர் முகம் பார்,
நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு, நடு நீங்காமலே
நமக்கிட்டபடி
என்றென்றிரு, மனமே! உனக்கே
உபதேசமிதே!"

என்று பட்டினத்தடிகள் கூறிய பொன்மொழிகள்படி நடந்து காட்டும் நங்கைக்கு நேரிடும் விபத்து இதுவோ! ஒவ்வொரு மங்கையும் தாயுந் தந்தையும் தமயனுந் தங்கையும் சூழப் பெற்றிருந்தும் தனது மனோநிலையை மகிழ்விக்கும் புருஷனை அடையும் பாக்கியத்தையல்லவா விரும்புவாள்! அல்லிக்கொடிபோன்ற அம்மெல்லிடையாள் உயிருக்குயிரான காதல் கரும்பைக் கடித்துத் தின்னும் உரிமையை எண்ணுமிடத்துக் கனாந்த நகைகளையும் உன்னத உடைகளையும் திரணமாக எண்ணுவது,

"குலம் வேண்டுமென்றிருப்பார் குலத்துள்ளார்
கல்வியினுற் குறையா ஞானப்
பலம் வேண்டுமென்றிருப்பார் தந்தைமார்
பார்த்த பெருஞ் செல்வமுள்ள
தலம் வேண்டுமென்றிருப்பார் தாய்மார்கள்
யௌவனமும் புதுஞ் சார்ந்த
நலம் வேண்டுமென்றிருப்பார் நாறுகுழல்
கன்னிமார் நலத்தின் மிக்கார்"

என்பதால் அங்கையங்கனியாகிறது.

வாழ்நாள் முழுதும் எத்தகைய மனக்கிலேசமுமின்றி ஈருடலு மோருயிருமாகவும் நீரும் நிழலைப்போலும், பூவும் மணமும்போலும் ஒட்டி வாழ மனவமைதி—பூரண சம்மதியில்லையேல் சுகவாழ்வு எங்கிருந்துண்டாகும்? பூனையு மெலியும்போல் கண்ட விடத்துக் கடிந்து கொடுமையாக ஆட்டி வைக்கும் கூற்றுகளுக்கு பெண்டிராயமைய விருக்கும் தன் பெற்றோர்களையே வெறுத்து நிற்கும் நமது சிறுமிக்கும் தாய்-மாமனின் இத்தகைய சதியாலோசனை எவ்வாறு ஏற்கும்? 'பெண்களின் பேச்சு' என்று இழிவாக நினைத்துப் புறக்கணித்தவரு மட்டும் தன்னை வஞ்சிக்கும் புருஷர்கள் சுகம் பெறுதிருக்கட்டும் என சபித்தாள்.

III.

"கண்மணீ! மங்களம்! காதற்கிளி! நிறுத்து உனது வெறுப்பை! உலகம் உன்னைப் போன்ற எண்ணங்களுள்ள உத்தமிகளுக்கு உயிரையல்லாது உன்னத பதவியை யளிக்கும்" என்று கூறிக்கொண்டே ஒரு வாலிபன் பெண்ணுருவுடன் தட்டென முன் தோன்றி அவளுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டான்.

அத்தகைய வேளையில்—அத்திரப் பொறியை அள்ளித் தெளிக்கும் சமயத்தில்—தன்னைப் பற்றியவன் தனது உயிர்க்காதலன் ஜயபாலன் என்றறிய மங்களத்திற்குக் கால் மணி நேரமாயிற்று. பித்துப் பிடித்தவள்போல ஏற இறங்கப் பார்த்து ஐயந் தெளிவுற்றபின்னரே அவள் எண்ணங்கள் மாறுதலடையத் தொடங்கின. "ஆ! என்ன இது? இந்த வேளையில் நீங்கள் என்னைத் திரஸ்கரித்து என் வாழ்வைப் பாழ்படுத்தி வைக்க எண்ணிய நீ—இங்குவர வருவானேன்? ஆ! என்ன மதியீனம்! ஏதோ உளறுகிறேன். நாதா! நீர்........" என்று முடிக்குமுன் ஜயபாலன் "ஓ! காதலீ! மங்களம்! எனதுயிரைக் கொள்ளைகொண்ட நீ என்னை நம்பாது இவ்வாறு பிதற்றுகின்ற காரணம் என்ன?" என்று அருகிருத்தித் தான் சூரலிங்கய்யரின் எண்ணங்களைப் பறக்கடிக்க எண்ணியதுமுதல் தனது உயிர்த் தோழனான சுகுமாரன் விரும்பும் கோலத்தை அவனுக்களித்துத் தான் அவளை மணக்கும் ஏற்பாடுடன் ஜகப்புரட்டு மேனுவையருதவியால் லட்சமுடி லக்ஷ்மணய்யருக்கு 50 வராகன் அடிப்பணம் (அட்வான்ஸ்) கொடுத்ததாயும், அவர் தாலி கட்டும் வரையில் வாயைத் திறவாமலிருக்க வேண்டுமென்றும், மணப்பந்தலில் ஏற்பாடுகள் யாவும் தமது விருப்பப்படி நடக்குமென்றும், அவள் தைரியமாயிருக்கலாமென்றும் கூறினான். விவரித்துக் கூற நேரமில்லை. மெத்தைப்படிகளில் காலடி கேட்க இருளில் மறைந்த இருவரும் மாயமாயினர்.

IV.

"காற்றடிக்குது தூள்பறக்குது, கதவிலாத சங்கடம்" என்னும் 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்னும் பழமொழிகள்படி மறுநாட்காலை மிராசுதார் ஜபாகாமய்யரின் கிருகத்தில் எள்ளுவிழ இடமின்றி ஜனங்கள் நெருங்கியிருக்க வெளியில் கொட்டும் மேளதாளங்கள், சிறுவரின் ஆடல்பாடல்கள், மங்கையரின் பணியாரக் கூடைகள் ஒவ்வோரிடத்துப் பிரதானம் பெற அரை தீட்சிதர், முக்கால் புரோகிதர், கால் மந்திரவாதிகள் தத்தமக்குத் தெரிந்த வரையில் மங்கள ஹோமம் நடக்கும் இடத்தைச் சுற்றி அமர்ந்து மந்திரம் கால், தந்திரம் முக்கால் எனக் குரல் தணிவடையாமல் ஓங்கியுறக்க அழுத்தந் திருத்தமாக உச்சரித்தனர். மணமேடை வட்டமுள்ள தொட்டி முற்றத்தில் அமையப்பெற்றிருந்தது. வடபுறத்தில் ஒரு ஜதையுட்கார ஏற்பாடுகளும் தென்புறம் பிரிதொரு ஜோடி அமரும் வசதிகளும் செய்யப்பட்டிருந்தன. வடபுரத்தில் அவ்வூர் கிராமமுனிசீபான நாசய்யரும் அவரது பந்துக்களும் அமர்ந்திருக்க, ஜயபாலன் பின்னே அவனது தாயார் நின்றிருந்தாள். தென்புரத்தில் வெனீஸ் நகரத்து வர்த்தகனும் ஷைலாக் என்பவன்போல அம்பாசூரில் வட்டிக்குக் குட்டி போட்டு வாங்கும் சுரேந்திரன் நான்காவது முறை விவாகம் செய்துகொள்ளும் தோரணையில் தனது நாற்பது வருஷ மூட்டையையும் கட்டிவைத்துவிட்டு ஒவ்வொரு நிமிஷமும் தன்னைச் சிறு வயதினனாகக் காட்டிக்கொண்டிருந்தான். நடுவிலே அக்கினி கொழுந்து விட்டெரியலாயிற்று. இருபுரமும் உபய வாத்தியார்கள் லக்ஷ்மணய்யருகிலிருந்த தீட்சதர்களுக்கு உதவிபுரிந்து வந்தனர். சூரலிங்கய்யர் தான் ஜகஜ்ஜாலப் புரட்டான மேனுவையனைப் பெண்

ணகத்து வாத்தியாராக்கி விட்டார்—அவர் உறுமிக்கொண்டே அழகிலும் குணத்திலுஞ் சிறந்த மங்களத்தை சுரேந்திரனுக் களித்துவிட்டுத் தனது மகள் கோமளத்தை வாலிபமும் கல்வியும் கண்ணியமும் பொருந்திய ஜயபாலனுக்குக் கொடுத்து விட்டதாகவே நினைத்தார். ஆச்சு, மாங்கல்யதாரணத்திற்குமுன், தம்பதி சகிதமாக ஹோமாக்கினியை வலம்வர ஏற்பாடாயிற்று.

மங்கள ஸ்நானம் முடிந்து சர்வாலங்கார பூஷிதைகளாய் மங்களமும், உலகப் புரட்டல்களறியாச் சிறுமி கோமளமும், இவள் பின்னால் சற்று தூரத்தில் இன்னோர்க்குத் தாய் முறை காட்டிய சூரலிங்கய்யர் மனைவி பத்மாசனியும் வந்தார்கள். அழகுள்ள மருமகன் கிடைத்ததாகக் கர்வங்கொண்ட பத்மாசனியும் எட்டவிருந்த சுந்தரம்மையாரும் இமைகொட்டாது மணப்பந்தலையே நோக்கியிருந்தனர். அருகிலிருந்த வாத்தியார் கோமளத்தை ஜயபாலனருகிலும் மங்களத்தை சுரேந்திரனருகிலும் நிறுத்தியதைக்கண்ட சுந்தரம்மை ஓவென்றலறினாள். குடிகெடுக்கும் சண்டாளன் கெடுத்தானே என்று மூர்ச்சையானாள். திரும்பியுட்கார முடியாதவாறு நெருங்கக் கூடியிருந்த கூட்டத்தில் இவளுடைய கூக்குரல் கேட்கப்படவில்லை. முகூர்த்த நேரம் ஆரம்பமாயிற்று. அடுத்தடுத்திருந்த பீடங்களில் சதிபதிகளாகவிருக்கும் ஜோடி மணமக்கள் வலம்வரும் சமயம்; அருகிலுட்கார்ந்திருந்த சிலர் நெடியதொரு புகையைப் பலமாக உண்டாக்கினர். காற்றுப்போகவு மிடைவழி இல்லையாதலால் அது கூடமுழுதும் ஆழ்ந்து ஜனங்களைத் திக்குமுக்காடச் செய்தது. முதல் வலம், இரண்டாம் வலம் வந்து மூன்றாவது தடவை சுற்றுஞ் சமயத்தில் சுரேந்திரனை யாரோ ஒருவர் கும்பலிலிருந்து வெளிவரச் செய்தனர். பின்னேவரும் மங்களம் சரேலென ஜயபாலனது கரம் பற்றி மணமேடையிலமர்ந்தாள். மேளதாளமும் மும்முரமாக முழங்கியது. மறு விநாடியில் ஜயபாலன் மங்கள முடியை மங்களாம்பாளின் கழுத்தில் அணிந்தான். நடுவழியிலே விடப்பெற்ற கோமளம் புகை சற்று அடங்கக் கண்டாள் தனது நிலைமையை. தன்னை மணக்க வந்தவன் மங்களத்தண்டையிலிருந்தான். கோரரூபியான சுரேந்திரன் திமிரென்று வெளிச்சென்ற கோலத்தை விசாரிக்க சூரலிங்கய்யர் தனது உண்மையை யறிய மனமுடைந்தார். கெடுவான் கேடு நினைப்பானென்பதை நினைத்துப் பிடி வாரண்டு பெற்ற சுரேந்திரனைத் தன் மகளடையாது நின்றதற்குக் கடவுளை வணங்கி வாழ்த்துங்கால் சுகுமாரனின் அன்பை எண்ணினார். தெய்வ சங்கல்பம் தேடப்போன காலிலே அகப்பட்டாற்போல முன்னேற்பாட்டின்படி அருகிலிருந்த சுகுமாரன் கோமளத்தை யடைந்தான். தேனும் பாலும் கனிந்தொழுக வாழ்க்கை நடாத்திய இப்பெண்மகளின் கதை "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும", நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று செய்ய", "தாந்தாமுன் செய்த வினை தாமே யனுபவிப்பார்" என்னும் நீதிகளை யுணர்த்திப் பெண்களுக்குயிரான மங்கள சூத்திர மணியை ஒவ்வோரில்லத்தும் அடிக்கச் செய்யுமென்பதே எமது நோக்கம்.

மானேஜர் முக்கிய அறிவிப்பு.

நம் "சிந்தாமணி" க்கு தகுந்த காகிதம் கிடைக்காத கஷ்டத்தினாலும் இன்னம் சில எதிர்பாராத அசந்தர்ப்பங்களினாலும் ஏப்ரல், மே மாதத்திய இதழ்களை சேர்த்து ஒரு இதழாக வெளியிடப்பட்டிருக்கிறது. அபிமானிகள் காலதாமதத்திற்கும், காகித தார்பலத்திற்கும், பக்கக்குறைவிற்கும் இம்முறை மன்னிக்கக் கோருகிறோம். இனி இப்படி நிகழா தகுந்த ஏற்பாடு செய்துள்ளோம். ஜூன் இதழ் அதிகப் பக்கங்களுடன் வெளிவரும்.

ஓர் ஐந்தங்க நாடகம்.

(பெயர் :—வாசகரிஷ்டப்படி)

ஜனாப் A. M. அல்லாபிச்சை.

அங்கம் I.

களம் I—வனம்போன்ற ஒரு பூந்தோட்டம்.

பத்மினி :—யான் இனி என் செய்வேன்? என்னைப் படைத்த கர்த்தனே! காரணமின்றி என்னுள்ளத்தில் துன்ப மதிகரிக்கின்றதே. இச்சிறந்த பறவைகளின் இனிய பாடல்களும், ஆகாயத்தை அளாவி நிற்கும் தருக்களின் தோற்றங்களும் மனத்தைத் தம்வயப்படுத்துகின்றன. வனப்புற்ற இப்புட்பங்களும், நிலைமாறித் தடாகங்களில் துள்ளிப் பாயும் அழகிய பலவகை மச்சங்களும் இத்தருக்களின் இடையிடையே ஊடுருவிப் பாயும் பகலவனின் கிரணங்களும் என்னுள்ளத்திலிருக்கும் துன்பத்தை நீக்க வன்மையற்றன. என்னைப் படைத்த விமலனே! எனக்கு இதுபொழுது பேரருள் புரிதல் நின் கடமையன்றோ?

(சீதை பிரவேசிக்கின்றனள்.)

பத்மினி :—சீதா! அரண்மனையில் எனது அன்னை என்ன செய்கின்றனர்?

சீதை :—அழகுவாய்ந்த பத்மினி! என்னிடம் ஒரு வார்த்தையும் கூறாமல் வைகறையில் தனிமையாக இப்பூந்தோட்டத்திற்கு ஏன் வந்தனை? மதியினும் வனப்புற்ற உனது வதனம் வாட்டமுற்றிருப்பதற்குக் காரணமென்ன? உனது அன்னை ஏதேனும் கூறினரோ?

பத்மினி :—ஒன்றும் கூறினரில்லை.

சீதை :—பின்னர் ஏன் கவலையுற்று இருக்கின்றனை? தயைபுரிந்து கூறுவாயாக! இவ்விடத்தில் நாம் தனித்து அதிகநேரம் இருத்தல் நல்லதன்று.

பத்மினி :—அஃதென்ன பெருங் கூச்சல்?

(ஒரு சிறுத்தை கொல்லப்பட்டது. நண்பன் பிரவேசிக்கின்றனன்.)

நண்பன் :—மங்கைமீர்! நீங்கள் தனியே இவ்வனத்தில் வந்தது பெரும் பிழை. நீங்களிருவருமிங்கு இருத்தலைக்கண்டு வழிதப்பிய இச்சிறுத்தை உங்களுக்குத் துன்பஞ் செய்யுமாறு வந்ததை நான் கண்ணுற்று அதனை என் வேற்படையால் கோறல் செய்தேன். மடந்தைமீர்! உங்களுடைய அகமெங்குளது? உத்தரவளிப்பின் உங்களுக்கு வழித்துணையாகவும் வருகின்றேன்.

பத்மினி :—தைரியம் வாய்ந்த பெருந்தகையீர்! நீர் எங்களுக்குச் செய்த இப்பெரு நன்மையை யாம் ஒருபோதும் மறவோம். நீர் தயைசெய்து இம்மாலையை ஏற்றுக்கொள்வீர்! எங்களகம் அருகே இருக்கின்றது. நாங்கள் இருவரும் சிறிதுமச்சமின்றி மனையிற் போய்ச் சேர்வோம். நீர் அதைப்பற்றிச் சிறிதும் கவலை கொள்ளற்க.

நண்பன் :—மங்கைமீர்! உமக்கு அநேக வந்தனம். அன்புகூர்ந்து உத்தரவு அளிமின்.

(நண்பன் நிஷ்கிரமிக்கின்றனன்.)

சீதை, பத்மினி :—அவ்வாடவரின் தைரியமே தைரியம். மாதர்களிடத்து மிகவும் மரியாதையுள்ளவர். அறிவும் அழகும் வாய்ந்தவர். பத்மினி! நாம் மிகவும் நன்றியற்றவர்கள். அவருடைய பெயரைக் கேட்க மறந்தோமல்லவா?

பத்மினி :—ஆம் ! ஆம் ! வருக, வெட்டுண்டு கிடக்கும் சிறுத்தையைப் பார்ப்போம்.

சீதை :—மிக்க வன்மையாகவே வெட்டுண்டது இச்சிறுத்தை. அடா பாபி ! எங்களைக் கொல்லவல்லவோ நீ வந்தாய் ? எளியவரை வலியர் வாட்டின் வலியரைத் தெய்வம் வாட்டுமன்றோ ?

பத்மினி :—இதோ இங்கு கிடக்கும் கைக்குட்டை உன்னுடையதோ ? அல்லது அவ்வாடவருடையதோ ? இதில் "நண்பன்" என்னும் பெயரும் வரைந்துள்ளது.

சீதை :—பத்மினி ! மிக்க சந்தோஷம், வா அகஞ் செல்வோம். (பத்மினியும் சீதையும் நிஷ்கிரமிக்கின்றனர்.)

களம் 2—அரண்மனையில் ஓர் உவளகம்.

அரசி :—மன்ன! நம்முடைய புத்திரிக்கு வயது பதினெட்டாகின்றது. அவளுடைய விவாகத்தைப்பற்றிச் சிறிதும் யாம் கவலை எடுத்தோமில்லை. அப்பிரபு தங்களுக்கு எழுதியிருந்தது என்ன ? அதைப்பற்றித் தாங்கள் என்னிடம் ஒன்றுங் கூறினீரில்லை.

அரசன் :—செல்வநாதர், தம் குமாரன் சுந்தரத்திற்கும் நம்முடைய புதல்வி பத்மினிக்கும் விவாகம் நடப்பின் நலமெனக் கருதுகின்றனர்.

அரசி :—சுந்தரம் அழகு வாய்ந்த வாலிபன் ; பல நூல்களையும் நனகு வாசித்தறிந்தவன் ; குணத்திலுஞ் சிறந்தவன்.

அரசன் :—அருமைத் தலைவி ! நீ கூறுவது உண்மையே. ஆயினும், நீ பத்மினியிடம் இதைப்பற்றிப் பேசுவாய்.

(பத்மினி பிரவேசிக்கின்றனள்.)

அரசி :—குழந்தாய் ! நீ எங்கு போயிருந்தாய் ?
(அரசன் நிஷ்கிரமிக்கின்றனன்.)

பத்மினி :—அம்மணி ! நமது பூந்தோட்டத்திற்குச் சென்றிருந்தேன்.

அரசி :—தனிமையாகவா சென்றாய் ? இனிமேல் அங்கு தனிமையாகச் செல்லற்க. பத்மினி ! செல்வநாதப் பிரபுவின் திருப்புத்திரன் மிகவும் சிறந்தவன் அன்றோ ?

பத்மினி :—அதைப்பற்றி ஏன் அன்னாய் கூறுகின்றீர் ?

அரசி :—உனது தந்தை அவ்வழகிய விடலைக்கே உன்னை மணஞ் செய்விக்கக் கொண்டுள்ள எண்ணத்தினை ஒருவாறு எனக்குத் தெரிவித்தனர்.

பத்மினி :—அன்னாய் ! இப்பொழுது எனக்கு விவாகத்தின்மீது சிறிதும் பிரியமில்லை. அதைப்பற்றி அவசரமென்ன ?

(பத்மினியும் அரசியும் நிஷ்கிரமிக்கின்றனர்.)

களம் 3—ஒரு வனம்.

(நண்பனும் இராமனும் பிரவேசிக்கின்றனர்.)

நண்பன் :—எனது அருமைத் தோழனே! சில தினங்களாக எனது மனம் ஏதோ ஒரு பிணியால் துன்புறுகின்றது. எனது கண்கள் எரிகின்றன ; எனது நெற்றியில் வெப்பம் அதிகரிக்கின்றது ; பாடுவதற்கும் ஆடுவதற்கும் எனக்குச் சிறிதும் இச்சை இல்லை. வேட்டையாடுவதிலும் எனக்கு விருப்பமில்லை.

இராமன் :—யாது கூறுகின்றனை ? உனது இல்லத்தில் ஏதேனும் துன்பம் உளதோ ? உனது சத்துருக்கள் ஏதேனும் துன்பம் உனக்கு விளைவித்தனரோ ?

நண்பன் :—யான் துன்பத்திற்குமஞ்சேன், சத்துருக்களுக்கு மஞ்சேன். எனைப் பாதுகாக்கும் கர்த்தனமீது நம்பிக்கையும், என தாண்மையில் உறுதியும் இருக்கும்போது,

வையகத்தில் ஏன் எதற்கும் அஞ்சவேண்டும் ?

இராமன் :—அப்படியாயின் உனது துன்பத்திற்கு முதன்மையான காரணமென்ன ?

நண்பன் :—எனது அருமை இராமனே ! நான் அதனைக் கூறின் என்மீது நீ கோபங்கொள்வாயோ ?

இராமன் :—ஒருபோதுங் கோபங்கொள்ளேன்.

நண்பன் :—நான் கற்பகப்பூங் கொம்புபோன்ற ஒரு நங்கையின்மீது காதல் கொண்டுள்ளேன்.

இராமன் :—அந்நங்கை யார் ? அவள் எங்கு வசிக்கின்றவள் ? அவளுடைய நாமமென்ன ?

நண்பன் :—அவள் வசிக்குமிடத்தை நான் அறிந்திலேன். இராம ! இதோ பார், இம்மாலையில் "பத்மினி" என்னும் பெயர் வரைந்திருக்கின்றது. இதுவே அம்மங்கையின் பெயர் போலும்.

இராமன் :—இது அரச குலத்திலுதித்த மகளிர் அணியும் மாலை. இஃது உனக்கு எவ்வாறு கிடைத்தது ?

நண்பன் :—வெகுதூரத்தில் ஏதோ ஒரு குரல் கேட்கின்றது. அதை உற்றுக் கேட்பாயாக.

இராமன் :—உன்னை யாரோ கூப்பிடுகின்றனர். வா, நாம் உடனே செல்வோம். (நண்பனும் இராமனும் நிஷ்கிரமிக்கின்றனர்.)

களம் 4—அரண்மனையில் ஒரு துயில் அறை.

பத்மினி:—வையகத்தில் நான் ஏன் பிறந்தேன் ? ஒப்பற்ற செல்வமிருந்தால் என் ? உயர் குலத்திலுதித்தால் என் ? பல பணியாளரைப் பெற்றால் என் ? மதியுங் குணமும் வளர்ந்தால் என் ? சிறந்த மாளிகையில் வசித்தால் என் ? யாவும் பிரயோசனமற்றவையே: என்ன ! அவை யாவும் மனத்தின் கண்ணெழும் அடங்காத அவாவினை நிறைவேற்றச் சக்தியற்றுள்ளனவா. தன்னுயிரைச் சிறிதும் மதியாது என்பொருட்டு அச்சிறுத்தையைத் துணிவுடன் கோறல் செய்த 'நண்பன்' எங்குள்ளார் ? அவருடைய அழகிய தோற்றம் எங்குளது ? அவருடைய புன்னகை எங்குளது? நண்பனே! உம்மைத்தவிர பிறரை நான் விவாகஞ் செய்யேன். என்னுயிரைப்பாதுகாத்த உமக்கே என்னுயிர் அர்ப்பணம்.

(வெளிப்புறத்திலிருந்து கதவு தட்டப்படுதல்)
(தாதி பிரவேசிக்கின்றனள்.)

பத்மினி :—எந்தாய்! ஏன் இப்பொழுது இங்கு வந்தாய் ?

தாதி :—என்னருமைக் கண்ணே ! ஏன் நீ அநேக நாட்களாக வருத்தமுற்று இருக்கின்றனை? இன்றிரவும் நீ போசனம் அருந்தவில்லை அன்றோ ? சீதை இதனை என்னிடம் கூறினாள். இதன் காரணமென்ன ?

பத்மினி :—எனக்கு உடம்பு அசௌக்கியமாக இருக்கின்றது.

தாதி :—பத்மினி ! உன்னைச் சிறு குழந்தையிலிருந்து எடுத்து வளர்த்த என்னிடம் எதனையு மஞ்சாமல் கூறுவாயாக. சீதை என்னிடம் ஏதோ ஒரு விஷயம் கூறினாள்.

பத்மினி :—என்னருமைத் தாயே ! உன்னிடம் யான் என்ன கூறவேண்டும் ? என்னுடைய கருத்தினை உன்னிடம் கூறின் நீ என்னை வெறுப்பாயன்றோ ?

தாதி :—நீ சிறிது மஞ்சாமற் கூறுவாய். உனது கவலையை நீக்க என்னாலியலும்வரையில் முயலுவேன். உடனே கூறுக.

பத்மினி :—என்னை வளர்த்த அன்னாய் ! நீ கூறியவண்ணஞ் செய்வது திண்ணமாயின் அதனை உன்னிடங் கூறுகின்றேன்.

தாதி :—கடவுளின்மீது ஆணையாக உன்னை வெறுக்கமாட்டேன். உன் எண்ணத்தை உடனே வெளியிடுக.

பத்மினி :—'நண்பன்' என்னும் பெயர்வாய்ந்த ஓர் ஆடவர்மீது......

தாதி :—அவர் வேடர் குலத்தில் உதித்தவர். தைரியம், பெருங்குணம், கல்வி முதலியவற்றில் சிறந்தவர் என்பது திண்ணம். அழகிலும் அவர் உனக்குத் தகுந்த காதலனவர். ஆயினும், நட்சத்திரம் எவ்வளவு ஒளி வாய்ந்திருப்பினும் ஒரு உவாமதியாகுமோ? நீயோ அரச குலத்தில் உதித்த ஆரணங்கு.

பத்மினி :—துன்புற்ற என் மனத்தைத் துன்புறுத்தவா வந்தாய்? நான் அவ்வாடவனையே மணப்பேன். நீ என் எண்ணத்தை நிறைவேற்ற முயலாவிடில் விடமுண்டு என்னுயிரைத் துறப்பேன்.

தாதி :—பத்மினி! உனது கவலையை முற்றும் ஒழி. நாளையதினம் நான் அவ்வாடவன் அகத்திற்குச் செல்வேன்.

பத்மினி :—இக்கடிதத்தையும் கொடுப்பாய் அன்னையே!

(தாதி நிஷ்கிரமிக்கின்றனள்.)

பத்மினி :—அழகும் குளிர்ச்சியும் வாய்ந்த மதியே! நானும் உன்னைப்போலவே சந்தோஷமாக இருக்கும்படி கடவுளை வேண்டுவாய். அழகிய நட்சத்திரங்களே! எனக்குச் சந்தோஷமுண்டாகும்வண்ணம் பாமனை வணங்குங்கள். கர்த்தனை வணங்கிச் சிந்தித்தவாறே நான் துயிலப்போகின்றேன். நான் கூறியதை மறத்தல் வேண்டாம்.

களம் 5—ஒரு வனம்.

வேடர்களுடைய பல குடிசைகள்.

தாதி :—சிறு பிள்ளைகாள்! 'நண்பன்' என்னும் வேட வாலிபனுடைய அகம் எங்குளது?

ஒரு பையன் :—அம்மா! அவ்வாலிபன் இப்பொழுது பைத்தியங் கொண்டுள்ளான். ஒரு தனிக் குடிசையில் உட்கார்ந்துகொண்டு "பத்ம! பத்ம!" என்று சொல்லிக்கொண்டே தனது காலத்தைக் கழிக்கின்றனன்.

மற்றொருவன் :—பாபம்! அவனுடைய வனப்புற்ற முகம் இப்பொழுது வனப்பற்று இருக்கின்றது. பார்வைக்கு ஒரு துறவியைப்போலுள்ளான். ஆனால் இப்பொழுது நீ என் அவனைத் தேடி வந்தனை?

தாதி :—நான் அவருடைய அன்னையின் சிநேகிதை. இவருடைய துன்பத்தைக் கேள்விப்பட்டவுடனே பார்க்க வந்தேன். என்னைத் தயவுசெய்து அக்குடிசைக்குக் கொண்டு போவீர்களா, அருமைக் குழந்தைகாள்?

ஒரு பையன் :—அம்மா! அதோ அங்குள்ள குடிசையில் பைத்தியம் பிடித்தவனைப்போல உலாவிக்கொண்டு இருக்கின்றானே, அவன் தான் நண்பன். ஐயோ பாபம்! எவ்வளவு மெலிவுற்று இருக்கின்றனன்.

மற்றொருவன் :—அம்மா! நீ போ, அவன் மிகவும் நல்லவன். உன்னுடன் பிரியத்துடன் பேசுவான்.

(தாதி குடிசையின் அருகே சென்று)

தாதி :—குழந்தாய்! குழந்தாய்! ஓ நண்ப! நண்பனே!

நண்பன் :—பத்ம! பத்ம! பத்ம!

தாதி :—குழந்தாய்! குழந்தாய்! நண்ப! நண்பனே!

நண்பன் :—பத்ம! பத்ம! பத்ம!

தாதி :—இங்கு நின்று கூப்பிடுவதால் யாதொரு பயனுமில்லை. நான் உட்சென்றால்தான் அவரைப் பார்க்க முடியும். (சிறிதுநேரம் கடந்து) ஐயோ பாபம்! இஃது என்ன? நண்ப, நண்ப! என் இவ்வாறு இம்மரத்தின்மீது சாய்ந்துகொண்டு நிற்கின்றீர்?

நண்பன் :—பத்ம! பத்ம! பத்ம!

தாதி :—பத்மினி! என் செய்தாய்?

நண்பன் :—(திடுக்கிட்டுக் கண்களைத் திறந்து) அம்மா! நீ என் சொன்னாய்?

தாதி :—நீர் என் வருந்துகின்றீர்? உமது அன்னையின் பாங்கியாகிய என்னைப் பார்த்தும் நீர் சந்தோஷமடைகின்றீரில்லை.

நண்பன் :—அம்மா! அதைப்பற்றி என்னை மன்னிக்கவும். எனது உடம்பு சுகமற்று இருப்பதால்தான் நான் அவ்வாறு செய்தேன்.

தாதி :—அதைப்பற்றிச் சிறிதும் யோசிக்காதீர். நீர் மருந்து உட்கொள்கின்றீரோ?

நண்பன் :—அம்மா! எனது நோயை நீக்க எந்த மருத்துவராலுமியலாது. மருந்தால் நான் ஒருபோதும் குணமடையேன்.

தாதி :—ஒப்பற்ற ஒரு வாலிப மருத்துவனை நானறிவேன். அவன் காதலால் உண்டாகும் பிணியையும் நீக்க வல்லவன். அவனை நான் இன்று இங்கு கொண்டுவருகின்றேன் நீர் எங்கும் செல்லாதீர்.

களம் 6—மெத்தையில் ஓர் அறை.

பத்மினி :—வைகறையிற் சென்றும் இன்னும் வந்தாளில்லையே! அவளுடன் யானும் சென்று இருப்பின் மிக்க நலமாயிருக்குமன்றோ? ஐயோ! என் செய்வது? மாதர்க்குரிய குணங்கள் அவ்வாறு செய்வதினின்றும் என்னைத் தடுத்தன.

(தாதி பிரவேசிக்கின்றனள்.)

என்னருமைத் தாயே! இவ்வளவு நேரம் நீ யாது செய்தனை? நண்பனைப் பார்த்தாயோ? நீ மிக்கக் களைத்து இருக்கின்றனை.

தாதி :—அதைப்பற்றிப் பிறகு கூறுகின்றேன். கொஞ்சம் தண்ணீர் கொணடுவருக!

பத்மினி :—நண்பரைப் பார்த்தாயோ? தயை செய்து சொல்லு. தண்ணீர் இதோ கொண்டு வருகின்றேன்.

தாதி :—பார்த்தேன்.

பத்மினி :—எனது பிரியமுள்ள அன்னாய்! நீர் அருந்து!

தாதி :—என்னருமைக் குழந்தாய்! பாபம்! நண்பன் பைத்தியம்பிடித்தவன்போல இருக்கின்றான். எப்போதும் "பத்ம! பத்ம!" என்று உனது நாமத்தையே உச்சரிக்கின்றனன். அவனுக்கு உன்மீதுள்ள ஆசைக்கு ஓரளவேயில்லை.

பத்மினி :—எனது கடிதத்தைக் கொடுத்தாயோ?

தாதி :—இல்லை. இல்லை; ஏனெனில் அவனுடைய நிலைமையை உனக்குக் கண்கூடாகக் காட்டக் கருதினேன். அதனால், உன்னை அவனுடைய அகத்திற்கு ஒரு மருத்துவனுடைய வேஷம் தரிப்பித்து இன்று சாயங்காலம் அழைத்துக் கொண்டுபோக எண்ணங்கொண்டுள்ளேன். என் கூறுகின்றனை?

பத்மினி :—எனக்கு மிக்க சந்தோஷம். ஆனால், சாயங்காலம் என்றால் எப்படி அவ்வேஷம் தரித்து உன்னுடன் போக இயலும். யாம் இன்று இரவே செல்வோம்?

தாதி :—இவ்விஷயமுனது தாதைக்குத் தெரியின் நமது கதி எவ்வாறாகும்? யான் தெரியாமல் அல்லவோ ஒரு மருத்துவனை........

பத்மினி :—நீ அஞ்சவேண்டாம். கடவுள் நமக்கு உதவி புரிவர். இன்றிரவு கட்டாயம் செல்லவேண்டும்.

தாதி :—அவருடைய இல்லத்துக்கு யாம் ஒரு காட்டின் வழியாகச் செல்லவேண்டும். அங்கு பல துஷ்ட மிருகங்கள் இருப்பினும் இருக்கலாம்.

பத்மினி :—ஐயோ, பாபம், அவ்வாலிபர் மிருகங்கள் வசிக்கும் வனத்தில் வசிக்கின்றனர் போலும். அவருக்கு மிருகங்களால் ஏதேனும் துன்பம் நேருமோ? அன்னாய்! என்னால் துன்பமனுபவிக்கும் அவருக்கு உதவி புரிதல் எனது கடமையன்றோ? எதற்கும் நீ

அஞ்சவேண்டாம். யாம் இன்றிரவில் கட்டாயம் செல்லவேண்டும்.

தாதி :—இதனை லீலையினிடத்துங் கூருதே. இன்றிரவு மணி ஒன்பதுக்குமேல் புறப்படலாம். ஆடைகளைப்பற்றி யோசிப்பாய். (தாதி நிஷ்கிரமிக்கின்றனள்).

(லீலா பிரவேசிக்கின்றனள்.)

எனது பிரியமுள்ள லீலா! இங்குவா.

லீலா :—பத்மினி! நீ இன்று மிக்க சந்தோஷமாயிருக்கின்றனை. காரணமென்னை?

பத்மினி :—நண்பர் என்மீது...........

லீலா :—உனக்கு எப்படித் தெரியும்?

பத்மினி :—[illegible] பார்க்க வந்து கூறினள். அவர் [illegible] ஐக்கியமாக இருக்கின்றனரார். அவரைப் பார்க்க இன்றிரவு யானும் தாதியுஞ் செல்வோம்.

லீலா :—என்ன, உனக்குப் பைத்தியமா? காதலியைக் காணக் காதலன்வருவது இயற்கை. நீ இரவிற் செல்வது எனக்குச் சிறிதும் சம்மதமில்லை. ஓர் ஆடவன்முன் இரவில் ஒரு கன்னிகை செல்லுதல் தகுதியுடைத்தோ?

பத்மினி :—லீலா! நீ அவசரப்படாதே. அறிவிற் சிறந்த ஓராடவனால் சிறந்த ஒரு நங்கைக்கு எப்போதும் துன்பம் நேரிடாது. அஃதன்றி, யான் ஓராடவனுடைய வேடம்பூண்டு அவரிடஞ் செல்வேன்.

லீலா :—உன்னால் நடக்கமுடியுமா? யானுமுன்னுடன் வரட்டுமா?

பத்மினி :—ஒருவர் செய்யவேண்டிய காரியத்தைப் பலர் செய்யின் இடையூறுண்டாகும். எனக்கு இன்றிரவு எட்டுமணிக்குள் சாதாரண ஓராடவனுடைய ஆடையைக் கொடுப்பாய்! யாம் பிறகு சந்திப்போம்.

(தொடரும்.)

190385

சாரதையின் தந்திரம்
முதலிய கதைகள்.

இன்பத் தமிழ் நடையில், நகைச்சுவை ததும்ப எழுதப்பட்ட பின்வரும் எட்டு சிறு கதைகள் அடங்கியுள்ளன:—(1) சாரதையின் தந்திரம், (2) ஒன்பது குழி நிலம், (3) சுபத்திரையின் சகோதரன், (4) காங்கிரஸ் ஸ்பெஷலில் கோரசம்பவம், (5) தற்கொலை, (6) விஷ மந்திரம், (7) நம்பர் 888, (8) கவர்னர் விஜயம். ஒவ்வொரு கதையும் ஒவ்வோர் உயரிய நோக்கங் கொண்டது. இக்கதைகளின் அழகையும், பொருளையும் பெரிதும் வியந்து காந்தி ஆசிரமத் தலைவர் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் இதற்கு ஒரு முன்னுரை அருளியிருக்கிறார்.

சில அபிப்பிராயங்கள்.

ஸ்ரீ இராஜகோபாலாசாரியார் (முன்னுரையில்) :—பொருள் புகட்டி, பயன் தருமாறு, அழகுடன் கலந்து அக்கிய கற்பனைகள். "சுதேசமித்திரன்" :—ஆதிமுதல் அந்தம் வரை படிப்போர் மனதை ஈர்த்துச் செல்லும் முறையில் வெகு ரஸிகமாக வரையப்பட்டிருக்கிறது. "லோகோபகாரி" :—நல்ல கற்பனா சக்தி வாய்ந்து சௌந்தரிய உணர்ச்சி நிரம்பியுள்ளன. 'காங்கிரஸ் ஸ்பெஷலில் கோர சம்பவம்', 'கவர்னர் விஜயம்' என்னும் நகைச்சுவை செறிந்து ததும்பும் கதைகள் தமிழ்வாசகருக்குப் புது விருந்தாகும். "தமிழன்" :—கதையின் போக்கு, தமிழின் சுவை, கொள்கைகளின் சிறப்பு ஆகிய மூன்றினையும் ஒருங்கே பெற்றுள்ள கதைகள். "சுதேசமித்திரன்" :—சமீப காலத்தில் வெளியான உயர்ந்த கவினங்களில் முதன்மை ஸ்தானம் பெற்றிருக்கிறது. The "Hindu" :—They remind one of the excellent didactic tales of Tolstoy. விலை அணா 12.

அல்லது மகாத்மா காந்தியின் சுயசரிதம்.

வாழ்க்கைக்கு உறு துணையான அரிய பெரிய நூல். 460 பக்கம் கொண்டது. அழகான தமிழ் மொழி பெயர்ப்பு உயர்ந்த, திருத்தமான பதிப்பு. விலை ரூ. 2—8—0.

இன்னும் சில அரிய நூல்கள்.

காலஞ் சென்ற வ. வே. சு. ஐயர் எழுதிய மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள் ...	0	12	0
டாக்டர் திரு. வி. சாமிநாத சாஸ்திரியார் எழுதிய உதவி மறந்தல் கதைகள்	0	12	0
பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் 1003 உபதேச மொழிகள்	1	6	0
ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமண்யம், எம். ஏ., எழுதிய ஷண்முக சுந்தரம் (படங்களுடன்) ...	2	0	0
விக்கிரம சிங்கன் கோட்டை மர்மம் (படங்களுடன்)	1	0	0
அம்பலவாணன் அல்லது நாவாயிக்கைதி (இரண்டு பாகங்களும்)	3	0	0

சரஸ்வதி பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

15-2,[illegible] 28-4-9-[illegible]